உ

வேலுமயிலுந்துணை.

ஸ்ரீ

கந்தவிரதவிலாசம்.

இது,

ஸ்ரீ திரிபுரசுந்தராம்பாள் சமேதராகிய
பிரம்மேஸ்வரஸ்வாமி
திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்
திருப்பத்தூர் செங்குந்தரில்
ம-ா-ா-ஸ்ரீ ஆதியூர் - கந்தப்பமுதலியார்குமாரரும்,
ஸ்ரீ சொரூபானந்தசுவாமிகள்
மாணாக்கரிலொருவருமாகிய

குமாரசுவாமிமுதலியாரவர்களா

லியற்றி,

காஞ்சீபுரமுதலிய மஹா நாடுகளிலுள்ள
சிவநேச கனவான்கள்
வேண்டுகோளின்படி,
ம-ா-ா-ஸ்ரீ,

சி. பெருமாள் நாடாரவர்கள்

பேருதவியால்,

திருப்பத்தூர்:
சின்னையநாடார் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு.

விக்ருதிஞு ஆடிமீ 1890

செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901
https://senguntharmudaliarhistory.blogspot.com

உ

சிவமயம்.

சாற்றுக்கவிகள்.

காஞ்சீபுரம் பிள்ளைபாளையம் ஆளவந்தவள்ளலாராதீனம்

ஸ்ரீமத் சதாசிவதேசிகரவர்களால்

இயற்றிய

கீர்வாணசுலோகம்.

ఆసక్తినగరీవాసీ॥శివభక్తపరిపాలకః
రక్తకుంభకులేజాతః॥ప్రభూతకీర్తిసంయుతః (1)

స్కందస్యప్రవరోసూనుః॥కుమారస్వామీతివిశ్రుతః
కార్తికేయస్యనాథస్య॥వ్రతమాహాత్మ్యసత్కథాం (2)

ద్రువిద్ధవిలాసంకృత్వా॥సర్వేషాంభక్తివృద్ధయే
ప్రకటీకృతవానేతత్॥భవేత్క్షేమకరంసదా. (3)

சுலோகம்.

ஆசக்திநகரீவாசீ - சிவபக்தபரிபாலகஹ
ரக்தகுந்தகுலேஜாதஹ -ப்ரபூதகீர்த்திஸம்யுதஹ. (க)

ஸ்கந்தஸ்யப்ருவரோசூநு - குமாரஸ்வாமீதிவிஸ்ருதஹ
கார்த்திகேயஸ்யநாதஸ்ய - வ்ரதமாஹாத்ம்யசத்கதாம். (உ)

த்ருவித்தேவிலாசம்க்ருத்வா - சர்வேஷாம்பக்திவ்ருத்தயே
ப்ருகடீக்ருதவாநேதத் - பவேத்க்ஷேமகராம்ஸதா. (ந)

திருமயிலைவித்துவான்

ம-ா-ா-ஸ்ரீ, சண்முகம்பிள்ளையவர்களால்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்பூத்தமறைநான்கு மெடுத்தியம்பும்விரதநெறிசெப்புங்காலை
ஏர்பூத்த கந்தவிர தந்தனக்கு நிகரின்றென் றெண்ணியன்று
கூர்பூத்த நுதிவேற்கைக் குமரனடி பரசிமுசுகுந்தனுற்றான்
பேர்பூத்தவிடங்கரெழுவரையிறைஞ்சி யேத்தநாடும்பெரும்பேறம்மா (க)

அன்னபரிசுணர்ந்தவனை மானதவாசனமுறவவ் வமலன்ற[ரு]ட்கே
பன்னருஞ்சீர்க் குமாரசாமிப்பெயரி னொருவன்பாற்கபற்கண்
தன்னிகரி லமுதெழுந்த தன்மையென வக்கடவுட ணக்குப்பின்னோர்
நன்னர்மரபினில்வந்த கந்தவிரதந்தனையே நயந்துமாதோ.(௨)

கன்னலமு தரும்பாகு கற்கண்டு சீனியெனக் கருதுமின்ன [தேக
சொன்னதொருபொருளனைத்து மித்தமிழின் சுவையின்முனஞ் சொல்லா
முன்னியவிலாசஒழுக்கினில்யாருமிகவிழைய மொழிந்திட்டின்ன
தென்னனையாருங்களிப்பவெழுதாதவெழுததிலிட்டு மீந்தான்மன்னோ.()

சென்னை சைவசித்தாந்தத்தமிழ்வேதசபையிலொருவராகிய
திருமயிலை,

ம-ள-ள-ஸ்ரீ. தணிகாசலமுதலியாரவர்களால்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பரதமயிற்பரியுகைத்துக்கரிசுருசூர்க்குலம்சவட்டும்பரமனங்கள்
சரதமறைப்பொருளாஞ்சண்முகனடியே பரவிநிற்குந்தகைசால்குந்தக்
கரதலவீரர்கள்குலத்துக் குமாரசாமிக்குரிசில் கருதிக்கந்த
விரதவிலாசந்தனையெம்மோர்க்களித்த தொருவியப்பேமேதக்கிரே.

சென்னை இந்துஜனபூஷணி பத்திராதிபர்,

சிவபஜனை

வி. சுந்தரமுதலியாரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பண்கொண்ட மறைப்பொருளைச் சதுமுகற்குப்
பகர்ந்தசுரப் பகைஞர்செயும் பழங்கண்மாற்றி
விண்கொண்ட புரந்தரனைக் காத்தகந்தர்
விரதவிலா சத்தைவிளங் காதியூர்வாழ்
மண்கொண்ட வியன்புகழ்சேர் நற்செங்குந்தர்
மரபில்வருஞ் சிவநேச மறவாமேலோன்
எண்கொண்ட குமாரசா மிப்பேர்வாய்ந்த
இசைப்புலவ னிசைத்துலகி லிசையுற்றானால்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத் ஒட்டக்கூத்தரென்னுங் கவீசுரர்

தோத்திரம்.

கொச்சகக்கலிப்பா.

செழுமறைகளன்றுமுதற் றேடியினங்காணாத
முழுமணியாயிலங்குசிவ மூலத்தின்விளையாட்டை
மொழிபகமோவல்லதயன் முன்படைப்போகூத்தவெழுப்
பெழுவதெனுங்கிங்கவிதன் னெண்ணமெனக்கியம்புதியே. (க)

ஒக்குடையநாமறையோ ருணர்கனகமாயிரத்தெண்
மாற்றவையிற்குலோத்துங்க வளவனெடுநீசென்றங்
கேற்றுநிகேதனமென்ன வீர்ந்ததலையதுவொட்டுங்
கூத்துடையாநின்னதகக் குறிப்பென்னக்குலமணியே. (உ)

ஆற்றுக்கேயம்புலிக்கே யகச்சடிலன்றிருவருளென்
பாற்றுக்கேவருகூத்தப் பாமணியேபொன்னுக்கே
சோற்றுக்கேகூறைக்கே சொற்கவிகளேமாக்கச்
சீற்றக்கோளரியணையாச் சிரவணையிலிருந்தனையே. (ங)

குன்றக்கூறன்முதலாங் குறைகளையவெண்ணியொரு
வென்றிக்கேதனநிறுவி வீண்கவிகடலையறுப்ப
லென்றுத்தாங்கவியரசிவ் விகமெல்லாங்கொண்டதிளங்
கன்றுக்கேயுருகாவின் கருணைமணவூரரசே. (ச)

தலையறுக்குங்கவியொருவன் றரணியிலுளனென்னி
னிலையிருக்கும்பாப்பதங்க ணெறியுடையபடலங்கள்
கலையிருக்கப்புன்கவிகட் களைவர்களோவின்றொருகா
லலையிருக்குமம்புவிநீ யவதரிக்கவேண்டுவனே. (ரு)

முச்சங்கத்தாடிருந்த முதலியர்களாரேனு
முச்சங்களில்லாம லோங்குதலைப்பலவரிந்த
வச்சிங்கவணையிருக்க வார்பெற்றாருயிர்தந்தார்
மெச்சங்கமாயினையே மெய்க்கூத்தனெனுமருந்தே. (சு)

ஈட்டியெழுபத்தென்று மீர்ங்கவிநீசொல்லுங்கா
லூட்டமிர்தஞ்செவிவாயி லுண்டவருங்கண்டவரும்
வேட்டதவமீதென்ன வேதனுக்குஞ்சொலவெளிதோ
தேட்டமிகுங்கூத்தனெனுஞ் செங்குந்தமாபணியே. (எ)

அற்றவுறுப்பிணைந்தனவு மாங்காயமாயினவு
முற்றதழும்பேகினவு முயிர்மீண்டெழுந்தனவும்

பற்றுமொருநாற்காணி பாமாவுடகமாமுன்
சொற்றவயில்வாக்கன்றோ சுடர்கூத்தமாமணியே. (௮)

பூவுலகிற்கவியரசு புரிந்தபெரும்புகழுடையோய்
ஆவணிமூற்பக்கமுத்தி ராடமுந்தன்பூசனையே
யேவர்களுஞ்செய்கின்றா ரெண்ணிலருளடைகின்றார்
நாவலவராகின்றா ரென்கின்றார் நல்லாரே. (௯)

தேனுந்துமலர்சோலைத் திருமணவூர்சிவசங்கக்
கோனாந்தசிற்சபையெங் கூத்தனருட்கூத்தனெனு
மானந்தச்செல்வனை தாசனத்திலலகுபெறி
ஞானிந்தசெனனமுனை நயந்திரத்தலென்கடனே. (௧௦)

ஷையார் சரித்திரசுருக்கம்.

ஸ்ரீ நடனசபாநாயகர் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும்
சிதம்பர முதலிய சிவதலங்களை தம்மிடத்துள்ளதாய் எந்நிலங்களிலுஞ்
சிறப்புற்றோங்கிய சோழமண்டலத்தில் அழகிய பூஞ்சோலைகள் சூழ
நித்தியகல்யாண விநோதமுடைய மணவூரென்னும் ஒரு பெரிய நகரத்
தில் சிவபூசையிலும் அடியார் பூசையிலும் உள்ளும் புறம்பு நிறைந்த
பத்திநெறிபூண்ட சிவசங்கனென்னுஞ் செங்குந்தவரசனிருந்தான், அவ
னுக்கு புத்திரனில்லாமல் மனவருத்தமுற்றிருக்க சிவபெருமானே ஓரந்
தணவுருவங்கொண்டுவந்து ஏ அரசனே நீ கனகசபைகண்டுபோற்றுவா
யேல் உன் மனக்கவலைதீருமெனக் கட்டளையிட்டேகினர். அரசனவ்
வாறே அன்பர் திருக்கூட்டத்துடன் சிற்றம்பலங்கண்டு போற்றி ஆனந்த
பரவசனாக நிற்கும்போது அந்தக்கனகசபையில் அம்பலக்கூத்தனருளுண்
டாமென, ஒரசரீரி வாக்குண்டானது அதுகேட்ட வரசன் நல்ல வரந்
கிடைத்ததென மகிழ்ந்து தம்மிருக்கையெய்தியிருந்தான். அப்பிரசாதப்
பேற்றால் அவன் பத்தினி கருப்பமுற்று சூரியோதயம்போல வோராண்
மகவீன்றனள்; அப்பிள்ளைக்கு ஜாதகன்ம முதலியவும் செய்து அற்புத
மாக பொன்னம்பலத்தி னிகழ்ந்த வண்ணம் அம்பலககூத்த னென்ன
நாமகரணமிட்டு வளர்த்து ஐயந்திரிபற்ற ஆசிரியனைக்கொண்டு வித்தை
யாரம்பஞ்செய்ய சிலநாளில் பலநூலும் பயின்று யானை குதிரை இரத
முதலிய வேற்றமும், அஸ்திரவித்தை முதலியவு நன்குணர்ந்து வீரவா
ளேந்திய கையினனாக விளையருடன் சென்று கண்டவர் வியக்க விளையா
டிவருவான் ஆதலால் யாவரும் அம்பலத்தை யம்பலமாக்கிவிட்டு கூத்த
னெனக்கூறத்தொடங்கினர். இவ்வம்பலக்கூத்தன் வேதோபநிடத சாஸ்
திராகம புராணேதிகாச இலக்கண விலக்கிய முற்றுணர்ந்த தேற்றத்தால்
இகத்திற்புகழுடம்பெவற்றிலுண்டாமென உண்ணோக்கிக் கவித்திரமுடை
மையேயெனத்தெளிந்து கலைமகளை யுபாசித்து அவளருளடைந்து மற்
றொருகையில் புத்தகமேந்தி நல்விலக்கணமுள்ள கன்னிகையை மணம்பு
ரிந்து இல்லறநெறியினின்றுசிவபூசைமுதலிய ஆத்மலாபமான சற்கிருத்
தியங்களை மேற்கொண்டொழுகு நாள்,

உறையூரி லரசுசெய்யும் நீதிநெறிச்சோழன் இவரது கல்வித்திரம
றிந்து பண்டைநாடொடங்கி நமதரசிற்குப்பேருதவியாயுள்ள செங்குந்த
மன்னரி லிவரிருத்தல் நன்றெனக்கருதி முன்ன ரறிவித் தெதிர்கொண்டு
அம்பலக்கூத்தன் அழகு மிளமையும் வலக்கையில் வீரவாளும் இடக்கை
யில் புத்தகமுமிருக்கக்கண்ட சோழன் வியந்து நிற்குங்குறிப்பறிந்த புல
வர்பிரான்,

வெண்பா.

வாளொருகை யேடொருகை வைத்திருக்குங் காரணத்தைக்
கேளிருகை யீதலருக் கிள்ளிக்கோ - நாளுமே
குலோத்துங்கன் காணுக் கவிவாணர் தங்கட்
குலோத்துங்க மாகுங் குறி.

என்றுரைத்த அற்புதக் கவியைக்கேட்டு அதன் கருத்தறிந்து இதுதான் கவிராஜசிங்கமென வெண்ணி தமது சமஸ்தான வித்துவசிரோமணியா யிருமென்ன புலவர் ஒருவரிடத்திலும் ஏற்காநெறியி லிருப்பினும் சோழன் அந்நியனல்லாதபக்ஷத்தில் அவ்வரசிலிருந்தனர்.

சோழராஜன் இதுகாறும் புத்திரனில்லாமலிருந்து இப்புண்ணிய னைக்கண்ட பேற்றால் தனக்கோ ராண்குழந்தை பிறந்தது. அரசன் அக் குழந்தைக்கு "குலோத்துங்க" னென நாமகரணமிட்டு வளர்த்து இப் புலவர்பிரானாகிய ஆசிரியனைக்கொண்டு வித்தையாரம்பஞ்செய்து சகல கலையு மோதுவித்துப பிள்ளையை இவரிடத்தில் ஒப்புவித்து சிவபதமடை ந்தான். அதன்பின் இராஜகுமாரனுக்குப் புலவர்பிரான் பாண்டியன் மகளை மணமுடித்துக் கொலுமண்டபஞ்சிங்காரித்து சிங்காதனத்தில் வீற் றிருக்கச்செய்து மகுடாபிஷேகஞ்செய்ய அவ்வரசன் கூத்தன்பதாம் புயத்தைச் சூடுங்குலோத்துங்க சோழனென்றே என்னைச் சொல்லுவ ரென்ன துதித்து தமதாசிரியன்றிருவாக்கின்படி அரசுசெய் துவந்தான். இப்பால் அம்பலக்கூத்தன் கருணாநிதியாதலால் உலகினுள்ள புன்கவிக ளை களைய வெண்ணி யெழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி யென் பனவற்றிலோரானந்தமேனும் உண்டாகப் பாடி கவிகளென வெளிவந் தால் அவர்களது தலையை அருப்பேனென்று ஒரு வெற்றிக்கொடி கட்டி னர். அதுகண்ட புன்கவிகள் நன்கவிகளாக வெண்ணி நல்லாசிரியனைக் கொண்டு படிக்கத்தொடங்கினர். சோழன் தனது ஆசிரியராகிய அம்ப லக்கூத்தரிடம் பாடங்கேட்கும்போது நளன்கதை, இராமன்கதை முத லிய பசுநூல் யாமோதோமெனச் சொல்லக் கேட்டிருந்ததால் அதுகே ட்க விரும்பிப்பாண்டியன் பெண்ணுக்கு சீதனமாகக் கொடுத்த புகழேந் தியை நளன்கதையையும், கம்பனை இராமயண கதையையும் பாடும்படி உத்திரவுசெய்தான். புகழேந்தி நளவெண்பா பாடிவந்து அம்பலக்கூத்த ருள்ள சபையில் படித்தான் அதில் சில வழுவிருக்கக்கண்டு புலவரால் தண்டிக்கப்பெறாது குலோத்துங்கவரசன் மனைவி தன் சீதனக்கவியென் னும் அபிமானத்தால் வேண்டிக்கொள்ள மீண்டுவந்திருந்தான். கம்பன் இராமாயணம்பாடி இச்சபையில் கொண்டுவந்து பிரசங்கிக்க புலவர் சிங்கம் நரஸ்துதி முதலிய வழுக்கள் அதிலிருக்கக்கண்டு அவனுக்கு முன் னிருந்த கொடி காளமுதலியதும் தகாதெனுங் கருத்துதோன்ற,

(கவி.)

பத்துக்கொண்டனதிக்கும் பதறிப்போயுலையப்பைம் பொற்றாரகை சிந்தப்பகிரண்டத்திடைநீள், மதநுக்கொண்டு மதிக்குந்திரையாழிநெடு மால்வடிவாகிபுவிக்கைக்கொண்டருள் மாணுபரணு, முத்துப்பந்தரினிற் கும் குருளைக்குஞ்சினவேன் முருகற்கும்பொதிகைக்கோ முனிவற்குஞ் சடில, மொத்தற்கும்பதுமக்கொந்தயனுக்கு மலதிக்கூழைத்தண்டமிழுஞ் சேன்கொடியுங்காளமுமே.

என்றுரைத்த பொருள் தெரிந்த சோழபாண்டியரால் கம்பன் விருது வரிசைகளைப்பறிகொடுத்து அந்நகர் நீங்கி வழியில் அனந்த வித்துன்ப முற்று சேரதேசத்தில் சென்று சிலநாள் வசித்து தயாநிதியாகிய அம்ப லக்கூத்தமஹாகவியை உத்தரராமாயணம்பாடித்தரும்படிகேட்க அவரவ்

வண்ணம் பாடித்தர அதைத்தன் ராமாயணத் தோடும் சேர்த்து கூட்டிக்
கொண்டுவந்து அவ்வி சேஷத்தால் இராஜசபையில் சேர்க்கப்பட்டிருந்
தான் சிலநாள் சென்றபின் அம்பலக்கூத்தன் செய்த்தான முதலிய சிவ
தலங்களில் சென்று அந்தாதி கோவை, உலா- முதலிய பிரபந்தங்களை
பாடிச்சிவபெருமானைத் துதித்துக் கொண்டு வருகையில் திருப்புவனையில்
செங்குந்த வரசர்கள் மஹாசபை கூடியிருந்தார்கள் அச்சபையார் புல
வர் பெருமானைக்கண்டு உபசரித்திருக்கச் செய்து சொல்லுவார்கள். ஐ
யாபுலவரே; கம்பனால் ஏரெழுபதில் வேளாளரையும் சிலையெழுபதில்
வன்னியரையும் ஔவையால் பந்தனென்னும்வணிகன்மேல் அந்தாதியும்
ஜவேலசதியும் யாதவன்மேல் கோவையும். பாடியிருக்கின்றதுகள்.

ஆகையால் நீர் நம்மவர்களைக்குறித்து ஒரு பிரபந்தஞ்செய்யவேண்டு
மென்று கேட்டார்கள் அது கேட்ட புலவர் நகைத்து தன்குலத்தை புக
ழ்ந்து பாடுவது தக்கதல்லவென்று மறுத்தார் இவரது கருத்துணராமல்
சபையிலுள்ளவர் கோபித்து இனத்தவர் மொழியைக்கடந்த இவரைக்
கொலைசெய்து விடுங்களென்று சிலமல்லர்களை யேவினார்கள் அதுகண்ட
புலவர் சோமாசி ஆண்டானென்னும் அந்தணனிடத்தில அடைக்கலம்புக
அவரிவர்கருத்தறிந்து சபையிலழைத்து வந்துவிட்டார் சபையோர்கள்
கண்டு மீட்டும்வந்த காரணமென்னென்று கேட்க புலவர் நான் பாடுவ
தற்கு நற்குணநற்றவநல்லொழுக்கமுள்ள நமது குலத்து பிள்ளைகளது
ஆயிரத்தெட்டு தலையறுத்து சிங்காசனமிட்டு அதன்மேல் இரத்தப்பா
வாடை விரித்து அதன்மேல் என்னையிருக்கச்செய்து கேட்டால் பாடு
வேனென்றார் அது கேட்ட மஹா சபையிலுள்ள யாவரும் தத்தமக்குள்
என் ஒரு தலைகொடுப்பின் ஊழிநாள்வரைக்கும் இப்பிரபந்தம் நிலைநிற்கு
மல்லவாவென்று நினைத்து அப்படியே கொடுக்கிறோமென்று ஒப்பிக்கொ
ண்டு எழுபத்திரண்டு நாட்டவர்களுக்கு மறிவித்து அவ்வவர்களுங் கொ
ண்டுவந்த சிரங்களைக்கொண்டுபோய் சோழனது கொலுமண்டபத்தில்
சிங்காசனமிட்டு புலவருக்கறிவித்தார். அவர் நாமகளை நினைத்தெழுந்து
வீராவேசத்துடன்வந்து அத்தலையாசனத்தின் மேலேறி பதுமாசனமிட்டு
ஆண் சிங்கம் போலிருமாந்திருந்து கம்பன் முதலிய கவிகள் கலங்கவும்
உலகத்திலுள்ள சகலவருணத்தவர்களும் அதிசயிக்கவும் குலோத்துங்க
சோழன் மகிழ்வெய்தவும பூவார்புவனையிலென்றெடுத்து அம்பர் நாட்
டமர்ந்த குந்தமென இவ்வரசகுடிப்பெயராகிய செங்குந்தத்தின் பெரு
மையை ஈட்டி எழுபதென்னும் ஓர் பிரபந்தம்பாடி பின்னெழுப்பெழு
வதென ஒரு பிரபந்தம்பாடினர் அதனால்ஒவ்வொரு தலைகளும் ஆரவாரித்
தெழுந்து முண்டங்களுடன் ஒட்டி தொடைதட்டி கொக்கரித்து மீசை
முறிக்கி ஜெயங்கூறி நின்றன அப்பொழுது வாணிகடாக்ஷத்தையும் செங்
குந்தர் வீரதன்மத்தையும் விசல்லியகரணி, சந்தானகரணி, சமானகரணி,
சஞ்சீவகரணியென்னும் பாமாவுடதமாக முடிந்த இக்கவீசுரர் வாக்குவி
சேடத்தையும் கண்டதிசயித்து ஒட்டக்கூத்தர் ஒட்டக்கூத்தரென உலகம்
புகழ தேவர்கள் பூமாரி பெய்து அந்தரத்துந்துமி முழக்கினார்கள். பின்பு
செங்குந்தர் பரணிஉலா? முதலியதும் பாடி சில நாளிருந்து ஆவணிமீ
பூர்வபக்கம் உத்திராட நக்ஷத்திரத்தில்சிவசாரூபமடைந்தனர்.

ஒட்டக்கூத்தரென்னுங்கவீசுரர் சரித்திரச்சுருக்கம்

முற்றிற்று.



௳

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகந்தவிரதவிலாசம்.

பாயிரம்.

விநாயகர் காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீருலாங்கருஹூராளுந் திறல்முசுகுந்தவேந்தன்
ஆருலாஞ்சடிலனீன்ற வறுமுகன்விரதம்போற்றிப்
போருலாங்குந்தவீரப் புனிதனையடைந்தோதக்
காருலாமதத்தவேழக் கன்றிணையடிகடாழ்வாம்

தரு-இராகம்-நாட்டை-ஆதிதாளம்.

பல்லவி.

பிரணவத்துதிபுரிவாம் சிவகணேச
பிரணவத்துதிபுரிவாம்

அநுபல்லவி.

சரணவாதனை கிரணமாயினி
மரணவேதனை ஹரணமாகவே (பிரண)

சரணங்கள்.

சம்போஹரசுதனே அப்பவர்க்கங்கொள்
லம்போதரவிதனே
இம்பரம்பர நம்புகும்பக
ஐம்பரம்பர மென்றிறம்பெற (பிரண)

ஸ்ரீ கந்தவிரத விலாசம்.

கந்தவிரத காதையை பேசவெங்கரன்
முந்துவாரும் பாதையே

நக்குந்திங்கையு வந்துமுந்தா
விக்கிநந்தடு வந்தனங்கொடு (பிரண)

பாசாங்குச படையு மூன்றுவிழியுந்
தேசாந்தசி சடையும்

ஈசநேச விஸ்லாச போதக
னேசவாச விஸ்வாச பூஜித (பிரண)

பரமசிவ வணக்கம்.

விருத்தம்.

கந்தனை மைந்தனுக்கிக் காமனைக்கரியதாக்கி
மைந்தனைத்தந்தையாக்கி மாமனைமயியதாக்கி
நந்தனை நந்தியாக்கி நாரியைப்பாரியாக்கி
யெந்தனையுந்தனுக்கு மீசனேபோற்றிபோற்றி.

தரு-இராகம்-சமாசு-ரூபக தாளம்.

பல்லவி.

சிவபெருமானே ஹரஹர சிவபெருமானே

அனுபல்லவி.

உவரிவிடமுண்டவனே யுமையையிடங்கொண்டவனே (சிவ)

சரணங்கள்.

நந்திதேவர்க்குநீர் சொன்னபரஞ்சிவ
ரகசியமாமிதி ஞாலே - யோகமு
புந்தியிலும்புகுந் தோதுமென்றித்தினம்
போற்றுவனின்றிருக் காலே
சிந்தைதக்கிதானவனே தென்மதுரைமீனவனே
சுந்தரத்துமாபதியே தூய்யகருணாநிதியே (சிவ)

வெற்றிவேன்மயிற் கந்தவிரதத்தை
மேதினியோர்கள்கொண்டாடியு வந்தே - மிகு
பத்திமீறுஞ் சரித்திரக்காதையைப்
பாடவின்பானுரை தந்தே
தத்துவமில்லாதவனே சர்ச்சனர்க்குள்ளானவனே
அத்தியுரிபோர்த்தவனே அங்கஜனைக்காய்ந்தவனே (சிவ)

ஹரிநின்னிடமுடிந்தமுருக
னகத்தியர்க்குரை செய்ய - அந்த
அப்பமுனிவன் சொல்லுஞ்செந்தமிழி
லருண்டேனுவரைத் துய்ய
சர்ப்பாபரணம்பூண்டவனே சிற்றம்பலத்தாண்டவனே
அப்பவெனை யாண்டவனே யனன்பலோபரம்பூண்டவனே (சிவ)

உமாதேவியார்.

விருத்தம்.

தார்வதிகரியகூந்தல் சங்கரிகௌரிகேசரீர்
சார்வதில்லாததேவர் தாபதரிறைஞ்சுகின்ற
கார்வதிநெடியகோட்டு கைலைமாமலையில்வாழும்
பார்வதித்தாயேயுந்தன் பதமலர்போற்றிபோற்றி.

விநாயகர்.

மதிக்கழகுனதுசேர்ந்தவன்சடையென்பர்நல்லோர்
துதிக்கழகுனைமுனைந்தெழுவதென்பார்கள் ஞான
கதிக்கழகுனதுபாதங் கல்பமென்பார்களியான்சொல்
விதிக்கழகெனநினைந்தேன் விநாயகப்பொருளேபோற்றி

சுப்பிரமண்ணியர்.

குயநெடுங்கோட்டுத்தெய்வகுஞ்சரியோர்பால்வள்ளிக்
கயனெடுங்கண்ணியோர்பாலிருப்பஷண்முகக்கண்மின்ன
ஜெயமிகுதம்வடிவேலேந்திச்சேவலங்கொடிகைதாங்கி
மயின்முதுகேறுஞ்சுப்பிரமணியனேபோற்றிபோற்றி

சுரு-இராகம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

பாலித்தருள்வாயே முருகா பாலித்தருள்வாயே

அநுபல்லவி.

பாலித்துகாரா பரமகுமாரா
வேலிற்சிறையாய் விளங்கிடுமவீரா (பாலித்)

சரணங்கள்.

வேண்டிடின்பாத விரதநல்போத
மீண்டிடவிப்பேன்சொல்லிசைக்கருணீதம் (பாலித்)

கார்த்திகைசேயாகடம்பணிநேயா
போற்றிடவெனதுபுல்லறிவாயாய் (பாலித்)

கிரியடர்வேலாகிண்கிணிகாலா
கரியுரிபோர்த்திடுங்கடவுளர்பாலா (பாலித்)

வேல்மயில்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

காரமலனைக்குகனாதலைக்கமலமிற்றெழுதபூயார்
கந்தவேன்னியில்
ஆண்மவிலாப்பெற்றகாதைசொலவொமதுத்த
மாங்குந்தாழ்வார
நான்மறையுணுபடித்துத்திபாகஞ்சொல்லும்
ஞானசத்தி

வேன்மயினுங் குணையாகவித் தினமுமெத்தினமும்
வேண்டுமென்றே

நவவீரர் விருத்தம்.

கந்தியங்கணங்கடானேநவகணவீராகி
முந்தரக்கெரிகால்வேற்கைமுருகனுக்கிளையராகி
குந்தமதேந்தியாரூர் கோமகனமைச்சராகி
வந்தசெங்குந்தவீரர்மலரடிவணக்கஞ்செய்வாம்

தரு-இராகம்-மோகனம்-ரூபகதாளம்.

பல்லவி.

வீரதேவர்களடியிணைப் பணிவா முசுகுந்தன் காதை
விளம்பிடும்படிநெஞ்சினிற்றுணிவாம்

சரணங்கள்.

நாரணாதியரானதேவர்நடுங்குகாலையெழுந்தடோத்பவ
பூரணாகரமுருகசோதரராகிவந்திடுபுனிதமா நவ (வீர)

ரத்னமாமணிசத்திபாதமுதிர்த்தபோதுகுதித்தெழுந்தவ
சுத்தவீரகுணாகராதரசுகிர்தலலிதசுசீலமா நவ (வீர)

ஆறுகட்டியுமகரகுண்டலமாதிகாதிலணிந்திடுஞ்சிவ
நீறுநெற்றிதுலங்கமுப்புரிநூலுமார்புரணிமலமா நவ (வீர)

தேடுமாமறைமுடியினின்றிடுசெங்கைவேலவன்விரதமாகிய
நாடகத்தமிழென்விலாசநடத்தவுந்தருளெந்தனிருதய (வீர)

செங்குந்த வேல்பதிகம்.

சங்கரிசுமங்கலையிமங்கிரிதருங்குமரி
தங்கமலரின்றகரமாஞ்
சத்திபராமுத்தியினுதித்தெமையிருத்துமரு
டாயகி வராகிவிமலி
இங்குவிகவங்கிறசங்கரனிடங்குலவி
யிவ்வுலகமெவ்வுலகமு
மீன்றகமலாட்சிகாமாட்சிபொற்காற்சிலம்
பிந்துமணியொளியில்வெளியாய்ச்
செங்கனனிறங்குலவுமங்குலெழுமின்கொடி
திரண்டுருவெழுந்தவகைபோல்
சித்ரநவரத்னமணிமுத்தணியுமிட்டகன
தேவவுருவாயுதிதரந்த்
துங்கநவமங்கையரிடங்குமரராய்வந்த
சுந்தரநவவீரரங்கை
சுந்தரசுகந்தவேல்கந்தனுக்கிளையவேல்
தூயசெங் * குந்தவேலே. (க)

---

* குந்தம்-ஈட்டி-கைவேல்-என்பன ஒருபொருட்கிளவி.

தங்கருமையாகவருளெந்தையிடபாகமுறு
சத்தியுதவுங்குந்தவேல்
சாமிநாதர்க்கிளவலாகிவிளையாடுகொற்
றண்டையூசையுங்குந்தவேல்
கந்தனொடுசென்றண்டகோளமுஞ்செண்டாடி-
சுதியில்வைத்திடுகுந்தவேல்
கார்வண்ணனுந்திவருபூமனைவிலங்கிட்டு
காவல்வைத்திடுகுந்தவேல்
செந்தமிழினங்குலவுசந்தமுனிவேள்விதரு
திருகுபுரிகோட்டுதகர்மா
திடுக்கிடநடப்பதைபிடித்தாறுமுகவன்
திருச்சமுகம்விடுகுந்தவேல்
தொந்திவயிறைந்துகரதந்திமுகனுக்கிளைய
சுத்தநவவீரங்கை
சுந்தரசுகந்தவேல்கந்தனுக்கிளையவேல்
தூயசெங்குந்தவேலே. (௨)

வஞ்சனையுலோபமுடனெஞ்சக்களங்கமுறு
வட்காரடுங்குந்தவேல்
வாரணமுகங்கொண்டதாருகநெடுங்கிளைய
வாரியையுணுங்குந்தவேல்
பஞ்சாக்ஷரம்பூதிசாதனமிலாதவெம்
பாவிகளடுங்குந்தவேல்
பன்னிருபுயாசலத்தண்ணலிடமென்றும்
பராக்குறைத்திடுகுந்தவேல்
மஞ்சுலவுமொருகிரிகுலுங்கிடப்பாய்ந்தே
மஹேந்திரம்புகுகுந்தவேல்
மாளாவரங்கொண்டசூர்முனம்வெற்றிவேல்
வாழியெனவருகுந்தவேல்
துஞ்சுவெம்புலியென்னபகைவருடலங்கிறு
சுத்தநவவீரங்கை
சுந்தரசுகந்தவேல்கந்தனுக்கிளையவேல்
தூயசெங்குந்தவேலே. (௩)

பம்பரமெனச்சுழன்றிம்பரிலலைந்திடாப்
படிபுரந்திடுகுந்தவேல்
பாவிநீதேவர்சிறைவிடுவிடாவிடிலதம்
படுமெனுங்குந்தவடிவேல்
வெம்பதுமனுலைவுறிங்கார்களைக்கொன்று
விண்ணெழுந்திடுகுந்தவேல்
வெற்றியெனவேவஜ்ரவாகுவென்பிணைநாட்டி-
விளையாடிடுங்குந்தவேல்

அம்பரமுமும்பெருமகேந்திரங்கடல்படா
வனுவெனக்கொழிதிருந்தவேல்
ஆறுமுகனும்பதுமதாண்மலரிணங்கிலா
னசுரனெனனநைாருந்தவேல்
அம்புருவமொருதேவராதிசயித்திடவந்த
சித்தரவீராங்கை
சுந்தரசுகந்தவேல்கந்தனுக்கினியவேல்
தூயசெங்குந்தவேலே. (௫)

கோரமருவும்பனைகவர்சூலேநடுநடுங்கவே
கொண்டிகாத்திடுந்தவேல்
கும்பலம்போதரகஜானனர்க்கிளவலாங்
குமரகுருபரகுந்தவேல்
வீரமோடெழுந்துமுதனுட்சூரனமர்க்களம்
வெறுங்களஞ்செய்குந்தவேல்
வெஞ்சூரன்மகவிலொருமகவொழியமற்றவனை
வெங்கண்டிடுங்குந்தவேல்
சிரணங்கும்பானுகோபனுடலங்குத்தி
சென்னியும்பறிகுந்தவேல்
செங்கடம்பணியும்பம்பொருகங்கண்டு
தெரிசித்திடுங்குந்தவேல்
சூரனுஞ்சூரனுக்கிளவலுநமக்கென்ம
சித்தரனவீராங்கை
சுந்தரசுகந்தவேல்கந்தனுக்கினியவேல்
தூயசெங்குந்தவேலே. (௬)

மாமுதறடிந்துசெஞ்சேவலங்கொடிதனது
வலமேந்திபதுமனுடைய
மற்பெரியவெம்புலிக்கொடிமுருகனற்ற
வாங்குஞ்சிலைக்குந்தவேல்
காமுதற்சுரராஜனுதியாங்தேவனைக்
ககனமேற்றிடுகுந்தவேல்
கனவல்லிதெய்வானைதிருமணங்கண்டே
களித்திடுங்குந்தவடிவேல்
பாமுதற்புலவர்கடுதிக்குங்காமாதனம்
பதியாயிருந்துநெடுநாள்
பக்தவிஜயங்கொண்டுசத்தஷண்முகனுடைய
பாதந்தொழுங்குந்தவேல்
தாமதமகற்கடகமாயிரநிதஞ்செற்ற
சித்தரவீராங்கை
சுந்தரசுகந்தவேல்கந்தனுக்கினியவேல்
தூயசெங்குந்தவேலே. (௭)

மைமயிலகுதிவினைக ளெய்யவுகமுள்ளினாரை
வந்துகாக்குங்குந்தவேல்
வரதமலியுஞ்சட்டி விரதமிகுமுசுகுந்த
மன்னவனிருந்தவத்தால்
செய்யமயிலேறு முருகையனுடனுகவே
தென்னாடுவருகுந்தவேல்
தேவதனுவங்குதரி மானவதனுப்பெற்றிச்
செகமிருந்திடுகுந்தவேல்
வெய்யவனருங்குலத் துய்யுமாமாதரை
மீமணம்புரிகுந்தவேல்
வீரதுமகன்மழக் கிளியையுங்கிளியையும்
வேந்தனுக்கிருந்தவேல்
தொய்யின் முலைமங்கையர்கண்மையலுறுமெழிலிலவு
* சுத்தநவவீரர்க்கை
சுந்தரசுகந்தவேல் கந்தனுக்கிளையவேல்
தூயசெங்குந்தவேலே.

(௭)

மாற்றலர்கணைஞ்சங்கலக்கிட நிணைக்கமழ்தன்
மாறுதவைகுந்தவேல்
மாநிலத்தவர்நடு நடுங்கவருசெங்கணொரு
மைக்கடாவேறுமழகக்
கூற்றுவன்றம்மகட் கிள்ளையைக்கொண்டுசெல
கோபித்தெழுங்குந்தவேல்
குந்தத்திரங்கண்டு வந்தித்தவேமன்
கொணர்ந்துதர செய்[illegible]
ஊற்றமிகுசந்தான மாவினவிருடகாச
மோட வதுபறிகுந்தவேல்
உரியகற்பினியமகட் காகமலைநாடே கி
யுட்பலங் கவர்குந்தவேல்
தோற்றநளிபல்லூழி காலமும்பற்பலமா
தோலாதகுந்தவடிவேல்
சுந்தரசுகந்தவேல் கந்தனுக்கிளையவேல்
தூயசெங்குந்தவேலே.

(௮)

வண்டமிழ்ச்சோழமண்டலமிருக்கப்பெருமை
வானமட்டெழுகுந்தவேல்
மாகநகரிற்பொருவ லானதுவலங்கண்டு
மகபதிக்கருள்குந்தவேல்
அண்டருக்கரசனுன் மார்த்திதவிடங்களை
யாளுரிடுங்குந்தவேல்
அங்கிவன்மன்றற்றெறுடு மனகசனகாதியர்க்
கரசுதந்திடுகுந்தவேல்

கண்டகவலானையென்றன்னவன்றேவிக்கு
கூளநாண்டருங்குந்தவேல்
தொண்டராணர்க்கெலாந் தொண்டருமையென்சிற்
சுகானந்தமுறுகுந்தவேல்
சுந்தரசுகந்தவேல்கந்தனுக்கிளையவேல்
தூயசெங்குந்தவேலே. (௯)

சிவநந்திகணநாத ராதிநவவீரராய்ச்
சித்ரமணவூரிலெய்தித்
திவ்வியகுலோத்துங்கனஞ்சமஸ்தானந்
தெரிந்தனந்தங்கூத்தயர்
இவனந்தியாமென்ன வாயிரத்தெண்டலைக
ளீய்ந் * திசைப்பெறுகுந்தவேல்
ஏகம்பதெய்வீகத் திருவுலாச்சொன்னதி
லிரட்டையர்கடுதிகுந்தவேல்
[illegible]ந்திவீரரே முதலியர்களாமென்ன
ஞானப்பிரகாசவள்ள
ஞவிஞன்மழுவெடுத் தும்மாலைபிள்ளைதமிழ்
நவிலப்பெறுங்குந்தவேல்
துவநந்திருத்தெய்வ மாகிமனுவாகியுஞ்
சொல்விலங்காக்குந்தவேல்
சுந்தரசுகந்தவேல் கந்தனுக்கிளையவேல்
தூயசெங்குந்தவேலே. (௧0)

சரஸ்வதி விருத்தம்.

காமர்செங்கமலம்பூத் கமலையாண்மார்பிற்பூத்த
வாமனுந்தியினிற்பூத்த வாரிசமலரிற்பூத்த
பூமன்றனாவிற்பூத்துபொறைபிலாவெளியேநெஞ்சத்
தாமரைமலரிற்பூத்த சரஸ்வதிதாயேபோற்றி

தரு—இராகம்—கல்யாணி—அடதாளம்

பல்லவி.

கலைவாணியென்னாவிலிருந்துநிதங்
காருங்கடைக்கண்பாரும்

அனுபல்லவி.

நிலையாகியசிவகந்தவிரதஞ் சொல்ல
நிமலவேதபுராணபூர்ணி
அமலமாதவமானகாரணி (கலை)

---

* இசை ஈட்டிஎழுபது, பரணி, உலா, முதலியன.

சரணங்கள்.

வெண்டாமரைமலராசன மென்னவே
வீற்றிருந்தேவெள்ளைநிறமது துன்னவே
கண்டாச்சிறப்புடன்மகரயாழ் மின்னவே
சாரதித்திருபூர வாஹினி
பாரதிக்ருபையாகவே யிணி (கலை)

காமகளேமதுராபுரிதனிற் சங்க
நாற்பத்தொன்பதின்மராகியேபெருந் துங்க
நீமகிழ்வாகியென்னெஞ்சினிலேத் தங்க
நேசபோத விலாச நாயகி
மாசர்வேசவிவேக தாயகி (கலை)

என்னாளுமுந்தன்றிருவடியே கதி
என்றிருந்தேனருளாகியசரஸ பதி
அன்னாவலர் முத்தமிழ்க்கே நிதி
ஆதியாகநிறைந்த வந்தரி
சோதிபாஸ்கரகோடி சுந்தரி (கலை)

நால்வர்

அறுசீர்கழி-நெடிலாசிரியவிருத்தம்.

கூடற்கோச்சுரந்தணியவெண்ணீறுநாட்டியருட்
கூர்ந்தாய்போற்றி
பாடலாற்பவக்கடலுமுவர்க்கடலுங்கடந்துபெரும்
பண்பே போற்றி
யாடகத்தைமணிமுத்தர்தெவிழ்த்திகமலைதட
மறிந்தாய் போற்றி
பாடலமாய்நரியைசிவம்பாண்டியர்க்கிங்குதவ
வருள் படைத்தாய்போற்றி.

பொய்யாமொழிப்புலவர்.

வேறு அறுசீர்கழி-நெடிலாசிரிய-விருத்தம்.

பிட்டமுதுண்டானந்தம் பெருக்கியபெருமான்றன்னை
எட்டுணையேனுமாறு வெண்ணைமிங்கறியக்காட்டு
வட்டையிற்கந்தனேகி வளைத்திடுங்காலைவேவேன்
முட்டையென்றேறும்பொய்யாமொழிப்பெரும்புலவபோற்றி.

நற்கீரர்.

விடையுகத்தவனையுள்ளுந்தன்னொடாயிரவர்மாழ்க
வுடைதிரைக்கடலுட்டீவிலொழித்துணைவெண்ணூங்கியோன்
கடையுகத்தாழித்திமிற்கரிதாமுருகனுற்றுப்
படையுரைத்தவனைக்காத்தபாவலனடிகள்போற்றி.

அருணகிரிநாதர்.

சத்திநிபாதந் தாண்டத் தமக்கையா லடிக்காய
மித்தனை விடுவலென்று மிறக்குமுன் னிபத்தண்டார்
முத்தவெங் குருகுகேச முருகனைக் குருவாக்கண்டு
புத்திருப்புகழ் லேத்தும்புலவர் பூங்கழல்கள்போற்றி.

அடியார்கள் வேறு.

இந்துளப மாலையணித் திருமாலும் பிரமன்முதற்
றேவர்மற்றோ
ராய்ந்தமறைமுடி வறியாவாறுமுகப்பெருமானை
யடிகளொன்றுந்
தீர்ந்தமுணர்வா லுன்னிச்சச் சிதாநந்தபதந்
தடையிலாது
வாய்ந்தவடியாரவர்தா ண்மனதுள்ளுஞ் சிரமேலும்
வைத்துவாழ்வாம்.

நூற்பயன்

விருத்தம்.

ஆண்முகன் விரதமென்றுஞ் சரித்திரங்கேட்போரெல்லா
மண்மிசைச் சிறந்தகீர்த்தி வாய்த்துநற்புதல்வரீந்தங்
கெண்ணியதெல்லாமெய்தி யிம்மையேஞானமோங்கிப்
புண்ணியமுதிர்ச்சியாலே போதமேயடைவர்தாமே.

தரு-இராகம்-ஆனந்தபைரவி-தாளம், ரூபகம்.

பல்லவி.

விரதசிரவணம் கந்த விரதசிரவணம்.

அநுபல்லவி.

வரதனந்தரச் சரதமாகிய (விரத)

சரணங்கள்.

கனிபலவினு மினிக்கும் - கற்
கண்டெனருசி செனிக்கும்
குனிசிலைமதன் கணையை முனிக்கும்
குகனடியருட ரவெத் தனிக்கும் (விரத)

இருவினை தன்னைக் கெடுக்கும் - மது
ரிதசுகானந்த மடுக்கும்
கருவினிற்புகுதாமற் றடுக்கும்
காமியந்தன்னை முழுதும் விடுக்கும் (விரத)

முத்திவழியையுன் டாக்கும் - பிர
மோபதேசத்தையுஞ் சேர்க்கும்
சித்தத்திலுடையமாசு நீக்கும்
சேவலங்கொடியோனருள்கை தேக்கும் (விரத)

நூல்வரலாறு.

மாதிரியம்பகனம்பனந்திக்கவர்ச்சனற்
குமாரர்க்கன்னோர்
வாதராயணமுனிவர்க்கம்முனியுஞ்சூதருக்கே
வருக்கச்சூதன்
நீதவனநைமிசருக்கோதுபுராணங்களிற்
சிறந்தகாந்தக்
காதையெனும்பெருங்கடலையுண்டுசிவரசமினிக்கக்
கண்டமேகம்
மதுகரங்களிசைபாடப்பொழினிலவும் * திருவுறந்தை
வந்துகுந்த
முதுகுலத்தோரிந்துதருசிரசிங்காசனவடுக்கன்
முகட்டிலேறி
புதுமழையின்பெயலிட்டுப்பொழிவதெனுஞ்செங்கவியே
பொழியவத்தின்
அதியவொருபாக்கந்தவிரதவிலாசப்பெயராற்
சொல்கின்றேனே.

வசனம்.

பெருமை பொருந்திய திரிநேத்திரதாரியாகிய பரமசிவன் நந்திதேவருக்குச்சொல்ல, அவர் ஜனற்குமாரமஹாரிஷிக்குச் சொல்ல, அவர் வேதவியாசருக்குச்சொல்ல, அவர் சூதபுராணிகருக்குச்சொல்ல, அவர் நீர்வளங்களாற்சிறந்த நைமிசாரணியமஹாமுனிவருக்குச்சொல்லிய பதினெண்பு[illegible]ல் சிறந்ததாயும் ஒரிலக்ஷங்கிரந்த முடையதாயும் ஆறுசங்கிதையுடையதாயும் உள்ள, ஸ்காந்த மென்னும் பெரிய சாகரத்தையுண்டு, அவ்வாறுசங்கிதையில் சங்கரசங்கிதையிலுள்ள பன்னிரண்டு காண்டத்தில். ஒன்றாகிய சிவரகசியமென்னும் சுகாமிர்தம் இனிக்கக்கண்ட ஸ்ரீ- ஒட்டக்கூத்தரென்னும் புலவர்பிரானாகியமேகமானது, வண்டுகள்சத்திக்க பூமரச் செறிவுகளால் நிறைந்தசோலைகள் சூழ்ந்ததிருவுறையூரென்னும் குலோத்

---

* செங்குந்தபுராணம் சிரசிங்காதனகாண்டம் பூர்வபக்கம்
உறந்தைப்படைப்படலம் அசு-வது கவி.

சங்கலம்புந்திரைப்பொன்னித்தாயமுதமுண்டெழுந்தசத்துருக்கவெல்லா
கொங்கலம்புந்தளிர்க்கரத்தான்மலரோந்தியணங்கிமகிழ்கூரக்கூத்தன் [ங்
மங்கலம்புத்தெருவியங்கவெதிர்கொண்டவளவனுடன்மலைமுலைக்க
ணங்கலைப்புமிழ்பயலாராலிக்கத்திருவுறந்தையகனுட்புக்கான்.
என்னுஞ் செய்யுளானுணர்க.

துங்கசோழனது இராஜதானியில் வந்து பழமையாகியசெங்குந்தமரபினர் ஆயிரத்தெட்டு சிரங்கொய்தடுக்கிய சிங்காசனமாகிய மலையிலேறி இருந்து தலைபெய்யலாக ஈட்டியெழுபதென்னும் அமிர்ததாரைகள் பெய்தன அதில், முந்தை நோன்பென்னும் ஓர் ஒப்பற்றபாவாதாரமாகக்கொண்டு கந்தவிரதவிலாசமென்னநாடகத்தமிழினால் கற்றவர்களல்லாமற்றவர்களும் எளிதிலுணரமஹான்கள் அருளால்சொல்லத்தொடங்கினேன்.

அவையடக்கம்.

விருத்தம்.

நகரவர்க்கங்களெல்லாநவின்றிடுநெடுங்கணக்கிற்
பகரெலாவெழுத்தினோடும்பதித்திடுங்கொள்கைபோல
தகைபெறும்புலவரோதுந்த மிழொடுமெளியேன்புன்சொன்
மிகவுதவாதவேனுமேலவர்க்கொள்வரெள்ளார்.

தரு-இராகம்-கமாசு – ஆதிதாளம்.

பல்லவி.

பொறுத்தருளனிதம்- பெரியோர்
பிழைகளிருந்தபோதும்

அனுபல்லவி.

சிறுத்தமகிபிளேன் சொல்லதன் மேலே
சேவலங்கொடியோன் விரதம தாலே (பொறு)

சரணங்கள்.

சிவரகசியமென பரமனே சொன்னார்
தெரிந்தநந்தியால்சிலர்வழிப் பன்னார்
நவரசமிகுந்தநாடகத் தென்ன
நன்மொழியெளியேன்புன்மொழி யென்ன (பொறு)

அகரவருக்கமெயறியாப் பிள்ளை
அப்பர்சொல்திருமுறை யெழுதலென் கொள்ளை
பகரவுமறியாப்பாலகன் வெள்ளை
பதர்மொழிக்குவப்பார்தங்தையுந் தள்ளை (பொறு)

வலிமிகும்பஞ்ச விலக்கணத் துண்டா
மார்க்கமறிந்தபெரி யோர்களுற் றுண்டாம்
புலியைக்கண்டுநாய் சூடிட்டுக் கொண்டாற்
போலெளியேன்சொலும் புன்மொழி கண்டாற் (பொறு)

மங்களம்.

கலிவிருத்தம்.

கரதலம்பெறுநெல்லியிற்காணிய
வரதமாதவரெண்ணியவெய்துறுந்
சரதவாறுமுகன்றிருச்சட்டியென்
விரதமங்களமாகவிளங்குமே.

தரு-இராகம்-சௌராட்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

மங்கள மங்கள மங்களம் ஸ்ரீகந்தருக்கு
மங்கள மங்கள மங்களம்

அனுபல்லவி.

திங்கணதியும்புனையுஞ் சங்கரகுமாரனுக்கும்
தேவர்கள்சேனாபதிக்கும் பாவலர்கண்மாநிதிக்கும் (மங்)

சரணங்கள்.

தத்துவங்கடந்தபர முத்தனருள் பாலனுக்கும்
சஞ்சலரஹிதமெனும் விஞ்சையருள் வேலனுக்கும்
சுத்தநிலையானகன சித்தமுறுங் கோலனுக்கும்
சூரர்குலகாலனுக்குங் காரணசீலனுக்கும் (மங்)

நாதமுடியானபரஞ் சோதிமயனு நீதனுக்கும்
ஞானவடிவானதவ மோனமருள் போதனுக்கும்
தாதகிமிலைந்தசடை யாதிகுரு நாதனுக்கும்
தண்டையணிபாதனுக்கும் தெண்டமிழ்வினோதனுக்கும் (மங்)

உன்னதவயிற்படைய பன்னிரண்டு கையனுக்கும்
ஓமெனுமெழுத்துரையி தாமெனருள் மெய்யனுக்குஞ்
சன்னதமிகுமடியார் தன்னேடுமா டையனுக்கும்
சாந்தவெளிமையனுக்குஞ் சேந்தனுமுக் கையனுக்கும் (மங்)

பாயிர முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகந்தவிரதசரிதச்சுருக்கம்.

நேரிசை யாசிரியப்பா.

சீர்பெறவிளங்குங் கார்முகிற்குலங்கள்
வாரியிலுண்டு நேரியிற்பொழிந்த
காம்பிரமுடைத்தா யாம்பிரநதியிற்
புகுந்தலைபெறிந்து மிகுந்தெழுந்தோடி
பூந்தடங்கழனி மாந்திடத்தந்து
குளங்கயங்கூடம் வளம்பலநிறைப்பி
பரந்தொலிகடலிற் கரந்திடுநதிசூழ்
காவெலாந்தேனுண மாவெலாந்திரிதரும்
பண்ணையுட்டாமரைக் கண்ணுறங்கிடுமன
மித்தகைவளஞ்சூழ் சுத்திகைப்பாங்கருவ்!
ளாடகச்சேற்றிற் கூடியநவமணி
கற்களாலுயர்ந்து நிற்கும்பெருமதில்
கடியவெண்சாந்த நெடியநன்மாடங்
காவணநிறைந்த வாவணமுள்ளத்
திருவொழின்மிகு கருவூரெனும்பதிக்
கரசனென்றெவரும் பரசுமங்கடுக்கை
யாரணிந்தவரா லாரணிந்திந்த
வசுமதிபுரக்கு முசுமுகபூபதி
கேசரித்தாங்கிய வாசனத்திருந்து
தாமரைமுகநலார்ச் சாமரையிரட்ட
நாடகக்கணிகைய ராடுதல்புரிய
வந்திருபுரத்து மந்திரிமுதலோர்
செய்வினையென்னெனுந் தெய்வமாவறங்கிற்
றாவினைதொடர்பா றுவினையசைப்பன்
கேண்மதியமைச்ச ராண்மதியுடையோன்
மனுவகம்பிறந்துந் தனுமுறைதெரிந்து
மீசுரனருளா யேசிரந்தரித்து
மேகசக்ரேசா றுகவேவேண்டுந்
சைவந்தழைத்திக முய்வந்திருத்தலை
யன்றிபின்வாய நன்றிலையென்று

தங்குலகுருவின் செங்கமலத்தா
ளொன்றிலிணைந்தன னஞ்சலென்றிரணிய
கருப்பனுன்மானத வுருப்பெறுமுனிவர
விருத்தலைத்தந்தவன் கருத்தறிவித்தலும்
முனிவரனன்மனக் களிகொடுமிதுசொலு
மித்திறமடையநஞ் சத்திவேற்கைத்தல
கந்தமாவிரதச் சிந்தனையாற்றிமுன்
னாதராதியர்ச் சாரதமுற்றன
ருந்தமக்கொத்தலான் முந்தியதிலையென
வேந்தனுந்தேசிகன் பூஞ்சரணுகளமீப்
போற்றியாதெவ்வணஞ் சாற்றெனமுனிவரன்
போதித்தகன்றனன் சாதிக்கவாசனும்
தாபதனாகிப் பூபதம்பிரவொரீஇ
விண்மணியெனவொளிக்கண்மணிமுதனவிற்
சிவசினம்பூண்டுநற்றவசினத்தவரொடுங்
கூடிநங்குமரவேளுடியவகமுளோன்
துலைமதியம்புலி கலைமுதிராதரச்
சட்டிமாவிரதத் திட்டங்கொடுமனங்
துங்கமாயிருந்தருட் செங்கதிர்வேற்கரத்
தேவனையும்பரிற் பாவனையாற்றபு
ஆதிப்பிரமமாஞ் சோதிபிழம்பே
பஞ்சப்பிரமமே விஞ்சாறுமுகனே
விப்பிரோத்துஞ் சுப்பிரமணியனே
யாரணனிந்திர னாரணனாதியர்
சிரவணஞ்செய்யுஞ் சரவணோற்பவனே
நின்விளையாட்டே. கொள்விளைவிக்க
மான்முதலோர்களின் கான்மல,
வாபத்தகற்றிடு நீபத்தொடையனே
நாரதனமுற்கடாப் பாரதஞ்செய்ய
விம்பரைத்தெறி யும்பரைக்காத்தோய்
எளியவன்வேண்டும் விளிதலைக் கொங்கு
மெண்ணிய வெய்தக்கண்ணருள் செய்யென்
றித்தகைதுதித்து பத்திமைமீறி

வாக்கினையிறந்து யாக்கினைவழிபோய்
நெஞ்சமுனமுவிமுன் சஞ்சிதப்பாடியே
தேகத்தினாசையிலா தியோகத்திருந்தன
னிக்கொடுந்தவந்தனைக்கொக்கடுங்குமரவேள்
கந்தமாதனமெனும் விந்தத்திலரியணைக்
கண்ணாறுமுகமொடு நண்ணிடுந்தெய்வதப்
பிடியொடும்வள்ளிநற் கொடியொடுஞ்சேவலஞ்
சத்தியொடும்பரா சத்திவேலொடுநவ
வீரருஞ்சூழ்தர சூரனிலலைசூர
ரலக்கணகற்றிடு மிலக்கருந்தேவரும்
போற்றவிருந்தவ னாற்றவுணர்ந்தன
னந்நிலையாகவித் தென்னிலைவேந்தனை
யேதுநினைந்தனை யோதனக்கேட்டலும்
பசுங்கடலுதையமாமு சித்வனந்தமார்த்
தாண்டரின்வெளிவரார்க சாண்டலுமன்னவன்
ஒருமுறையிருமுறை திரிமுறைவணங்குபு
முந்தெமையாண்டருள் பைந்தமிழ்ப்பாவல
கந்தசதாசிவ மைந்தசெவ்வேற்கர
ஷண்முகதேவயான் மண்ணசஞ்சீரிய
[illegible]ராசராஜருஞ் சீருஞாந்தாலா
லாங்கதுபெறவுமற் றிங்குமைகண்டேச்
சேவையின்காட்சியிப் பூவகமிருக்கவு
மொய்ம்பினராதிய தம்பியரைத்தர
வேண்டுமென்றிரந்தன னண்டலைக்கொடியுளோன்
வீரரைக்கடைக்கணித்தி ரமனத்தவன்
பாங்கரிலேகுக நீங்களென்றோதலு
அண்ணலேயுன்பதக் கண்ணுளவேழையே
நரபதிபாற்செலன் மரபதோவென்னவேள்
தடுத்துரையாடிநா லடுத்ததுக்ஷத்திரியர்க்
காதலான்மனுகுலப் புதவுடம்பிவண்
டாங்கவென்றுணர் தரபூங்கழறொழுதவ
ரையவித்திங்கெம க்கெய்தியதென்னெனக்
கொற்றமடைந்துநாமுற்றினமாற்றிய

தேவகுஞ்சரிமணக் காவணமெய்திய
விரும்பெழிலேந் தியவரம்பையருங்களைக்
கண்டவருன்னிய துண்டுபினிவிரும்
புந்தியிலுன்னிய முந்தியவினையிது
வாயினுநம்பதத் தாயினமீதென
கைவேற்படையொடு முப்பினென்றுதாங்
கூடிவரம்பெறுசிரியவரசனாந்
தந்தனங்கொண் டியென்றந்தரமாகினர்
வெங்கொடுங்கருவையிற் போந்தவிவ்விரர்கள்
மீண்டனைவசட்டியிம் மண்டலங்காத்திடு
மேகசக்ரேசுரனுக வமைத்தனர்
பின்னரிச்சூரிய மன்குலந்தோன்றிய
மதுகரமுரலரும்புதுமலரளகனற்
கன்னியரைக்கொடுத்துன்னதமாமணஞ்
செய்தனனரசனுந்தைதவழ்ப்பிறையென
மொய்ம்பினனீன்ற பூங்கொம்பினையரசனுக்
கீய்ந்துபின்கிள்ளை யொன்றிநதனர்விருந்
சித்திரவல்லியத் தத்தைவளர்த்திட
ஞானமகத்திலா வினைக்கொண்டுபோங்
காலனூர்மனைசுக மேல்வாக்கொள்ளதன்
ஆதுவராற்கொடு மாதுக்களித்தன
னங்கதகத்திலாப் பாங்கறிந்தன்னதை
யரசமாதேவியார் சரசவிலாசதங்
காதலர்க்குரைசெய பூதலமாண்டருட்
சக்கிரவர்த்தியா ருக்கிரமாகிய
வீருக் [illegible]
[illegible] த்தவவ [illegible] ாகளைப்படைவரு
முந்தவெழுந்துசெங் குந்தங்கையிற்கொடு
பூதலமெங்கணும் பாதலமேழினும்
பிரமபுரத்தினும் பரமபதத்தினும்
தேடியுங்காண்கிலா தோடினரெமபுரப்
பதிமனைக்காண்டலுங் கொதியுறுஞ்சினமிக
வேலையனுப்பியுங் காலனைசந்தில
னங்கவனேடமர் டொங்கவியற்றிட
வத்தருமப்பதிதத்தை யளித்தடி
தாழ்ந்தனனிவர்களும் வாழ்ந்திடென்றேகிதன்
புத்திரபாற்றர சித்தமகிழ்ந்தனள்
அரசனுந்தேவியுஞ் சரசமுறுஞ்சில
காலையிலுன்னினர் பாலனில்லாமையை
மந்திரியாயசெங் குந்தரிடஞ்சொல
வன்னவரேவரு நன்னலந்தெரிதர
லானதுநாடிசந் தானமாமாமதை
குடநகரானியி னிடனிகற்போரினல்

வெங்கண்டவன்றனை முன்கொண்டளித்தன
ரக்கனியுண்டுகோவைக் கனியிதழிறை
மாந்திடவிளநல மேந்துகருப்பமாய்
விலங்காசலப் பலங்காய்விரும்பிய
சித்திரவல்லியா ளத்தனுக்குரைசெய
வக்கணந்தன்னையர் தெக்கணக்குன்றெல்லாந்
துருவிப்பலங்கொணர்ந் தரிவைக்களித்தனர்
திங்கள்பத்தாகவே யங்கிவன்மன்றனை
சொன்னமுருக்கியிம் மண்ணிற்கவிழ்த்ததிற்
பெற்றனளாங்கது கொற்றவனறிதர
களிமகிழ்வெய்துசெந் தனமழைபெய்தரித்
தவிசிலிருந்தவன் சிவசினரேவரு
மாசிடைச்சொலமனத் தேசிடையேசதா
குமரனையேகிரீ இ யமருங்காலையி
லந்தரத்தரசனு மிந்திரனேவலா
சூரன்செயுங்கொடுங் கோரத்தினுன்மெலிந்
தேங்கியிருந்தன னுங்கொருமுனிவராற்
கந்தமாவிரதியி னந்தடப்புயவலி
தேறிகந்திருவாரால் விறுபெருஞ்செய
சக்கிரவர்த்தியின் பக்கலுரைத்திட
வங்கதழிந்திறை புங்கவரூர்புக
சண்டனன்வாழ்த்தியா கண்டலனுகுலஞ்
சொல்லவிந்நரபதி நல்லதென்றுழையராங்
குந்தருக்குரைசெயு முந்தவெழுந்தனர்
வாகையணிந்தவெவ் வேகவலானொடு
போராகியற்[illegible]ராதனுயிரை
தாக்கிடவீரரு நோக்கியவன்பெருங்
கடனிகர்த்தானைக ளுடலதமாக்கியந்
நிசிசரர்களைதம துசிதமதாகிய
குந்தங்களிரைபெற வந்தகனூற்புரஞ்
செல்லவனுப்பியின் வல்லவலான்றனை
பொன்னகர்க்கிறைவனுற் றென்னகர்சேர்த்தியே
தம்முசுகுந்தனோ டம்மவிவ்வீரரு
நாகநகர்த்தனை யாகண்டலன்றனக்
கரசமாமௌலியைச் சிரசகஞ்சூட்டினர்
பூவிறைகளிமிகத் தேவிறையசைதரு
நடம்பயின்மேதகு விடங்கருக்காகம
பூசனைசெய்திட நேசநனிமுசு
குந்தனனன்மெழுந் குந்தியதெனவக
முருகியவாற்றலைப் பரமனறிந்தெமை
விண்ணிடையேற்றுநின் மண்ணிடையேகுதி
யென்னசுரேந்திர மன்னனைப்பூவர "

சேற்றலுந்தன்னுயிர்க் கூற்றமதானதாற்
றரமனமாழ்கிய கரவினற்றெய்வதத்
தச்சனற்செய்தவ ரிச்சையின்படிதர
தாலங்கொணர்ந்தன னலக்களத்தன
லுண்மையிதல்லெனுந் திண்மையறிந்தபி
னவ்விடமேகியு மிவ்விடமாகியு
மிப்படியறுதாஞ் சொற்படிபூசலிற்
றிரதரக்காண்டலும் பிரியவகங்கொடு
புங்கவனுண்மையாய்ச் செங்கழுநீர்தொடை
சடையவிடங்கரைக் கொடைதரக்கைத்தலந்
தியாகமாயேற்றலில் தியாகரென்றேவரு
மோதவறங்கெடா நீதவரூரிடந்
தாபனஞ்செய்தனர் பூபனும்வீரருந்
செய்தகுசிறப்பெலா நொய்திலமைத்தபின்
னேமியினுஞ்ஞையாற் பூமியையாண்டன
ராயிரவாண்டிவ னாயபின்வீரர்க
ளனகனேயருமதி கனகனேயாதிய
புத்திரமணிகளை யித்தலஞ்சிரிய
வெவ்வேறிடத்திலுஞ் செவ்வேயிருத்துபு
வரசுறுமௌலிகட் சிரசிறரித்தபின்
தங்களினமைதிய புங்கவிளைஞரைத்
தற்சபாவினரெனும் பொற்பிலமைத்தெழி
லங்கிவன்மன்றனக் கிங்கிதமாகிய
மணிமகுடம்புனைந் தணியிகத்தேவரு
மூவருமறிவருந் தேவனுஞ்சுப்பிர
மணியனுக்கிளவலாங் கணநவவீரரும்
முசுகுந்தபூபனும் வசுமதிநீத்துள
வினைமுடிபாத லாற்றலையுணர்ந்து
கைலையிற்கந்தமா சைலமுற்றுரரோ.

ஸ்ரீகந்தவிரதசுருக்க முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901
https://senguntharmudaliarhistory.blogspot.com

உ

வேலுமயிலுந்துணை.

ஸ்ரீகந்தவிரதவிலாசம்.

விமலவினாயகர் வருகிற

விருத்தம்.

தவமுசுகுந்தன்செய்த ஷண்முகவிரதமென்னு
நவரசநனிவிலாசரஞ்சிதங்காணவேண்டி
குவலயமெல்லாம்போற்றுங் குஞ்சரமுகம்படைத்த
சிவஹரஹரகணேச தேவனார்வருகின்றாரோ.

தரு-இராகம் - நாட்டை-ஆதிதாளம்.

பல்லவி.

விமலகணேசர்வந்தார் வினோதமாக
விமலகணேசர்வந்தார்.

அனுபல்லவி.

விமலகணேசர்வந்தார் மேதினிக்கருள் தந்தார்
கமலமலரடியைக் காட்சித்தரவெ ழுந்தார்

கஜமுகேசகருணாகர தயாள
நிஜபரம்பரம வலல்பை மணாள (விமல)

சரணங்கள்.

ஆனைமுகவுலாசன் - கந்தவிரத
வரியவிலாசநேசன்
தேனையனையானந்த தேவர்க ளஞ்சலிக்க
பானைவயிற்றினொடும்பாதச் சிலம்பொலிக்க.

பாதவேதவாகமசிவ புராண
காதலாமலக மாயக மிராநம் (விமல)

தோசையப்பங்கண்மாந்தி - யங்குசமொடும்
பாசங்கரத்தி லேந்தி
நேசமுடனடியார் நெஞ்சகமிசைந்திட
வாசமிகுந்தமலர்மாலைக ளசைந்திட

வள்ளிநாயக குகேச சகோதர
தொள்ளுஞானமிகு மாத வாதர (விமல)

தங்கக்கண்டிகை மின்னவே - ஜடாமகுட
சந்திரனொளி துன்னவே
மங்களகரசிவ மாதுசிலம் பூஜித்த
செங்குந்தரனுதினந் திருவடியைத் துதித்த

தேவதேவ தேஜோமய பூர்ண
மூவராதிநிறை முழுமுதல்காரண (விமல)

நேரிசைவெண்பா.

பாமலராற்பூமலராற் பத்தெரொலா மர்ச்சித்து
மாமலரடிக்காண வந்துவிட்டார் - பூமலரிற்
பிள்ளையார்கந்தப் பெருமாள் விரதமெனுந்
தெள்ளிய விலாசஞ் ஜெயம்.

பொது விருத்தம்.

அந்தணரெல்லாங்கேளி ரமார்களுலகம்போன்ற
விந்தைசேர்கருவூர்தன்னில் விற்றிருந்தரசுசெய்ய
கந்தனேதெய்வமென்று கருதியமுசுமுகேந்த்ரன்
செந்திருவிளங்கும்வாசல் சேவகன்வருகைசொல்வாம்.

வசனம்.

ஸ்ரீ கந்தவிரதமாகிய இச் சரித்திரத்தைப் பலவளங்களா லும் சிறப்பெய்திய திருவுறையூரென்னும் இராஜதானியில், செங்குந்தத்தலைவர்கள் தங்கு ஒரு புத்திரனைகவும் கல்விப் பயிற்சியுடையவனைகவும், சிவநேசமுடையவனைகவும் உள்ள சிறுவர்களது ஆயிரத்தெட்டு சிரங்கொய்து சிங்காசனமிட்டு, அதன்மேல் இரத்தபாவாடையை விரிக்க, அத்தலையாசனத்தி லெழுந்தருளியிருந்த ஸ்ரீ ஒட்டகூத்தரென்னும் புலவர்பிரான் குலோத்துங்க சோழன் முதலிய சகலவருணத்தவரு மிருந்து சிரக்கம்பனம், செய்யும்படியாக சொல்லுகிறார், கேளுங்கள் அழகிய தன்மையையுடைய மஹான்களே-காவேரி நதியாகிய தேவ கங்கையாலும், பலவித பூஞ்சோலைகளாகிய கற்பக விரு க்ஷங்களாலும் மாடகூடங்களில் அதிசயிக்கத்தக்க அனந்த வித சித்திர விசித்திரங்களாலும் அமராபதியைப்போன்ற திருக் கருவூரில் ஸ்ரீகந்தநாதனே தெய்வமென்று சதா சிந்தித்து அரசு செய்து கொண்டிருக்கும் சூரியகுலத்தரசனகிய மாந்தாதாவி னது புத்திரன் முசுமுக மஹாராஜனுடைய சபாமண்டபங்காக் கும் கட்டியக்காரன் வருகிற விதங்காண்க.

கட்டியன்-விருத்தம்.

அண்டமுங்கிடுகிடென்ன வதிர்ந்திடும்படியதட்டி
வெண்டுகிலங்கிபூண்டு வேன்மயிற்குலித்தவெள்ளித்
தண்டமுங்கையிலேந்தி சகமெலாமெச்சரிக்கக்
கண்டிதவீரனை கட்டியன்வருகின்றானே.

தரு-இராகம்-நாட்டை-ஆதிதாளம்.

பல்லவி.

கட்டியக்காரன் வந்தானே - சிவகந்தவிரதமுசுகுந்தராஜனிடங்
கட்டியக்காரன் வந்தானே.

அநுபல்லவி.

கட்டியப் பட்டையும் - கன
மானதங்கச் சட்டையும்

கணைத்தகுர ஒடிக்கவே — அன்மார்க்கனை
சினத்துமீசை துடிக்கவே

எச்சரிக்கை.

காசினியில்கருவூரிராஜனார்வருகிறார்
தேசத்திலெச்சரிக்கை.

சரணம்.

பேரிகைபூரிடமார மதிர்ந்திட
வாரியெனப்பெரு மேளமெதிர்ந்திட
பேசியவெள்ளித்தடியை — வைத்திடுங்கையை
வீசியசைத்து முடியை

எச்சரிக்கை.

பேரானமுசுமுகவீரோசன்வருகிறான்
பாராருமெசசரிக்கை.

சரணம்.

வேட்டிச்சரிகைமின்ன
வீட்டம் பளபளென்ன
வெண்டுகிலாடுமோகையும் — சொக்காயொடு
பண்டியாகிய பாகையும்

எச்சரிக்கை.

வெற்றிவேலென்றுதுதி கத்தனார்வருகிறார்
பத்தர்காளெச்சரிக்கை.

சரணம்.

செங்கதிரவன்குலத் தீபமெனு முலாசன்
துங்கநவரத்தினச் சோதிமிகுந்த வாசல்
சிங்கமெனுமொய்யாரன் — நகரிலுள்ளோர்க்
கிங்கிதமான தீரன்

எசசரிக்கை.

செங்கோல்செலுத்திவருசிங்காரன்வருகிறான்
எங்கெங்குமெச்சரிக்கை.

சரணம்.

தேசமெங்குமொரு மாசமூன்றுமழை
வீசுசீதளகு லாச்சோழநகர்
தெரிந்துமனுமுறை புரிந்துகொலுவினி
லிருந்துமுசுமுகன் பொருந்துமதுசொல (கட்டி)

கட்டியன்—வசனம்.

ராஜாதிராஜன் ராஜகெம்பீரன் ராஜவுத்தண்டன் ராஜமார்த்தாண்டன் ராஜபூஜிதன் ராஜபோஷிதன் ரணரங்கவீரன் குணசிங்கதீரன் முசுமுக மஹாராஜன் வருகிறார் வெகுபராக்கெச்சரிக்கை.

முசுமுகமஹாராஜன் விருத்தம்.

மணமதுவிசுமாத்திமாலிகாபரணம்பூண்டு
கணமணிமகுடஞ்சூடிக்கதிரவன்குலத்தில்வந்தோன்
துணைமயில்வேலுமென்று சோழநாடரசுசெய்யுங்
குணமுசுமுகவிராஜன் கொலுவினில்வருகின்றானே.

தரு-இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

முசுமுகராஜன் வந்தான்-சிவமுருகபரமகுரு விரதமதிலதிக
முசுமுகராஜன் வந்தான்.

அனுபல்லவி.

பசுவும்புலியுமொரு துறையிலேநீர் குடிக்க
பாரிலேகசக்ரேச னென்றொருபே ரெடுக்க
சசிமணவாளதேவ யிந்திரன்வந் தடுக்க
தங்கவிமானத்தைத் தன்கையிலே யெடுக்க

சாந்தசீலகன குவலயமுலாவு
சேந்தனேதமது பரமெனகுலாவு (முசு)

சரணங்கள்.

வாசமானமலர் மாலிகாபரண துங்கன்-சத்குணகன
மந்த்ரிமார்கள்பிர தானயோசனைசொல்சங்கன்-உலகிலுள்ள
ராஜகூட்டமெனு மானைகட்குமாண் சிங்கன்-ஆசானுபாகு
நாகரீகசாமுத்ரிகாகமம தங்கன்-சுப்ரமண்யசுக்

ஞானி - சைவாகமத்தில் மானி - சர்வமுமவ
தானி - மெய்புணர்வதில்மோனி - சூரியன்குல

தேசுவேயென வளமிகுப்ரதான
மாசிலாதமன மருவிய நிதான (முசு)

ரத்னமாமணி பதித்தமாமகுட மின்ன-காதிற்குண்டல
நகநகென்றவொளி வீசுகாந்தியது துன்ன-மார்பிற்பதக்க
முத்துமாலையொடு சித்ரமாலையது பின்ன-கையிற்பிடித்த
முனிவுகொண்டஜெயவீரவாள்பளபளென்ன-கண்டமாதர்க்கு

மோகன் - வள்ளலாகிய த்யாகன் - பூமியிலிந்த்ர
போகன் - வேதசாஸ்த்ரவிவேகன் - ஷண்முகன்திரு

வெற்றிவேலுமயில் துணையெனுமுபாச
சத்யநீதிமனு கெடாத சபேச (முசு)

வேதவேதியரு மாசிரூபமறை பாட-சுந்தரந்தன்னில்
மேனகாதிமட மாதர்சாமரைகள் போட-சுருதிக்கிசைந்த
கீததாளமொடு நடனமங்கையர்க ளாட-ஆகாயமட்டிங்
கீர்த்திகொண்டபுலி கொடிபறந்துலவி நீட-ஆரணஞ்சொலுங்

கீதன் - இந்தபூமிக்கு நாதன் - மன்னாவணங்கும்
பாதன் - செங்கோலில்வெகுநீதன் - ஆகமப்படி

ஸ்ரீ சுத்தகவிரத் விலாசம்.

யோகியாதிசெய் மாதவ சுசில
ப்ரஹ்மேசமுழு தனிகுண விசால (முசு)

பூரிபேரியொடு சின்னாம்பெரியடங்கா-வாத்தியங்களும்
போதவேயதிர துங்கரத்னமணி சிங்கா-சனத்திருக்க,
நாரிமார்கள் சிலாருகிருந்திடுவர் பங்கா-ராஜர்கள்சிரோ
ரத்னமேமெய்ஞ் சுத்தகனேபரம துங்கா-எனப்புலவர்

நாட - ப்ரதானசபைகூட - மங்களஞ்சிலர்
பாட - ஆயிரமுடிசேடன் - சுமந்திருக்குந்

தாரணிச்சுமையை யேந்தருள்சுதோள
பூரணகிருபை பொலிவுறு தயாள (முசு)

[முசுமுகராஜன் - உபாஞதேவதை ஸ்தோத்திரம்.]

விருத்தம்.

உலகமாயுலகிலுள்ள வுயிருமாயுயிருக்கெல்லாம்
பலவிதவுணவுமாகிப் பாசமாய்பாசமில்லாக்
கலையுணரறிவுமாகிக் கந்தவேளெனும்பேர்க்கொண்ட
வலகிலாமுதல்வன்யாவ னவன்றிருவடிகள்போற்றி.

[தேசவிசாரணை.]

ஆசிரியவிருத்தம்.

இராஜன். பூமிதனிலெங்கெங்கு மாதமொருமும்மாரி
போதவே பெய்கின்றதா?

மந்திரி. பூசுராள்செய்கின்ற யாகங்கொள்மாசுராள்
பொழிவிக்கிறாரையனே.

இராஜன். சாமமின்னமதுருடிசனமாறிலொருபங்கு
தங்குவருகின்றாகளா?

மந்திரி. தவறுமனுமவனை வினவுமுன்னேவந்து
தருகிறாரெனதையனே.

இராஜன். சேமமிகுமிவ்வுலக வேந்தர்கடிறைப்பணம்
செலுத்திவருகின்றார்களா?

மந்திரி. சென்றவர்களிங்கனே வந்துதிறைதங்குன்னைச்
சேவிக்கிறாரையனே?

இராஜன். காமிகாகமபூசை சர்வாலயத்திலும்
கனமாய்நடக்கின்றதா?

மந்திரி. காலமாத்திரமாலே தவறுதுபூசனைக்
கநிடக்கிறதையனே.

பொதுவிருத்தம்.

மந்திரிமார்கள்சூழ மாகதர்ப்புகழாயிப்ப
செந்தமிழ்ப்புலவரெல்லாம் திவ்யநம்கவிகவிகள்பாட

சங்கரக்கலைகைமாதர் சோபனம்பாடியாட
இந்திரபோகம்போலு மிருந்தனன்கொலுவிலன்றே.

வசனம்.

இவ்விதமாக மந்திரிமார்கள் புடைசூழ்ந்திருக்க மாகதர்கள் அநேகவிஸ்தாரப்புகழ்ந்துநிற்க செவ்வியதமிழ்ப்புலவர்கள் கவிப்பிரசங்கஞ்செய்ய அழகிய விலைமாதர்கள் சோபனமங்களம்பாடி நடனஞ்செய்ய தேவேந்திர போகம்போலும் சிங்காசனத்தி லெழுந்தருளியிருந்தான். அப்படி இருக்கும்போது அரசன் மந்திரியைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

இராஜன் சொல் விருத்தம்.

புத்திமந்திரியேகேளாய் பூமியையாளுகின்ற
எத்தனையரசரிப்போ திறைபணங்கட்டுகின்றார்
மற்றுளோர்சுபங்களென்ன மதிகனவொழுக்கமென்ன
முத்தமிழ்நமதுநாட்டின் முறைமையுங்கூறுவாயே.

வசனம்.

கேளும் புத்திமானாகியமந்திரி இந்த உலகத்திலுள்ள அரசர்களில் எத்தனைபேர்கள் பகுதிகட்டுகிறார்கள் அப்படி நமக்கு உடன்படாத ராஜாக்களின் க்ஷேமாதிசயங்களென்ன மதிக்கத்தக்க கனமாகிய ஒழுக்கந்தானென்ன நம் தமிழ் நாட்டின் சங்கதி இன்னதென்ன விவரமாக சொல்லவேண்டும்மந்திரி.

மந்திரிசொல்விருத்தம்.

நரபதிசொல்லக்கேளாய் நமக்கிருக்கின்றபூமி
அரசிலைமுனையதாகு மடியிலையுருவமெல்லாம்
புரவலர்தாமேயாள்வார் புறம்பலவொழுக்கம்பூண்டு
திருவளர்தென்னாட்டுள்ள க்ஷேமமிதாகுமையா.

வசனம்.

கேளும் எமதாண்டவனே தங்கள்பூமியெல்லாஞ்சேர்ந்து ஓர் அரசிலைமுனையவ்வளவுதான் இருக்கும் அதன் இலையவ்வளவினதாகிய பூமியை அநேகராஜாக்கள் தாங்களே தனித்தனியாக அரசுசெய்துக்கொண்டுவருகிறார்கள் அன்றியு முத்திசாதன மெளிதிலடையத்தக்க சைவநெறிமாயி புத்தசமணமுதலிய வேறு மார்க்கத்திலு மிருக்கின்றனர் நமது அழகியசோழநாட்டின் சங்கதி இதுதான்மஹாராஜனே.

இராஜன்சொல்.

தரு-கன்னடிகள்-இ-ம்-புன்னாகவராளி-அடதாளசாப்பு.

மனிதனாகவந்தபோதே மாநிலத்திருப்பதென்றால்
மந்திரியே மதிமந்திரியே - என்னும்
தனியாகவொன்றிலேனுஞ் சரியதாயிருக்கவேண்டும்
மந்திரியே மதிமந்திரியே

அன்னமேபொருந்தவென்று லமுதம்போலிருக்கவேண்டு
மந்த்ரியே மதி மந்த்ரியே - அதை
உண்ணும்போதுதானல்லாமல் உறவின்முறையார்கள்வேண்டு
மந்த்ரியே மதி மந்த்ரியே ௨

மாதர்போகம்வேண்டுமென்றால் மதனரதிபோலிருந்து
மந்த்ரியே மதி மந்த்ரியே - அருந்
* தூதிபோற்கற்பிற்சிறந்த சொற்றவறாதவள்வேண்டு
மந்த்ரியே மதி மந்த்ரியே ௩

தாம்பூலந்தரிப்பதென்றால் தக்கவாசங்கூடவேண்டு
மந்த்ரியே மதி மந்த்ரியே - பீ
தாம்பரமுடிப்பதென்றால் தங்கபூஷணங்கள்வேண்டு
மந்த்ரியே மதி மந்த்ரியே ௪

மன்னனாயிருப்பதென்றால் மானிலத்தரசரெல்லா
மந்த்ரியே மதி மந்த்ரியே - வந்து
தன்னைப்பணிந்திருக்க சக்ரபதியாகவேண்டு
மந்த்ரியே மதி மந்த்ரியே ௫

கொற்றவனாயான்பிறந்து சொஞ்சம்பூமியைப்படைத்து
மந்த்ரியே மதி மந்த்ரியே - ஒரு
சிற்றரசுசெய்வதென்ன சேவகவீரியமெந்தன்
மந்த்ரியே மதி மந்த்ரியே ௬

பானுவின்குலத்துக்கெல்லாம் பரமகுருவாகிவந்த
மந்த்ரியே மதி மந்த்ரியே - சிவ
ஞானமாம்வசிட்டமுனி நாதனிப்போதுவந்தால்
மந்த்ரியே மதி மந்திரியே ௭

ஒருவரையும்யான்பணியா துலகந்தன்னையாள்வதற்கு
மந்த்ரியே மதி மந்த்ரியே - நல்ல
திருவருள்புரியுமென்று சேவைசெய்துணைப்பெனெங்கள்
மந்த்ரியே மதி மந்த்ரியே ௮

இராஜன் சொல்-விருத்தம்.

எண்ணியவெண்ணமெல்லா மிறப்புமேற்பிறப்புக்கென்ற
புண்ணியமில்லானாகில் பூமியில்பிறந்தானேனும்
நண்ணியதடையானந்த நரனிகமிருந்துமென்னும்
பண்ணவவென்னவாசான் பதமலர்நினைந்தான்வேந்தன்.

வசனம்.

இப்பிறப்பில் நினைத்த நினைப்பெல்லாம் வருபிறப்புக்கென்றும் சுருதிக்கிசைய புண்ணியஞ் செய்யாதவனாகில் உலகத்தில் பிறந்திருக்கின்றான் என்றாலும் அப் புண்ணியபேறில்லாமையால் (அவன்நினைந்ததை படையமாட்டான்) ஆகையால் அந்தமனிதன் இந்த பூமியிலிருந்தும் இல்லாதவனாகின்றான்

*-தூதி திசைச்சொல்

என்று முசுமுகமஹாராஜன் தமது குருவினது திருவடியை சிந்தித்தான் இங்கு நினைத்ததையுணர்ந்து சிவயோகத்தைவிட்டெழுந்து வசிட்ட மஹாமுனிவர் வருகிற விதங் காண்க.

வசிட்டமஹாமுனிவர்-வருகிற
விருத்தம்.

கானகாச்சிரமநீங்கி கனஜடாமகுடமோடு
மோனதண்டொன்றுதாங்கி முசுமுகவரசன்காண
வேனமாலுந்திபூத்தங் கெழுந்தருள்பிரமதேவன்
மானதபுத்திரனான வசிட்டமாமுனிவந்தாரே.

தரு-இராகம்-தோடி-அடத்தாளம்.

பல்லவி.

ப்ரம்மமஹாரிஷிவந்தார் வசிட்டரெனும்
ப்ரம்மமஹாரிஷிவந்தார்

அநுபல்லவி.

ப்ரமநிலையிருந்து க்ரமமதாகவே
தன்மநூலருளினோர் கன்மமகன்றிடவே (ப்ரம)

சரணங்கள்.

தேகம்விபூதிச் செட்டையும் - அஷ்டாங்கமெனும்
யோகஞ்செய்திடும்பட்டையும்
ஏகும்பாதக்குறடு மாகநடந்துவர
மாகர்பூமாரிதன்னை மோகமதாய்ச்சொரிய (ப்ரம)

தலையிற்ஜடா மகுடமும் - இடக்கரத்தில்
சொலுங்கமண்டலக் குடமும்
மலைவறத்தாங்கினர் கலைமுழுதுணர்ந்தவர்
நிலைபெறுமசிபதத் தலைமுடியிருந்தவர் (ப்ரம)

பஞ்சகோசமுங் கடந்தே - முப்பாழையு
மிஞ்சியப்பாலும் படர்ந்தே
சஞ்சிதங்காற்றினிற் பஞ்செனப்பறந்திட
வஞ்சஞ்செய்மாயையுந் தஞ்சமென்றகன்றிட (ப்ரம)

கானகந்தன்னைப் பிறிந்தே - முசுமுகன்மனம்
ஞானதிருஷ்டியாலறிந்தே
வானநகரம்போலு மானத்திருக்கருணை
பானுக்குலத்தரசன் காணவெழுந்தருளி (ப்ரம)

வசிட்டமஹாமுனிவர் உபாசனாதேவதாஸ்தோத்திரம்.

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூரணபுராதனசுயம்பிரமமேயவனி
புகழ்சுப்ரமணியநின்று
போதகருணாகரவிலாசநின்னாலாறு
பொன்மௌலியணியுமுடியுரு

சிரணவுபனிரண்டுகைச்செவிவிலோசனத்
திருவுருவமைந்தவடிவாய்
ஜெயவேலெனும்பராசக்திவல்லமையிரு
விரிதொழிநடத்தவெளியேன்
காரணவித்திப்படியெடுத்ததேகாலயுங்
கண்ணூழமனக்கவிசினிய்
கந்தனேவீற்றிருக்கவாராதனைக்
காட்டுவேனெனதாவியை
மாரனாமுமினிசனைமல்குவதகற்றியின்
மலரடித்துணையருள்செயாய்
மாசற்றசோதியேதேசோமயச்சுப்ர
மணியனேபோற்றிபோற்றி.

இந்தவிதமாகவந்த வசிட்டமஹாமுனிவர் சொல்லுகிறார்

வசனம்.

ஆரடா ஆசாரவாசலில் இருக்கிறவன் (கட்டியன்) ஸ்வாமி அடியேன் இராஜ சன்னிதானத்தில் கட்டியங் கூறுகிறவன். (வசிட்டர்) உங்க ளரசனுக்கு குருவாகிய வசிட்டமஹாமுனிவர் வந்திருக்கிறாரென்று சொல்லும் பிள்ளாய். (கட்டியன்) அப்படியே மஹாபாக்கியமையா ஸ்வாமி.

கட்டியன்.

ஏமதாண்டவனாகிய மஹாராஜனே நம்முடைய ஆசார வாசலில் யாரோ ஒருரிஷி ஜடைமுடியுந் தண்டுகமண்டல முடையவராய் நீறுபூத்த திருமேனியில் உருத்திராக்ஷ மாலைகளனந்தந் தொங்குகிறது பரமசிவனைப்போல் வந்து தங்கள் குருவென்று சொல்லுகிறார் வந்துபாரும் ஸ்வாமி.

பொது விருத்தம்.

வணங்கரும்பரமானந்த வாரியிற்றிளைக்குஞ்சிட்ட
கணங்களாற்சூழவந்த கருணைமாமுனியைக்கண்டு
குணமுசுமுகத்திராஜன் குசலமாயழைத்துவந்தங்
கிணங்கியோரிருக்கைதந்தாளிவ்வணங்கூறுவானே.

வசனம்.

மனோவாக்கு காயமென்னுந் திரிகரணங்களுக்கு மருமை யாகிய பரமானந்த சாகரத்தை அனுபவிக்கும் சிஷ்ய கூட்டங் கள்சூழும்படிவந்த கருணாநிதியாகிய வசிட்டமஹாமுனிவரை சத்குணமுள்ள முசுமுகமஹாராஜன் கண்டு சந்தோஷமாய் எதிர்கொண்டு அழைத்து வந்து ஆசனங்கொடுத்து பாதோ தகங்கொண்டு பணிந்து நின்று துதிக்கிறவிதங்காண்க.

இராஜன் சொல்-விருத்தம்.

நேசரானவர்கட்கெல்லா நெறியுரைத்தருள்வாய்போற்றி
நாசமில்லாதவத்துநாட்டமேயுடையோய்போற்றி

மாசறுந் தூயநெஞ்ச வசிட்டமாமுனிவபோற்றி
தேசிகமூர்த்தியேநுந் திருவடிபோற்றிபோற்றி.

வசனம்.

அடியாருக்கெல்லாம் நன்மார்க்கத்தை போதிக்கின்றவரே போற்றி, கெடுதலில்லாத மெய்ப்பொருளையுக்க முடையவரே போற்றி, களங்கரஹித மனமுடைய வசிட்டமஹாமுனிவரே போற்றி, எமது குருமூர்த்தமாய் எழுந்தருளி வந்தவரே போற்றி போற்றி.

வசிட்டமஹாமுனிவர் சொல் விருத்தம்.

ஓங்குக நின்னது செங்கோ லுயருக வறிவுமேலாய்
நீங்குக பகைவரெல்லா நிலைக்குக வறங்களெங்கும்
தேங்குக நினது சீர்த்தி ஜெயங்கிப வநல்வேந்தே
யிங்கெனை நினைந்தவாற தின்னதென் றுரைசெய்வாயே.

வசனம்.

உன்னுடைய செங்கோல் ஓங்கி வளரக்கடவது, அறிவானது மேன்மையாக வுயரக்கடவது பகைவரெல்லாம் நீங்கியிருக்கக்கடவது, தன்மங்களெல்லாம் நிலைக்கக்கடவது, கீர்த்தியானது பரவக்கடவது, ஜெயம் ஜெயம் சுகிபவா இவ்விடம் வரும்படியாக என்னை நினைத்தகாரியம் இன்னதென்று சொல்லவேண்டு மஹாராஜனே.

இராஜன் சொல்விருத்தம்.

புண்ணியகுருவேகேளும் பூமியுள்ளரசரெல்லாம்
வண்ணமாயடியேன்றன்னை வணங்கிட விணங்கேனாகி
யெண்ணிலாச்சிறப்புற்றோங்கி யேகசக்ரேசனாகி
மண்ணுலகதனையாள மனதினில்நினைந்திட்டேனே.

வசனம்.

கேளும் புண்ணிய சொருபனாகிய குருமூர்த்தியே இந்த உலகத்திலுள்ள அரசர்கள் யாவரும் அடியேனைப்பணிந்திருக்க யான் ஒருவரையும் பணியாமல் அளவிறந்த கீர்த்தி பெற்று ஏக சக்ரேஸ்வரனாக இந்த பூமியை யாளவேண்டுமென்கிற எண்ணத்தினால் தங்களை நினைந்தேன் ஸ்வாமி.

வசிட்டமஹாமுனிவர் சொல விருத்தம்.

ஈண்டறவொழுக்கந்தன் னொலிகடாசாதனங்கள்
வேண்டுவோனென்னிலீசன் விதிமறையாகமந்தான்
காண்டகவோதுகின்ற கருத்தறிந்தினியவாய்ந்து
மாண்டதையனுட்டிப்பானே வாலறிவுடையோன்மன்னா.

வசனம்.

இவ்வுலகத்தில் தன்ம சொருபனாகப் பிறந்து ஆசார கெதியில் நின்று இம்மையிற்பேறு மறுமையில் வீடு மடைய விருப்பமுள்ளவனாகில் பரமசிவனால் விதித்திருக்கும் வேதசிவாக

மார்க்கங்களில் தெளிவு பெறச் சொல்லுகின்ற கருத்தை நன்றாக வுணர்ந்து அவ்வுணர்ச்சியினா லாராய்ந்து அவற்றுள் மாட்சிமையுடையதை அனுசந்தானஞ் செய்பவனே மேலான அறிவுடையோன் மஹாராஜனே.

தரு-இராகம்-கல்யாணி-அடதாளசாப்பு.

பல்லவி.

சொல்வேன் முசுமுகபூபதியே - வேத
சுருதிஸ்மிருதி மதியே

அனுபல்லவி.

பல்லாயிரங்கோடி யண்ட சராசர
பக்குவந்தேர்ந் தருள்செய்யும் பராபர
வல்லான்சொற்படி வருந்தன்மிகவு நலம்
வாக்கியப்படிசென்று முண்டாகுமேபலம் (சொல்)

சரணங்கள்.

ஞானமும்பரதிவை ராக்யம் - அதி
னுநிமனதடக்கினனி யோக்யம்
ஈனவாசைதள்ளுஞ்சுசி லாக்யம் - அங்கே
யெய்துஞ்சிவானந்தமது பாக்யம்
மோனசாந்தமுதிர் வானசீவன்முத்த
தானமாமதுசுக் யானமோட்சமைத்து (சொல்)

கருமபாகஞ்சொன்னிட் காமியமே - யொன்றை
கருதிசெய்வதுவுங் காமியமே
சருவஞ்செய்யின்மனந் தூமயமே - அவற்றில்
தவறிலெய்துவதும் யாமியமே
மருவுங்காயஞ்சொலுங் கரணங்கருவிகொண்டு
தெருளதாகசெய்யின் பரமன்கிருபை யுண்டு (சொல்)

பத்தியகம்பூ மிக மீறி - வஞ்ச
பாசபந்தமெனுங் கனோ நாறி
புத்திகோசாம தா யேறி - பரம்
பொருளாப்பொரு ளெலாந் தூறி
சத்திக்கேற்கவொரு சுத்தொபாசனையும்
சித்தமாமிலையில் வைத்த பூசனையும் (சொல்)

விருத்தம்.

கரும்பமெய்ஞ்ஞானம்பத்தி காண்டமென்றுரைத்தமூன்று
தரும்மாமறைத்துண்மேலாங் காந்ததாய் விளங்குகின்ற
சொரூபமாம்பத்தியென்ப துண்மைதான்கருதெல்லாம்
வருமதுமுபலவேலான்மிக்க மதியுளோரறிகுமன்றே.

வசனம்.

கருமகாண்டமென்றும், ஞானகாண்டமென்றும், பத்திகாண்டமென்றும் மேற்சொல்லிடவண்ணம் மூன்று தருமமாகும். அதில் மேலாந்தரமாக விளங்குகின்றது பத்திகாண்டமென்பது உண்மைதான் அப்பத்தியினால் சகலகாரியமும் உண்டாகும் அது செய்ய முயற்சி செய்பவன் மிகுந்த அறிவுடையோனென்று சொல்லப்படு மஹாராஜனே..

இராஜன் சொல் வஞ்சி விருத்தம்.

அந்தசத்பத்திநாடி - யெந்தவிச்சுரனைத்தேடி
இந்தமாநிலத்துளோர்க - ளுய்ந்தனருரைத்திடீரே.

வசனம்.

இந்த உலகத்தி லிருப்பவர்கள் அந்த சன்மார்க்கமாகிய பத்திசெய்து எந்த தேவனை யடைந்து பெருமை பெற்றார்கள் விபரமாக சொல்லவேண்டுமையா ஸ்வாமி.

வசிட்டமஹாமுனிவர்சொல்

தரு-இராகம் - மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஷண்முகத்தேசிகனென் சச்சிதாநந்த
சாமியொருவனுமே.

அநுபல்லவி.

மண்முகநோக்கமும் விண்முகநோக்கமும்
உண்முகநோக்க வருளசெயுந் தேக்கமும் (ஷண்)

சரணங்கள்.

முன்னவனுங்கண பதியென்ற சேணியும்
மூவுலகஞ்சிருட்டி செயுமலர்க் காணியும்
பன்னகசயனத்து சாரங்க பாணியும்
பாண்டரங்கனெனும் பரஞ்சுடர் வேணியும் (ஷண்)

சுந்தரமான மஹேஸ்வர மூர்த்தியும்
சுத்தபூரண சதாசிவ மூர்த்தியும்
சந்திரசூரிய ராகிய பூர்த்தியும்
சகலலோகமு நிறைந்திடுங் கீர்த்தியும் (ஷண்)

டண்டுளதேவர்க்கு மனிதர்களுக்கு முர
பரமக்ருபாநிதி யல்லவோஹர ஹர
அண்டமோடுபகி ரண்டசரா சர
ஆதாரமாகி விளங்குமறைச் சிர (ஷண்)

விருத்தம்.

விரும்பியாம்புகலுங்கந்த விரத மூன்றதிலொன்றாற்ற
வரும்பயனினைந்தென்றன்மற்றதன்பெருமையெம்மா

றெரிந்துரையாடவல்லத் திறமிலேனெனினுஞ்சொல்லக்
கரும்பினுமினிக்குமந்தக் கதையனுமாத்ரஞ்சொல்வேன்.

வசனம்.

நான் விரும்பிச்சொல்லிய கந்தஸ்வாமியின் விரதம் மூன்று வகையையுடையது, அதில் ஒரு விரதத்தைச் செய்பவனுக்கே மனதில் நினைத்ததெல்லாம் சித்தியாகுமென்றால் அவ்விரதத்தின் பெருமையைத் தெரிந்து சொல்வதற்கு என்னால் வலிய திறமையில்லை ஆனாலும் அதைச் சொல்லுமிடத்து கரும்பினு மினிமையையுண்டாக்குமாதலால் அக்கதாப்பிரசங்கம் தெரிந் தமாத்ரஞ் சொல்லுகிறேன் கேளு மகாராஜனே.

௧-வது சுக்கிரவாரவிரதம்.

நொண்டிசிந்து, இ-ம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

தெந்தினம்தின தினநாம் - தினநாம்
தெந்தினதின தின தின தினநாம்.

வெய்யோன்குலமணியே நம் வேலவன்விரதஞ்சொல்வேன்கே
மையார்செழுஞ்சோலை சூழ்தரு வாரணாசிநகராள்கின்றோன்[ள்
பரமேசுரனடிக்கே யன்பன் பாகீரதனெனுமகிபாலன்
புரமேபுகுந்தவரோ டனந்தம் போரதுசெய்திறைபூமியெலாங்
கோரனெனுமரக்கன் கைக் கொண்டான்பகீரதனரசிழந்தே
ஆரணியஞ்சென்றே மன வாகுலமுற்றினிமுன்போலத்
தாரணியென்றுள்ளோ மென்னுஞ் சஞ்சலமொடுதிரிதருகாலை
அக்கானகந்தனிலே சுக்ராசாரியர்வரவவரடியை [சொல்வான்
முக்காற்பணிந்தேத்தி தன்குறை முறையிட வெள்ளியுமிது
சரவணபவபூசை வெள்ளித் தன்றினில்செயும்வண்ணமதால்
கருதலருடலதமாம் வெற்றியைக் காண்பாயெனவதனெறியெல்லாம்
போதனைசெய்தேக அதைப் புந்தியிலுன்னியெழுந்திறையெம்
மாதனமிதுவென்றே அந்த மாண்டபமுயலவெழுந்தானே
சூரியன் குணத்திசையில் வந்து தோன்றுமுனித்திரையதுநீத்தே
யாரியனுரைபடியே ஸ்நான மனுட்டானஞ்செபதபமுடித்தே
வேலாயுதகுகனை பா வித்துறுகாலம்பூசித்தே
காலாயுதகொடியா என்னைக் காவெனவேண்டினனனைவுதுயில்
இல்லாதவன்காதை கேட் டென்புமுருகிமறுநாளையிலே
எல்லாமுடையவர்க்கே தொண் டைசெய்திடுமடியவருடனிருந்தே
யுண்டானிவ்வணமே முன் னேங்கியவருடனமுடிவினிலே
கண்டான்முருகனையே அந்த காலதியிலேபகைவென்றாசாய்
பாகீரதிகொணர்ந்தே சிவ பதவியடைந்தனனின்னமிரு
தேகவந்தரிதைமுன் செய்து திருச்சங்கொடுமனுவாறோ.

வசனம்.

கேளும் சூரியகுலத்தாசமணியே முன்சொன்னதில் சுக்கிரவார விரதமென்றும், கார்த்திகை விரதமென்றும், சஷ்டி

விரதமென்றும் சிவாகமங்களில் சொல்லியிருக்கின்ற ஸ்ரீகந்தவிரதமானது மூன்றுவிதமாகும் அதில் வெள்ளிக்கிழமை விரதத்தின் மகிமையாவது நிர்மல நிலவளங்களாற் சிறந்த காசிநகரத்தில், பகீரதனென்னும் ஓரரசனிருந்தான் அவ்வரசன் நீதி தவராமல் நெடுங்காலம் செங்கோல் செலுத்திவருங்காலத்தில் கோரனென்னும் கொடியவிராக்கதன் அவ்வரசனோடு யுத்தஞ்செய்து செயங்கொண்டு அந்நாடு முழுமையும் கைபற்றிக் கொண்டான் அதனால் அவ்வரசன் நாடுவிட்டு காடுறைந்து சிலநாள் வருத்தமுற்றிருக்கிற காலத்தில் சுக்கிரபகவான் அவ்விடம் வந்தார் அவரைக் கண்டு வணங்கித்தன் குறையைச் சொல்லிக் கொள்ள அவர் காருண்ணியமாக நோக்கிச் சொல்லுகிறார் இவ்வருமை நீங்க ஸ்ரீகந்தவிரதத்தில் சுக்கிரவார விரதமொன்றிருக்கின்றது அதை செய்வையாகில் சுகமடைவை இது முன்னர் இரண்டு வேதியர்கள் செய்து அத்தபோபலத்தால் மனுசக்கிர வர்த்தியாகியும் திருச்சங்கு மஹாராஜனாகவும் பிறந்து போகமுண்டு சுவர்க்காதிபதவியையடைந்தார்களென்று அவ்விரத வொழுக்க முழுமையும் போதித்து விட்டு தம்மிடம் சென்றனர் அதுகேட்ட பகீரதமஹாராஜன் திரிகரணமு மொருமித்த மனத்தனாக குருவாரமாத்தியத்தில் சுத்தபோஜனஞ் செய்திருந்து வெள்ளிக்கிழமை வைகறையிலெழுந்து ஸ்நான மனுஷ்டான முடித்துக் கொண்டு காலைமுதல் ஆறுகாலமும் ஷண்முகப் பெருமானை பூஜித்து அன்றிரவில் நித்திரை விட்டு அக்கடவுளது மகிமைகளைக் கேட்டிருந்து மறுநாள் காலையில் பாகுகலந்த வோதனம் படைத்து வேதியர் முதலிய விருந்தினர்களை யுண்பித்து பின்னர் தாமுமுண்டு ஸ்ரீகந்தஸ்வாமியின் திருவடியை சிந்தித் திருந்தான் இவ்விதமாக மூன்று வருடஞ் செய்ய ஷண்முகப்பெருமான் காக்ஷிப்பேற்றால் அவ்வசுரனை வென்றுதன் அரசாங்கமடைந்து தேவகங்கையை பூமியிற் கொண்டு வந்து விஸ்வநாதரைப் பூசித்து விதேக முத்தியடைந்தான்.

உ-வது கார்த்திகை விரதம்.

நிலைமண்டிலவாசிரியப்பா-இராகம்-சாவேரி

வேந்தனே வெள்ளிவிரதமொன் றிது நா
ளாய்ந்தநாரதன்முனைங்கரப்பெருமான்
பாதம்பணிந்தெழு பண்ணவர்க்கெல்லா
மேதகுபெருமை விளங்கிடவெனக்கு

சொல்லுமென்றுரைத்தனத் தோத்திரஞ்செய்ய
வல்லபையிடனவாய் மலர்ந்தருங்கங்கை
புத்திரமுருகன் புயன்வருளாய்
கார்த்திகைவிரதந் தன்பெயராற்சொல்க

கேட்டந்தமுனிவன் கிளம்பியத்தினத்திற்
றேட்டமாய்விதிப்படித் தேமலர்க்கொண்டு
மனதுளப்பொருளையாவாகனஞ்செய்துக்
கனகவாசனத்திற் கண்டருச்சித்து

சூரசம்மார சுப்பிரமணியனே
காரெனவேண்டினன் கண்ணுறங்காம
லுண்டியையொழித்தவனுபகிடதம்மிருண்
மண்டியவிரவெலாம் வாழ்த்தியேமறுநாட்

பூரணைவாகுதிப்புண்ணியரோடும்
பாரணைமுடித்துப்பன்னிருவருட
முடிவிலுத்தாபனமுனிவனார்செய்ய
வடிவேற்கரங்கொடுவந்தனன்செவ்வே

ளம்முனிக்கண்டேயனன்மெழுகாகித்
தம்மனங்கொண்டதைத்தந்திடப்பெற்றான்
பிந்தியோர்வேடுவன் பிராமணன்செய்தே
யந்திமான்சந்திமானாயிடைதோன்றி

வரையாதுகொடுக்கும்வள்ளலேயாகி
பரையாதியீசன் பதமடைந்தனரே.

வசனம்.

கேளுமரசனே சுக்கிரவார விரதமகிமைசொன்னோம்இனி கார்த்திகை விரதமகிமையாவது, சகல சாஸ்த்திரங்களையுமாய்ந்து தெளிந்த நாரதமஹாமுனிவர் விநாயகரது சன்னிதானமடைந்து அவரது திருவடிகளை வணங்கிச்சொல்லுகிறார், ஸ்வாமியடியேன், அத்திரி, அங்கிரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன், என்னும் சத்தமுனிவர்களுக்கும் மேலாகிய பெருமை எனக்கு எதனால் விளங்கும் அதுதிருவருள் செய்யும் முழுமுதற் கடவுளருளிய முன்னவனே எங்குருநாதனே. என்றுதோத்திரஞ்செய்து நிற்கவல்லபையென்னும் சத்தியை யிடபாகம்வைத்தருளிய கணேசமூர்த்தியானவர் புன்னகைக்கொண்டு வாராய் முனிவனே அரியகங்கையிநுற்பவமாகிய நமது முருகநாதன்கார்த்திகைவிரதமென்னும் ஸ்ரீகந்தவிரதமொன்றுண்டு அதுசெய்வையாகில் நீ எண்ணிய வண்ணமுடியுமென்று அவ்விரதஞ்செய்யும் வகையெல்லாஞ் சொல்ல முனிவர் அவ்வசனம் சிரசாக வகித்து பரணி நாளில் யேகபுத்தனாகவிருந்து கார்த்திகைவைகறையிலெழுந்து ஸ்நான மனுஷ்டான முடித்து ஆகமவிதிப்படி பூக்கொய்துவந்து பிறகுள கருமங்களையுஞ் செய்து ஹிருதய ஸ்தானத்துள்ள நிட்களவத்துவைலலாடமார்க்கமாய் புட்பாஞ்சலியத்தங் கொண்டாவாகித்து, பொன்னாசனத்தில் பாலசுப்பிரமண்ணிய மூர்த்தமாகக்கண்டருச்சித்து சூரபதுமனை சம்ஹாரஞ்செய்த சுப்

பிரமணியனே என்னைக்காக்கக் கடவது என்று தோத்திரஞ்செய்து அன்றிரவுமுழுவதும் அக்கடவுளது பெருமைகளைச்சொல்லும் பாராகாவியங்களை உபந்நியாசித்திருந்து மறுநாள் பூரணாகுதிகொடுத்து மெய்யடியாருடனுண்பன் இவ்விதம் பன்னிரண்டுவருடஞ் செய்துத்தாபன முடிக்குமுன் ஸ்ரீகந்தநாதன்வந்து காக்ஷிதந்தருளினார் அம்முனிபுங்கவன்கண்டு அனலிலிட்டமெழுகுபோல் நெஞ்சங்கரைந்து நெடும்போது சாமவேதத்தால் துதிக்க மனமுவந்து முருகன் கடைக்கணிக்க சத்தமுனிவர்களுக்கு மேலாகிய மகிமையடைந்திருக்கின்றனன், அதன்பிறகு ஒருவேடுவன் இவ்விரதப் பேற்றால் அந்திமானாகியும்ஒருவேதியன்சந்திமானாகியும் பிறந்து இடையெழுவள்ளல்களில் சேர்ந்திவ்விருவர்களும் வரையாது கொடுத்து பரமசிவத்தின திருவடியடைந்தார்கள்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கார்த்திகைவிரதஞ்சொன்னோம் கந்தவேனெஞ்சநீங்காப்
பார்த்திபமுன்னாட்சூரபதுமனாற்கனகநாடு
தோற்றகமெலிந்துவாடிச் சுரரெலாங்கைலையேகி
வேத்திரப்படைக்கைநந்தி மெல்லடிபணிந்துநின்றார்.

தேசுலவும்பொன்னுலகத்தவர்காளுங்கட்
சிறையகலவேண்டுமெனிற்றுலையின்றிங்க
ளாசமனமல்லாமலசனமின்றி
யாறுபகல்பூரணையிற்சஷ்டியாற்ற

பாசிலைவேற்சோதிபெரும்பிழம்பேவந்து
பாலிக்குமருளென்றுநந்தியோத
வாசவனாதியதேவரந்நோன்பாற்றி
வானுலகங்குடியேறிவாழ்ந்திருந்தார்.

வசனம்.

ஸ்ரீ கந்தநாதனை மனதின்கண் நீங்காது ஸ்மரணை செய்யு மஹாராஜனே கேளும், கார்த்திகை விரதமகிமை சொன்னோம் இனி சஷ்டி விரதமகிமையாதெனின் முன்னொருகாலத்தில் ஆயிரத்தெட்டண்டமும் அரசு செய்திருந்த சூரபதுமனால் தேவர்களெல்லாம் பொன்னுலகத்தை இழந்து போரிலடிப்பட்டு தேகமுமனமுநொந்து வருந்தி சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கைலாய மலையைச்சேர்ந்தார்கள். அத்திருவாயிலில் அபரசிவமாக விளங்கும் நந்திதேவனைக்கண்டு அவரது பாதாரவிந்தங்களைப்பணிந்து தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ள அக்காருண்ணியமூர்த்தி சொல்லுகிறார் - ஏ - பொன்னுலகவாசிகளே உங்கள் மனக்கவலை நீங்கி சுகமடைய வேண்டுமாகில் துலாமதி பூர்வபக்கம் பிரதமையில் சூரியனுதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னெழுந்து ஸ்ரீ கந்தநாதனை நினைந்து விபூதிதா

த்து, சௌச, தந்ததாவன ஸ்நான மநுஷ்டான முடித்து கோமயத்தினால் சுத்தஞ்செய்ததாயும் விதானத்வஜ முதலிய அலங்காரமுடையதாயும் அனேக தீபங்களால் விளங்குவதாயும் சகலமங்களகரமாயு மிருக்கின்ற மண்டபத்தையடைந்து ஒரு பொன்னாசனமிட்டு அதன்மேல் ஷடாக்ஷரமந்த்ரோச்சாரணையால் பொருந்தும் பதிமத்தி அக்கும்பத்தில் சுப்பிரமண்ணியஸ்வாமியை ஆவாகனஞ் செய்து காலை சந்திமுதல் அர்த்தஜாமம் வரையுமாகிய ஆறுகாலமும் அவ்வவ்காலத்திலும் தனித்தனி ஸ்நானமநுஷ்டான முடித்து சுத்தாசார ஒழுக்கத்தின்படி குளான்ன முதலியநெய் வேத்தியங்காட்டி பூசித்து மாத்தியத்தில் வலது கையில் அங்குஷ்ட கனிஷ்டங்களை விரித்து உள்ளங்கையில் உளுந்தமிழ்ந்த சலத்தை மூன்று முறை ஆசமனஞ்செய்து அதுவே உணவாகக்கொண்டு வனிதயர்களை மறவியாகக்கருதி பகலிலும் இரவிலும் நித்திரையை விட்டு விபூதி உருத்திராக்ஷமாகிய சிவசின்னந்தாங்கிய அடியார்களுடன் ஸ்ரீ கந்தநாதன் மகிமைகளைச்சொல்லும் பாரகாவியங்களை சிரத்தையாக சிரவணஞ்செய்யவேண்டும். இந்தவிதமாக சஷ்டி வரைக்கும் ஆறுநாளும் விரதஞ்செய்து சத்தமியில் வேதியராதிய அவனடியார்களை யுண்பித்து தாமுமுண்ணவேண்டும். மகிமையும் அருமையுமுள்ள இந்த விரதத்தைச் செய்யுங்கள் அத்தபோபலமாகிய பெரியசோதிப்பிழம்பேபசிய இலைபோன்ற பராசத்தி வேலேந்தி வந்து சூரசம்ஹாரஞ்செய்து கிருபை பாலிக்கும் என்று நந்திதேவர் சொல்லஅக்குருநாதன் திருவாக்கின்படியே இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் அன்று முதல் அவ்வரிய விரதந்தவாமல் சிலகாலஞ்செய்துவந்தார்கள் அப்படி செய்ய விரதகாலமாகிய சஷ்டியிலேயே மாவடிவாக நின்ற அசுரனைக்கொன்று வாகனத்வஜமாக்கிக்கொண்டு தேவர்களை விண்குடியேற்ற போகநுகர்ந்து முருகநாதனை மறவாத நெஞ்சினராய் வாழ்ந்திருந்தார்கள் மஹாராஜனே.

இராஜன் சொல்-விருத்தம்.

எங்குருபரனே நீவிரெனக்ககமலர்ந்துசொன்ன
துங்கமாம்விரதமூன்றுஞ்சோதிவேள்முருகநாதன்
றங்கமலத்தாட்கென்றுந்தகைமையேயுடைத்தென்றால்
புங்கமாயடியேன்கண்டுபுரிகின்றதெதுவெனையா.

வசனம்.

தாங்கள் மனமலர்ந்து சொன்ன புனிதமாகிய இவ்விரத மூன்றும் பிரகாசம் பொருந்திய வேலாயுதத்தைக் கையிலேந்திய முருகக்கடவுளது திருவடிக்கென்றுந் தன்மையுடையதானால் இதில் நல்லதென்று அடியேன் பார்த்து செய்யவேண்டியது. எது. அதை எனக்கு கிருபை செய்யவேண்டுமென்குரு நாதனே.

வசிட்ட மஹாமுனிவர் சொல்

தரு-இராகம்-தர்ப்பார-ரூபகதாளம்.

பல்லவி.

விரதஞ்செய்வாய்
வேலவனருள் விளங்குஞ் சஷ்டி.

அநுபல்லவி.

பாரதகண்டத்திலோதுஞ்சிவாகம
விரதமேதினுமேலாந்தரமெனும் விரத

சரணங்கள்.

ஆதியில்தேவருஞ்சித்தரும்பூதரும்
பூதியணிந்தவியக்கருரகரும்
ஓதுங்கருடரசுரர்முனிவரும்
ஏதுநினைக்கினும்போது மெனத்தரும். விரத

விஞ்சையரந்தரராகாயவாசிகள்
வஞ்சமிலாபோக பூமியர்கின்னரர்
புஞ்சகரம்புளர் கிம்புருடர்காந்தர்வர்
நெஞ்சினினைந்ததையஞ்சலெனத்தரும். விரத

மூன்றுவிரதமுருகனதென்னினும்
ஆன்றவிரதமிதென்ன விரைந்தவன்
ஈன்றவனைபெனவந்தெதிராகுவன்
நான்றவமென்னும மிமையடைந்தவிவ். விரத

விருத்தம்.

இத்தவஞ்செய்வீராகிலிறைவனுமுருகநாதன்
மெய்த்திறல்துணைவரானவீரரைத்தருவனீதே
சத்தியந்தவரா தேசசக்கிரபதியேயென்னுஞ்
சித்திபெற்றுலகமாண்டுசிவபதநிழல்வாழ்வாயே.

வசனம்.

இந்த தவத்தைச்செய்வையானல் நமதாண்டவராகிய முருகக்கடவுள் வெற்றியுள்ள வருந்தமக்குச்சகோதாருமாகிய வீரவாகுதேவர் முதலிய நவவீரர்களை வரப்ரசாதமாகக் கொடுப்பார் அதனல் இப்பூமண்டலமுழுதும் ஏகசக்ரேசனுகவாண்டு அத்தபோபலத்தால் சிவபெருமான் திருவடி நிழலின் கண் வாழ்ந்திருப்பாய் இது சத்திய மஹாராஜனே.

பொது விருத்தம்.

சேந்தனுக்கன்புபூண்ட திருச்சபையுள்ளீர் சோழ
வேந்தனுக்கின்னாவேறு நிமெய்த்தவாகலவந்த
சாந்தனத்தவமேசெய்யுஞ்சம்பகியுடையோரஞ்சி
யாந்துணைவளையாடைத்தேயகம்பிறந்திருசெல்வானே.

ROJA MUTHIAH

வசனம்.

ஸ்ரீகந்தநாதனுக்கு அன்பென்னும் உரிமை பூண்ட அழகிய சபையிலிருக்கின்றவாகளே கேளுங்கள் சோழநாட்டரசனுக்கு வசிட்டமாஹாமுனிவர் இந்த விதமாக போதித்து தமதிரும்பிடம் போனார் அதன்பின் அரசன் அந்த தவஞ்செய்ய சம்மதித்து சந்தோஷ சித்தமுடையவனாய் தமது மந்திரிகளை யழைத்து சொல்லுகிற விதங்காண்க.

இராஜன் சொல்விருத்தம்.

நீதிமந்திரிகாள்கேளீர்நெட்டிலைவேலோன்சஷ்டி
மாதவஞ்செய்யவேண்டிமலர்வனநிறைதடாகச்
சீதமுள்ளிடங்கணோக்கிசெய்வனவமையச்செய்தே
ஆதவன்றுலைவராமுன்னரைநொடிவருவீரின்றே.

வசனம்.

கேளுங்கள் எனது நீதிமந்திரிகளே நெடிய இலைபொன்றவேலேந்திய ஸ்ரீ கந்தஸ்வாமியின் சஷ்டிவிரதமாகிய மஹாதவஞ் நாம் செய்யவேண்டி யிருப்பதால் நாளைசூரியன் துலாராசியில் வரப் போகிறான் ஆகையால் இன்றையதினமே நீங்கள்போய் பூஞ்சோலைகளும் அதில் நிறைந்த தடாகங்களுமுள்ள குளிர்ந்த இடம் பார்த்து பந்தலிட்டு பூஜாத்ரவ்யமுதலானதும் சேகரித்து அரை நொடியில் வரவேண்டும் மந்திரிகளே.

மந்திரிசொல்-விருத்தம்.

எம்மையாளிறையேநாங்களிக்ஷணந்தன்னிலேகி
நம்மலர்சோலைசெய்யநளினமாமலர்தடாகஞ்
செம்மைபாயலங்கரித்தோம்தேவரீர்தவமுடிக்க
இம்மையேயேகுவீர்நும்மிணையடிபோற்றிபோற்றி.

வசனம்.

கேளும் எங்களாண்டவனே அடியேங்கள் இந்த க்ஷணமே போய் நம்முடைய பூஞ்சோலைகள் சூழ்ந்த தாமரை தடாகங்களுள்ள இடம் பார்த்து தாங்கள் தவஞ்செய்வதற்கு தக்கபடியே பசும் பந்தலிட்டு தோரணங்கட்டி அனந்த விதச்சித்திரவிசித்திரங்களாக அலங்காரஞ் செய்து பூஜோபகாரணங்களுஞ் சேகரித்து வைத்திருக்கிறோம் இப்பொழுதே போகலாம் மஹாராஜனே.

பொது-விருத்தம்.

ஆதவனுதிக்குமுன்னெம்மாறுமாமுகனைப்போற்றி
சீதநற்கங்கையாடிசெந்துகில்தரித்துபூதி
சாதனமுருத்திராக்கஞ்சாத்திமுறைமையேபூண்டு
மாதவஞ்செய்யவேந்தன்வனந்தனில்வருகின்றானே.

வசனம்.

முசுமுகமஹாராஜன் சூரியனுதிக்கு முன் நித்திரைவிட்டு எழுந்து ஆறுமுகப்பெருமானைத் தொழுதுஸ்நானமனுஷ்டானம்முடித்து விபூதி உருத்திராக்ஷம் காஷாய முதலிய சிவரூபமாகி மஹாதவஞ் செய்யும் பொருட்டு வனத்தில் வருகிறவிதங்காண்க.

தரு-இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

முருகசொரூபமாகிறான் முசுமுகமன்னன்
முருகசொரூபமாகிறான்

அனுபல்லவி.

முருகசொரூபஞ்சிவமுத்தவடிவங்கொண்டு
ஹராஹராசிவசுத ஆறுமுகனேஎன்று (முரு)

சரணங்கள்.

அங்கமெல்லாம்விபூதியும்-உருத்திராக்கம்
அணிந்திருக்கின்றசோதியும்
திங்களணியும்பரசிவக்கொழுந்தெனவொளி
தங்குங்காவியரையில்தாபதனுயணிந்து (முரு)

சிவமணிகையிலெண்ணவே - ரத்னகுண்டலம்
செவியில்பளபளென்னவே
தவங்களிலேயுயர்ந்தசஷ்டிவிரதஞ்செய்ய
பவங்களெல்லாமகன்றுபானுவெனத்துலங்க (முரு)

வேலுமயிலுந்துணையேஎனத்துதித்து
வெல்வர்மன்மதன்கணையே
சீலமிருந்தசிவபத்தஜனங்களொடும்
ஞாலமதிக்குங்குருநாதனருள்படியே (முரு)

பொது-விருத்தம்.

தவவடிவானமன்னன்ஷண்முகப்பெருமான்றன்னை
புவனமேமதிக்கவோங்கும்பூரணை முதனாட்கண்டு
நவமணிகாந்தும்பீடநடுவினிலிருக்கவைத்து
சிவகுருபரனேயென்றுசிந்தனைசெய்வதானான்

வசனம்.

இந்தவிதமாக தவரூபமாகிவந்த அரசன் உயர்ந்தோரால் மதிக்கும் சந்திரனது கலைகள் வளருகின்ற பூர்வபக்ஷம் பிரதமை தினத்தில் சுபதினங்களால் விளங்கும் பொன்னாசனத்தில் நிறுத்திய பொற்கும்பத்தில் ஷண்முகப்பெருமானை ஆவாகனஞ் செய்து சிவகுருநாதனே என்று தோத்திரஞ் செய்கிற விதங்காண்க.

தரு-இ-ம்-தோடி-அடதாளம்.

பல்லவி.

சரவணோற்பவனே — வடிவேலேந்தும்
ஷண்முகத்தவனே — ஹரோ ஹரா

அனுபல்லவி,

திருவளையுமாளருள்சிவபெருமானுக்குக்
குருபரனாய்வந்தகோதிலறுமுகனே — சரவ

சேவலங்கொடியா — நினதுபத்தர்
சிந்தையிலுடையா — ஹரோஹரா
பாவவினாசபாதாம் — புயதெரிசனம்
ஆவல்கொண்டிருக் — குமடிமைக்கருள்புரியும் — சர
சூரசம்ஹாரா — நவவீரர்கள்
துதிக்குங்கெம்பீரா — ஹரோஹரா
வாரிசொரப்பவனே — வல்விலங்கிடுநீப
தாரியேயெனக்கு — தெரிசனமருள்புரி — சரவ
பன்னிருவாகா — என்றுமிரு
பாவையர்மோகா — ஹரோஹரா
முன்னொருஜெனனத்தில்முசுவிலங்காமெனை
மன்னவனுக்கியமாதேவனருளிய — சரவ

இராஜன் சொல்விருத்தம்.

நாதனேகுகனேயென்றுஞாலமுள்ளவர்களேத்தும்
பாதனேயடியர்க்கெல்லாம்பக்குவந்தெரிந்தங்கோதும்
பேதனேயுனதுபூஜைப்புரிதரத்திரமிலேனைப்
பாதுகாத்தருளல்வேண்டும்பரசிவக்கொழுந்தேபோற்றி

தரு-கண்ணிகள்-இராகம்-கேதரகௌளம்-ஆதிதாளம்.

சங்கரிதருந்தெய்வகங்கையால்-ஓம்-சரவணோற்பவா
சரணபங்கயமபூஜைசெய்கிறேன்
செங்கைபாயிரத்தொருவராடிய-ஓம்-சரவணோற்பவா
திலதநெய்யினாற்பூஜைசெய்கிறேன
தன்றிலங்கர்மாவுமஞ்சளில்-ஓம்-சரவணோற்பவா
தக்கவேயபிஷேகஞ்செய்கிறேன்
மண்டிகானகங்காய்த்தநெல்லியால்-ஓம்-சரவணோற்பவா
மலரடிக்கபிஷேகம்செய்கிறேன்
பஞ்சவமிர்தஞ்செஞ்சரணடி-ஓம்-சரவணோற்பவா
பாலினாலபிஷேகஞ்செய்கிறேன்
நெஞ்சகங்குளிரத்தண்டயிராடி-ஓம்சரவணோற்பவா
நெய்யினாலபிஷேகஞ்செய்கிறேன்
கானவர்தருந்தேனைசொரிந்துமே-ஓம்-சரவணோற்பவா
காப்பிரதத்தால்பூஜைசெய்கிறேன்

வானந்தொடுமாப்பலவும்வாழையும்-ஓம்சரவணோற்பவா
வழங்குங்கனியால்பூஜைசெய்கிறேன்
ஆகமப்படிசெய்திருநீற்றால்-ஓம்சரவணோற்பவா
அடியனேனபிஷேகஞ்செய்கிறேன்
ஏகவாசங்கொள்பன்னீரத்தால்-ஓம்சரவணோற்பவா
இழைத்தசந்தனப்பூஜைசெய்கிறேன்
கடவுளாறெழுத்தோதிநிறுத்திய-ஓம்சரவணோற்பவா
கலசநீரபிஷேகஞ்செய்கிறேன்
வடிவிலாவடிவாநின்றவா-ஓம்சரவணோற்பவா
மகிமையறியேன்மானிடன்றானே

இராஜன்சொல்கொச்சகம்.

சங்கரசுதாகுகனேஷண்முகனேகாங்கயனே
பைங்கனகமாமயிலோய்பாவலர்கட்பாவலனே
செங்கைவடிவேலேந்துஞ்சேவகசிகாமணியே
தங்கரத்னப்பட்டாடைத்தாங்குந்தயாநிதியே

தரு-கண்ணிகள்-இராசம்-அரபி-ஆதிதாளம்.

என்மனங்கசிந்துருகிபோற்ற-உந்தன்
இணையடிதருவாய்வடிவேலா
தென்மலயச்சந்தனமுங்கொண்டேநின்
திருவடிக்கணிவேன்வடிவேலா
நாகரத்நாபரணங்கொண்டேயுந்தன்
நகைமுடிக்கணிவேன்வடிவேலா
வாகைபெருமல்லிகைமந்தாரை-பூ
மாலைகளணிவேன்வடிவேலா
மாங்கனியுந்தேம்பலவுங்கொண்டேநல்ல
வாழையும்படைப்பேன்வடிவேலா
தேங்கனியனந்தமிங்குவைத்தே-தூப
தீபமுங்கொடுப்பேன்வடிவேலா
பாசமகன்றசமனந்தந்தே-முப்
பாத்தியந்தருவேன்வடிவேலா
தேசுலவுமாமயிலில்வந்தே-யுந்தன்
திருவடித்தருவாய்வடிவேலா

சம்பை.

நீலமயின்முதுகேறிநிற்குமுன்சொரூபமெந்த
காலமொதிருக்கண்கள்காணும்வடிவேலா
பன்னிருபுயாசலமும்பன்னிருவிலோசனமும்
என்னிருகண்காணவென்றுவிசையும்வடிவேலா
கடம்பமாலிகையணிந்துககனமெலாஞ்சூழுமயில்
நடம்பயிலவாராதென்றாயம்வடிவேலா

வேலேந்தியிலக்கணவைவீரொலாங்குழாந்துநிற்க
மாலானவள்ளியுடன்வாரும்வடிவேலா

தேவநகர்குடியேற்றிதெய்வயானையைமணந்த
சேவகருகேசவருள்செய்யும்வடிவேலா
தொழுதடிமையேனுன்னைநினைந்தழுதழுதேனானும்
பழுதிலாதருட்கடைக்கண்பாரும்வடிவேலா

தேவர்மலர்மழைபொழியசெஞ்சேவற்கொடிபறக்க
சீவராதென்னநெடுநேரம்வடிவேலா
கொடுஞ்சூரன்பிழைபொருத்துகோழிமயிலாக்கொண்
மடஞ்சாருமெனதுபிழைமாற்றும்வடிவேலா [டோய்

அருச்சனை.

தரு-கண்ணிகள்-இராகம்-புன்னாகவராளி-ரூபகம்.

கந்தாநமபரமேசுரன்மைந்தா-நமநமஓம்
எந்தாநமநவவீரர்கண்முந்தா-நமநமஓம்
முருகாநமஹரிநாரணன்மருகா-நமநமஓம்
வருகாநமவரமாமருள்தருகா-நமநமஓம்

வேலாயுதப்படையாநமவிசாகா-நமநமஓம்
காலாயுதகொடியாநமகாங்கேயனே-நமநமஓம்
சேந்தாநமதெய்வானையின்காந்தாநமநமஓம்
வேந்தாநமமலைமான்மகள்விருப்பா-நமநமஓம்

திருஞானசம்பந்தாநமசெட்டி-நமநமஓம்
பரமேசுரகுருவேநமபதியே-நமநமஓம்
குமராநமமயிலேறியகுகனே-நமநமஓம்
அமராபதிகுடியேற்றியஅறுமாமுக-நமநமஓம்

கடம்பாசரவணகார்த்திகைசேயா-நமநமஓம்
அடங்காவகையுலவுந்தாருகாரி-நமநமஓம்
மாசூரசம்ஹாரசுப்ரமணியே-நமநமஓம்
பாசாங்குசர்க்கினையாநமபவனே-நமநமஓம்

பிசபத்தியம்.

கானகத்தொருவள்ளிகொடிபடர வளர்கின்ற
கருணையோர்வடிவானகற்பகதருவே
வானகத்தேவபிடிமதகுஞ்சரங்கண்டு
மகிழ்கொண்டணைந்தசுகபோதமே
ஈனமிருசூரர்தலையானைகட்கொல்லுவான்
இடியேறெனப்பாய்ந்துமெகிர்சிங்கமே
தேனகத்துண்டுண்டுமானந்தவாரித்
திளைக்குமடியார்கண்டசிவலிங்கமே
போனகமொழிந்தாறுதினமதாக
ஞானவாரிதியின்பொன்னடிவிவேக

மானநல்லமூதுண் ணுமதியதாக
தானவகுலாந்தகாடியவ தாக

தரு-இராகம்-பிலஹரி-ரூபகதாளம்.

பல்லவி.

ஷண்முகனேவாராய் என்முன்னே
ஷண்முகனேவாராய்

அநுபல்லவி.

ஷண்முகனேவாரா சஷ்டிவிரதம்பாரா ஷண்

சரணங்கள்.

வருந்துமடியர்க்கோ வந்துகாப்பவனைச்சே
மறந்துவிட்டேனென்று சொல்வதென்னபேச்சே
தெரிந்திருந்தேனென்றுல் ஜெகதலத்தோருன்னை
சிறியேன்பொருட்டிகழ்ந்துசிரிப்பார்களிதுவேச்சே ஷண்

கார்த்திகைமாதர்கள் பாலா கொடுங்
கருமவசுரர்குல காலா
சீர்த்திபெறுமுனது திருவடிக்கேமாலா
சிந்தித்திருந்தேனே செய்யசுந்தர வேலா ஷண்

புண்ணியமெனக்குப் போதாதா செய்த
பூஜாபலனுகி வி ராதா
எண்ணியவெண்ணமெல்லா மெந்தனுக்குப்பலியாதா
எதுபிழையுற்றலு மீடேற்றலா காதா ஷண்

நேரிசையாசிரியப்பா-இராம்-சாவேரி.

சிவகுருநாதனே தேவர்கள்தேவனே
தவசிவானந்தனே சரவணேற்பவனே
ஷண்முகத்தேவனே சாரங்கபாணியின்
கண்மணிமருகனே கார்த்திகைசேயனே
அக்கினியெழுந்ததோ ராட்டுக்கிடாவினுல்
மூக்குவலயங்களு முமிபட்டநாளில
ஆங்கதையடக்கி யமரரைக்காத்தோய்
ஓங்கிடுஞ்செண்டென உல்லாசமாக
விளையாடுகாலையில் விண்டுவினுலகமுங்
களிபடச்செய்துபின் காத்திடவில்லையோ
வேதத்தினுட்பொருள் விளக்கிடாப்பிரமனைப்
பாதத்தினேயுறப் பருவிலங்கிட்டு
சங்கரன்வேண்டிடத் தயைசெய்யவில்லையோ
செங்கோலிலாது தேவநாடெல்லாங்
கொடுங்கோலில்பானு கோபனைக்கொண்டு
படுங்கொலைபுரிந்த பாவியாஞ்சூரையோர்
நாழியில்வேலினுல் நறுக்கியோரிரண்டாய்

கோழியுமயிலுமாய்க் கொண்டாளவில்லையோ
நற்கீரதேவனால் நலுந்தமிழ்ப்பெற்றே
கற்கிதன்னுயிரைக் காலனுரானுயிர்
ஆயிரம்பத்தரையன்புடன்காத்தத்
தூயவேலேந்திய சுப்பிரமணியனே
எளியவன்வேண்டும் இத்தவந்தன்னில்
பிழையிருந்திடினும் பொறுத்தெனையாள
மின்னறுமுகமும் நீபமாலிகையும்
பன்னிருபுயமும் பாதகிண்கிணியும்
செங்கதிர்வேலும் சேவலங்கொடியும்
துங்கமாமயிலில் தோன்றியசொரூபந்
தெரிசனங்காணவென் சிந்தையில்
சாதமாமஃதருள் சாமியேபோற்றி.

கலிவிருத்தம்.

செய்யமேனியனேசிவபாலனே
ஐயனேகுகனேயமராடுவேற்
கையனேகருணாகரனேமுரு
கையனேயென்னையாதரித்தாளுமே.

தரு-கண்ணிகள்-இராகம் முகாரி-தாளம் அடத்தாளசாப்பு.

முருகாநின்னையல்லாலொருமூர்த்தியறியேனே
வருகாவென்முனமேயெங்கள்வள்ளிமனோகரனே
கதிரொளியானவனேசிவகங்கைதபோதபவனே
அதிபலவேலவனேயெங்கள்ஆறுமுகத்தவனே

பேரரசொன்றளித்தேபின்னுன்பொன்னடிநிழலெனுஞ்
சீரரசேதருவாயெங்கள்தேவசிகாமணியே
என்றுமிளையவனேயிகத்தெவ்வுயிரவ்வுயிராய்
நின்றநெடுந்தகையேயெங்கணீலமயிலோனே

கடம்பலர்மாலையனேநாற்கரணங்கடந்தவெளி
நடம்பயில்வேலவனேசிவநாரிதன்பாலகனே
காமியனானுங்கடைக்கண்கணித்தாண்டருளும்
சாமியெனப்பணிந்தேன்முனம்தாருகற்செற்றவனே

தேவதைவேறறியேன்உன்திருவடிக்காண்கினலால்
ஆவிதனைத்தரியேன்பரமானந்தத்தேசிகனே
எந்தனைவேண்டிடினுநெஞ்சிரக்கமிலாதறியேன்
முத்தனையாயனையாஎங்கள்மூலபரஞ்சுடரே.

பொதுவிருத்தம்.

இப்படியதுநாளாகவிரவிலும்பகலுமாசான்
சொற்படிபூஜையாற்றித்தோத்திரித்துறக்கமின்றி
மப்பிலாதவன்சிராய்ந்துசஷ்டிநாண்முடிந்தநாளில்
மெய்ப்பெருந்தகையவேந்தன்வெகுதவஞ்செய்கின்றானே

வசனம்.

இந்தவிதமாக மெய்ப்புணர்வுடைய முசுமுகமஹாராஜன் தமது குருநாதன்வாக்கின்படி முதலுள் தொடங்கி ஆறுநாளும் நித்திரையில்லாமல் இரவும்பகலும் ஸ்ரீகந்தநாதனை பூஜித்து ஆனந்தவிதமாகத்துதித்து அக்கடவுளது மகிமைகளைச்சொல அனுபவங்களை சிரத்தையாக சிரவணஞ்செய்து சஷ்டிநாள்முடிவில் மிகுந்த மஹாதபஞ் செய்கிற விதங்காண்க.

இராஜன்சொல்-சொச்சகம்.

ஓர்மதியிலாதமுசுவுசிதவிலங்காண்டவருள்
பார்மதிக்குமானிடனாய்ப்பண்ணுந்தவசுக்கிலையோ
சீர்மதிஜடாமகுடன்செங்கணனற்றேசிகனே
தேர்மரத்தின்மீதேறிச்சிவயோகஞ்செய்வேனே.

வசனம்.

சிறந்த சந்திரனைத்தரித்த ஜடாமகுட தாரியாகிய சிவபிரானது கட்பொறியிற் றோன்றிய வெங்குருநாதனே சித்தத்தாலறியும் அறிவில்லாத முசுவென்னு மிருகமாக இருந்தவென்னை த்தடுத்தாட் கொண்ட திருவருளானது, இப்போது மனிதனுக் கிருபைசெய்வ தில்லையா விருந்து செய்கின்ற தபத்திற்குக் கிருபைசெய்து இதோ தவஸ்தம்பத்தின் மேலிருந்து சிவயோகஞ் செய்துஉன் திருவடியை யடைவேன்ஸ்வாமி.

தரு-இராகம்சங்கராபரணம்-அடத்தாளசாப்பு.

பல்லவி.

தேர்மரந்தன்னிலிருந்தான்-முசுமுகமன்னன்
சிவயோகந்தன்னையறிந்தான்.

அநுபல்லவி.

தேர்மரந்தன்னிலேறியோர்மதியாகவே
சூர்முதலைக்களைந்தபார்வதிபாலாவென்று — தேர்

சரணங்கள்.

கஞ்சுகமெனவிந்தகாயந்தனைபொறுக்கு
நஞ்சினுங்கொடுமைசெய்நாரியராசைவிட்டு
பஞ்சபுலன்களையும்பரமானுவாகவே
நஞ்சரவணபவநாதனையேதுதித்து — தேர்

அன்புடன்செய்யுஞ்சஷ்டிப்பிரியவிரதந்தன்னால்
என்புகள்மார்பினிலெங்கும்விளங்கிடவே
கும்பமுனிவருக்குகுருபரனாகவந்து
இன்பந்தருங்குகனார் இணையடியேயெண்ணி — தேர்

முந்தானருளினால்முசுபதம்போக்கினேன்
பந்தந்தனைமுழுதும்பறந்துவிட்டுறந்து

சங்கதமும்புரிந்தான்சத்துச்சித்தானந்த
கந்தவேளடிமலர்க்கஞ்சந்தனைநினைந்து சேர்

இராஜன்சொல்-தேவாரம்-இராகம்-சங்கராபரணம்:

கடம்பலாரியுந்தோளாகாவுள்பெற்றபாலா
இடும்பைசெய்சூரனங்கமீருடலாக்கும்வேலா
திடம்பெறச்சஷ்டிநாளில்சிறியனேன்செய்பூசைக்கு
உடன்படாதிருத்தியேயோவுன்செயலறிந்திலேனே

இங்கணுங்கங்கைச்சூடுஞ்சிவனிடப்பாகம்வாய்ந்த
சங்கரிகுழந்தாவெந்தாசரவணபவகுகேசா
துங்கமாஞ்சஷ்டிநாளில்தொண்டனேன்செய்பூசைக்கு
தங்கருத்திரங்கியேயோதருஞ்செயலறிந்திலேனே

தேவகுஞ்சரியிடத்துஞ்செங்கண்மான்மகள்வலத்து
நீபமாலிகைபோனிற்பநீலமாமயிலினின்றோய்
தூவலரணந்தங்கொண்டேதொண்டனேன்செய்பூசைக்கு
நீவராதிருத்தியேயோநின்செயலறிந்திலேனே

முந்தொருஞான்றுதன்னின்முக்கணெம்பெருமானுதி
வந்தனைமுசுவினுகமறுத்தனைமாந்தனுக
விந்தநாள்செயுந்தவத்துக்கிரங்கண்ணுங்காக்ஷித்
தந்திடாதிருத்தியேயோதஞ்செயலறிந்திலேனே

கருடகந்திருவர்சித்தர்கமலனேமுதலாந்தேவர்
முருகவேள்நினதுபூசைமுறைமையிற்புரியப்பெற்றோய்
பொருவிலாவெளியேன்செய்யும்பூசையும்பொருளாக்
[கொண்டின்
திருவருளிரங்கியேயோசெயுஞ்செயலறிந்திலேனே

பொது-விருத்தம்.

இணையிலாமுசுமுகேந்த்ரனித்தவஞ்செய்யும்போது
துணைவருஞ்சுரரும்போற்றசுந்தரவடிவேலேந்தி
மணமிகாதனத்திற்கந்தமாதனந்தனிலிருந்தே
யணுவினுநிறைந்தமூர்த்தியிந்தனரருமையாமே

வசனம்.

கேளுஞ் சபையோர்களே தபத்தினால் தனக்குவேறொரு வரும் இணையிலாத முசுகுந்தமஹாராஜன் இவ்விதமாகிய தவஞ்செய்கிற காலத்தில் கந்தமாதனகிரியில் ஸ்ரீ சுப்பிரமண்ணியஸ்வாமியானவர் இரத்தினங்களா லிழைத்து நல்லவாசங்கள்வீச விதானங்கள் தூக்கிய சிங்காசனத்தில் தமதிளவலாக வந்த வீரவாகு தேவர் முதலிய வீரர்கள் அருகில் நிற்க இந்திரன் முதலிய தேவகூட்டங்கள் வணங்க அழகும் கூர்மையுமுள்ள வேலாயுதத்தைக் கையிற்றாங்கி இருந்த வண்ணமே ஆங்காங்குள்ள அணுவிலுள்ளும் பரிபூரணமாக விளங்கும்

இத்தேவன் தனிமையை யறிந்தான் என்றால் அவருக்கு இம்மதிதல் அருமையாகுமா (அன்று) எளிமையென்றுணர்க.

சுப்பிரமணியர்வருகிற-விருத்தம்.

தேவகுஞ்சரியெனன்னைத்தேன்புனவள்ளியென்னும்
பாவையரி ருவரோடும் பச்சைமாமயிலின்மீது
சாவலன் றவத்தைக் கண்டு சுருதியதளிக்கவல்ல
பாவகி வந்தான்வந்தான் பைந்தமிழ்நாட்டினன்றே

தரு-இராகம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஷண்முகதேவர் வந்தார் மயின்மீதேறி
ஷண்முகதேவர் வந்தார்

அனுபல்லவி.

ஷண்முகதேவர்வந்தார் உண்மையதாகவே
மண்மிசையடியவர்வண்மையறிந்தேகவே ஷண்

சரணங்கள்.

வள்ளிதெய்வானையை வலமும்இடமும்வைத்து
தெள்ளியவடியவர் உள்ளமறிந்துதித்து
தேவர்கள்மலர்தூவ முசுமுகமன்னன்
செய்தவந்தன்னைக்காவ வெள்ளியங்கிரி
சிவ பர ஞெரு விழி அன லது சர வண
பவ குக அறு முக ஹரி திரு மரு மக ஷண்

சத்திச் சிலம்பு புதித்த தம்பியர் கூடவே
வெற்றிப் பெறும் வடிவேற் கைத்திறலாடவே
வேத கிண்கிணியொலிக்கத் திருவடியில்
விண்ணவர் அஞ்சலிக்க வீணையெடுத்து
வித வித நவ ரச சுர முனி யவரிரு
பத மது துதி செய கதி தரு நிதி யென ஷண்

சென்னியோ ராறிலும்செங்கடம் பசைந்துற
பன்னிருவிழியருள் தன்னடியவர் பெற
பக்தர்கள் வினை யோட மரகத மயில்
பரத நடன மாட சுமைப் பொறுமல்
பண வர வது மணி தலை தொறு முமிழ்தர
கண கண வென முர சம ரரு மதிரிட ஷண்

சுப்பிரமணியர்-சொல்-விருத்தம்.

தென்பெருங் கருவூராளும் தினகரன்குலத்தில் வந்த
அன்பனேநீதானிந்த அருந்தவஞ்செய்வதென்னே
என்பலன்கருதிவந்தா யிகத்திலுன்றவமகிழ்ந்தேம்
நன்பலன்றருவோமஞ்சே னம்முனமுனைசெய்வாயே

வசனம்.

வாராய் தக்ஷிண பூமியின் கணுள்ள கருவூரென்னும் பெரியநகரையாளுகின்ற சூரிய குலத்திற் பிறந்த எனது அன்பனே நீ இந்த அருமையாகிய தவம் செய்வதென்ன இத்தவம் யாது பிரயோஜனத்தை நினைத்துச் செய்யவந்தாய் இவ்வுலகத்தில உன்றவத்தினைக்கண்டு அதிக சந்தோஷமானேம் அஞ்சவேண்டாம் நல்லவரந்தருகிறோம் நமது சந்நிதானத்தில் கேட்கக்கடவாய் அரசனே.

இராஜன் சொல்.

தரு—இராகம்—தன்னியாசி—ஆதிதாளம்.

பல்லவி.

ஹரஓம்ஜெயவடிவேலாயுதசரணம் ஹரிமருகவரதருக
ஹரஓம்ஜெயவடிவேலாயுதசரணம்.

அநுபல்லவி,

கருணாகரஹரபன்னிரு நேத்திர கந்தா சரண் சரணம்
[ஹரஹர ஹரஓம்.

சரணங்கள்.

சேய்பசிக்கமுதிடும்போலெளியேன்தபம்
செய்தேன்சரண்சரணம்
தாய்பசுப்போலவேதேடிவந்தாண்டருள்
தாதாசரண்சரணம்-ஹர-ஹர-ஹரஓம்
இலக்கரும்எண்மரும்சூழ்ந்திடவந்தருள்
எந்தாசரண்சரணம்
துலக்கமில்லாமனம்தூய்மையதாகிய
சுடரோசரண்சரணம்ஹரஹர ஹரஓம்
நீலமயிலின்முதுகேறியெளியேன்முன்னம்
நின்றாய்சரண்சரணம்
பாலனிருகண்களும்செய்தவம்சொல்லவும்
படுமோசரண்சரணம்ஹரஹரஹரஓம்

இராஜன்சொல்விருத்தம்.

உருவமாயருவமாகியொளிர்சிவக்குமரந்தாபோற்றி
சரவணபவனேபோற்றிஷண்முகத்தவனேபோற்றி
பிருதிவிமுழுதுநானேஏகசக்ரேசனாகத்
தருகநின்னருகிற்சூழுந்தம்பியரொவருமின்றே

வசனம்.

உருவமாகியும் அருவமாகியும் விளங்குகின்ற சிவகுமாரனே "சரவணபவனே ஷண்முகனேபோற்றி இந்தபெரியபூமி முழுதும் நானே ஏகசக்ரேசனாக ஆளும்பொருட்டு தேவரீர்பக்கத்தில் சூழ்ந்திருக்கும் துணைவராகிய வீரர்களை அடியேனுக்கு வரபிரசாதமாகக் கொடுக்கவேண்டும்ஸ்வாமி.

சுப்பிரமண்ணியஸ்வாமி சொல் விருத்தம்.

மாகநாடாக மோங்க மண்ணுலகெல்லாமுன்னால்
வேகமாய்ச்செங்கோலோங்க விரதைத்தந்தோம் தந்தோம்
ஆகமந்தவறிலாமல் அருந்தவம்புரிந்தமன்ன
வாகைநன்மாலைபூண்டு வாழி நீ வாழிதானே.

வசனம்.

ஆகமத்திற்கு மாறுபடாமல் அருமையாகிய தவம்செய்த் மகாராசனே கேளும் உன்னால் பூலோகமுழுமையும் ஏகசக் ராஞ்ஞைச் செல்வதன்றியும் தெய்வலோகமும் சுகமடையும் படியாக ஒன்பதுவிரரையும் கொடுத்தோம் அவர்களால்வெற்றி மாலையைத்தரித்து வாழக்கடவாயரசனே.

பொது கலிவிருத்தம்.

மாந்தராரினு மாதவமாற்றிய
வேந்தலுக்கிவ்வரங் கொடுத்தெம்மிறை
யாந்துணைவரலர் முகநோக்கிமண்
போந்திருங்களெனுஞ்சொற்புகலுவாம்.

வசனம்.

எமதிறைவனுகிய ஸ்ரீகந்தநாதன் – மக்கட்பிறப்பில் புருஷார்த்தமடையமஹாதவஞ்செய்த இவ்வரசனுக்கு இந்தவரத் தைக்கொடுத்துவிட்டு தம்பியாகிய வீரர்களைப்பார்த்து பூமியில் போயிருங்களென்று சொல்லுகிறவிதங்காண்க.

சுப்பிரமண்ணியஸ்வாமி சொல் விருத்தம்.

மொய்ம்பினன்முதலாகின்றென்மொழிதவறுமல்காக்குந்
தம்பியரெவருங்கேளீர்சஷ்டிமாவிரதம்பூண்ட
அன்பனுக்களித்துவிட்டேனுதலானீங்களன்னேன்
பின்செலல்வேண்டுமொன்றும்பேசொணுதேகுவீரே.

வசனம்.

என்வார்த்தையை தவராமல் காக்கும் வீரவாகு தேவர் முதலிய தம்பிமார்களே கேளுங்கள் சஷ்டிவிரதமே பரமாகக் கொண்ட இந்த அன்பனுக்கு உங்களை வரப்பிரசாதமாகக்கொடுத்து விட்டேன். ஆகையால் வேறொன்றும் பேசாமல் அவ்வரசன் பின்னே போகக்கடவீர் வீரர்களே.

பொதுவஞ்சித்துறை.

அரத்த வேலவ
னுரைத்த மாமொழி
புரத்த வீரர்க
ளொரத்துரைப்பரே.

வசனம்.

செங்கதிர்வேலேந்திய சுப்பிரமண்ணிய ஸ்வாமியின் திரு வாக்கைக்காக்கும்படியான வீரர்கள் வணங்கிச் சொல்லுகிற விதங்காண்க.

வீரவாகுதேவர் சொல்.

௬௫-இராகம்-கன்னடா-தாளம் ரூபகம்.

பல்லவி.

அண்ணலேயெங்கள் ஆறுமாமுகசூரசம்மாரனே

அனுபல்லவி.

கண்ணே கண்ணின்மணியாகிய
கர்த்தனே கருணாகரசித்தனே அண்

சரணங்கள்.

௧. ஓராயிரத் தெட்டதாகியவண்டமாண்டிடுஞ்
சூரனோடமராடியசேவகம்
சூட்சமானிடன்பாற்செய்யலாகுமோ அண்.

௨. முருகா முதலாகியெங்குநிறைந்தருண்மூர்த்தியே
ஒருகாலமுனைப்பிரியாதவர்
உலகமானிடராகக்கலகமோ அண்.

௩. நாவாலுனை யெந்தநாளினும்வந்தனையேசொலும்
தேவதேகம்பிறிந்துமயக்கிடுஞ்
செனனமானிடராகமனனமோ அண்.

சுப்பிரமண்ணியஸ்வாமி சொல் விருத்தம்.

விடுத்தநஞ்சொல்லைமாற்றிவிளம்புதல்தகுதியாமோ
தடுத்தெதிருரைக்குந்தன்மைக்ஷத்ரியர்க்குரித்தாஞ்சாபம்
கொடுத்தனநீங்களெல்லாங்குவலயமனிதராய்முன்
னெடுத்தவித்தேவதேகமேகிடக்கடவதின்றே.

வசனம்.

நாம்கட்டளையிட்டதை மறுத்துச் சொல்வது தகுதியா குமா, அப்படி தடுத்துபேசுகிற குணம் க்ஷத்திரியர்க்கு உரிய தல்லவா, நீங்கள் தடுத்து பேசினபடியால் உங்களுக்கு இந்த தேவதேக நீங்கி மனித தேகம்வரக்கடவது என்கிறசாபங் கொ டுத்திருக்கிறோம் வீரர்களே,

பொது-விருத்தம்.

பாமிசையன்புபூண்டென்பதியவையுள்ளீர்க்கத
சாமிசீவன்மொழிக்குமாறுத்தடுத்தவர்க்கருளாங்சொல்லோ
தாமமயமாகுந்தெய்வசூக்குமவடிவநீங்கி
பூமியில்மனிதராகிப்போவிங்கனிதுசொல்வாரோ.

வசனம்.

தமிழ்ப்பிரபந்தத்தின்மேற் கொண்ட அன்பினால் எனக்கு ஓர் சிங்காதனமிட்டு நமது அரசன் சபையின்கண் இருக்கின்ற வர்களே கேளுங்கள் ஸ்ரீகந்தநாதன் கட்டளைக்கு மாறாகத்தடுத் துப் பேசினவர்களுக்கு கிருபையுண்டாகுமா, அதனால் தேவ தேக நீங்கி நின்றவிடத்திலேயே மனிததேகமடைந்த வீரர்கள் சொல்லுகிற விதங்காண்க.

நவ்வீரர்கள்சொல்.

தரு—கண்ணிகள்—இராகம்—உசேனி—தாளம்—ரூபகம்

க. என்னசெய்குவோம்கந்தநாதனே மனிததேகம்
எடுக்கவோவிதிப்பருள் விநோதனே
முன்னமறியாவினைகள்வந்ததோ சாமிஉனது
மொழிகள்தவறிமனது நொந்ததோ

உ. சேடகங்கணிபாதம்வாய்ச்சுதோ சிலம்பிலுதித்த
செல்வமுழுதுஞ்சிந்தி போச்சுதோ
ஈடிலாதவுனதுபாதமே இப்போதுபிறிந்து
ஏகுங்காலம்வந்து போகுமே

ங. சாமிசன்னிதான மாச்சுதே என்றுமறிந்தும்
தடுத்துரைத்ததால் சாபம்வாய்ச்சுதே
பூமிமனிதர்போலமறந்தோ இவினைப்பயன்
பொலிந்துவினையின்காலஞ் சிறந்ததோ

ச. நம்பியிருந்தநாங்களாண்டுமே எத்தனையிந்த
நரர்க்கழித்துபோதல் வேண்டுமே
வெம்பிநினைந்துநினைந்துவேகுமே தாலதனுவில்
விண்ணிர்காலங்கழிந்து போகுமே

நவவீரர்கள் சொல் கொச்சகம்.

முன்னமனே பொங்களுக்கு மோகமயலாமனித
சின்னதனுத்தந்து விட்டீர் சிறியோங்களறியாமல்
என்னபிழைசெய்தோமோ வேலுமுறி யோங்குகனே
பின்னமிந்ததேகமதனு வென்றருள்வீரோங்கோனே.

வசனம்.

கேளும் எங்கள் முதல்வராகிய முருகநாதனே ஆசையும் அறியாமையுமவிளைவதும் இடமாகிய இந்தமானிட தேகங்கொ டுத்துவிட்டீர் முன் என்னவினை செய்திருக்கின்றோமோ அறிகி லோம் இப்போது இறந்துவிட்ட தேவதேகம் எக்காலத்தில் மடுப்பீர் எங்கீர்த்துமே.

சுப்பிரமண்ணியர் சொல்விருத்தம்.

அந்தநாள்சூரபத்மவசுரனைக்கொன்றுநாகம்
வந்துதெய்வானைதன்னை மணஞ்செயும்போதக்கூட்ட
முந்தரம்பையர்களும்மை மோகமேகொண்டாரன்றோ
சுந்தரநீங்கள் கண்டத்தொடர்பி தெம்மிளவலீரே.

வசனம்.

நாம் அக்காலத்தில் சூரபத்மனை ஜெயித்து தேவலோகம் வந்து தெய்வயானையைக் கலியாணஞ் செய்யும்போது அம்மணப்பந்தரில் வந்த தேவகூட்டங்களில் முந்தியிருந்த அரம்பையர்கள் உங்கள் யௌவனத்தைக்கண்டு மோகித்தார்கள் அவர்கள் அழகுகண்டு நீங்கள் மோகித்தீர்கள் அவ்வினைக்கீடாக மக்கட் பிறவிக்கொடுத்து நாம்அவ்வினையை யூட்டிவிக்கிறோம் இதுதான் இரகசியம் என்துணைவரே.

தரு-கண்ணிகள்-இராகம்-கல்யாணி-தாளம் அடத்தாள சாப்பு.

க. அஞ்சாதிருங்க ளென்வீரர்களே — கொடு
மசுரர்களுடன் பொருதீர்களே
தஞ்சமென்றடைந் திரிப்போதே — சொன்ன
சாபமானதுவும் தப்பாதே.

௨. தாட்டிகமாமனந்தேரீரோ — நவத்
தம்பியரே கிட்டி வாரீரோ
தேட்டமதாய் நல்ல புண்ணியமே — இகஞ்
செய்யவுங்களுக்குண்டாங் கண்ணியமே.

௩. குந்தத்தினால் ஜெயங் கொள்வீரே — முசு
குந்தவரசனுரை விள்வீரே
மந்திரிகளாகவு மிருப்பீரே — சோழ
மரபுப்பெண்களைமணம் பொருப்பீரோ

௪. ஆயிர வாண்டிங்குவாசிகளா — யிருந்
தானபின்பெனக்கு நேசிகளா
தூயமாதவங்கள் செய்வீரோ-செய்து
தொல்லுருவாகியே யுய்வீரே

விருத்தம்

* அன்னையால்தந்தகுந்த * மங்கைகொண்டுலகமிந்த
மன்னனுக்காக்கிநம்மீல்வழங்குவெம் * புலிபதாகை
தன்னையேயுயர்த்திசோழத் தலைவர்பாற்பிறந்தகேதை
கன்னியர்மணந்து * கைக்கொள்குலமிதங்கண்டுவாரீர்.

வசனம்.

நமதுமாதாவாகிய உமாதேவியால் கொடுக்கப் பெற்ற செங்குந்தங் கையிற் கொண்டு உலகமுழுதும் ஆளும் ஏகசக்ராதிபத்தியம் இந்தஅரசனுக்குக் கொடுத்துவிட்டு என்றால் சூரசம்ஹாரஞ்செய்து அவன்கையிற் பறித்து உங்களுக்கு கொடுத்த புலிக்கொடியை இந்த உலகத்தில் நிலைபெற வெற்றிக்கொடியாக நாட்டி சோழவரசர்கள் மரபிற் பிறந்திருக்கும் தேவ அரம்பையர்களை மணந்து நவ்வீரரில் முதல் வீரனாகிய, உன் மரபினரென்னும் பொருள் தோன்ற வீர,வாகுஎன்பதில், வாகு, என்பது, கையெனவும,வீரம்,என்பது, கோள்,எனவும், இவ்விருகூற்றும் புணர்த்திய தொடர்மொழியில், அர்,என்னும் உயர்திணை பன்மைப்பலர்பால் விகுதி சேர, கைக்கோளரென்னும் பெயரையுடைய செங்குந்தகுலத்தை அபிவிர்த்தியாக்கி வைத்து நமது பதவிவரக்கடவீர் துணைவரே.

நவவீரர்கள்-சொல்-விருத்தம்.

மாச்சரவணபவேச வள்ளலேசொல்லக்கேளாய்
ஆச்சிரமத்தின்மேலாமருள்பெறும்பிரமசாரி
ஈச்சுரனன்றோவந்தவெழினிலைநின்றோங்கண்டு [ணே.
வாச்சியமெனவேதள்ளா மணஞ்செய வேண்டோ மண்

வசனம்.

சர்வவல்லமையினால் பெருமைபொருந்திய சரவணபவனென்னுந்திருப்பெயரெய்தியதியாகியே அடியேங்கள் விண்ணப்பமொன்றிருக்கின்றன கேளுங்கள் நான்காச்சிரமத்தினும் அருளடைய வணித்தாகிய பிரமசாரியை ஈசுரனென்று மேலோர்கள் சொல்வார்களல்லவா அந்நிலையாகிய லட்சியத்திலிருந்து நாங்கள்வாச்சியமாகக்கண்டு நீக்கத்தக்க மணஞ்செய்வதை நீக்கிகிருபைபாலிக்கவேண்டுமையா ஸ்வாமி.

---

* அன்னையால்என்பதற்குபிரமாணம் - ஈட்டியெழுபது- குந்தர்கள் சிவனது மரபினரென்றும் உமையவளால் கைவேலைப் பெற்றனரென்னும் பொருள் தோன்ற கூறிய- ௧௬-வது-கவி- சலம்பிரியாத குட்டுச் சாவற்கேதனமெஞ்ஞான்றும்-வலம்பிரியாத செவ்வேட்குறுதுணையாக மன்னுட் - குலம்பெறவந்தாரென்றங் கொடியுமை தந்தவீட்டி - நலம் பெறுமிந்தகுந்தர் பரிசு போனாட்டிலுண்டோ.

* புலிப்பதாகை என்பதற்குப்பிரமாணம்-மேற்படி ஸ்ரீகந்தநாதன் சஷ்டியில் சூரசம்ஹாரஞ்செய்து சேவலங் கொடியைதானேற்று அவ்வசுரனது புலிக்கொடியை நவவீரர்களுக்கு கொடுத்தனரென்னும் பொருள் தோன்ற-௰௯-வது-கவி-வனப்புறுமிளவலும் வரச்செவ்வேற்குகன்-சுடப் பகலாறினிற் கலாப மேறியே-யினப்புகழ் சேவலங்கொடிதற்கேற்று வெஞ்-சினப்புலிக் கொடிதீரச் செறிசெங்குந்தமே.

* கைக் கோள் என்பதற்கு பிரமாணம் - செங்குந்த புராணம் பாயிரம் ௨௰௭-வது-கவி. வஞ்சச் சூரமகன்றன்னை மாய்த்தவீரவாகுவெனல்-விஞ்சவ்வாகு கையென்ன வீரங்கோளென்றிடமருவி-செஞ்சொற்புலவர் கைக்கோள்வலவர்-என்று முறையாரைகளாதுணர்க.

௪௬-இராகம்-புன்னாகவராளி-அடதாளசாப்பு.

௧. என்னசொல்கிறீர் இறைவனேமணம்
இசையலாகுமோ-மனம்-பிசையலாகுமோ மனம்
பிசைந்து-தேகம்-பசந்துநாடி
அசந்து-மையல்-ஓசந்து-போகுமே என்ன.

௨. மஞ்சள்குங்குமஞ்சேலைமாலையும்
வாங்கல்வேண்டுமே-அருள்-நீங்கிதாண்டுமே-அருள்
நீங்கி-கலைத்-தாங்கி-ஆசை
வீங்கி-பவம்-ஓங்கிப்-போகுமே என்.

௩. பெண்கள்கொண்டவர்பட்டபாடெல்லாம்
பேசல்வேணுமோ-பேசில்-ஆசைதோணுமோபேசில்
ஆசை பணங்-காசை-தேடும்
நேசை-சிவபூசை-போகுமே என்.

௪. வீணுக்கவர்கள்பிணக்குதீர்க்க
விடிந்துபோகுமே-அருள்-கடந்துபோகுமே-அருள்
கடந்து-மாயைத்-தொடர்ந்து-மனம்
படர்ந்து-தெருள்-நடந்து-போகுமே என்.

௫. வாய்த்ததே சமுசாரமென்றொரு
வாக்குமிருக்குதேநெஞ்சந்-தாக்கிநெருக்குதேநெஞ்சந்
தாக்கி-வலி-போக்கி-ஹதம்
ஆக்கி-எம்மைத்-தூக்கிப்-போகுமே என்.

௬. ஷண்முகேசநீரிருந்தநெஞ்சினிற்
றையலிருக்குமே-மனந்-தானும்பொருக்குமோ-மனந்
தானே-அடி-மானே-செழுந்
தேனே-எனக்யானம்-போகுமே என்

சுப்பிரமண்ணியஸ்வாமி-சொல் கலிவிருத்தம்.

ஆனவெந்தனிளயசுவீரரே
எனதங்கைத்தருந்தருமுன்னமே
யானறிவித்தருள்தருவேனெடி-
மானவாயிரவருடமும் வாழியே.

வசனம்.

வாரும் நமதிளையசுத்தவீரர்களே அம்மானை என் அகங்காரத்தைக்கொடுக்கும் அப்படிகொடுக்குமுன்னமே நாம் அறிவித்த கிருபை பாலிக்கின்றோம் நமக்குநொடிப்போதாகிய ஆயிரவருடமும் இவ்வுலகத்தில் வாழக்கடவீர் வீரர்களே.

நவவீரர்கள்-சொல் - வசனம்.

அப்படியே மஹாபாக்கியமையா ஸ்வாமி

பொதுவிருத்தம்.

செந்திருவேலோன்சொல்லத்திருவுளப்படியேயென்ற
குந்தர்களைக்கொண்டவீரர்குற்றமுங்குணமேயானல்[மோ
கந்தனையடுத்தோர்க்கெல்லாங் கதியெனுமறைப்பொய்யா
அந்தணர்கேளீரின்னமறுமுகரிதுசொல்வாரே.

வசனம்.

கேளுங்கள் அழகிய தன்மையுடைய சபையோர்களே செந்நிறத்தால அழகியவேலேந்திய ஸ்ரீகந்தநாதன் இவ்வாறுகட்டளையிட தங்கள் திருவுள்ளப்பாங்கென்ற செங்குந்தவீரர்கள் குற்றமுங்குணமாக முடிந்ததென்றால் ஸ்ரீகந்தநாதனை நம்பினவர்களுக்கு கதியென்றுமுறையிட்டுக்கொண்டிருக்கும்வேதவாக்குபொய்யாகுமா இல்லை இதுநிற்க அவ்விறைவன்முசுமுக மஹாராஜனைப்பார்த்து சொல்லுகிறவிதங்காண்க.

சுப்பிரமண்ணியஸ்வாமி சொல் விருத்தம்.

மனுமுதற்குலத்தில்வந்தமகிபனேசொல்லக்கேளாய்
உனதுநன்முகத்திலோடு முகந்தவிக்குந்தநாமம்
புனைதரமுசுகுந்தேசப்புரவலனெனும்பேர்பெற்று
மனதுசந்தோடமாகவாழி நீ வாழிதானே.

வசனம்.

வாராய் மனுமாந்தாதா மரபிற்றோன்றியவரசனே, நம்மிடத்தில் வரப்பிரசாதமாக இச்செங்குந்தரை யடைந்ததால் முசுவென்னும் நிலைமொழியோடு குந்தரென்னும் வருமொழியைப்புணர்த்தி இவ்வுலகத்தாரால் அழைக்க முசுகுந்த சக்ரவர்த்தி யென்னும் பெயரைக் கொடுத்திருக்கிறோம் அப்பெயர் பெற்று சந்தோஷமாய் வாழக்கடவாய் மஹாராஜனே.

பொது—விருத்தம்.

வீரரையரசர்க்கீய்ந்துவிபுதருங்கணங்கள்போற்ற
வாரணக்கொடியோன்கந்தமாதனம்போனபின்னர்
சீரணங்குருதிநின்றகனநவவீரர்தன்னை
பூரணத்தவத்தாற்பெற்றபுரவலனிதுசொல்வானே.

வசனம்.

நவவீரர்களையும் முசுகுந்த மஹாராஜனுக்கு வரபிரசாதமாகக் கொடுத்துவிட்டு தேவகூட்டங்களும் சிவகணங்களும் வணங்கி எதிரேசெல்ல சுப்பிரமண்ணியஸ்வாமி கந்தமாதனகிரிக்கு எழுந்தருளிய பின்பு, வினையை நினைந்து நிற்கின்ற கனமுடைய நவவீரனை, சஷ்டிவிரத மாதவம்செய்தடைந்த முசுகுந்தமஹாராஜன் சொல்லுகிற விதங்காண்க.

ஸ்ரீ கந்தவிரத விலாசம்.

முசுகுந்த மஹாராஜன் சொல் விருத்தம்.

தேவரோ வீரரோ யான் செய்ததபோபலமாய்வந்த
மூவரோ மூவரான முருகவேளொக்குநீரோ
யாவதாலுங்கள்சேவையடிமைபெற்களிக்கவாரீர்
பூவலர் நிதமுங்கொண்டு பூசனைப்புரிகுவேனே.

வசனம்.

தேவர்களோ வீரர்களோ யான்செய்ததபோபலமேயுருவு கொண்டுவந்த திரிமூர்த்திகளோ- எனக்கு திரிமூர்த்திகளாகவும் விளங்குகின்ற ஸ்ரீகந்தநாதன் நீங்களே ஆதலால் உங்கள்திருச் சேவை அடியேனுக்குக் கொடுக்கவாருங்கள் உங்களை அநுதினமும் அழகியபூக் கொண்டு பூசைசெய்வேனையா வீரர்களே.

தரு-இராகம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

போவோங்கருவூருக்கெல்லோரும்-புறப்படுங்கள்
போவோங்கருவூருக்கெல்லோரும்.

அநுபல்லவி.

சிவேசனுங்குமரதேவனருளெழுந்து
காவோமெனவே வந்தகாட்சியாம்வீரர்களே - போவோ.

சரணங்கள்.

க. முந்திநல்வினைசெய்தநானே ஏழைக்கிரங்கும்
முருகவேள்க்ருபையீதென்பேனே இந்தபூமியில்
வந்திமகன்வெளிவந்தானே உபசாந்தமங்கை
வலியவணைத்தசுகந்தானே சொல்லிலடங்கா
விந்தையெனச்சிறந்து மேதினியோருகந்து
சிந்தனைசெய்யவந்தஜெயநவவீரர்களே. போவோ.

உ. தேவர்முனிவர்சித்தரெல்லாம் அனந்தகற்பம்
தேகமிளைத்திளைத்துகல்லா மரமாகியும்
ஆவிநிலைங்குந்தவல்லார் ஏமாந்திருக்க
அடிமைமுன்வந்தெத்திரினில்லா என்குலதெய்வ
சேவலங்கொடியானே தெரிசினந்தரநானோ
சிறந்தகண்ணியனானேனென்ஜெயநவவீரர்களே போ.

ங. மாதேவன்கட்பொறிபறக்க சிலம்புதித்த
மணியிலம்மைபுருச்சிறக்க அதனிடத்தப்
போர்தேநவவீரர்கள்பிறக்க ஷண்முகனெனும்
புனிதனைவேண்டியாளிரக்க அவர்கொடுக்க
ஆதாரமெனும்பண்டு அவனியிலாருக்குண்டு
அங்கையிற்குந்தங்கொண்டு அருணவவீரர்களே-போவோ

பொதுவிருத்தம்.

வரமதாய்வந்தவீரவாகுதேவமுதலானோரும்
முருகனைமனதிலுன்னிமுசுகுந்தராசனோடு
கருணையம்பதியிற்செல்லக்காவலனடைந்தபேற்றை
யொருவரோடொருவர்கூறியுலகமேகளித்தவன்றே.

வசனம்.

கேளும் சபையோர்களே வரப்பிரசாதமாகவந்த வீரவாகுதேவர் முதலிய வீரர்கள் முசுகுந்த மஹாராஜனுடன் முருகநாதனை சிந்தனை செய்துகொண்டு திருக்கருவூரின் கண்ணே போகும்போது கண்ட மேன்மக்களெல்லாம் இவ்வரசன் அடைந்த தபோபலத்தைக்குறித்து ஒருவருடன் மற்றொருவர் அனந்த விதமான அற்புதவார்த்தைகளை பேசிக்கொண்டு சந்தோஷமடைந்தார்கள்.

பொதுவிருத்தம்.

வீதியைப்புதுக்கிச்சொர்ணவிதானங்களெங்குந்தூக்கிச்
சாதிமுத்தடுநற்சுண்ணச்சாந்தினாற்சுவர்கள்தீற்றிச்
சோதியானகரமெல்லாந்துலக்கிச்செங்குந்தவீர
நாதர்கடிருக்கல்யாணஞ்செயும்பந்தலிட்டுவாரே.

வசனம்.

அந்நகரத்தின் கண் ஆங்காங்குள்ள வீதிகளைச் சுத்தமாக்கி ஸ்வர்ணங்களால் அனேக விதானங்களும் தோரணங்களும் தூக்கிக்கட்டி முதற்சாதியாகிய முத்து சுட்ட சுண்ணச்சாந்துகளால்சுவர்களெல்லாம் தீற்றி அனந்தவித தீபங்களால் இரவிலும்பகலாக விளக்கி செங்குந்த வீரர்களுக்கு கலியாணஞ் செய்யும்பொருட்டு பந்தர் இடுகிற விதங்காண்க.

தரு-இராகம்-சங்கராபரணம்-அடத்தாளம்

பல்லவி.

பந்தலலங்கரித்தார் கல்யாணஞ்செய்ய
பந்தலலங்கரித்தார்

அநுபல்லவி.

சுந்தரமாயெங்கும்சொர்ணசித்ரமணிந்து
கந்தமணக்கும்பனிநீருற்றணிந்து (பந்த)

சரணங்கள்.

௧ வச்சிரத்தூணிருத்தினார் ரத்னப்பலகை
வரிசையாகப்பொருத்தினார்
பச்சைமரகதப்பாப்பதன்மேலிட்டு
உச்சிதப்பளிங்கொடுங்கைகளுந்தொட்டு (பந்த)

௨ ஆணிப்பொன்னாற்பதுமைகள் — தங்கங்கே
அனேகவிதப் பதுமைகள்
காணிக்கொள்ளவுந்நாயகரோர்கள் கண்டு
மாணிக்கமுதலானமணிகளைத்தங்கொண்டு — பந்த

௩ முத்தாரந்தொங்கவிட்டார் — தெருவுகளின்
முன்னேகமுகுக்கள்நட்டார்
பத்தியாக்கதலிப்பச்சைமாமுங்கட்டுதல்
கொத்தினோடுதென்னங்குலைகளெங்குமேந்த — பந்த

௪ பூரணகும்பமும்வைத்தார் — மாவிலைரத்னத்
தோரணமெங்குமமைத்தார் —
சீரணவுஞ்சோடசசெம்பவளக்கால்வைத்தார்
ஆரணவிதிப்படி அம்மிக்குழவிவைத்தார் — பந்த

௫ குத்துவிளக்குகள்வைத்தார் — ஐவிளக்கொடு
குடவிளக்கேற்றிவைத்தார்
சுத்தப்பளிங்கினந்தோன்றுஞ்சுடர்விளக்கு
வைத்திரவும்பகலாமாமணிகள் தளுக்க — பந்த

௬ நாடகசோபாக்களும் — வந்தமன்னர்க்கு
ரத்தினமாம்பாய்க்களும்
கூடமெங்கும்பரப்பிகுமுகுமெனவேபன்னீர்
ஓடும்படித்தெளித்தேபுலகங்களிக்கவுன்னி — பந்த

முசுகுந்தமஹாராஜன் சொல்விருத்தம்.

கத்திவில்வேலந்திரிங்கேகாக்குங்கட்டியனேவாராய்
வெற்றிவேல்குமாரன்பூசைவிரதமாதவத்தால்வந்த
சுத்தசெங்குந்தவீரர்சுபமணநமதுநாட்டின்
முற்றிலுமறிவித்தெந்தன்முன்வரவேண்டுமின்றே.

வசனம்.

வாராய்கத்திவில் முதலியவைகளை கையிற்றாங்கி இவ்விடத்திலேகாத்திருக்கும் வீரகட்டியனே-ஜெயம் பொருந்திய வேலாயுதந்தாங்கிய-ஸ்ரீகந்தநாதன்விரதமாகிய மஹாதவத்தினால் எனக்குக் கிடைத்த சுத்த செங்குந்தவீரர்களுக்கு கலியாணம் நடந்தபோகிற படியால் நமது நாட்டிலுள்ளராஜாக்கள் வேதியர்கள் மற்று முள்ளயாவருக்கும் தெரியும்படியாக சொல்லிவிட்டு அதிசீக்கிரமாக வரவேண்டுங் கட்டியனே.

கட்டியன் சொல்விருத்தம்.

அண்டருந்தொழுதிபொன்னுறுதவனுமுசுப்பெருமான்காதலி
கண்டபுண்ணியனேமைங்கள்கர்த்தனேசொல்லக்கேளாய்
வண்டிசைதனிலுமுள்ளவிருதிப்பார்மேலோர்
மண்டலத்தாசரெல்லாமனைவர்ந்துவந்திட்டாரே

ஸ்ரீ கந்தவிரத விலாசம்.

வசனம்.

தேவர்களுக்கும் அரிதாகிய ஷண்முகப் பெருமான் திருச் சேவைகண்ட புண்ணியவானே என் கர்த்தனே அடியேன் விண்ணப்பங்கேளுங்கள், அஷ்டதிசைகளிலு மிருக்கின்ற வேதியர்கள்மஹாரிஷிகள், சகலதேசத்துராஜாக்கள் முதலாகிய யாவருக்கும் நமது கலியாணமஹோற்சவ சங்கதி தெரிவித்தேன் இதோ மணப்பந்தலில் சகலரும் வந்திருக்கிறார்கள் பாருமென் கர்த்தனே.

பொது-விருத்தம்.

நன்முசுகுந்தவேந்தனவசிவவீரான
தன்மமேபுணர்ந்தப்ரஹ்மசாரியரனைவோருக்கும்
மன்மணப் * பிரஜாபத்யமணமதேசெய்யவேண்டி
பொன்மிளிரிருக்கையீய்ந்துபூசனைப்புரிகின்றனே.

வசனம்.

நற்குணமுள்ள முசுகுந்த மஹாராஜன் அரசர்களுக்குரிய * பிரஜாபத்திய விவாகஞ்செய்யும்பொருட்டு சிவ நவவீரராகிய வேத வொழுக்கங்களை ஐயமறவுணர்ந்த பிரமசாரிகளுக்கு பொன்னாசனங்கொடுத்து அதில் எழுந்தருளச்செய்து பூசிக்கிற விதங்காண்க.

தரு—இராகம்—அசாவேரி—ஆதிதாளம்.

பல்லவி.

சிவநவவீரர்களை பூசனைப்புரிகின்றான்
தவ்முசுகுந்தனெனும் சக்ரேசனே.

அநுபல்லவி.

புவனமெலாமிந்த பூபதியிடத்துள்ள
நவநவமாமன்பை நாடியானந்தங்கொள்ள (சிவநவ)

சரணங்கள்.

காவேரிநதிவரும் கனாசந்தனை மொண்டு
கைம்மாறிலாதளிக்கும் கைத்தலந்தனிற் கொண்டு
சேவேறியானருளும் * சிவகுலமெனக் கண்டு
திருமஞ்சனமாட்டியச் செலவர்சொல்லமுதுண்டு (சிவநவ)

---

* பிரஜாபத்தியவிவாகம் ஒரு பிரமசாரியை யழைத்துவந்து பூசித்துத்தன் பெண்ணைத்தானம் பண்ணும்போது நீங்களிருவருமாய்த் தருமங்களைச் செய்யுங்களென்று சொல்லிக்கொடுப்பதாம்.

* சிவகுலம் ஈட்டியெழுபது செவ்வேட்குறு துணையாக மன்னுட் குலம் பெறவந்தாரென்றும், செங்குந்தபுராணம் பாயிரம் [illegible] முனிவர் மூலநதி மூலமுனி மூலஞ்சமிமூலம். பனிதன் பகையானவன் மூலம்வந்து தோன்றும் பரிசன்று — சனிபெண்குணமுந்தாளுஞ்சங் கரனெம்பரமன்றன் முதைத்தனி செங்குந்தகைகொண்ட தக்காரசிந்தரு சற்றுங்கால் என்னுஞ்-செய்யுட்களாலுணர்க.

பிரதாபதோரகம் தெளித்துக்கொண்டுன் மடுத்து
செம்பட்டெடுத்தவர்கள் திருவடியைத்துடைத்து
நிதபஸ்மதாரணை நெற்றிமுதற் பொடித்து
நிமலன்கண்மணிசொன்ன நிலையணிந்துமுடித்து சிவநவ
சரவணபவனென்னுஞ் சத்யபாவனை யாலே
சாந்தசடாக்ஷர சாமிமந்திரத் தாலே
மருவலையுமனேக வனசமலர்க ளாலே
மங்களாசனை செய்து வணங்கியுமகிழ்வாலே. சிவநவ

பொது விருத்தம்

மெய்ப்பாம்பத்தியாகவீரரை பூஜித்தெங்கள்
சுப்பிரமணியனென்னச்சுந்தரங்கண்டணங்கார்
செப்பமாய்மனுமாந்தாதாத்திருமரபுதித்திருந்தார்
மற்புயவேந்தனப்பெண் மக்களை வருகவென்றான்

வசனம்.

கேளும்சபை யோர்களே யுத்தத்தையே சுகமாகக்கருதும் புயத்தையுடைய முசுகுந்தமஹாராஜன் உண்மையுமேன்மையுங்கொண்டபக்தியினால் நவவீரர்களைப் பூஜித்து எங்கடவுளாகிய சுப்பிரமண்ணியஸ்வாமியே யென்று அழகினால் சொல்லும்படி மாப்பிள்ளைக்கோலமாக வலங்கரித்து தமது சூரிய குலமனுமாந்தாதாவம்சத்தில் தேவ அரம்பையரில் ஒன்பதின்மர் வந்து அவதரித்திருந்தார்கள் அப்பெண்மக்களைக்கலியாணப்பந்தலில் அழைத்து வரும்படியாக உத்திரவு செய்தான்

இதுவுமது.

குணமுசுகுந்த மன்னன் கூறவக்கன்னிமாரை
மணவரையழைத்துவந்துமஞ்சனமாட்டித்தங்க
விணரெனுமாடையாலுமிரணியப்பணிகளாலும்
அணிபெறச்செயக்கைவந்தவரிவையலங்கரித்தார்

வசனம்.

நல்ல குணமுடைய முசுகுந்தமஹாராஜன் இந்தப்படியுத்திரவு செய்ய அந்த ஒன்பது பெண்களையும் கலியாண மண்டபத்தில் கொண்டு வந்து திருமஞ்சனமாட்டி பொன்தளிரென்று சொல்லும் படியான வஸ்திரங்களைத் தரித்து நவமணிகளிழைத்த பொன்னாபரணங்களை பாதாதிகேசபரியந்தம்சோடிக்கக் கைதேர்ந்த பாங்கிமார்கள் அலங்காரஞ் செய்தார்கள்.

புட்பகந்திமுதலாகிய ஒன்பதுகன்னியர்கள் வருகிறவிருத்தம்.

அதிபலவேலையெங்களாறுமாமுகனையென்று
துதிமிகப்புரிந்துபோற்றிசபைசபாமண்டபத்தில்
மதனவேள்ரதியேயென்னவழ்வமார்புட்பகந்தி
முதலாவப்பெண்களெல்லாமோகமாய்வருகின்றாரே.

ஸ்ரீ கந்த்ருவிரத விலாசம்.

௩௫-இராகம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

புஷ்பகத்திறதலாம்பூவையரிதோவந்தார்-புகழுடனே
புஷ்பகத்திறதலாம்பூவையரிதோவந்தார்

அநுபல்லவி.

நிஷ்களசொரூபநிராமய — செந்த
நிமலனருட்கடாக்ஷப்ரசாதமே — மாந்த
விஸ்வரூபங்கொண்டமகேந்திரம் — பாய்ந்த
விரவாகுருதலாம்வீரர்க்கு — வாய்ந்த புஷ்ப

௧. பாதச்சிலம்புகள்கலீரெனவேநடந்து
செங்குந்தகுலம்
பாரினிலெங்கினுமுலகதுபோலபடர்ந்து
விளங்கவரும்
தூதியுங்கம்பிலிவர்க்கீடிலையெனவிடைந்து
விடப்பிறனை
சொர்ப்பனத்திலுநினைப்பில்லைவரம்புகடந்து
உலகிலுள்ள
மாதர்சிகாமணியேயிவ — ளென்ன
மார்பில்ரத்னாபரணமாலைகள் — மின்ன
போதுளவிலக்குமிபொற்பினில் — பின்ன
பொன்னுலகரம்பையரின்னிவ — ளென்ன புஷ்ப

௨. மாந்தளிரெனக்குயிலினங்களெலாமயங்க
திருமேனியும்
மாமயிலினமிவர்சாயலினாற் றியங்க
மாலைப்புரிந்த
காந்தனையேதெய்வமென்றிவருளாறயங்க
வின்னமுதமோ
கண்டிதுவேவெனக்கிள்ளையினங்கள்தயங்க
மலையிரண்டே
எந்துமுலைகள்மார்பினிடமுழுதும் — பரந்து
இடையுந்துகிலையுமவிட்டிருமாந்துத் — துறந்து
போந்தனதனமாம்பெருஞ்சுமையைச் — சுமந்து
பூங்கொடியெனவிடைபசையடைச் — சிறந்து புஷ்ப

௩. அண்டைவீடுகள்தெருத்திண்ணையாகிலுந்தெரியார்
தங்கள்தங்கள
தப்பமார்செய்தக்கன்யாமாடமெப்போதும்பிரியார்
தெருவிலிடும்
சண்டைவிதமுஞ்சமாசாரவிதமுமறியார்
செலெனுங்கண்கள்

தங்கள்கால்பெருவிரலல்லதொன்றையுங்குறியா
பற்கள்தெரியாத்

தொண்டைவாயதாச்சிறுநகைக் காட்டி
சுப்ரமண்யப்பனைத்தொழுமுலதைப் பூட்டி
கண்டமடவார்மனக்கலக்கம தோடி
கற்புநிலையையிந்தகாசினி நாட்டி புஷ்ப

புட்பகந்திமுதலியஇராஜ கன்னியர்கள்உபாசனதேவதா

ஸ்தோத்திர-விருத்தம்

புன்னமாஞ்சிதர்கூடப்புறத்தினுமகத்துநீங்காச்
சிவமெனும்பொருளேயாமாஞ்செகனரெண்ணவெப்பத்
தவன்நீருதவியாங்கேத்தனிப்பெருங்கருணைகூரு
மௌனமேமினைப்பேயில்லாமாமுருகேசபோற்றி

பொதுவிருத்தம்

இவ்வண்ண முருகநாதன் இணையடிவணங்கிநின்ற
மைவண்ணக்கண்ணார்தம்மைமணவரையிருத்திக்குந்தச்
செவ்வண்ணங்கொண்டோராங்கேதிகழ்தரவசிட்டரோடு
மெய்வண்ணவிரதம்பூண்டவேந்தனுமிதுசொல்வானே

வசனம்

இந்தவிதமாகக் கந்தநாதனை சிந்தித்துவந்து நின்ற மை திட்டிய கண்களையுடைய புட்பகந்தி முதலிய ஒன்பது பெண்களையும் மணப்பந்தலில் செங்குந்த வீரர்கள் இருக்கும், தனித்தனி ஆசனங்களில் ஒவ்வொருவருக்கொவ்வொருவராக இருக்கச்செய்து உண்மையாகிய சஷ்டிவிரதமஹாதவசிரேஷ்டனாகிய முசுகுந்தமஹாராஜன் வசிட்டமஹாமுனிவரை நோக்கிச்சொல்லுகிறவதங்காண்க.

முசுகுந்தமஹாராஜன்சொல்விருத்தம்.

செங்கைவேல்முருகன் சேவைசெய்வித்த வசிட்டரான
வெங்குலகுருவே கேளீ ரிந்நவ வீரர்க்கெல்லாஞ்
சங்கமேநிறைகல்யாணச்சடங்குகளெல்லாமின்று
மங்களமாகச்செயதுவாழ்த்திட வேண்டுவேனே.

வசனம்

செய்ய வேலேந்திய முருகநாதன் திருச்சேவை அடிமைக்குக் கிடைக்கும்படி செய்வித்த எமது குலகுருவாகிய வசிட்டமஹாமுனிவரே கேளும், இந்தநவவீரர்க்கு சர்வஜனசங்கநிறைந்த கலியாண சடங்குகளெல்லாம் சுபகரமாக செய்து தங்கள் திருவாக்கினால் ஆசீரவதிக்க வேண்டுமையாஸ்வாமி, அப்படியே செய்விக்கிறேன்மஹாராஜனே

பொது விருத்தம்.

தாபதரிசைந் தேயங்கோர்தங்கவாசனத்திருப்பப்
பூபதர்வேதமோதும் புங்கவர்பிறவுளாருங்
கோபதியன்பிலீய்ந்தகுருமணித்தவிசிருப்ப
மாபதங்கண்டவீரர்மணஞ்செயுங்குணஞ்சொல்வேனே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இப்படியாக வசிட்ட மஹாமுனிவர் இசைந்து அவ்விடத்தில் ஒருபொன்னாசனத்திலிருக்கவும் அனேகராஜ கூட்டங்களும் வேதாத்தியயனஞ் செய்யும் பிராமண கூட்டங்களும் மற்றுமுள்ள இஷ்டஜனகூட்டங்களும் தங்கள் தங்கள் தம்பதிசமேதராய் அன்பாக முசுகுந்தராஜனால் கொடுக்கப் பெற்ற இரத்தினாசனங்களில் வீற்றிருக்கவும் ஸ்ரீகந்தமாதனசாரூபங்கண்ட நவவீரர்கள் விவாகமகோற்சவம் நடக்கிற விதங்காண்க.

தரு-இராகம்-கல்யாணி-அடத்தாளசாப்பு.

பல்லவி.

செங்குந்தவீரர் கல்யாணஞ் செய்கின்றனர்
ஜெயஜெயஜெயவெனவே.

அநுபல்லவி

மங்களமானவப் பெண்களெல்லாம்வீர
வாகுவேமுதலாக மணவரை
யோகமாகவிவேக குணநிறை — செங்கு

சரணங்கள்.

௧. மங்கலக்கன்னியர் தங்கைகளாற்றொட்டு
மஞ்சணலங்குகள் வாரிவாரி யிட்டு
குங்கங்கதம்பங் கஸ்தூரியனந்தங் கொட்டுங்
கோலமாதர் களால மேந்திட
மேலவாவினைகால மாந்திட-செங்கு

௨. பத்தியால் வசிட்டமாமுனிவர் மகித்து
பரிந்துசிவ மௌனவிருபாவனைத்தாபித்து
சுத்தவோம மவிசொரிந்த பிமந்திரித்து
தூயமங்கிலி யந்தரித் தருள்
நேயவேலவ னீயிடத்தெருள் — செங்குந்த

௩. அந்தணர்முனிவர்க ளரசரெலாம் வந்து
அவரவர்கைகளா லட்சதையுந் தந்து
கந்தவேணிக ளெனவாழ்த்துமோதை யெழுந்து
காகளஞ்செய்பூரிபேரியும்
மாகருணைசெவி டாகமீறியும்- — செங்கு

பொதுவிருத்தம்.

மணமதுமுடிந்தபின்னர் மறையவர் முதலோருக்கும்
பணமுதற்றானஞ்செய்து பலகனியுதவித்தந்த
வினமதாய்வந்தோர் மற்றவேளைமுதல்லோருக்குங்
குணமதாய்விருந்துசெய்து குதுகலித்திருந்தார்மாதோ.

வசனம்.

இந்தவிதமாகக்கலியாணமுடிந்தபின் வேதியர்முதலானவர்களுக்கும், பொன், ஆடை, கனி, தாம்பூலம், முதலிய வந்தானங்கொடுத்துத்தங்கள் உறவின்முறையார்முதலிய யாவருக்கும் அன்பினால் விருந்திட்டு அனந்தவித சுமங்கல விலாசமாக சந்தோஷங்கொண்டிருந்தார்கள்.

சுபமங்கிலியஸ்திரீகள்வாழ்த்துகின்றது.

லாலி.

துங்கமிகுமடியார்கள் சுத்தசிவ கதியே
எங்கள்முசுகுந்தர்குடி ஈடேற்று நிதியே
செங்கனவிரவிகோடி சுந்தரசு மதியே
புங்கவர்களனுதினமும் புகழ்கின்ற துதியே. லாலி

நேமியம்படையுடைய நெடியதிரு மாலும்
சாமியென்றருள்பெற்ற ஷண்முகவர் வேலும்
சேமிகுங்கைவேலும் வேலிலது போலும்
பூமியில்பகையரசர் புகழ்கின்ற காலும். லாலி

அரியமாதவமுயல வதுதந்த பலமே
பெரியசைவப்பயிர் பிழைக்கவரு ஜலமே
கரியவம்பிகையுபய காலில்வரு குலமே
தரியலர்புறங்கண்ட தாரணியி னலமே. லாலி

பாற்றினஞ்சுழல்குந்த படையுடைய மணியே
நீற்றினத்தொளிகாலு நெறியுடைய வணியே
போற்றுநந்நிதியென்று புகழ்மாதர் பணியே
காற்றமிருவாகைமலர் நாலகல குணியே லாலி

பொதுவிருத்தம்.

பூதலமாளுமெங்கள் புகழ்முசுகுந்தராசன்
மாதவர்அரசர்க்கெல்லாம் வரிசைசெய்தனுப்பிவிட்டான்
நிதியாலுயர்ந்தவீரர் நித்யமங்களமாய்த்தங்கள்
மாதர்களோடுகூடி வாழ்ந்தனர்வாழுநாளில்
முந்தியவீரவாகு மோகமாயணைந்தபுட்ப
கந்தியாள்கெர்ப்பமாகி காலமோரிரண்டுமூநால்
ஐந்தொடாறேழெட்டொன்ப தாகியின்பத்துமாகித்
தந்தனள்பெண்சேய்த்தங்கத்தையிலுற்றியபோன்மன்றோ

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இந்த பூமண்டல மாளுகின்ற முசுகுந்த மகாராசன் விவாக மகோற்சவத்துக்கு வந்த முனிவர்கூட்டங்களுக்கும் இராஜ கூட்டங்களுக்கும் மற்றுமுள்ளயாவர்களுக்கும் அவரவருக்குச் செய்யத்தக்கமரியாதைசெய்து தங்கள் தங்கள் வாசஸ்தானங்களுக்கு அனுப்பிவிட்டான் இப்பால்நவவீரர்களும் தங்கள் தங்கள் பத்தினிகளோடுங் கூடி சரசசல்லாபமாக வாழ்ந்திருக்கிறகாலத்தில் முதல் வீரராகிய வீரவாகுதேவரது பத்தினியாகிய புஷ்பகந்தியானவள் கெர்ப்பமாகி ஒன்றுமுதல் பத்துமாதமு நிறைந்து தங்கத்தை யுருக்கித்தரையில் கவிழ்த்தது போலும் ஒரு பெண்குழந்தையைப்பெற்றாள்.

விருத்தம்.

பெண்மகப்பேறுண்டானப்பெருமையைப்புணர்ந்தவீர
ருண்மகிழ்சிறந்தாரீசனுணரருட்சத்தியின்ற
மண்மகிழ்பின்னையென்னுமகள்வரவென்னவந்தக்
கண்மணிதனக்கேசித்ராவல்லியென்கனப்பேரிட்டார்.

வசனம்.

இந்தவிதமாகப் பெண்மகப்பேறு உண்டானது என்னும் பெருமையை யறிந்த நவவீரர்களும் மனமகிழ்ச்சியடைந்தார்கள் (இப்படிபெண்பேறுண்டாதல் பற்றி மகிழ்வுற்றமை) சிவபெருமான் அருட்சத்தியால் தரப்பெற்ற பின்னைசத்தியென்னும்பெண்மகள் முதலில்பிறந்து வந்ததுபோலக்கண்டு அந்தகண்மணிபோன்ற புத்திரிக்கு சித்திரவல்லியென்கிற கனமாகியநாமகரணஞ் செய்தார்கள்.

பொது விருத்தம்.

அன்னவடன்பாற்சொல்லுமனகனேசனகனென்னுங்
கன்னலங்குதலைச்செவ்வாய்க்காதலருதித்தார்மொய்ம்பன்
பின்னவர்மணந்தவேட்டபெண்கொடியனையார்கெர்ப்பச்
சின்னமேவிளங்கிவேண்டுஞ்சேயரைப்பெற்றுவாழ்ந்தார்.

வசனம்.

அந்த புட்பகந்தியினிடமாகவே அனகனென்றும் சனகனென்றும் கரும்பிரதம் போலத்தித்திய மொழிகளைப் பேசும் சிவந்தவாயையுடைய புத்திரமணிகள் பிறந்தார்கள் வீரவாகுதேவரது இளையவர்களாகிய வீரகேசரி வீரமாமகேந்திரன் வீரமாமகேசுரன் வீரபுரந்தரன் வீரராக்கதன் வீரமார்த்தாண்டன் வீராந்தகன் வீரதீரன் என்கின்ற எண்மரும் விவாகமகோற்சவங்கொண்டிச் சித்திர பூங்கொடிபோன்ற எட்டுப் பெண்களும் வயதுவிளங்கி மக்கட்கலியின்றி அனந்த ஆண்மக்களும் பெண்மக்களும் பெற்று வாழ்ந்திருந்தார்கள் இப்பால்நடக்கிற விதங்காண்க.

பொது விருத்தம்.

அல்லலொன்றில்லாநந்தமனைவபுளரெனைவக்குமேலாம்
வல்லபமிகுந்தவீரர்வளர்த்திடுஞ்சிறந்தசித்ர
வல்லியையரசர்க்கிந்துமணமதுமுடித்தார்பின்னர்
மல்லலம்புயத்துவீரர் * மனுகுலத்தொன்றிவாழ்ந்தார்.

வசனம்.

துன்பமின்றி இன்பரசமுண்டு என்சபையின்கண்ணுள்ள மஹான்களேகேளுங்கள் உபமானப் பொருள்களெவைக்கு மேலாகிய புஜபலமுடைய வீரர்கள் நாளொருமேனியும் பொழு தொருவண்ணமுமாக வளர்த்துவருகின்ற சித்திரவல்லியாகிய புத்திரியை முசுகுந்த மஹாராஜனுக்குக்கொடுத்து கலியாணமு டித்தார்கள் அதனால் வலிய புயத்தையுடைய வீரர்கள் அன்று முதல் மனுகுல க்ஷத்திரிய வம்ஷத்தவருடன் ஒன்றிவாழ்ந்திருந் தார்கள்.

முசுகுந்தமஹாராஜன் சொல்விருத்தம்.

வீரமந்திரிகாள்திக்குவிஜயமாஞ்சயமேசெய்து
பாருளவரசர்நம்மைப்பணிந்திடத்திறைக்கைவாங்கி
சூரனையடங்கவாட்டும்ஸ்வாமிவேன்மயிலென்கின்ற
பேரதையெங்குந்தீட்டிப்பின்வரல்வேண்டுவேனே.

வசனம்.

கேளுங்கள் எனது நவவீரமந்திரிமார்களே நீங்கள் யாவ ரும் அஷ்டதிசைகளிலும் விஜயஞ்செய்து பகையரசரை ஜெ யங்கொண்டு இந்த பூமியிலுள்ள அரசரெல்லாம்நம்மைப்பணி யும்படியாக திறைவாங்கி சூரனது கோட்ட மடங்கும்படிவா ட்டிய சுப்பிரமண்ணியஸ்வாமியின் வேலுமயிலுமாகிய முத்தி ரையை நமக்கு உடன்பட்டவர்களென்னுங் குறிதோன்ற எங்கு ந்தீட்டி என்னை கனஞ்செயவீரென என்னுடைய வேண்டு கோள்மந்திரிமார்களே.

நவவீரமந்திரிகள் சொல் கலிவிருத்தம்.

நல்லதுந்திரு வாக்கிலிம்மாமொழி
சொல்லவேண்டும் மெனவிருந்தோமினி

---

* செங்குந்தபுராணம் மானவகாண்டம் மணம்புரிபடலம் ௯௪-வது கவி. "தெருண்டோருள்ளக்குருமணியாய்த் திகழுங்குமரன்வரத்தாலும், சரண்டாவிறையோன்றிருமணியே யென்னச்சட்டிவிரதமெனு, மரண் டான்கொண்டதினமணியின் குலப்பெண்கொண்டமுறையாலு, மிரண் டாம்வருணத்தவராகியிருந்தார்வீரிருநிலமேத்தே" அன்றியும் கந்தபுராண ம் தக்ஷகாண்டம் கந்தவிரதபடலம் ௬௫-வது கவி. "ஏனையவீரர்தாமு மி யல்புழிவழாமற்போட்ட, தேனிவர்குழலாரோடுஞ் சிறந்தவில்வாழ்க்கை போற்றி, பானலங்துதலைச்செவ்வாய்ப் பாலரைநிலவேற்கண், மானனை யார்களல்லிமனுகுலத்தொன்றியுற்றார்" என்னும் செய்யுட்களாலுணர்க.

வல்லேயேகிமிம்மா நிலமெங்கணுஞ்
செல்லுகின்றனாந் திக்குவிஜயமே.

வசனம்.

நல்லது தங்கள் திருவாக்கில் இப்பெரிதாகிய உத்திரவு கொடுப்பீரென்று எண்ணங் கொண்டிருந்தோம் இனி அதிசீக்கிரமாக இந்தபூமி முழுதும் திக்கு விஜயஞ்செய்யும்பொருட்டுபோய் வருகிறோம் மஹாராஜனே.

நவவீரமந்திரிகள் திக்குவிஜயம்செய்ய வருகிற விருத்தம்.

சிங்கமேயனையவீரதீரர் கலெல்லாம்வஜ்ர
வங்கிகடரித்தார்குந்த வாயுதங்கையிற்கொண்டார்
துங்கமாவிரதமேறித் தும்பைமாலிகையும்பூண்டார்
மங்கலில்வெற்றிவேலே வாழியென்றெழுந்தாரன்றே

த-ரு-இராகம்-சௌராட்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

வீரதேவர்வந்தாரே-செங்குந்தநவ
வீரதேவர்வந்தாரே.

அனுபல்லவி.

சூரனைக்கொல்லவென்று வீரர்களெனவன்று
சோதிதன்னருளாலே தோன்றியிப்புவிமேலே
பூரணநாடியகாரணமூடிசிகாரமெனேடியபேரவைதேடிய (வீர

சரணங்கள்.

பத்தரெலாந் துதிக்க பகைவருடல்மிதிக்க
பணிந்தவர்கள் கதிக்க பாவலர்கண் மதிக்க
நித்தமுஞ்சண்டையுன்னவே-இருபுயமு
முத்துமாலைகண் மின்னவே-வஜ்ரமலையை
யொத்திருக்கின்றதென்னவே-யணிந்திருக்கும்
வெற்றிமலர்க ளின்னவே-பதங்களொடு

முத்தியாதிதருபூதிசாதனமி லாது-திரிந்தவர்க்கு
புத்தியோதுவதுகுந்தமன்மிகதி யேது-இனியாகிலும்
தத்திதாவெனநடித்துபேய்களிசைபூது-மமர்க்களங்கு
நித்துசூரனைவதைத்தவேலவனையோது-மெனப்புகலுஞ்

சத்தியமிவர்க ளங்கம் தரியலரெவர்க்குஞ் சிங்கம்
சற்குணமுடைய சங்கம் தஞ்சமென்றவர்க்குத் தங்கம்
சத்துருவாரவ ரத்திரமுறிய
இத்தரைமீதினுநித்தமுமையறிய (வீர)

சங்காரனென்னும் பண்டு சந்ததமிருக்கக் கண்டு
தாரகமுடனுட்கொண்டு தக்கவகைசெய்யுந் தொண்டு
அங்கையிற்செயுஞ்சற்றோட-முள்ளவரன்பர்
பங்கமுவஞ்செய்து வாட-கலிந்தவன்பால்

துங்கமந்திரங்கள் பாட—எம்மாறுமுகன்
எங்கவர்களென்றங் கோட—தொண்டர்க்கெளியன்

மங்களவங்கருணைங்களிலங்கியவேலன்—என்றிகழ்ந்தெசான்னால்
அங்கவனைசவறாங்குலவுங்கள் சீலன்—முருகுறந்தனவன்
சங்கமிருந்தெதுசெய்யினுமீசுர பாலன்—எனத்தெரிந்து
வங்கணைமாங்கியவிகலர்சாக்கொருகாலன்—போலச்சினந்து

சிங்கமுங்குகையை விட்டு சிந்துரக்ககன மட்டும்
செல்லுகின்றதென்னவெட்டு தேவருஞ்செங்குந்தந்தொட்டு
சங்கதமாய விதங்க ளிலங்க
துங்கமிலாதவர் பொங்குகலங்க (வீர)

அந்தமுள்ள நவகண்டம் அஷ்டகுலவே தண்டம்
அமரருள்ளமூ தண்டம் அல்லதண்டபகிரண்டம்

முந்திஜெயங்கொண்ட வீரம்—எவ்வுலகமும்
பந்தெனச்சுழன்ற தீரம்—என்கின்றதுகை
வந்தவர்கட்கென்ன பாரம்—திக்குவிஜயப்
பந்தமெங்களுக்கென் னேரம்—பின்றெரியாமல்

வந்தெதிராடியெதிர்ந்தவராவிளைவாட்டி—அகங்கொண்டவர்
புந்தியிலுள்ள பசாசகணங்களை யோட்டி—ஷண்முகன்றிரு
மந்திரமாயமருந்திகமெங்களு மூட்டி—சக்ரேசமுசு
குந்தன்றுந்தவமந்திரிநாமென காட்டி—புலிக்கொடியை

செந்தமிழ் நிலத் தெடுத்து தீவினையெலாங் கெடுத்து
திரவசனங் கொடுத்து தேசிகனருள் மடுத்து
தந்திரமாக பதந்தர வாடிய
செந்தில் விளங்கிய கந்தனை நாடிய (வீர)

வீரவாகுதேவர் உபாசனுதேவதாஸ்தோத்திரம்.

சரணவாதனைகணிந்து காசூயிற் சிவனுகித்
தெருணிலைசிவபோதத் திரியினிற்பரமாயந்தஸ்
மரணையுமிறந்துநின்ற மாசூயிற் சிவமாய்காக்கும்
அரணெனநின்றனெங்க ளாறுமுகனவன்றாள்போற்றி.

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

தம்பியரெவருங்கேளீர் தாரணியெங்குஞ்சுற்றி
பிம்பரினமையெதிர்த்த விகலவருயிரைவாட்டி
நம்பரமானர்க்குள்ள நாட்டகமிருக்கக்காட்டி
வெம்புலிக்கொடியைநீட்டி விஜயமேசெய்வோம்வாரீர்.

வசனம்.

கேளும் தம்பிமார்களே இந்தவுலகமெங்குஞ்சுற்றி ஆங்காங்கு எதிர்த்துவந்த பகையரசர்கள் கர்வமடங்கவாட்டி நமக்கு உடன்பட்டவர்களுக்கு அவரவர் நாட்டின்கண்ணே யிருந்து

ளாழும்படியாகச்செய்து வெய்யபுலிக்கொடியையுயர்த்தி திக்கு விஜயஞ்செய்வோம் நடந்துவாருங்கள் தம்பிமார்களே.

தரு-இராகம்-அசாவேரி-அடத்தாளசாப்பு.

பல்லவி.

விஜயஞ்செய்தார்-சுத்தவீரர்களெல்லாந் திக்கு
விஜயஞ்செய்தார்.

அனுபல்லவி.

விஜயரதநடத்தி வேந்தர்தமையழைத்து
துஜங்கட்டுகின்றனம் சொல்லும் நில்லுமென (விஜ)

சரணங்கள்.

கந்தன்குமரன்குகன் கார்த்திகேயனைநாளும்
புந்தியில்வைத்தேசரண் போற்றிஜெயஜெயென
குந்தங்களெலாங்கையில் கோடிசூரியர்போலி
ருந்துவிளங்கமுன்ன ரெழுதிருப்புமுசு
குந்தனைப்பணிந்திருந்தால் கொல்லுகின்றதில்லையென்று
வந்துவந்துதூதர்சொல்ல தந்திரமதர்கநல்ல (விஜ)

மண்டலமெல்லாஞ்செந்தூள் வானமட்டாயெழும்ப
கண்டவரெல்லாமனங் கலங்கிமிகத்தழும்ப
சண்டையிடுவார்திறைத் தரவிசையாதவரைத்
துண்டந்துண்டமாய்வெட்டி நூர்க்கைக்குங்கூளிக்கும்
உண்டித்தருகிறதை கண்டவரசரெல்லாம
அண்டைவந்துநின்றுநின்றுதெண்டமிட்டிணங்கவென்று (விஜ)

அங்கமருணமவந்தி யாந்திரங்கன்னடங்க
லிங்கம்யவணம்குடகி லாடங்குந்தளங்குரு
சிங்களங்காசங்காஸ்மீரம் சீனஞ்சிந்துகேகயம்
கொங்கணங்கொல்லம் சாலவகோசலஞ்சூரசேனம்
சிங்களம்பாண்டியமுதற் றேசங்களிற்றனித்து
வெங்களங்கண்டெங்குஞ்சங்கம் வெற்றியெனத்தொனித்து ()

பொதுவிருத்தம்.

இந்திரன்றிசையிற்சென்று ரெரியெமனிருதியோடு
நந்தவில்வருணன்வாயு நார்பிரானீசானத்தும்
வந்தனர்ஜெயமேகொண்டு வரிசையாயாங்காங்குள்ள
அந்தமாமௌலிபூண்ட வரசருக்கிதுசொல்வாரே.

வசனம்.

முதலில் இந்திரதிக்கில்போய் அங்கிருந்து அக்கினி எமன் நிருதி வருணன் வாயுவு குபேரன் ஈசானன் என்று சொல்லும் அஷ்டதிசையுஞ் சுற்றிவந்து அதற்குட்பட்ட அரசர்கள் யாவரையும் ஜெயங்கொண்டு வரிசையாய் அவ்வவ்விடங்களிலுள்ள அழகிய மகுடம் தரித்த இராஜாக்களுக்குக் கட்டளையிடுகிற விதங் காண்க.

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

சித்திசேராண்டகைக்கே திறைதரல்வேண்டுமற்று.
நித்திடல்வேண்டுஞ்சைவ நெறியொழுமுறைபூண்டு
கார்த்திகைசேயனான கந்தனைத்துதிசெய்வீரே

வசனம்.

கேளுங்கள் 'ஏ' அரசர்களே இதுகாறுஞ்சென்றமை போகட்டும் இனிமேல் முத்திசாதனத்துக்கு மாறுகிய மார்க்கங்களை விட்டுவிடல் வேண்டும் சைவ நெறி யென்னும் ஒழுக்கங்களில் நின்று கார்த்திகை சேயனாகிய ஸ்ரீ கந்தநாதனை சிந்தித்திருந்து நமது மண்டலேசுரனாகிய கீர்த்தியடைந்த முசுகுந்த வரசனுக்கு திறை கொடுத்து வரக்கடவீர் அரசர்களே.

பொது விருத்தம்.

சிவநவவீரரிந்தத் திரமுறைசெய்தவன்றே
புவனமுள்ளராசர்மாக்கள் புனிதராயிருந்தேயந்தத்
தவநெறிநின்றாரென்றால் சான்றவரடைந்தபேற்றை
யெவர்களுமடையவேண்டி யெண்ணுதல்கருணைமாதோ

வசனம்.

சிவ நவவீரமந்திரிகள் இவ்விதமான கட்டளையிட்டபொழுதே இவ்வுலகத்திலுள்ள இராஜாக்களும் அவர்களுடன் குடிமக்களாகிய பிரஜைகளும் மேற்சொல்லிய புண்ணியராக விருந்து அந்தத் தவவொழுக்கங்களில் நின்றார்களென்றால் (இது) மேலோர்கள் தாமடைந்தபேறு உலகமும் அடையவேண்டியெண்ணுதல் (அவர்களுக்குரிய) சிவகாருணியமென்று சொல்லப்படும்.

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

விஜயமேமுடிந்தவின்னம் வேலவனன்பால்வெற்றித்
துஜமுளேமென்னவெங்கும் தோன்றுமுத்திரையதாக
நிஜபரமானவேலு நீலமாமயிலுந்தீட்டி
புஜபலமுள்ளவீர புரந்தராவருவாயின்றே.

வசனம்.

வாராய் என்னுடைய தம்பியாகிய புஜபலபராக்கிரமமுள்ளவீர புரந்தரா இப்பொழுது திக்குவிஜயஞ்செய்து முடிந்தது இனி கந்தநாதன் கிருபையால் நாம்வெற்றியுள்ள புலிக்கொடியுடையவர்களென்று உலகமெங்குந்தெரிய நித்தியமான வேலுமயிலும் ஆகிய நற்குறியை எப்பொருள்களிலுமுள்ள உன்னதஸ்தானங்களில் பொறித்து வரக்கடவாய் இளையவனே.

பொது கலிவிருத்தம்.

சேயிரத்தந்திகழ்தருகுந்தவே
லாயுதத்தவனேறுதவிளவலான்

ஆயிரத்தெட்டு மாற்றறிமோதிரத்
தேயிருத்தினன் வேலுமயிலுமே.

வசனம்.

சிவந்த உதிரத்தால் விளங்குகின்ற குந்தத்தை யுடையவனாகிய வீரவாகுதேவரிக்கட்டளையிட, வீரபுரந்தரன் ஆயிரத்தெட்டுமாற்றுள்ள பொன்னாற்செய்த கணையாழியில் வேலுமயிலுமாகிய நற்குறியை பொறித்துக்கொண்டான்.

வீரபுரந்தரன் சொல் விருத்தம்.

பக்கிதன்னுருவங்கொண்ட பருப்பதம்பிளந்துவஞ்சக்
கொக்குருவாகிவந்த சூரிருகூறதாக்கும்
உக்கிரங்கொண்டவேலு மோகரமெங்குமிந்த
தக்கணம்பொறிக்கக்கந்த சாமிநீ துணைசெய்வாயே

வசனம்.

கிரவுஞ்ச பக்ஷியின் உருவங்கொண்டிருந்த மலையைப்பிளந்து போரிலாற்றுதோடி மாமர வடிவு கொண்ட சூரபதுமனை இரண்டு பிளவாக்கும் உக்கிரங்கொண்ட வேலுமயிலும் எவ்விடங்களிலும நீட்டுதற்கு ஸ்ரீகந்தஸ்வாமியாகிய நீரே துணைவர வேண்டும் ஸ்வாமி.

தரு - கண்ணிகள்.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

மன்னர்முடியில்வேலுமயிலும் மந்த்ரிமுடியில்வேலுமயிலும்
எந்நகரிலும்வேலுமயிலும் இகத்திலெங்கும்வேலுமயிலும்
அளவையெல்லாம்வேலுமயிலும் அரண்மனைகளில்வேலுமயி
உளவிலத்தில்வேலுமயிலும் ஊரிலெங்கும்வேலுமயிலும்
நகரமெல்லாம்வேலுமயிலும் நாடுமுழுதும்வேலுமயிலும்
சிகரமெல்லாம்வேலுமயிலும் தேசமெங்கும்வேலுமயிலும்
மாடமெல்லாம்வேலுமயிலும் வனங்களெல்லாம்வேலுமயிலும்
கூடமெல்லாம்வேலுமயிலும் குளங்களெல்லாம்வேலுமயிலும்

வீரபுரந்தரன் சொல் விருத்தம்.

நெறித்தவர்ந்திகழுமன்னர் நிலைக்கொடிமுதற்றசாங்கம்
பறித்தனன்வெட்சியென்னும் படைபூண்டவர்சனையம்
குறித்தனன்மதுவெற்றிக்கொள்கையாமிலிங்கமெங்கும்
பொறித்தனன்வந்தேனுன்னைப்போற்றினனருள்செய்யவன்றே.

வசனம்.

சேநநும் என் தலைமையனே மன்னெதிர்மாறிய பகைவ அரசர்களது கொடிமுதலிய தசாங்கங்களையும் பறித்துக்கொண்டு பகைநிரை கவர்ந்த ஸ்ரீவெட்சிமாலையையணிந்து அவ்வரசர்களது கொள்கை தெரிந்து நம்முடைய மேன்மையாகிய

கொள்கைதோன்ற எப்பொருள்களிலும் வேலுமயிலுமாகிய அடையாளம் பொறித்துவைத்து வந்தேன் அண்ணே.

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

தாயினுமினியனான ஷண்முகனருளாலிந்த
மாயிருஞாலமெல்லா மதித்திடவென்றோமார்க்கும்
நேயனாமுசுகுந்தேச நிருபனுருள்ளதேசம்
போயவன்சமுகங்கண்டிப் புதுமையையுரைப்போம்வாரீர்.

வசனம்.

வாருந் தம்பிமார்களே பெற்றதாயினும் பிரியமாக அருளூட்டுகின்றவனாகிய ஆறுமுகப்பெருமான் கிருபையால் இந்த பெரியபூமிமுழுதும் மதிக்கும்படியாக வென்றுவிட்டோம் யாவரிடத்திலும் அன்புபாராட்டும் முசுகுந்த மஹாராஜனிருக்குந் தேசம்போய் அவன் சமுகத்தில் நாம் வெற்றிகொண்ட அதிசயத்தை சொல்வோம் வாரும் தம்பிமார்களே.

பொதுவிருத்தம்.

திக்கெலாம்விஜயஞ்செய்து திறல்நவவீரரெல்லாம்
தெக்கணம்வந்துசோழ தேசமுட்கருவூர்புக்கு
மக்கணஞ்சார்வபௌம னாகினனெதிர்கொண்டாடி
தக்கவேயுபசரித்து சதுரணையிருத்திச்சொல்வான்

வசனம்.

அஷ்டதிசையும் விஜயஞ்செய்து வெற்றிகொண்ட நவவீர மந்திரிகள் தெக்ஷணபூமியில் வந்து சோழநாட்டிலுள்ள கருவூரில் புகுந்தார் அந்தக்ஷணமே இது சங்கதி யறிந்த சக்கிரவர்த்தியானவர் எதிர்கொண்டு நல்லவசனங்களாடி தகுந்த மரியாதையாக உபசாரஞ்செய்து அழைத்து வந்து தன் சமஸ்தானத்திலுள்ள பொன்னாசனத்தில் இருக்கச்செய்து சொல்லுகிற விதங்காண்க.

இராஜன்சொல் விருத்தம்.

நிணங்கமழ்கைவேற்கொண்ட நேயமந்திரிகாள்வீசு
மணங்கமழ்தீபஞ்சூழ்ந்த மாதிரஞ்சென்றீரங்கே
வணங்கவந்தவரார்மீறிமற்பொருதிடைந்தாராவர்
குணங்கணமுள்ள வெல்லாங்குதுகலித்துரைப்பீரின்றே.

வசனம்.

கேளுங்கள்பகைவரது உதிரவாசம் வீசும் செங்குந்தங்கையிற் கொண்ட நவவீர மந்திரிகளே சோலைகளது செழுமையால் நல்லமணங்காட்டும் சத்ததீவுகள் சூழ்ந்த திசைகளெங்கும் போயிருந்தீர்களே நம்மை மதித்து கற்பமுதலவைந்தந்து வணங்கினவர்யார் அப்படிவணங்காமல் யுத்தஞ்செய்திளைத்தவர்கள் யார் (இதுவல்லாமல்) ஆங்காங்குள்ள நல்லகுணங்களையும் நம

க்ருஷ்ணமாகிய கீர்த்தியையும் சந்தோஷமாக சொல்லவே
ண்டும் நவவீரமந்திரிகளே.

வீரவாகுதேவர் சொல்

தரு-இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சொல்லுகின்றோங் கேளுமையா
துரைமுசுகுந்தமன்னா (சொல்)

அனுபல்லவி.

சொல்லுகின்றோங் கேளுமிந்த
சோழதேசநாங்கள்விட்டு
வெல்லுகின்றோமென்னசென்று
விஜயஞ்செய்தகதையை (சொல்)

சரணங்கள்.

தேரிலேரினோங்குமரன் சிந்தையிலேநடந்தோம்
பூர்வதிசையிலொரு புரவலன்சமர்க் கடந்தோம் (சொல்)
ஆங்கதற்கடுத்ததிசை யரசரெல்லாநங் கொடியை
பாங்குடனறிந்துவந்தே பணிந்துநின்று ரடியை (சொல்)
ஏமநிருதித்திசையில் எதிர்த்தாரிரண்டு மன்னர்
நாமவருடன்பொருதுநறுக்கிவசம்கொண்டோம்பின்னர் (சொ)
மற்றதிசையுள்ளசில மன்னவரகங் கெடுத்து
வெற்றிசங்கநாதஞ்செய்து வீதியுலாவெனநடித்தோம் (சொல்)

பதினன்குசீர் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வீரர். செங்கதிரவன்குலத்தீபமேநாங்களுஞ்
செல்விஜயமுடிவையனே
இராஜன். தேசங்களிற்சென்றதிக்குவிஜயந்தன்னை
தெரியச்சொலும்வீரரே
வீரர். கொங்குவங்காளசீனத்தார்தருதிறையெங்கு
கொட்டுகிறதெனதையனே
இராஜன். குறையில்லைநமதுதிருபெரியமாளிகைதன்னில்
கொட்டிவைப்பீர்வீரரே
வீரர். எங்களோடெதிர்நின்றவிறைவற்குசிறைசாலை
யெங்கிருக்கிறதையனே
இராஜன். இப்போதெனைப்பணிந்தவரவர்கள்தேசமே
ஏகச்செய்யும்வீரரே
வீரர். துங்கவேன்மயிலெழுதுமுத்திரைகளெங்கிலுந்
தோன்றவைத்தோமையனே
இராஜன். சுப்ரமண்யப்பரனைநம்போலவுலகெலாந்
தொழுதிடச்செய்யும்வீரரே.

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

வேலவனருளால்திக்கு விஜயஞ்செய்திடுங்காலிந்த
ஞாலமுத்தரபாகத்தில் நைமிசமுனிவரானோர்
மேலுமிந்திரனாற்பெற்ற வெகுமதிதந்தாரெங்கள்
பாலகிக்கீவீர்க பசுங்கிளிதனையெங்கோனே.

வசனம்.

கேளும் அரசனே ஸ்ரீ கந்தநாதனருளால் திக்குவிஜயஞ் செய்து வரும்போது நமது தேசத்திற்கு வடபாகத்தில் நைமி சாரணியமுனிவர்கள் தங்களுக்கு தேவேந்திரனால் கொடுக்கப் பெற்ற ஓர் அற்புதமாகிய பஞ்சவர்ணக்கிளியை நமக்கு வெகு மதியாகக் கொடுத்தார்கள் இக்கிள்ளையை எங்கள் புத்திரியா கிய சித்திரவல்லிக்கு கொடுப்பீர் எமது அரசனே.

பொது விருத்தம்.

அஞ்சுகந்தன்னைவீர ராற்றமுசுகுந்தேசன்
மஞ்சினுங்கருணைமாரி வழங்குசெங்கரத்தாலேந்தி
கொஞ்சினன்றனதுநேசக் குலமகள்வருகவென்றன்
வஞ்சியேயனையசித்ர வல்லியதறிந்தாளன்றே.

வசனம்.

இந்தவிதமாக நவவீர மந்திரிகளால் அழகிய கிள்ளையைக் கொடுக்க முசுகுந்தமஹாராஜன் கைமாறு கருதாமல் மேகத்தி னும் அதிகமாக கொடைதரவல்ல செவ்விய கையினால் வாங்கி அக்கிள்ளையோடு கொஞ்சி தன்மனதிற்கு ரஞ்சிதமாகிய நாய கியை தன்முன் வரும்படியாக உத்திரவுசெய்தான் அவ்வரசன் உத்திரவின்படி அறிவிக்க சித்ரவல்லி யறிந்தாள். இனி நடக் கிற விதங்காண்க.

சித்திரவல்லிவருகிற

நிலமண்டில வாசிரியப்பா-இராகம்-ஆரபி.

சீரடிதனக்குச் செங்கமலங்க
ணேரிலமென்று நீர்த்தடமொளிக்கும்
கண்டைகால்தனக்கு கயச்சினைவரால்வால்
தண்டிரண்டிலதேல் துணையெனப்படுமே
ஞெண்டுகால்பத்தும் நெரிந்ததேயாகில்
ஒண்டொடிமுழந்தா ளொப்பதாயிருக்கும்
வஞ்சிபின்றொடைக்கு வாழையுஞ்சரியோ
அஞ்சியேவனத்தி லருந்தவஞ்செய்யும்
அரிவ்வயினல்குற் காசிலையொவ்வா
அரவுதன்படத்தில் பொறியதுஞ்சரியோ
நுண்ணிடைதனக்கு நூலிழைபொருந்தும்
தன்னிடப்பிளவு தோன்றிலோர்புங்கு

மாலவனிணையே வயிற்றினைபொருந்தும்
ஆலிலைநடுவில் அழுதடித்திலதேல்
கும்பமாமுலைக்குக் கூறிடுமுவமை
பம்பரமொவ்வா பரமனார்மலையும்
விம்மலுங்கேதமல் விளங்கிடிலொக்கும்
பம்முதோள்தனக்கு பசுங்கழைசரியோ
கழுத்தினைசங்கு கடுத்திலமென்று
வெளுத்ததுகமுகை விளம்பிடத்தகுமோ
பாவையினதரம் பகர்ந்திடிற்பொருந்துங்
கோவையினடியிற் கொஞ்சமுங்கனிந்தால்
அமுதமோதேனே அரிவையின்வசனம்
குமிழ்நாசிக் கொடிவள்ளைக்காதே
ஷண்முகன்றிருவேல் சண்டையிலிருந்தால்
கண்ணினைத்தகுஞ்சேற் கெண்டையுஞ்சரியோ
பாதிசந்திரனே பழுதிலாதிருந்தால்
மாதுநன்னுதற்கு மதித்திடத்தகுமே
கூந்தலம்பனையைக் கூந்தலுக்குரைக்கில்
சாந்தமுங்கருமையில் தகுமெனப்படுமோ
குமரிதன்முகத்தைக் குறித்ததுவாசக்
கமலமோர்காலில் கடுந்தவஞ்செய்யும்
மாவழகுடையாள் மஞ்சனமாடி
பூவெனும்பட்டுப் பொற்படமுடுத்து
மயிர்முடியவிழ்த்து வாரிமுடித்துத்
தய்விறற்பாங்கியர் தலையலங்கரித்து
நெற்றியிற்சுட்டியு நீலமாமணியும்
ரத்தினஜிமிக்கை நகைமிகுங்கம்மல்
மோகனமாலையும் முத்துமாலிகையும்
மேகலாபாணமும் விளங்கணிக்கரசாந்
தாவியினழகுந் தாங்குபூங்கொம்பென
காலிற்சதங்கை கலகலென்றிடவே
கணவனைத்தேடி கற்பலரோங்கி
மணமுறுஞ்சித்ர வல்லிவந்தாளே.

த-ரு-இராகம்-சௌராஷ்கம்-ஆதிதாளம்.

பல்லவி.

சித்திரவல்லிவந்தாள் பாரீர் சிங்காரமாக
சித்திரவல்லிவந்தாள் பாரீர்

அநுபல்லவி.

ரத்தினாபரணங்க ணகையொளி வீசவே
ராஜன்சபைதனிற் ப்ரகாசங்கள் கூசவே
கங்கையோமுன மங்கையோபிலவு
வங்கைவேணிசிறு நங்கையோவென (சித்)

சரணங்கள்.

பாதசரங்கள் கலீர் லென்ன மார்பினில்ரத்ன
பதக்கப்ரகாசங்களு மின்ன
தாதியரிருபுறஞ் சாமரை போடவே
தங்கவாபரணங்கள் கொங்கைமேலாடவே
தானேயிவளிடை வாளேமொழிசெழுந்
தேனோ வனமட மானோவிழியெனச் (சித்)

அன்னமெனநடை நடித்து சண்முகன்றிரு
வருளாஞ்சடாக்ஷரம் படித்து
கன்னல்வின்மதன்கண்டால் களைத்துவிழுவனென்று
கடவுளாகியசிவன் பொடியாயெரித்தா ரன்று
கந்தமோகனசு கந்தமோமுலைகள்
விந்தமோதாள தந்தமோவெனச் (சித்)

கும்பமுலையிரு குடங்கள் சடைமுடித்த
கூந்தலழகுபூந் தடங்கள்
கொம்பரக்கிதழெனக் கோலமதாய்ச்சிவந்து
கொற்றவனுரைத்தரு ளுத்திரவுக்கு வந்து
குயிலோயிதுமட மயிலோகண்ணிரு
கயலோபிரமன்செய் செயலோவிவளெனச் (சித்)

சித்திரவல்லி உபாசனா தேவதாஸ்தோத்திரம்.

விருத்தம்.

துளங்குகண்ணெரியிலொன்றுஞ் சோதியேயெனச்சித்தாந்தம்
விளங்குவேதாந்தமெல்லா மீவெளியென்னமற்ற
உளங்கொளும்பக்குவம்போ லோங்கியேயெந்நாளும்
இளங்குமரேசனென்பா னெவனவனிணைத்தாள்போற்றி

இதுவுமது கொச்சகம்.

மதனவடிவேசரச மகிபாவென்மாநிதியே
முதலுமுடிவில்லாத முருகனருள்பெற்றவரே
அதிரசமேயென்கணவா அருமையுடனெனையழைத்த
விதமதனையின்னதென்று விளம்புமடியாள்தனக்கே

வசனம்.

மன்மதன்றிருவுருத்தோற்றமே, சரசசல்லாபமுடைய என் மகிபனாகிய மஹாதனமே, ஆதியந்தமில்லாத ஆறுமுகப்பெருமான் திருவருள்பெற்றவரே, அதிகமதுரமாகிய இன்பந்தருங் கனவனே பிரியமாக அடியாளை யழைத்தகாரியம் இன்னதென்று திருவருள்செய்யுமென் பிராணநாதா.

இராசன் சொல் கொச்சகம்.

கன்மணியேகாரிகையே காமரசமேயனமே
பொன்மணியேமோகனமே பூங்குயிலேமாமயிலே

ஷண்முகனால்வந்தவுந்தன் தந்தைபசுங்கிள்ளைதனைப்
பண்ணவாரற்பெற்றுவந்தார் பாராய்பசுங்கிளியே.

வசனம்.

கண்ணினுள் விளங்கு மணியே, பெண்ணே, காமரசமே, அன்னமே, பெண்மணியே, பெண்பிடியே, அழகிய குயிலே, மயிலே, உன்னையழைத்தகாரியம்கேள் ஸ்ரீ கந்தநாதன்திருவருளால் எனக்குக்கிடைத்த உன்தகப்பன் ஒருபசுங்கிளியை மஹாரிஷிகளால் தரப்பெற்று வந்து கொடுத்தார் இதோபாரும் என் பிராணநாயகி.

இராஜன் சொல்.

தரு-இராகம்-மாஞ்சி-அடத்தாளசாப்பு.

பல்லவி.

மாதரசே யிப்படி வாரா யிந்த
மரகதகிளியைப் பாரடி நேராய்.

அனுபல்லவி.

பூதலமீது ஒதிடவேது இதை
புரந்துத்தினம் வருந்திப்பசி
தெரிந்துக்கனி யரிந்துக்கொடு (மாதர)

சரணங்கள்.

பஞ்ச வர்ன்னமே மிஞ்சு மன்னமே
கொஞ்சுமுன்னமே வஞ்சி யின்னமே சிறு
குதலைசொல்லு முதலுக்கொரு
கதலிக்கனி யுதவிக்கொடு (மாதர)

இருவரும் கூடி முருகனை நாடி
யொருபதம்பாடி தருவ மோடி அடி
யுனதுத்திரு தனமத்தனை
கனமாங்கனி தினமுங்கொடு (மாதர)

நல்லது நானே நில்லுமி வேனே
சொல்லடிமானே வெல்லுதுதானே சொலும்
சொகுசுக்கொரு மகிழ்ச்சிப்பெறு
மிகழ்ச்சிச்செய நகைச்சித்திர (மாதர)

சித்திரவல்லி சொல் விருத்தம்.

தானவருலகமுள்ளோர் தந்தையோ பிரமதேவ
னானவனுலகமுள்ள அவந்திகையிதுவோ விந்த
மானவருலகமுள்ள வன்னியோ சுகமோ வின்பப்
பானலந்தருமென்னுதா பார்த்தகய்குளிர்ந்தேனின்றே

வசனம்.

பால்போன்ற இன்பங்கொடுக்கும் என் பிராணநாதா இந்த கிள்ளை தேவலோகத்தில் வசிக்கின்ற கிள்ளையோ, பிரம

லோகத்தில் வசிக்கின்ற கிளியோ, (அல்லது) இந்த பூலோகத்தில் வசிக்கின்ற கிளியோ அறியேன் இதன் சுந்தரங் கண்டு அதிக சந்தோஷமானேனென் பிராணநாதா.

பொது விருத்தம்.

சித்திரக்கிளியைமன்னன் திருக்கரங்கொடுக்கவாங்கி
புத்தாவிங்கமென்னும் பூங்கரந்தன்னிலேந்தி
முத்தமிட்டெழுந்தாள்காந்தன் மொழிவழிமனைக்கண்கொண்டு
வைத்தனளினியவூட்டி வளர்த்தனளரசமாதே.

வசனம்.

இராஜபத்தினியானவள் இந்த சுந்தரமுள்ள கிளியை அரசனாற்கொடுக்கப்பெற்று அன்றலர்ந்த தாமரை மலர்போன்ற கையிலேந்தி முத்தமிட்டு எழுந்து கணவன் உத்திரவின்படி அந்தபுரத்திற்கொண்டுபோய் பொற்பஞ்சரத்தில் வைத்து இனிய கனிகளை ஊட்டி வளர்த்து வந்தாள் இனி நடக்கிறவிதங் காண்க.

சித்திரவல்லி சொல் விருத்தம்.

பாங்கியரெல்லாங்கேளீர் பஞ்சரந்தன்னிலிந்த
பூங்கிளியதனைவிட்டு புனிதமாய்விளங்குகின்ற
ஓங்குகமுருகாவென்னுமொருமொழிசொல்லச்சொல்லி
நீங்களுமியானுமாக நித்தமிப்படிசெய்வோமே

வசனம்.

பாங்கிமார்களே யாவரும் வாருங்கள் இந்த பொற்பஞ்சரத்தில் அழகிய கிளியைவிட்டு புனிதமாகிய ஓம்குகாமுருகாவென்னும் ஒப்பற்ற மந்திரங் கற்பித்து கொடுத்து சதா காலமும் நீங்களும் நானுமாகக்கூடி விளையாடுவோம் வாரும்பாங்கிமார்களே.

தரு-இராகம்-கேதாரம்-தாளம் ரூபகம்.

முருகாசிவமுருகாவென மொழியாய்ப்பசுங்கிளியே
பரனருள்பாலாவென பகராய்ப்பசுங்கிளியே

வேலாயுதப்படையாவென விளம்பாய்ப்பசுங்கிளியே
காலாயுதக்கொடியாவெனக் கருதாய்ப்பசுங்கிளியே

கந்தாமலர்கடம்பாவெனக் கழறாய்ப்பசுங்கிளியே
சொந்தாவெங்கள்துரையேயென சொல்லாய்ப்பசுங்கிளியே

அறுமாமுகக்குகனேயென வறையாய்ப்பசுங்கிளியே
பொறியார்மயில்புனிதாவெனப் புகலாய்ப்பசுங்கிளியே

தகரேறியகுமராவென சாற்றாய்ப்பசுங்கிளியே
குகனேயுமைமகனேயெனக் கூறாய்ப்பசுங்கிளியே

பவனேசரவணனேயெனப் படியாய்ப்பசுங்கிளியே
நவவீரர்கள்துணைவாவென நவிலாய்ப்பசுங்கிளியே

பொது விருத்தம்.

கோமகளிவ்வாறாகக் கொஞ்சியேயிருக்கும்போது
சாமரைமடவார்போடத் தரணியிற்புனிதமில்லாப்
பாமரஜனங்கள்தன்னை பதைக்கவேகொண்டுபோகும்
எமனிங்கெவருங்காண விளங்கொடியுடன்வந்தானே

வசனம்.

இந்தவிதமாக இராஜபத்தினியானவள் கிள்ளையை சீராட்டி கொஞ்சி குலாவிக்கொண்டிருக்கும்போது புண்ணியஞ்செய்யாத பாமர ஜனங்களை பதைக்கும்படி பிடித்துக்கொண்டுபோகும் எமதன்ம மஹாராஜன் தன் பத்தினியோடும் கொலுவில் வருகிற விதங்காண்க.

தரு-இராகம்-நாட்டை-ஆதிதாளம்.

பல்லவி.

ராஜ ராஜ ராஜ ராஜ ராஜன் எமதன்மராஜன் வந்தான்

அனுபல்லவி.

தேசமெங்கு நடுநடுங்க சிறப்புடனே கொலுவில்வந்தான்.

சரணங்கள்.

சித்ரபுத்ரருகில்சூழ சிறப்புடனேகொலுவில்வந்தான்
எத்திசையுங்கீர்த்திபெற்ற எமராஜன்கொலுவில்வந்தான்
கருத்தமேனிகாந்திவீச காலனுருங்கொலுவில்வந்தான் [தான்
மருட்டிப்பார்க்குஞ்சிவந்தகண்ணு மறலிதானுங்கொலுவில்வந்
இங்கிதமாம்மனைவியோடும் எருமையேறிகொலுவில்வந்தான்
செங்கைவேலன்சரணம்போற்றி தென்றிசைக்கோன்கொலுவி
[ல்வந்தான். (ராஜ)

இயமன் மனைவிசொல் விருத்தம்.

எத்திசையோரும்போற்று மென்னிடநாதாகேளீர்
முத்தமிழ்வழங்குநாட்டின் முசுகுந்தன்மனைவியான
சித்திரவல்லிதன்பாற் சிறந்ததோர்கிளியொன்றுண்டு
மற்றதேயெனக்குவேண்டும் வரவழைத்தருள்செய்வீரே

வசனம்.

அஷ்டதிசையோரும் வணங்கும்படியான கீர்த்தி பெற்ற என்பிராணநாயகா கேளும் தமிழ் நாட்டிலிருக்கின்ற முசுகுந்த சக்கிரவர்த்தியின் பத்தினியாகிய சித்திரவல்லி யிடத்தில் ஒரு சிறந்த கிள்ளையிருக்கின்றது அந்தக்கிளியே எனக்கு வேண்டும் ஆகையால் அதை வரவழைத்து கொடுக்கவேண்டுமென் பிராணநாதா.

இயமன் சொல் கொச்சகம்.

கொஞ்சுமொழியஞ்சுகமே கோதாமடக்கொடியாம்
வஞ்சியரேதஞ்சமெனு மன்னரசரென்னெஞ்சிரே

பஞ்சரத்தில்மாளிகையில் பாதலத்திருந்தாலும்
அஞ்சுகத்தையுந்தனக்கே யரைநொடியில்தருவேனே

வசனம்.

கொஞ்சுகின்ற வசனத்தையுடைய கிளியே பூந்தொடையே, இளமை பொருந்திய வஞ்சிக்கொடிபோன்ற பெண்ணே, பூமியிலிருக்கிற அரசர்கள் எனக்கெதிரா அந்த கிளிப்பிள்ளையானது பஞ்சரத்திலிருந்தாலும் மாளிகையிலிருந்தாலும் மாளிகையிலுள்ள க்ஷேமத்திலிருந்தாலும் அரை நொடிப்போதில் உனக்குக் கொண்டுவந்து கொடுக்கிறேன் என்பிராணநாயகி.

பொது விருத்தம்.

அந்தகனிந்தவண்ண மறைதலுங்கேட்டமங்கை
சிந்தையிலுவந்தாளன்னோன் சேந்தவெங்கண்ணினோக்கி
வந்தவர்கேளீரின்னம் வருதலையுடையார்தம்மில்
சொந்தமாய்விளங்குமெந்தன் றூதரைவிளிப்பீரென்றான்.

வசனம்.

இயமன் இந்தவிதமாகச் சொல்லகேட்டு அவன் பத்தினி மனதில் சந்தோஷங்கொண்டிருந்தாள் இப்பால் அவ்வியமன் சிவந்த கொடுங்கண்ணினால் பார்த்துச் சொல்லுகிறான் என் சபையினில் வந்திருக்கின்றவர்களே கேளுங்கள் இன்னம் வரவேண்டியவர்களில் எனக்கு சுதந்தரமாகிய தூதரை அழைக்கக்கடவீரென்று கட்டளையிட்டான் இனி நடக்கிற விதங்காண்க.

இயமன் தூதர்கள் வருகிற விருத்தம்.

தோத்திரந்தினமுஞ்செய்து சுப்பிரமணியருக்குப்
பாத்திரமில்லாதாரை பதைக்கவேகொண்டுபோகும்
நேத்திரஞ்சிவந்துபற்க ளிலவெளவெளுத்துகோர
காத்திரங்கருத்ததான காலதூதுவர்வந்தாரே

தரு-இராகம்-செஞ்சுருட்டி-தாளம ரூபகம்.

பல்லவி.

தூதர்நாங்களே எமன்விடுந் தூதர்நாங்களே

சரணங்கள்.

காதகம்பொய்கொலைச் சூதுப்பிரட்டொடுங்
கள்ளமனத்தை யுடையவராகி
பாதகர்தன்னைப் பிடித்தேயிழுத்துப்
பதைக்கபதைக்க வதைத்தேயுதைத்திடுந் (தூதர்)

தந்தையுந்தாயுங் குருவொடுதெய்வமுஞ்
சாமியெனத்துதி செய்யாமலேவெகு
நிந்தனைசெய்ய நினைக்குமறிவிலா
நீசர்கள்தன்னை யிப்பாசத்திற்காட்டிடும் (தூதர்)

சத்தியவேலன் சரணகமலத்தை
சந்ததமுந்துதி சிந்தனைசெய்திடும்
பத்தாடியைப் பணிந்தேதிரும்பிப்பின்
பாவிகளானவ ராவியைவாங்கிடும் (தூதர்)

போதகஞானவுரை யாசிரியர்த்தமை
புண்ணியரென்று திகழ்பவர்வாய்களில்
ஆதியூர்குமாரச் சாமியருங்கவி
யாணியரைந்துப்பின் பாணியைவாங்கிடும் (தூதர்)

இயமன்தூதுவர் சொல் விருத்தம்.

கொதிக்கனலெனவெழுந்து குவலயமெல்லாஞ்சுற்றி
திதிக்கொருதிசையிற்சென்று திரிதருமெங்கட்கின்னாள்
விதிக்கருமங்களென்னே விளம்பிடவேண்டுமிந்த
கதிக்கொருநிதியேசெங்கோற் கடவுளேபோற்றிபோற்றி

வசனம்.

இந்த இயமபுரமாகிய கதிக்கு ஒப்பில்லாத நிதியே செங்கோற்கடவுளே போற்றிபோற்றி, கொதிக்கின்ற அக்கினியைப் போல இவ்விடமிருந்தெழுந்து பூலோகமெல்லாஞ்சுற்றி அன்றைக்கொரு திக்குகளில்போய்த்திரிகின்ற எங்களுக்கு இன்றையதினம் எத்தொழில் கட்டளை இடுகின்றீரோ சொல்லவேண்டுமெங்களாண்டவனே.

இயமன் சொல் விருத்தம்.

முருகனைப்பணியாதுட்ட மூடர்களுயிரையெல்லாங்
கருதியேபிடிக்கவல்ல காலதூதவீரர்கேளீர்
கருவையில்முசுகுந்தேசன் காதலியிடத்திலுள்ளத்
திருமிகுங்கிளியைப்பற்றித் திரும்பிடல்வேண்டுமின்றே

வசனம்.

ஸ்ரீ கந்தநாதனை வந்தனைசெய்யாத துஷ்டராகிய மூடஜனங்கள் ஆவியைவாங்கி வருவதில் வல்லவர்களாகிய என் தூதர்களே கேளுங்கள் தக்ஷணதேசத்திலுள்ள கருவூராகிய இராஜதானியில்போய் முசுகுந்தமஹாராஜன் பத்தினியாகிய சித்திரவல்லியிடத்திலிருக்கும் அழகிய கிளியைப் பிடித்துக்கொண்டு அதிசீக்கிரமாக வரவேண்டும் தூதர்களே.

தூதர்கள் சொல்வசனம்.

அப்படியேமஹாபாக்கியமையாஸ்வாமி.

தரு-இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி.

கிளியைப்பிடிப்போம் வாரீர்
முசுகுந்தனூர்மனையில் தந்திரமாகப்போய்
கிளியைப்பிடிப்போம்வாரீர்

சரணங்கள்.

வெளியிலேயெங்குமில்லை வெந்தன்மனைவிகையில்
பழகிறானுஞ் சமயம்பார்த்துப்பதனமாகக் (கிளி)
கோரமுகனேயிந்த கோட்டைக்குள்ளேபுகுந்து
ஆருமறியாமுனம் அரைநொடிதன்னிற் பசுங் (கிளி)
சித்ரவல்லி புலவுஞ் சிங்காரமாளிகையில்
பத்தரைமாற்றுள்ளபஞ்சரத்திலிருக்கும் (கிளி)
முருகாவென்னுமந்திர மொழியுமிந்தக்கிள்ளையால்
வரும்விதிவருமானால் படும்விதிபடவேண்டும் (கிளி)

கோரமுகன் சொல் வசனம்.

கேளடா அண்ணே வக்ரதந்தா இதுநல்லசமயம் அந்தரமாக இரங்கிப்பிடித்துக்கொள்ளவேண்டுமடா அண்ணே (வக்ரதந்தன்) நல்லது நான்போய்ப் பிடித்துக்கொண்டு வருகிறேன் பாரடா அண்ணே.

பொது விருத்தம்.

ஆமடாவக்ரதந்தா அரமனைகுள்ளேசென்று [ன்
போமடாவென்னவன்னோன் புகுந்ததைப்பிடித்துக்கொண்டா
நாமடாச்செல்வோமென்று நமன்கையிற்கொடுக்கவந்தார்
மாமடமுடையதூதர் வருவதையறிந்திலாரே.

வசனம்.

ஆம் அடா வக்ரதந்தா இந்தவீட்டுக்குள்ளேபுகுந்து போவென்றான். அப்படி சொல்லுமுன்னமே அவன் போய் (ஒருவரும் அறியாவண்ணம்)பஞ்சரத்தில் புகுந்து கிளியைப்பிடித்துக்கொண்டான் இவர்களிரண்டுபேருங்கூடிபோவோமென்று அங்கிருந்து புறப்பட்டு இயமன்கையில் கொடுக்க ஓடிவந்தார்கள் மிகவும் அறியாமையையுடையதூதர் இனி வருவதை அறியமாட்டார்கள் (என்செய்வர்.)

தூதர்கள் சொல் கலிவிருத்தம்.

எங்களாண்டவனேயெமனேசர
ணங்கணேகியருங்கிளிப்பற்றினோ
முங்கள்பத்தினியுள்ளங்களிப்புற
தங்கள்கைத்தலந்தந்தனங்காணுமே.

வசனம்.

சரணம் சரணம் எங்களாண்டவனாகிய எமதன்மராஜனே, அந்தக்கருவூருக்குப்போய் இந்த அருமையாகிய கிளியைப்பிடித்துக்கொண்டுவந்தோம் தங்கள் தேவியார் சந்தோஷிக்கும்படியாக கையில் கொடுக்கிறோம் பாரும்ஸ்வாமி (இயமன்) நல்லது போய்வாரும் தூதரே.

இயமன் சொல்வசனம்.

கேளும் என்பிராணநாயகி இதோ அற்புதமாகிய கிள்ளை வந்தது. இதை உன்கையில் வாங்கி மனவாட்டநீங்கி சந்தோஷமாக யிரும் பெண்ணே.

இயமன் மனைவி சொல்வசனம்.

ஆஹா-இவ்வளவு அருமையாகிய கிளியை மடியில்வைத்துச் சீராட்டி கொஞ்சிக்குலாவி காலம்போக்குதலல்லவா பெரிதாகிய வினோதம் என்பிராணநாதா.

பொது-விருத்தம்.

மாகதக்கிளியையேமன் மனைவிதன்கையிலீய்ந்து
சரசசல்லாபமாகச் சதியுடனிருந்தானிப்பால்
சரவணபவனுங்கந்த சாமிதன்னருளான்மிக்க
வரப்பிரசாதவீரன் மகளிதையறிந்தாளன்றே.

வசனம்.

இந்தப் பசுங்கிளியை இயமராஜன் தன் பத்தினிகையில் கொடுத்து சல்லாபவார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தான். இப்பால், ஸ்ரீ கந்தநாதன் வரப்பிரசாதமாக பூமியில் வந்த வீரவீரகுதேவர் புத்திரியானவள் அக்கிள்ளை காணாமையை யறிந்துக்கொண்டாள். (இனி நடக்கிறவிதங்காண்க.)

சித்திரவல்லி சொல் விருத்தம்.

என்னடிபாங்கிமாரே இந்தபஞ்சரத்திற்கிள்ளை
முன்னமிங்கிருந்தபோது முருகனேகுகனேயென்று
சொன்னதேயிப்போதெந்த தூதர்கள்பிடித்திட்டாரோ
உன்னிடிற்காணேனென்ன வுருகினுள்கருகினுளே.

வசனம்.

கேளும் பாங்கிமார்களே இந்தப் பொற்பஞ்சரத்தில் கிளியானது நிமிஷ நேரத்திற்கு முன் முருகா, குகா என்று சொல்லிக்கொண்டிருந்ததே இப்போது யாருடைய தூதர் பிடித்துக்கொண்டு போனார்களோ காணேனே என்னசெய்வேன் பாங்கிமாரே.

தரு-இராகம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

கிள்ளைபோச்சுதே பசுங் கிள்ளைபோச்சுதே.

அநுபல்லவி.

வள்ளிநாயகனே குகனேயென்னை
மறந்ததோவாணம் பறந்ததோ பசுங் (கிள்ளை)

சரணங்கள்.

காமவேள்ரதியோ-உயர்-கற்பருந்ததியோ
ஏமனால்விடுந்தூதர்களோவந்து
ஏகியோ-கொண்டு-போகியோ பசுங் (கிள்ளை)

ROJA MUTHIAH

தேவதூதரோ-அந்த-மூவர்மாதரோ
யாவரோவறியேனை மிசாரண்யத்
தங்கயோ-யின்னம் எங்கயோ பசுங் (கிள்ளை)

சத்திவேலரோ-அவன்-பத்தசீலரோ
சித்தர்முனிவர் பற்றினூர்களோ
தெய்வமே-யென்ன-செய்குவேன் பசுங் (கிள்ளை)

ஜம்பை.

பஞ்சணையிலென்கணவன் பகர்மொழியெலாம்பகலில்
கொஞ்சிகொஞ்சிபேசிமிகக் குலவுபசுங்கிளியே
சரசசுகஞ்செயும்போதென் றலைவனுக்குத்தாம்பூலச்
சுருளெடுத்துகொடுத்திருக்குஞ் சோதிபசுங்கிளியே
சகஜாலப்புரட்டர்களைத் தடுக்கவகையறியாமல்
அகப்பட்டாயெனைமறந்து அழகுபசுங்கிளியே
என்வசனத்தீடென்றே இறையவனூர்முகமலர்ந்து
புன்சிரிப்புகொள்வதென்று புனிதபசுங்கிளியே.

சித்திரவல்லி சொல் விருத்தம்.

காமவேள்தனக்கொப்பான கணவனேசொல்லக்கேளாய்
நீ முனங்கொடுத்தகிள்ளை நேத்தியாய்வளர்த்தேனெந்த
சீமையுள்ளவரோமற்ற தேவரோவறியேனந்தோ
நாடுள்ளமனைக்கேவந்து நடந்தனர்கிளியைக்கொண்டே.

வசனம்.

அழகில் மன்மதனைப்போன்ற என் பிராணநாதனேகேளும் தாங்கள் கொடுத்த கிள்ளையை வெகு நேத்தியாக வளர்த்துக் கொண்டுவந்தேன் எந்த தேசத்தவர்களோ அல்லது தேவர்களோ யாரோ அறியேன் ஐயோ நம்முடைய வீட்டிற்பிரவேசித்து கிள்ளையைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள் என் பிராணநாதா.

தரு-கண்ணிகள்-இராகம்-காம்போதி-அடத்தாளம்.

பஞ்சரந்தனில்வைத்து பாதுகாத்திருந்தேனேபிராணநாதா-யா
வஞ்சகமாகவே மதிமோசஞ்செய்தாரே பிராணநாதா [ரோ

வாழையின்கனியூட்டி வரிசையாய்வளர்த்தேனே பிராண-இப்
தேழையைப்போலவே யெங்கிருக்கின்றதோபிராணநாதா [போ

விடியற்காலந்தன்னில்வேன்முருகாவென்று பிராணநாதா-எங்
மடிதனிலேவந்து வாய்திறந்தோதுமே பிராணநாதா [தன்

தங்கக்கிண்ணந்தன்னிற்சாதமும்பால்வைத்துபிராணநாதா-வெ
சிங்காரமாகவே சீராட்டிவந்தேனே பிராணநாதா [கு

மெத்தைமீதிருவரும் விளையாடியிருக்கையில் பிராணநாதா-எ
சித்திரவல்லியென்றே செல்வமாயழைக்குமே பிராணநா[ன்னை

பார்த்தவிடமெல்லாம்பசுங்கிளிக்காணேனேபிராணநாதா-அங்
வேர்த்ததுநெஞ்சம் விலத்ததென்செய்குவேன் பிராணநா [கம்
சரசவார்த்தைகளெல்லாஞ்சகலருமறியவேபிராணநாதா-அன்
னுரைத்திடும்போதுநீ ருள்ளங்குளிர்ந்திரோ பிராணநாதா [று
வெள்ளியவேலவா வேலவனேயென்று பிராணநாதா-பசுங்
கிள்ளைமொழிந்திட கேழ்ப்பதெந்நாளோநான் பிராணநாதா

இராஜன்சொல் கொச்சகம்.

பெண்கிளியேநீயனந்தம் பிரியமுடனேவளர்த்த
பொன்கிளியாரோபிடித்துப்போயினரென்றேபுலம்பி
முன்மொழியும்பைந்தொடியே முத்தமிழோரோதுகின்ற
அன்மொழியேயிப்போது அழவேண்டாம்அழவேண்டாம்.

வசனம்.

பசும்பொன்னாகிய வளையலையுடையப் பெண் என்னும் பொருள்தோன்ற இயல் இசை நாடகமென்னும் முத்தமிழ்ப் புலவரால் சொல்லப்பெற்ற அன்மொழியே, பெண்கிளியே நீ மிகவும் பிரியமாக வளர்த்துவந்த அழகிய கிள்ளையை யாரோ பிடித்துக்கொண்டுபோனார்களென்று இப்போது பிரலாபித்து என்முன் அழுகின்றாய் வேண்டாம் பெண்ணே.

தரு-இ-ம்-சோகவராளி-அடதாளசாப்பு.

பெண்ணேபெருந்தனமே - தேவர்
புத்தமுதேசெழும்பூங்கொடியே
கண்ணேகருவிளமே - நறுங்
காமரசந்தருங்கன்னிகையே
கிள்ளையைக்காணாதே - மனக்
கிலேசமடைந்திடல்நீசரியோ
கள்ளர்தமையடக்க - சிவ
கந்தசடாக்ஷரமந்திரமே
துணையானவீரருக்கே - ஒரு
தூளியென்றலவர்நிர்த்தூளி
இனையாரிப்பூமியிலே-நமக்
கேந்திழையேசொலும்வேந்தரெலாம்
பாதந்தனைப்பணிந்தே-என்றும்
பகுதித்தருவார்கள்தகுதியினுன்
தாதாவெனும்வீரர்க்கிதை
சாற்றடியெனாதுசர்ப்பாத்திரமே
கிளியோதுமாமொழியே -- புங்கன்
கீதமென்றேமனவாதனையால்
வெளியேயிருந்துணர்காலையில்
வேறறியேன்பின்னுந்தேடுவனே

சக்ரேசனென்றறியாமலிச்
சம்பனைசெய்திடுமெற்பனையே
உக்ராகாம்பெறுவாள்தனில்
உருட்டுவனே அந்தப்பிரட்டனையே

இராஜன் சொல் விருத்தம்.

கேளடிமானேயெந்த கிரிகிடபதியானாலும்
தூளடிச்செய்வேனெந்தன் ஸ்வாமியாய்விளங்குங்கந்த
வேளடித்துணையால்சுத்த வீரனையனுப்பிமூன்று
நாளடியதற்குள்ளாக நான்கிளிதருவேன்பெண்ணே.

வசனம்.

கேளும் அடிமானே எந்த கிரீடாதிபதிகளானாலும் சால் துகளாகச் செய்துவிடுவேன் என் ஸ்வாமியாக விளங்குகின்ற ஸ்ரீ கந்தநாதன் அருளால் வந்த வீரர்களை அனுப்பி மூன்று தினத்திற்குள்ளாக அந்தக்கிள்ளையை நான் தருவித்து கொடுக்கிறேன் அஞ்சவேண்டாம்பெண்ணே.

பொது வசனம்.

இந்தவிதமாகத்தன்கணவன் தேறுதல் சொல்ல சித்திரவல்லியானவள் தேறாமல் தன்றகப்பனாகிய வீரவாகு தேவரிடத்தில் வந்து சொல்லுகிற விதங்காண்க.

சித்திரவல்லி சொல்-விருத்தம்.

இசைந்தநங்குகனையேத்து மெந்தையேமனதுநொந்தேன்
வசுந்தரையுள்ளார்க்கிதும் வாய்த்ததேயென்னவேங்கி
விசும்புளாரெல்லாங்கண்டு விரும்புநல்லழகுவாய்ந்த
பசுங்கிளிக்காணேனின்னம் பார்ப்பதெந்நாளேனையா.

வசனம்.

அருணேக்கில் இசைந்த நமது ஸ்ரீகந்தநாதனையே வணங்கும் என் தந்தையேகேளும் வருத்தமடைந்தேன் (ஏனெனில்) பூலோகத்துள்ள பெண்களுக்கும் இச்சிறந்த கிள்ளை கிடைத்ததேயென்று ஏக்கமுற்று தேவ நாட்டுப் பெண்களெல்லாம் பார்த்து விருப்பங்கொள்ளும் நல்ல அழகையுடைய பசுங்கிளியைக் காணகிலேன் இனி எக்காலங் காணப்போகிறேன் என் அய்யனே.

தரு-இராகம்-நீலாம்புரி அடதாளசாப்பு.

என்னசெய்குவேன்முன்னையான்செய்த
இருவினைத்தொகையோ அதன்வகையோ எவர்பகையோ
எந்தையேய எந்தையே எனைப்பெற்ற தந்தையே தந்தையே
பஞ்சரந்தனிற் கொஞ்சுமஞ்சுகம்
பார்ப்பதெந்தினமோ வெறுந்தனமோ வென்சொற்பனமோ
பாவமோ பாவமோ வேலாயுதன் கோபமோ கோபமோ

ஐயவென்கிளிகண்டிலீரென
யாரிடங்கேட்பேன் குறையுரைப்பேன் முறைவிரிப்பேன்
ஆசையா ஆசையா என்னைவளர்த்த அப்பனே அப்பனே

முன்படைத்தவன் பின்படைத்திடு
முறைமறந்தானோ கரந்தானோ பறந்தானோ
முருகனே முருகனே ஈதார்செய்த மோசமோ மோசமோ

ஓமலிட்டவிப்பண்டமேதினி
யுலையிலுந்தங்குமா அல்லான்மங்குமா இனிப்பொங்குமா
உள்ளதே உள்ளதே கிள்ளைக்கீதோ ஊழியே ஊழியே

தேவநாடரு மாவல்கொண்டிடுஞ்
செய்யபைங்கிளியே புன்வாய்மொழியே எந்தவழியே
தேடுவேன் தேடுவேன் இன்னமெந்த தேசமே தேசமே

ஏகசக்ரேச ராஜபத்தினி
யென்பதென்னச்சே வெறும்பேச்சே கிள்ளைபோச்சே
இறைவனே இறைவனே இப்போதெவர்க் கேகமோ ஏகமோ

துக்கமென்பதை யின்னதென்றதன்
சொரூபங்காணேனே இனிநானே என்செய்வேனே
சுத்தனே சுத்தனே சடாக்ஷரக் கத்தனே கத்தனே.

சித்திரவல்லி சொல்தரவு கொச்சகக்கலிப்பா.

சிற்றினந்தானுரைபழகி சிவகுருமந்திரம்பேச
கற்றனநானதுகேட்டு கரணமெலாஞ்சுகமடையு
நற்றவமீதெனவிருந்தே னடுவிலிதுவிளைந்தவெனைப்
பெற்றவனேகிளியதனைப் பிரிந்திருக்கச்சகியேனே.

வசனம்.

சிலதினங்களாகத்தான் நல்ல வசனங்களைப்பழகி ஸ்ரீ கந்தநாதன் மந்திரங்களைப் பேசும்படியாகக் கற்றுகொண்டது அம் மந்திரங்களைச் சதாகாலமும் கிள்ளையானது பேச யான் கேட்டுகரணங்களெல்லாம் வேறுபாடின்றி பேரானந்த மடைந்தன (ஆதலால்) இதுவே நல்ல தவமென வெண்ணியிருந்தேன் இடையிலே இக்கொள்ளைசம்பவித்தது எனது அழகிய கிள்ளையை எப்படிபிரிந்திருப்பேன என்தந்தையே.

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

குவலயத்துள்ளாரொன்கைக் குந்தமென்றொருபேர்சொன்னால்
எவர்கடானடுங்காரிந்த விசையுளேமிருக்கநீதான்
கவலையென்றறியாவெங்கட் கண்ணிலுண்மணியொப்பாக
சிவபரன்றவத்தால்வந்த செல்வமேயஞ்சேலின்றே.

வசனம்.

இந்த பூமியிலுள்ளவர்கள் என்கையிலிருக்கிற ஒப்பில்லா தசெங்குந்தத்தினது பேர் சொன்னால் யாவர்தான் நடுநடுங்காத

வர்கள் இப்படிப்பட்ட கீர்த்தியை யடைந்தவர்களாகிய நாங்க ளிருக்க கண்ணினுள் விளங்கும் பாவையொப்பாக ஸ்ரீ கந்தநா தன் தபோபலத்தால் வந்து விசனமென்பது அறியாத எங்கள் செல்வமகளே நீ அஞ்சவேண்டாம்.

சித்திரவல்லிசொல் விருத்தம்.

தாதைநீருரைத்தவண்ணந் தாட்டிகமடைவேன்பெண்கள்
பேதையென்பதுதான்வந்தென் பிடர்பிடித்துந்துகின்ற
தாதலாலென்னசெய்வே னாரிடத்துரைப்பேனெஞ்சம்
வாதனையடைந்ததந்தோ மாசிலாக்கிளிநினைந்தே.

வசனம்.

கேளுமென் தந்தையே தாங்களுரைத்தவண்ணம் திடங் கொண்டிருப்பேன் பெண்கள்பேதை யென்று சொல்லுங்குண மானது வந்து என் பிடரியைபிடித்து தள்ளுதலால் என்னசெ ய்வேன் தாங்களல்லாமல் யாவரிடத்து என்குறையை யுரைப் பேன் குற்றமில்லாதபசுங்கிளியை நினைந்து (காணக்குறையால்) அந்தோவென் மனம் வருத்தமடைகின்ற தென் ஐயனே.

தரு-கண்ணிகள்-இராகம்-கண்டா-அடத்தாளசாப்பு.

தருமமாய்விஜயஞ்செய்து தபசிகளிடத்திருந்தென்
றந்தையே - எனது - தந்தையே உங்கள்
அருமருந்தனையமகட்காமெனக்கொடுவந்தீரே
தந்தையே - எனது - தந்தையே
கல்வியுள்ளபசுங்கிள்ளை கைதனிலேவைத்திருந்தென்
தந்தையே - எனது - தந்தையே நான்
செல்வமாயிருந்ததெந்ததெய்வங்கண்பொறுக்கிலையோ
தந்தையே - எனது - தந்தையே
கற்பெனவெலாம்புகல கைவருந்திரமடைந்த
தந்தையே - எனது - தந்தையே அந்த
அற்புதக்கிளியைக்காண்ப தறுமுகன்றிருவருளென்
தந்தையே - எனது - தந்தையே
பஞ்சரமுமாளிகையும் பாலகியாமென்காமுங்
தந்தையே - எனது - தந்தையே - அந்த
அஞ்சுகமிலாதபோதேயழகுங்குறைந்ததெந்தன்
தந்தையே - எனது - தந்தையே
சாமியாய்விளங்குகின்ற சண்முகன்றிருவருளால்
தந்தையே - எனது - தந்தையே இந்த
பூமியெங்குஞ்செயங்கொண்ட புகழ்தனக்கிதுவழகோ
தந்தையே - எனது - தந்தையே

வீரன்மகளாய்ப்பிறந்து விஜயமுமனுபவிக்க
தந்தையே எனது தந்தையே - கொடுங்
காரணைவிதித்தலையிற் கமலனுமெழுதினனோ.
தந்தையே எனது தந்தையே
முன்பிறப்பிலார்பொருளை மோசஞ்செய்யநினைத்தேனோ
தந்தையே எனது தந்தையே - இப்போ
தென்பசுங்கிளியைக்காணு தேங்கிமனம்வாடுகின்றேன்
தந்தையே எனது தந்தையே
தினகரன்குலத்தில்வந்த ஜெகபதியாமென்கணவன்
தந்தையே எனது தந்தையே - இந்நாள்
மனுதருமநீதிதன்னில் மாறுபட்டிருந்ததுண்டோ
தந்தையே எனது தந்தையே

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

நம்முருகையன்மெய்ய னல்வரமதனால்வந்த
அம்மணிக்குழந்தாவெந்த னருமைமாமகளேரத்ன
மும்மணிக்கொழுந்தேநீதான் முகங்குழைந்தழுகவேண்டாம்
இம்மெனுமுன்னதாக வீவனக்கிளியுனக்கே.

வசனம்.

மெய்க்கடவுளாகிய நமது முருகநாதன் கொடுத்த நல்ல வரத்தால் உற்பவித்த என்னம்மணி என்குழந்தா என்னருமை மகளே வயிரம் புட்பராகம் மாணிக்கமென்றுசொல்லு மூன்று இரத்தினக்கிரணக்கொழுந்தே நீ முகவாட்டமாக அழவேண்டாம் இம் மென்னுமொடிப்போதிலே அந்தப்பசுங்கிள்ளையைக் கொண்டுவந்து கொடுக்கிறேன் பாருமம்மா.

தரு-இராகம்-தன்னியாசி-ரூபகதாளம்.

பல்லவி.

அருமையென்குழந்தா வுன்கிள்ளையை
யாரெடுத்தவன்தான்

அநுபல்லவி.

பெருமையாகவந்து பிடித்துப்போனவனை
பிடரிதனைக்கடிப்பேன் இடறிவிழவடிப்பேன் (அருமை)

சரணங்கள்.

ராக்ஷதக் கரும்போ வல்லதெம
ராஜனுந்துரும்போ
ஆச்சாதவருக்கெந்துறையுந்தத்தக்கிறை
யாக்குவேனவனைத் தாக்குவேன்பாவியை (அருமை)

அண்டத்துள்ளவரோ இந்திரனு
கண்டத்துள்ளவரோ

எண்டிசைக்கப்பாலு மிருந்தாலும்விடுவேனோ
எதுவெளிப்போகே போகுமேன் தப்பாதே (அருமை)

தங்கமென் மகளே கிள்ளையெடுத்தோர்
தலமெல்லாந்துகளே
செங்குந்தம்பிடித்தகை தினவுகொண்டிருக்குது
இடுக்கென்றிட்டேவேகும்மா கொடுக்கிறேனாறும்மா (அருமை)

பொதுவசனம்.

இவ்விதமாக வீரவாகுதேவர் சித்திரவல்லிக்கு தேறுதல் சொல்லிவிட்டு முசுகுந்த மஹாராஜனிடத்தில் சொல்லுகிற விதங்காண்க.

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

எத்திசையோரும்போற்று மேகசக்ரேசனென்ற
வித்தனேபயமிலாம விராஜதானியிலேவந்து
தத்தையைக்கொண்டுபோன தடியனைக்கொல்வேனிப்போ
துத்தரந்தருவீராகி லொருநொடிதன்னின்மன்னா.

வசனம்.

அஷ்டதிசைக்குள்ளடங்கிய அரசரெல்லாம் வணங்கும் ஏகசக்ராதிபதி என்கிற இவ்வளவு அச்சமில்லாமல் நமது சமஸ்தானத்துக்குள்ளே பிரவேசித்து கிள்ளையைப் பிடித்துக்கொண்டுபோன மூடனை கொன்றுவிடுகிறேன் இப்போது தாங்கள் உத்திரவுகொடுத்தால் பாரும் எங்களரசனே.

முசுகுந்தமஹாராஜன் சொல்விருத்தம்.

பொருட்கடைத்தாமாய்ந்தப் புணர்ப்புள முருகநாதன்
அருட்கடைக்கண்ணால்வந்த வமைச்சரிற்பெரியோயிந்நாண்
மருட்கடைக்குணத்தானந்தம் வன்னியைக்கொண்டுபோனத்
தெருட்கடைப்படவன்னோனைச்சிதைத்ததுகொண்மினின்றே

வசனம்.

வஸ்துத்தானமே தாமாகி அச்சொரூப விலக்கணமுடைய ஸ்ரீகந்தநாதன் அருளாகிய கடைக்கண்ணோக்கத்தால் எனக்குக் கிடைத்த மந்திரிகளில் முதன்மைபெற்ற வீரவாகுதேவரே கேளும் இப்போது தெளிவில்லாத கடைகுணத்தினால் நமது கிள்ளையைப் பிடித்துக்கொண்டுபோனவாகள் கெருவபங்கமாகும்படி வாட்டி கிள்ளையைக் கொண்டுவாருமையா மந்திரி.

பொது-விருத்தம்.

மூமலமூங்கடந்துநின்ற முருகனைநினைப்பீர்கேளீர்
குமரவேலனைசராஜன் கூறியப்பொழுதேயண்டத்
தமரரெல்லோருமேமை ஞைங்கியெண்ணவென்றோ
திமிதிமென்றதிராவிரத் தீனித்திருந்துசொல்வானே.

வசனம்.

கேளுங்கள் மலரவிதனறிய முருகநாதனைச்சதோத்பானஞ் செய்யுஞ்சபையோர்களே குமாரக்கடவுளுக்கு அன்பனான முசுகுந்தமஹாராஜன் இந்த ஊத்திரவு கொடுத்தமாத்திரத்தில் பொன்னுலகத்துள்ள தேவர்களெல்லாம் இயமராஜன் கதி என்னுமோவென்று பயந்திருந்தார்கள் (இப்பால்) திமிதிமியென்னு மாரவாரத்தோடு மெழுந்து வீரவாகுதேவர் தம்பிமாரைப் பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

வீரவாகுதேவர் சொல்விருத்தம்.

மனதினிற்கிசைந்ததம்பி மார்களேசொல்லக்கேளீர்
சின்முட னெண்மரட்டத் திசையிலுஞ்செல்வீர்யானும்
கனம்படர்விசும்புமற்ற கதியிலுஞ்செல்வேனிந்தத்
தினமகட்களிப்போங்கிள்ளைத் தேடுவோமெழுந்துவாரீர்

வசனம்.

என்மனதிற்கிசைந்த தம்பிமார்களே கேளுங்கள் கோபாவேசத்தோடும் எட்டுபேரும் எட்டுதிசைகளில்போங்கள் யான் மேகமுலவும் அண்டமுதலிய மற்ற இடங்களிலெல்லாஞ்செல்கின்றேன் இன்றையதினமே நமது பெண்குழந்தைக்கு பசுங்கிள்ளையைக் கொண்டுவந்து கொடுக்கவேணும் (ஆகையால்) எங்கிருக்கின்றனவோ தேடுவோமவாருங்கள் தம்பிமார்களே.

தரு-இராகம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

தேடுகின்றார்கள்கிள்ளையை செங்குந்தவீரர்
தேடுகின்றார்கள்கிள்ளையை

அனுபல்லவி.

ஈடிலாவேல்முருகன் தாடனையேநினைந்து
நாடுநகரமுள்ள மாடமெல்லாந்துணிந்து (தேடு)

சரணங்கள்.

சோழதேசமுங் கடந்து - அதற்கடுத்த
சுந்தரப்பாண்டியந்தொடர்ந்து - கடலிலுள்ள
ஈழதேசமு மடைந்து - குந்தளங்குரு
விலிங்கங்கன்னடத் திடைந்து - நித்திரைவிட்டு
இரவொடு பகலினு மவர்களி லனைவரும்
திரமுட னதிவித ஜெகதல முழுவதுந் (தேடு)

மன்னவர் மாளிகையும் - நீதியுரைக்கும்
மந்திரிகள் சூளிகையும் - திரிந்தலைந்து
இன்னமோர்நவளிகையும் - காணுமலெங்கும்
இருந்திலமெனநகையும் - கோபம்பிறந்து

இதுக்கி நமதிட ரதகஜ துரகமு
மதிரிட நடவென கனமு முலவியும் (தேடு)

நான்முகன்ப்ர்மவண்டமும் - சங்கந்தரித்த
நாரணன்வை குண்டமும் - அங்குங்காணுமல்
மேன்முகப்பகி ரண்டமும் - இப்பூமியில்
விளங்கிடுநவ கண்டமும் - வியர்த்துரைப்பர்

வெகுவித நவரச நடனவி லானருள்
குகசர வணபவ சிவகுரு பரவென (தேடு)

பொது விருத்தம்.

கிள்ளையைத்தேடிவீர கேசரித்தென்றிசைக்கோன்
உள்ளெயிலடைந்தானங்கணொளிர்சுகங்கண்டானந்தக்
கொள்ளையைத்தமையர்க்கோதக் கூடினரிளையரெல்லாங்
கள்ளமின்மொய்ம்பனோலைக் காலனுக்கறைமினென்றான்.

வசனம்.

கிளிப்பிள்ளையைத் தேடிபோன வீரர்களில் வீரகேசரியானவன் தெக்ஷணதிசையிற்சென்று இயமனது நகரத்தையடைந்து அவனது மாளிகையில் கிள்ளை இருக்கக்கண்டான் உடனே அவ்விடத்தினின்றும் புறப்பட்டுத் தன் தமையனிடம்வந்து சொன்னான் மற்றதிசையிற்சென்ற வீரர்களும் வந்து யோசிக்குமளவில் வஞ்சமில்லாத மனதையுடைய வீரவாகு தேவர் அல்லியமனுக்கு ஓலையெழுதுங்களென்று உத்திரவுசெய்தார்.

இதுவுமது.

திருமுகமெழுதிவீர தீரனையனுப்பவன்னோன்
தருமனைக்கண்டான்றந்தான் சண்டனச்சுருளைவாங்கி
கருமுகஞ்சினந்துகண்ணிற் கனலெழசித்ரகுத்த
னொருமுகநோக்கவேற்றவ் வோலைமுன்படிக்கின்றானே.

வசனம்.

வீரவாகுதேவர்ஓலையெழுதிவீரதீரதேவன் கையில் கொடுத்து எமபுரத்திற்கனுப்ப அவனதிசீக்கிரமாகப்போய் இயமனது சபாமண்டபமடைந்து அவன் கையிற்கொடுக்க ஓலையைவாங்கி கண்டவுடன் கண்ணில் அக்கினிபொறிகள் சிந்த கோபாவேசமுடையவனாய் சித்திரகுத்தனைப்பார்க்க அந்நோக்கங்கண்ட சித்ரகுத்தன் வணங்கி தன்கையிலேற்று சபையில் வாசிக்கிற விதங்காண்க.

சித்ரகுத்தன் திருமுகம் வாசிக்கிற விருத்தம்.

கனமிகுநடுவெசெங்கோற் கடவுணீதருமனீங்கு
இனகரன்குலமாந்தாதா சேய்மனைக்கிள்ளையுந்தன்
மனையகங்கொடுத்தனன்றோ வல்லையதனுப்பவேண்டு
மெனநவமந்த்ரிமார்க ளெழுதியதிருபமீதே.

இயமன்சொல் விருத்தம்.

எடுத்தனன் கிள்ளையென்முன் னிசைப்பவருளரோவேமன்
பிடிக்கவும்பிள்ளைமீண்டும் பிழைக்குமோவென்னமுன்னோர்
படித்ததையுணரார்க்கிந்நாள் பசுங்கிளித்தருகேன்வந்தால
முடித்தகர்ந்திடுவேனிந்த மொழியவர்க்குரைமினின்றே.

வசனம்.

வாராய் தூதனே நான் கிள்ளையைக்கொண்டுவந்த துணிமைதான் இவ்வுலகத்தில் என்னோ டெதிர்நின்று பேசுகின்ற மனிதர்களுமுண்டா! இயமன் பிடிக்க பிள்ளைபிழைக்குமாவென்னும் முன்னோர் வாக்கிய மறியாதவர்களுக்கும் கிள்ளைக் கொடுக்கப்போகிறேனா அல்லது இவ்விடம் வந்தால் அவர்கள் தலையைத் தகர்த்துவிடுவேன் என்று நான்சொன்னதாக நவமந்திரிகளுக்குப் போய்ச் சொல்லக்கடவாய் தூதனே.

வீரதிரதேவர் சொல் விருத்தம்.

சண்டனேநீதானெங்கள் சர்வசக்ரேசன்கிள்ளைக்
கொண்டுவந்துனதுநேசக் குடிமகட்களித்தீர்கேட்டால்
உண்டெனக்கொடுக்கவேண்டு முரைமறுத்திட்டீரென்றால்
தண்டமேயடைவையுன்கைச் சமர்க்களங்காண்போம்வாராய்

வசனம்.

வாராய் இயமனே எங்கள் சர்வசக்ரேசனது கிள்ளையை அச்சமில்லாமல் பிடித்துவந்து உன்னுடைய பத்தினிக்குக் குக் கொடுத்துவிட்டாய் நீ அறியாமையால் செய்தகாரியம் பொறுத்து கொடுத்துவிடுமென்று கேட்டால் இதுதான் சமயமென்று கொடுத்துவிடவேண்டுமல்லாமல் மறுத்துப்பேசுகிறீராகையால் தண்டனைக்குள்ளாவை உன்வல்லபத்தை போர்க்களம் பார்ப்போம் வாராய் இயமனே.

பொது விருத்தம்.

வீரனிவ்வண்ணமோத வெகுண்டகங்கொதித்துச்சண்டன்
கோரகிங்கரரைத்தூண்டுங் குறிப்பறிந்திமைப்பிலந்த
பேரவையகன்றேயண்ணன் பெரும்பதம்பணிந்தவேமன்
போரினில்கொடுப்பான்போலப் புகன்றனனென்றான்வீரன்.

வசனம்.

இந்த விதமாக வீரதீரதேவன் சொல்லக்கேட்ட வியமன் மனது கொதிக்கக் கோபங்கொண்டு கோரவிருத்தியையுடைய கிங்கரர்களைத் தூண்ட அந்தக்குறிப்பு தெரிந்துத் தன்னைப் பிடிக்கவந்தவர்களைச் சின்னபின்னமாக உதறிவிட்டெழுந்து திரும்பி ஒரு நொடிப்பொழுதில் வந்து தன் தமையனது திருவடியை வணங்கிச் சொல்லுகிறான். கேளுமண்ணே அவ்வியமன் யுத்தஞ்செய்திளைத்தபின் கொடுப்பான்போலத் தெரியவருகிறதென்றான், இப்பால் வீரவாகுதேவர் சொல்லுகிறவிதங்காண்க.

வீரவாகு தேவர் சொல் விருத்தம்.

நல்லதுஇனிதாமல் நடுவனின்வண்ணமாகச்
சொல்லவும்படிமொழந்தம் துரகமுங்கஜமுங்கூட்டி.
வல்லேவிவிரதமேறி மறலிதன்புரம்போய்வெல்லும்
பல்லியமறைமின்கந்தன் பதம்பணிந்தெழுமினின்றே.

வசனம்.

வாராய் தம்பிமார்களே இயமனானவன் பிள்ளையைக் கொடுக்காமல் யுத்தத்திற்கு வரட்டுமென்று சொல்லவுங் கூடுமா நல்லது நம்முடைய இரதம் கஜம் துரகம் பதாதியாகிய சதுராங்க சேனைகளையுங் கூட்டி ஸ்ரீ கந்தநாதனது திருவடியைப் பணிந்து இரதாரூடராய் இயமபுரம்போய் இரணபேரிகை யறையுங்கள் தம்பிமார்களே.

பொது வசனம்.

இப்படி யுத்தாவு செய்தவுடனே சதுரங்க சேனைகளும் அணியணியாய் முன்னிற்க நவவீரர்களுந் தனித்தனியாக இரதங்களிலேறி பிரளயகாலவாரிதிபோலத்திரண்டு வந்து இயமபுரத்திற் கருகில் நின்று கண கண வென்று இரணபேரிகை முழக்கினார்கள். அதுகேட்ட இயமன்சொல்லுகிறவிதங்காண்க.

இயமராஜன் சொல் விருத்தம்.

அக்கினிக்கண்ணாநீண்ட வங்கனேவக்ரதந்தா
மக்கினநிறத்தாவீர மாண்டதுன்மனத்தாயிங்கே
மிக்கவெம்புலிபாதாகை வீசவந்தெதிரினின்ற
மக்களைச்சிதையவாட்டி வருவீரிங்நொடியிற்றானே.

வசனம்.

அடா அக்கினிக்கண்ணா அதிகாத்ரா வக்ரதந்தா புகைநிறத்தா ஈரமில்லாத மனத்தா இவ்விடத்தில் மிகுதியான சேனைத்திரளோடுங்கூடி வெவ்விதாகிய புலிக்கொடிபறக்க வந்து எதிரில் நிற்கின்ற மானிடப்புழுக்களை சிதையும்படியாகக் கொன்று ஒருநொடிப்போதிலே வரக்கடவீர் கிங்காரர்களே (கிங்கரர்) அப்படியே மகாபாக்கியமையா ஸ்வாமி. (பொது) இப்பால் காலகிங்கரர் அனந்தவித ஆயுதபாணிகளாக வந்து ஊழிகால உருத்திரர்கள்போலச் சினந்து வீரர்களது சேனையுடன் யுத்தஞ் செய்கிற விதங்காண்க.

தரு-இராகம்-பந்துவராளி-ஏகதாளம்.

பல்லவி.

இந்தசேனையைக்கொல்ல வேதுணிவோம்
எங்கள்பசிதணிவோம் (இந்த)

அநுபல்லவி.

எந்தகாலமு மித்தனைப்பெயர்
ஏது கொன்றதுபோது மின்றிது (இந்த)

சரணங்கள்.

அங்கிடேபுகுந்தடிக்கப் பிடிபடா - ஒருங்காகசேர்த்து
ஆயிரம்பெயர்கழுத்தை பொடிபடா
சங்கிலியினுங் தொடர்ந்துதொடர்ந்து
இடிபடாகட்டிம் பிடிபடாவிப்போ (திந்த)

சூலத்தால்குத்திகுத்தி தூக்கியே - இவருயிரைப்போக்கி
தோளாம்பெரும்பொடிவேருக்கியே
காலதூதர்களென் றெவருமறியக்
கட்டடாவோடி வெட்டடாவிப்போ (திந்த)

கஜதுரகமும்விழுந்திடச் சாய்த்து - காலாளைத்தேய்த்து
கண்டெதிர்த்தவருயிர்களைமாய்த்து
புஜபலமுள்ள வீரர்களென்னமோ
போடுவாரம்பு சாடுவாரிப்போ (திந்த)

பொது விருத்தம்.

என்றெண்ணவனந்தங்கோடி யேமகிங்கரர்களெல்லாங்
கண்ணெரிகனலப்போந்து கந்தவேளடியார்சேனைப்
புண்ணுறச்சினந்துமோத புஜபலமுள்ள்வீரப்
பண்ணவர்கண்டார்குந்தப் படைகொடுமுனைந்தார்மாதோ.

வசனம்.

அளவில்லாத அனேகங்கோடி கணக்காக இயமபடாள் எல்லோரும் கண்கள் அக்கினிப்போலச்சிவக்க கோபத்துடன் வந்து ஸ்ரீ கந்தநாதன் அன்பராகிய வீரர்கள் சேனைகளில்புகுந்து இரத்தப்பிரவாக முண்டாகும்படி சாட அதுசண்ட புஜபல பராக்கிரமமுள்ள வீரர்கள் கைவேற்கொண்டு போர்செய்கிற விதங்காண்க.

தரு-இராகம்-தன்னியாசி-ரூபகதாளம்.

பல்லவி.

வீரர்க ளடித்தார் எமராஜன்
விடுமபடைதுடித்தார்

அநுபல்லவி.

நிரமாகவே பாணப்ரயோகங்கள்
செய்தனர் பெய்தனர் எய்தனர் கொய்தனர் (வீரர்)

சரணங்கள்.

குந்தங்களைக்கையிற் பிடித்து - தூதர்
கோரப்பல்லுதிர வடித்து - எதிர்
வந்தவர்தங்களை மடித்து - தலை
மண்டையிரண்டாக வுடைத்து
பக்கெதனைவெட்டித் தனைத்தபோதவர்
பதறினர் சிதறினர் உதறினர் கதறினர் (வீரர்)

காலதூதரைத் தூக்கி - யவர்
கரங்கள்சிரங்கள் போக்கி - திரி
சூலங்களைத்துக ளாக்கி - பெருந்
தொண்டையிலேகுத்தி தூக்கி

நாலுமுகமுஞ் சுழன்றுவளைந்து
நாடினார் தேடினர் ஆடினர் பாடினர் (வீரர்)

உதிரப்ரவாகங்க ளோட - வதில்
உள்ளக்கவந்தங்க ளாட - பேய்கள்
புதியவிருந்தென்று பாட - பிணம்
போர்க்களமெங்கணுமூட

அதிரிடவேமனங் கலங்கித்தூதுவர்
அஞ்சினர் எஞ்சினர் கெஞ்சினர் பஞ்செனு (வீரர்)

பொதுவிருத்தம்.

குன்றெனத்திரண்டுநின்ற கோரகிங்கரர்கண்மாறு
வன்றிறல்வீரரென்னும் வச்சிரப்படைகடாக்கப்
பொன்றினரல்லார்மீண்டு போய்ச்சொலவெருமையேற்றிற்
றென்றிசைக்கோமான்வந்தான் செருக்களம்படைக்கைக்கொ
[ண்டே.

வசனம்.

மலைபோன்றபெரியவுருவத்துடன் பெருங்கூட்டமாகவந்து யுத்தஞ்செய்து நின்ற கோரரூபமுடைய கிங்கரர்கள் நீங்காத வலிய வெற்றிபொருந்திய வீரரென்கின்ற வச்சிராயுதங்கள் தாக்க, தங்கள் வலியுடைந்து சின்ன பின்னமாக விழுந்தவர்கள் போக தப்பிப்பிழைத்து மீண்டவர்கள் போய் இயமனுடன் வீரரால் போரில் பட்டபாடெல்லாம் சொல்லி முறையிட அதுகேட்ட இயமன் கணிச்சி தண்டு பாச முதலிய ஆயுதங்களெல்லாங் கையிற்கொண்டு எருமைக்கடாமீதிலேறி போர்க்களத்தில் வந்து சொல்லுகிற விதங்காண்க.

இயமன் சொல் விருத்தம்.

ஓலையைவிடுத்தீரென்னை யுணர்ந்திலிர்போருக்கிந்த
காலையில்வந்நீர்விட்ட கனப்படையெல்லாமூலை
மூலையாய்ச்சிதறியோட முனைந்தடித்திட்டீரென்கை
யாலையிற்கரும்பேயானீ ரகிலமானிடர்காளின்றே.

வசனம்.

கேளுங்கள் பூமியிலுள்ள மானிடர்களே முதலில் இயமனென்கிற பயமில்லாமல் திருமுகமெழுதிவிட்டீர்கள் அது பொறுத்தேன் சண்டைக்கும் வந்தீர்கள் யான் ஏவிய கிங்கரர்களையெல்லாமடித்து மூலைக்குமூலைச் சிதறியோடும்படி செய்துவிட்டீர்கள் ஆகட்டும் இப்போது யான் வந்துவிட்டேன் இனி என் கையாகிய ஆலைக்கு கரும்பானீர்கள் நில்லுங்கள் பார்ப்போம் மானிடரே.

வீரவாகுதேவர்சொல்விருத்தம்.

ஏமனேநீதான்சற்றே யிடறியேதலைக்கீழாக
நாமெனவிழுதனன்றோ நல்லதுமுருகமந்த்ரம்
ஓமெனுமுன்னதாக வோடுவதுண்மையுண்மை
யாமினுன்கணைகளெல்லா மழிக்கின்றோம்விடுமிப்போதே.

வசனம்.

வாராயியமனே நீயேன் கொஞ்சம் தலைக்கீழாக இடறி நாமென்கிற அகங்காரங்கொண்டு விழுகின்றாய் இது நன்றல்ல யாங்கள் ஸ்ரீகந்தநாதனது மந்த்ரோச்சாரணையில் பிரணவ மூன்று முன்னம் ஓடிப்போகப்போகின்றாய் இது உண்மைதான். நல்லது வீண்வார்த்தைப் பேசுவதில் பயனென்ன உன் கணைகளை விடும் உடனே யழித்து விடுகிறோம் பாருமியமனே.

தரு-இராகம்-புன்னாகவராளி-அடத்தாளம்.

பல்லவி.

இயமன். என்னைநினைத்திரென்பேரே - கொல்லும்
ஏமனென்றறியார்களாரே

அநுபல்லவி.

முன்வருமானிட மூடர்களேயெந்தன்
முனைவதையுஞ்செய்யும் அனைவருயிருங்கொய்யும் (என்)

பல்லவி.

வீரர். மானிடத்திரமையைப்பாரா - யட
மறலியேநீகிட்டி. வாரா

அநுபல்லவி.

ஆனாலெங்கள்கையி லடிபட்டுச்சாகாதே
அஞ்சுகம்விடுவிடு மிஞ்சினால்படுபடு (மானி)

சரணங்கள்.

இயமன். சரங்களெல்லாம்வில்லிற் கோர்த்து - உங்கள்
தலைகளுக்கேலக்கு பார்த்து - இதோ
தாக்குவேன்வருகிற தார்த்து - வந்து
தளங்களெல்லாமொன்றாய்ச் சேர்த்து

தண்டஞ்செய்யாவிடில் சண்டனேமாராக
சாதகமிதுகண்டா பாதகமெனக்குண்டா (என்)

வீரர். விட்டசரங்களும் பஞ்சியே - எங்கள்
வீரசெங்குருந்தத்திற் கஞ்சியே - இங்கே
விழுந்ததுபாரடா கெஞ்சியே - சும்மா
விருதாவிலுழைக்கிறாய்நஞ்சியே

வீணாகநீவிட்ட பாணம்போனபோதே
வீரமுந்தனுக்கென்ன வாரவார்த்தைகள்சொன்னு(மானி)

இயமன். நாரணன்கணை தன்னைத்தொடுக்கிறேன் - என்னை
நாசனென்றனைந்தாலுங்கெடுக்கிறேன் - இந்த
நான்முகன்கணையொன்றுவிடுக்கிறேன் - விரை
நாகக்கணையுங்கூட வெடுக்கிறேன்

ஞாயமில்லாமலே மாயங்கள்செய்கிறீர்
நல்லதிந்தசரமே வெல்லும்வெல்லும்திரமே (என்ன)

வீரர். மாலவன்கணையெங்கேபோச்சு - கஞ்ச
மலரவன்கணையுந்தூளாச்சு - கருடன்
மாசுணந்தனைப்பற்றித் தேச்சு - கொல்ல
வருகுதடாபெரு மூச்சு

வந்ததுபோதுமுன் பந்தயந்தோற்றது
மனப்படிநடக்காது கணைத்தலையெடுக்காது (மானி)

இயமன். இருடிகள்கணையெல்லாமிருக்குது - என்கை
இருக்குமட்டேமனம் பொறுக்குது - போனால்
இந்திரன்கணைவந்து நறுக்குது - உங்கள்
எவரையும்அக்கினி வறுக்குது

இசைந்துவிடாமல்முன்னசைந்துவிட்டேனிது
இப்போதுகொல்லுமே தப்பாதுவெல்லுமே (என்ன)

வீரர். அருந்தவர்கணையெல்லாம்வெம்பியே - நின்
றதோகாட்டுதுனக்குபார் கம்பியே - சிறுவர்
அண்ணன்போனவழித் தம்பியே - என்ப
தறியாமலேன்விட்டா நம்பியே

ஆனதுமிதுவெல்லாம் போனாலும்போருதென்
னரசனைப்பணிந்திடச் சரிசரிதுணிந்திடு (மானி)

இயமன். பாணமெல்லாம்வெகு நட்டியே - நீங்கள்
பயப்படாராலுங் கெட்டியே - இந்த
பாசத்தாலுங்களைக் கட்டியே - சூலம்
பாச்சுவேனிரண்டாகவெட்டியே

பங்கஞ்செய்யுஞ்சிவ சங்கரதேவர்க்கு
பதிலாகவந்தீரோ எதிராயிருந்தீரோ (என்)

வீரர். காலபாசம்வரக் கண்டே - சிவக்
கந்தனைமனநினிற்கொண்டே - சூலங்
காட்டினர்சூல மிரண்டே - பாசக்
கயிறிருநாலெனும் துண்டே

கண்டாயடாநீதா னெனடியாகவின்றுப்
காரியஞ்செல்லாது வீரியமில்லாது (மானி)

இயமன் சொல்விருத்தம்.

காலதூதனையுமென்கைக் கணைகளுஞ்செயிக்கதல்லாற்
சூலமும்பாசந்தானுந் துண்டிரண்டானபோதே

வேலைகுழுமைகால்வீர் மிண்டராயுதித்திருங்கண
மூலமென்சொல்லிரென்மேன் முனிவயன்றனமைச்சரேறே.

வசனம்.

கேளுமையா ஆண்சிங்கம்போன்ற நவவீரமந்திரிமார்களே என் கிங்கரர்களையும் என் கணங்களையும் ஜெயங்கொண்டதல்லாமல் சூலமும் பாசமும் இரண்டு துண்டமாக விழும்படி செய்ததமையால் கடல் சூழ்ந்த பூவுலகத்துள்ள கேவலமனிதராக எண்ணுதற்கிடமில்லை ஏமனாகிய வெனக்கு மிண்டராகப்பிறந்து வந்த உங்களது சரித்திரத்தை அனுக்கிரகஞ் செய்யவேண்டுமையா வீரர்களே.

வீரவாகுதேவர்சொல் வண்ணவிருத்தம்.

அண்டரண்டபகிரண்டமளித்தருள் அம்மைசிலம்பிலுதித்
தறுமுகமுருகனுடன்பொருசூரனை டமரினில் ஜெயமதுவே
கொண்டுபின்கந்தனைவந்தனைசெயுமுசு குந்தனிடந்தனிலே
குலமகன்மணமதுமுடிவினிலொருமகள் கோமானுக்குதவி
எண்டிசையுஞ்செயங்கொண்டுபசுங்கிளி என்மகளுக்குதவி
ஏமகிராயுதமேபிதடுத்தவிலங்குனைக்கண்டுபெருஞ்
சண்டைசெயும்படிவந்தனம்பாமிது சங்கதிபினிக்கிளியைத்
தருகிறதோவமர்பொருதோவதை சற்றுரைசெய்திடுமே.

வசனம்.

நிராயுதனாகவிருக்கின்ற இயமனே கேள். அண்டாண்டங்களையெல்லாம் பெற்றெடுத்த மாதாவாகிய உமாதேவியாரது திருவடி சிலம்பில் தோன்றி ஷண்முகபெருமான் துணைவராகவிருந்து சூரபதுமனை ஜெயங்கொண்டு அக்கந்தநாதனது அன்பனாகிய முசுகுந்த மஹாராஜனிடத்தில் வந்து அவ்வரசனார் கொடுக்கப்பெற்ற பெண்களை மணஞ்செய்துகொண்டு அவ்வரசனுக்கு என் புத்திரியைக்கொடுத்து பூமண்டலமுழுதும் விஜயங்கொண்டு ஒரு அற்புதமாகிய கிள்ளையை என் புத்திரிக்குக்கொடுத்திருந்தோம் அந்தபசுக்கிளியை நீ கொண்டுவந்துவிட்டபடியால் உன்னிடத்தில் சண்டை செய்யவந்தோம் இப்போதாகிலும் கிள்ளையை கொடுக்கின்றாயா அல்லது உனக்கு வேண்டுமானால் ஆயுதங்கள் கொடுக்கிறோம் சண்டை செய்கின்றாயா உன் சங்கதியென்ன அதிசீக்கிரமாக சொல்லும் இயமனே. (போது.) இவ்விதமாக வீரவாகுதேவர் சொல்ல இயமன் கேட்டு மனங்கலங்கி புலம்புகிற விதங்காண்க.

(இயமன் சொல்)

தரு-கண்ணிகள்-இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

என்னமோசம்போனேனையோ பச்சைமந்திரியென்றறியேன்
முன்னம்மார்க்கண்டனுக்காய் முக்கணனால்பட்டபாடு

இப்பொழுதுதைநினைத்தால் ஈரலுநடுங்குதையோ
தப்பிதஞ்செய்தபாதகன் தனையனானைவங்கிமுகன்
சண்டையிலிவ்வீரர்க்காக ஷண்முகரால்பங்கமாகி
குண்டியுங்குலைநடுங்கி குமாரவேளடிபணிந்தேன்
வெண்ணீறுருத்திராக்கம் விளங்குந்திருமேனிகண்டுங்
கண்ணுதெரியாமலே கலகஞ்செய்துகெட்டேனையோ
வடிவேலேந்துமுருகருக்கு வாய்த்தகுற்றமவரால்தீரும்
அடியவர்க்கேசெய்தகுற்றம் ஆரிடத்தில்தீர்க்கப்போறேன்
பெண்மொழியைக்கேட்டனந்தம் பேர்கள்கெட்டாரயானறிய
பண்கிளியையேன்பிடித்து பாவிகளில்பாவியானேன்
பாமரஜனங்கள்மீது பாசம்விடவேண்டுமென்னுங்
காமனையெரித்தநாதன் கட்டளையைமீறினேனே
வள்ளிநாதன்றுணையாம்வீர வாகுதேவரிடத்திலிந்த
கிள்ளையைக்கொடுத்துவிட்டால் கேடிலாமல்வாழ்குவேனே.

இயமன் சொல்விருத்தம்.

செய்யவேன்முருகநாதன் றிருத்துணையுள்ளீருங்கள்
கையமருந்தந்தன்னால் களைத்தனன்பொறுக்கவேண்டும்
தையலாள்வசனங்கேட்டுத் தத்தையைப்பிடித்தநாயேன்
உய்யவிக்கிள்ளைவாங்கி யுமதிடமேகுவீரே.

வசனம்.

சிவந்த வேலேந்திய ஸ்ரீகந்தநாதன் றுணையுள்ள சுத்தவீரர்களே தங்களது கைவேலால் அடிபட்டு களைத்திருக்கிறேன் மன்னியுங்கள் யான் பெண்புத்திகேட்டு இத்தீமை செய்துவிட்டேன் அடியேன் பிழைத்துபோகிறேன் இந்தாரும் கிள்ளையை வாங்கிக்கொண்டு சுகமாக போய்வாரும் வீரர்களே.

வீரவாகுதேவர் சொல்விருத்தம்.

நாசனேசர்வலோக நாயகனாகுமெங்கள்
ஈசனுங்கந்தநாத னிணையடிக்கன்பர்தன்பால்
நேசமாயிருந்தேவஞ்ச நினைப்பிலாதிருந்தாயானால்
ஆசியாயெந்தநாளு மறுமுகனருள்செய்வானே.

வசனம்.

கேளும் இயமனே சர்வலோகநாதனாகிய ஸ்ரீ கந்தநாதன் திருவடிக்கு அன்பராகிய அடியாரிடத்தில் ஓர் குற்றமுஞ்செய்யாமல் அன்பு நிலைமை பூண்டிருப்பாயானால் நீ எந்நாளுஞ் சுகித்திருக்கும்படி அத்தேவன் கிருபைபாலிப்பன் இயமனே இப்பால் நடக்கிற விதங்காண்க.

பொதுவிருத்தம்.

சேனையின்பதியாய்வந்த ஜெயமிகுவீரவாகு
கானகக்கிளியையேமன் கைத்தலங்கொடுக்கவாங்கித்

தாளையுந்தம்பிமாரும் தன்னகர்தனிற்சேர்ந்து
போனதோர்வாலாறெல்லாம் புலவர்க்கோதுவானே.

வசனம்.

சேனைபதியாக வந்த ஜெயசாலியாகிய வீரவாகுதேவர் வளக்கிளியை இயமன் தன் கையில் கொடுக்கப்பெற்று தனது சேனாசமூகங்களும் தம்பிமார்களுஞ் சூழும்படியாக தமது வாசஸ்தானமாகிய திருக்குருவூரை யடைந்து தாம் போய் ஜெயித்து கிள்ளை மீட்டு வந்ததை யரசனுக்கு சொல்லுகிறவிதங்காண்க.

வீரவாகுதேவர் சொல் கட்டளைகலிப்பா.

எங்குமேகசக்கராசனாகிய
விறைவனேயின்றிருவுளத்தின்படி
செங்குந்தங்கைப்பிடித்திந்தபூவலைந்து
சென்றனங்கண்டிலோமெமனூரிடந்
துங்கநங்கிளிக்கண்டுவிநவினேந்
துட்டன்போரிலடித்தபின்றந்தனின்
பங்கயச்சரண்போற்றியனுப்பினான்
பாரும்பாரும்பசுங்கிளிதன்னையே.

வசனம்.

இப்பூமண்டலமெங்கும் ஆக்ஞாசக்கரஞ் செலுத்திவருமரசனே தங்கள் திருவாக்கின்படி கையிலேந்திய செங்குந்தாயுதராயிந்த பூமி முழுதுந்தேடினோம் எங்குங்காணமல் இயமபுரத்தில் கண்டு திருமுகமனுப்பினோம் அந்தத்துட்டன் கொடாமையால் சண்டை செய்தடித்தபின் கிள்ளையைக் கொடுத்துத் தமது திருவடிக்கமலம் வணங்கி யனுப்பினான் இதோ கொண்டு வந்தோம் பாரு மஹாராஜனே (பொது) அரசன் கிள்ளையை வாங்கிக்கொண்டு தன் பத்தினியிடத்தில் கொடுக்கிற விதங் காண்க.

இராஜன் சொல் விருத்தம்.

உன்னிடத்தந்தைமார்களுலகெலாந்தேடிக்காணு
தென்னடிப்பெண்ணேசொல்லு மேமனுக்கேகமாகி
மின்னிடுங்கிளியைக்கண்டு மீட்டிக்கொண்டுவந்தார்
முன்னெடுந்துயரநீங்கி முகமலர்ந்திருப்பாய்நீயே.

வசனம்.

கேளுமென் பிராணநாயகி உன் தந்தைமார்கள் உலகமெல்லாம் தேடியுங்காணமல் யாவரையுங் கொல்லுகின்ற இயமனுக்கு இயமனாகிக் கிள்ளையை மீட்டுவந்தார் இதோபாரும் உனக்கிருந்த கவலை நீங்கி முகமலர்ச்சியாக விரும்பெண்ணே (சித்திரவல்லி) இந்த கிள்ளை எவ்விதமாக வந்தது விபரமாக சொல்லவேண்டுமென் பிராணநாதா.

இராஜன்சொல்.

தரு-கண்ணிகள்-இராகம்-பந்துராவளி-அடத்தாளசாப்பு.

மாதர்சிகாமணியேயிந்தப்பைங்கிளி
வந்ததைசொல்வேனடி - பெண்ணேயிந்த
மாகதக்கிள்ளையடி

தையலேநீகிள்ளைகாணேனென்றசொல்லுன்
றந்தையறிந்தாரடி - பெண்ணேயவர்
தாங்காதகோபமடி

கோபித்தெழுந்தவரொடுங்கவீரருங்
குந்தகைக்கொண்டாரடி - பெண்ணேவிடை
கொஞ்சங்கொடுத்தேனடி

கொஞ்சங்கொடுத்திடத்தேடினர்தேடினர்
குவலயமுழுதுமடி - பெண்ணேயண்ட
கோளமுங்காணாரடி

காணுமலேமனிடங்கண்டுகேட்டொரு
கலகமேசெய்தாரடி - பெண்ணேகொல்லுங்
காலனுநொந்தானடி

நொந்துந்தன்றந்தையர்தங்கள்சரித்திர
நுவலவறிந்தானடி - பெண்ணேயந்த
நொடியிலேயேமனடி

ஏமன்பணிந்திந்தகிள்ளையைத்தந்திட
இறைவருமெண்மரடி - பெண்ணேயிப்போ
தென்கையிலீய்ந்தாரடி

ஈய்ந்திடுங்கிள்ளைக்குகாமுருகாவென்
றியம்புதுகாணுமடி - பெண்ணேகையி
லேந்திக்கொண்டாடுமடி

சித்திரவல்லிசொல்-விருத்தம்.

மாசிலாக்கிளியேயென்னை மறந்திதுவரைக்குமெங்கே
நீசுகமென்னுநாம நீங்கியேசுகமில்லாமல்
நாசனுர்மனைவிகையி னலிந்தகமெலிந்தாயின்னே
பேசுவாய்முருகமந்த்ரம் பேதமில்லாதிப்போதே.

வசனம்.

ஏ களங்க ரஹிதமான கிள்ளையே என்னை மறந்து இது வரைக்கும் நீ எங்கிருந்தாய் சுகமென்கிற இயற்பெயர் கொண்ட நீ சுகமில்லாமல் இயமன் மனையவள் கையி லகப்பட்டு மனம் வருந்தினையோ இப்போது இனிமையாகிய முருகமந்த்ரம் பேசுவாய் பசுங்கிளியே.

பொதுவிருத்தம்.

குகன்சரவணபவேசக் குமரவேடுணையாற்போன
சுகங்காங்கண்டானந்தந் தோன்றிடவிருந்தாளிந்த

வகங்காக்தென்றுமெற்கோ ரருமருந்தீனையபால
னிகம்புரந்திடுவான்பின்ன ரிலையெனும்முறைசொல்வாமே.

வசனம்.

சித்திரவல்லியாளவள் ஸ்ரீகந்தநாதன் றுணையால் போய் விட்டகிள்ளை மீண்டுவந்து கையிலிருக்கக்கண்டு அதிக சந்தோஷங்கொண்டிருந்தாள் (இப்பால்) இந்த இரும்பாப்பினல் ஒன்றும் பயனில்லை எனக்கு அருமையாகிய தேவாமிர்தம்போன்ற புத்திரன் இப்பூமியை யாள்வதற்கு இல்லையே யென்று பிரலாபிக்கிற விதத்தைச் சொல்லப்போகின்றேன்.

சித்திரவல்லி சொல் கொச்சகம்.

நாயகனேயென்புருஷ ரத்தினமேநீர்கேளும்
தேயமெல்லாமோர்குடைக்கீழ் செங்கோல்புரிந்தாலும்
காயமென்னவோர்நிலையோ க்லிதீரநந்தமக்குச்
சேயொன்றிலாதபெருஞ் செல்வமென்னவெங்கோவே.

வசனம்.

கேளும் என்பிராண நாயகராகிய புருஷரத்தினமே இந்தப் பூமிமுழுதும் ஒரு குடைக்கீழ் அரசுசெய்தாலும் (நீடூழிகாலஞ்செய்வதற்கு) தேகமென்ன நிலையாக நிற்குமா, நில்லாது ஆகையால் புத்ராபேக்ஷை நீங்க நமக்கு மக்கட் பேறென்கிற செல்வந்தவிர மற்றவை யெல்லாஞ் செல்வமாகுமா என்பிராணநாதா.

தரு-ஜாவளி.

பல்லவி.

ஒருபாலனிலையே ஒரு பாலனிலையே.

சரணங்கள்.

வேலாயுதப்புனித சீலனருள்படைத்த
ஞாலங்கார்ப்பதியே ஞாலங்கார்ப்பதியே (ஒரு)
அப்புமெள்ளுங்கலந்து இப்புவியோர்கள்போல
தர்ப்பணஞ்செய்யவே தர்ப்பணஞ்செய்யவே (ஒரு)
தங்களுக்குப்பின்னிந்த சிங்காதனத்திருந்து
செங்கோலுஞ்செய்யவே செங்கோலுஞ்செய்யவே (ஒரு)
அப்பாமகனேயெந்தன் மெய்ப்புதல்வாவாவென
இப்பாரிலழைக்க இப்பாரிலழைக்க (ஒரு)

இராஜன் சொல் கொச்சகம்.

தேவாதியேசதியே தேனேமடமானே
பாவையாக்காசேசந் பாத்திரமேபாக்கியமே
பூவுலகாள்வதற்கோர் புத்திரனுமிலையென்றே
நீவருந்திவாடுவதேன் நீயிப்பாரையாய்வோமே.

வசனம்.

தெய்வாநிதியே என் பத்தினியே தேனே இளமை பொருந்
தியமானே பெண்களரசே சத்பாத்திரமே பாக்கியமே நமக்
குப்பின் இந்தப்பூமியை யாள்வதற்கு ஒருபுத்திரன் இல்லையென்
று நீ மனவாட்டங்கொள்ளவேண்டாம் நமது நவவீரமந்திரிக
ளை யோசனை கேட்போம் பெண்ணே.

தரு-தங்கரிந்து.

என்னடி பெண்ணே யென்னிருகண்ணே
கன்னன்மொழியணங்கே - சித்ரவல்லி
காமரசக்கடலே.

மாதவந்தன்னு லாதிருகேசன்
சோதரர்தனையடைந்தும் - சித்ரவல்லி
சூதனை மறந்தேனடி.

எந்தவிதமுங் கந்தசுவாமி
மைந்தன்றருவாரடி - சித்ரவல்லி
சிந்தனைவேண்டாமடி.

ஈட்டிகைக்கொண்டோரை கூட்டியவந்நாளில்
கேட்டுவரமறந்தேன் - சித்ரவல்லி
கிடைத்தமுருகேசனை.

பொது-விருத்தம்.

மாதினுக்கிதனையோதி மன்னவன்சிங்கந்தாங்கு
மேதருவணையிலேறி வீரமந்திரிகடன்னை
போதவேநோக்கியிந்த பூமியிலெனக்குப்பின்னர்
காதலனில்லையேயென்னக் கழறுவதுரைசெய்வாமே.

வசனம்.

இவ்விதமாக அரசன் தன்பத்தினிக்கு தேறுதல் சொல்லி
விட்டுவந்து சிங்காசனத்தில வீற்றிருந்து நவவீரமந்திரிகளைப்
பார்த்து எனக்குப்பின் இப்பூமியை யாள்வதற்கு ஒரு புத்திர
னில்லையே யென்று சொல்லுகிறவிதங்காண்க.

தரு-இந்துஸ்தான்-மெட்டு.

ஏகசரணம்.

குமரசகோதரவீரர்களே சமரில்ஜெயம்பெறுதீரர்களே
குந்தங்கொண்-டெந்தன்பொன்-கோமுடிசூட்டியகொற்றவரே.

சரவணபவகுருபரவேலன் தன்னருளாலொருசிறுபாலன்
சம்பத்தா-மின்பத்தே-தரியலனையகமுற்றினனே.

பேர்கந்தருமெனுமாபாவி புத்திரனுந்தருமெனக்கூவி
பொங்கு ;கந்-தன் சங்கம்-போற்றிவினவமறந்தேனே. [னே

அருந்தவமுனிவரையவதேனே அறியாதென்வினைசெய்தே
அண்டித்தொண்-டெங்கண்டும்-அஞ்சிடவெவர்களைவதேனே.

மாதுர்பிதாகுருபொல்லேனோ வருந்திமெய்ந்நூலதுகல்லேனோ
மருசுங்கொஞ்-சந்துஞ்ச-வள்ளலெனும்பெயரில்லேனோ.

இராஜன்சொல் விருத்தம்.

மானமுங்கற்பும்வாய்ந்த மங்கையர்ச்சிறைசெய்தேனோ
தானதன்மங்களோங்குந் தடமடங்களைத்திட்டேனோ
பானுவின்குலமதோங்க பாலகனென்றிலாத
தீனநானென்னசெய்வேன் செங்குந்தமந்திரிமாரே.

வசனம்.

அபிமானமுங் கற்பு நிலையையுமுடைய பெண்களை அநீதியாக சிறையிலடைத்தேனோ தானதருமங்கள் விளங்குகின்ற அறச்சாலைகளையும் நல்ல தடாகங்களையும் அழித்துவிட்டிருப்பேனோ என்னமோ அறிகிலேன் இந்த சூரியகுலமானது விளங்கும்படியாக ஒரு புத்திரப்பேறில்லாதவனாகினேன் என் செய்வேன் மந்திரிகளே.

பொதுவிருத்தம்.

மன்னவன்சுதனில்லாமல் வருந்தியிவ்வண்ணமாக
சொன்னபோதமைச்சரான சுந்தரவீரரெல்லாம்
பன்னகாபரணனைப் பரகுருகுகனையீது
முன்னருணடனமென்ன வுணர்ந்திறைக்கிதுசொல்வாரே.

வசனம்.

இவ்விதமாக முசுகுந்த மஹாராஜன் புத்திர சோகத்தால் மனமெலிந்து சொல்லியபோது அழகிய நவவீரமந்திரிமார்களும் அரவாபரணனாகிய பரமசிவத்திற்கு குருவாகிய குகனை இதுவும் உன்னுடைய அருள் தாண்டவ விலாசமென்று ஸ்ரீகந்தநாதனை சிந்தித்து சொல்லுகிறவிதங்காண்க.

௧-வது-மந்திரி-வீரவாகுதேவர்சொல்
வஞ்சித்துறை.

வாலறிவானம் - வேலனையுள்ளுந்
சீலமதாலோவர் - பாலனுமாமே.

௨-வது-மந்திரி-வீரகேசரிதேவர்சொல்
வஞ்சிவிருத்தம்.

குருபரனருள்வழி கொண்டபே
ரொருகுறையிலதெனு மொண்டிக்கே
மருநிதியென [illegible] றுண்டிப்போ
திருமகவுளமென மெண்ணுக்கோர்.

௩-வது-மந்திரி-வீரமாமகேந்திரதேவர்சொல்
தரவுகொச்சகக்கலிப்பா.

பந்தத்தானறக்கண்ட பயனடியோ மெமக்கென்னக்
கந்தன்றாளகலாய் கருதிடுங்கண் [illegible]

மெந்தன்றூர் முடிமன்னர் இறைவனே யறுமுகனே
மைந்தன்று மெனமொழி வரம்பெற்று வருவேனே.

௬-வது-மந்திரி-வீரமாமஹேச்சுரதேவர்சொல்

கட்டளைகலித்துறை.

பண்ணவரேத்தும் பதாம்புயன்வேலவன் பன்னிரண்டு
கண்ணவனங்குலத் தேவனுமாகிய கந்தனெனும்
வெண்ணையைக்கண்டினி நெய்யெனத்தேடி விரும்புவதென்
அண்ணலெப்பெறினு மிமகப்பேறுட னுமுனக்கே.

௫-வது-மந்திரி-வீரமாபுரந்தரதேவர்சொல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆறுவிலனு வாகிநிறைந் தாட்டுமறு முககுகனே
யடிகளென்று
துணிவுடனே மாதவங்கள் செய்தமுசு குந்தனெனுந்
துரையே நிற்கோர்
கணுவினறு முத்துகுழுங் கரும்பிரத மெனவொழுகுங்
கருணை யாரு
முனிவியலு மிறைகாளை மகவுதவ வெணும்துநா
முணர்கி லோமே.

௬-வது-மந்திரி-வீரராக்கததேவர்சொல்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஐந்துமுக மோடமர தோமுகம தாகிவரு
மாறுமுக வேளை நினையா
விந்தயுல கேகபர னைமுசு குந்தனெனு
மேந்தலிது கேண்மினையா
மைந்தனிலை யேயென மெலிந்துமன வாதையில
வருந்துவதி லென்ன பயனு
நந்தமுரு கேசனரு ளான்விளை யாடலை
நவின்றிட லெவர்க்கு மரிதே.

௭-வது-மந்திரி-வீரமார்த்தாண்டதேவர்சொல்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இலை நெடுவேற் சுப்பிரமா மணியனை
யெம்பெருமா னருளுண்டா யெமையு முண்டா
உலகமெலா மொருகுடைக்கீ ழாளுஞ் சீர்த்தி
யுண்டாகி யரசரெல்லாம் பணிவ துண்டாய்க்
கொலைபுரியு மெமனை ஜெயங் கொள்வதுண்டாய்க்
குறைவிலாப் பெரும்போகங் கிடைத்தும் பால
னிலையானுமோர் குறையுனக்கே யுண்டாமென்று
லெவரறிவா ரவனருளெம் மிறைவ னேரே.

௮-வது-மந்திரி-வீராந்தகதேவர்சொல்

ஒன்பதின்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடவு ளென்ற சிவ கந்தனே யுல கிருப்ப தாகுமவர்
சன்னி தானமது காந்தமே
நடன மாகசர வசர மாதிக ளடிக்கு மேவினைய
தற்கு தக்கதிரு நாடகம்
படியி லும்பிட மிருக்க வெங்களை பணித்த லுன்செய
லெனப் படாதுசிறு பாலனும்
வடிவ தாகிவரு வாறு மன்னவ னெனப் பராவுமறை
யவ னலாதிலையெ மன்னனே.

௯-வது-மந்திரி-வீரதீரதேவர்சொல் விருத்தம்.

குக்குடத்துவசனன்பு கொண்டபுண்ணியனேநாங்கள்
திக்கெலாம்விஜயஞ்செய்யச் சென்றகாற்குட்கநாட்டில்
ஒக்கசந்தானமாவின் றருவளமறிவேமிந்நாள்
அக்கனிப்பெற்றீர்ப்பிள்ளை யாங்குகனருளான்மன்னா.

வசனம்.

கோழிக்கொடியையுடைய ஸ்ரீகந்தநாதனிடத்து பக்திகொண்டிருக்கும் புனிதனே கேளும், நாங்கள் திக்குவிஜயஞ்செய்ய போனபோது மேற்றிசையில் கேரள வரசனிடத்தில் புத்திரகாமேஷ்டியாகத்தி லுற்பவித்த சந்தானமாவிருக்ஷ மிருக்கின்றது. அதன் கனியால் அவ்வரசனுக்குப் புத்திரன் உற்பவித்ததென கேள்விப்பட்டிருக்கின்றேன். இப்போது அந்தக் கனியொன்று கிடைக்கப் பெற்றீரானால் ஸ்ரீகந்தநாதன் கிருபையால் உமக்குப் புத்திர னுண்டாகுமெங்களரசனே. (இப்பால் முசுகுந்தமஹாராஜன் சொல்லுகிற விதங்காண்க.)

இராஜன்சொல்

தரு-இராகம்-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

மாங்கனிப்பெற்றேன் நவமந்திரிகாள்
மகனுளேனே நான் (மாங்)

அநுபல்லவி.

நீங்கனியாமுங்கள் திருவசனத்திருந்து
ஓங்குங்குழந்தையென்ன வொருமொழிவந்தபோதே (மாங்)

சரணங்கள்.

எத்திசையேதிருந்தாலென் றேதருமையேதுமில்லை
புத்திமதிமேனிறைந்த புனிதமொழிவந்ததன்றே. (மாங்)
முன்னிருந்தவரசரும் முருகன்ருளாலுங்களைப
பின்னுதிக்குமரசரும் பெற்றார்பெருவாரின்றே (மாங்)

இருவகையேதுமில்லா திறையவனருள்கொண்டு
ஒருவகையாகவெனைப் புள்ளபடி சொன்னபோதே (மாங்)

செங்குனருள்கனிக்குத் தெய்வமாங்கோளா
வேந்தன்வனர்க்குசெந்தீ வொழ்விதருஞ்சந்தானா (மாங்)

வீரதீரதேவர்சொல் விருத்தம்.

காயத்தகனென்ன கற்கண்டாவென்றுயிர் திக்திப்பா
ஞாயவேன்முருகநாதன் றாணையிலக்கனியையேந்தி
தீயமென்றலிவதரகத் திரமாய்க்குடகிலுள்ளத்
தேயநாடொருவன்சென்றன் றிருக்கரந்தருவேனையா.

வசனம்.

காயமென்ன கற்கண்டா உயிரென்ன திக்திப்பா வீரன் போராஞ்சுவனே. வீரசிங்கமென்று யாவரும் அறியும்படியாக நான் ஒருவனே. அந்த கோளாராஜனிடம்போய் ஸ்ரீ கந்தநாதன் திருவடித்துணையால் அச்சந்தான மாங்கனியைக் கொண்டு வந்து உன் கையில் கொடுப்பேன் மஹாராஜனே. (இராஜன்) வாரும் வீரதீரதேவனே நீ தனியாகப்போதல் நன்றல்ல உன்னுடன் சில சேனாசமுகங்களுடன்போய்வாருமந்திரி. (இப்பால்) வீரதீரதேவன் நால்வகை சேனைகளும் சூழ்ந்து வரும்படியாக இரதாரூடனாக வருகிறவிதங்காண்க.

தரு இந்துஸ்தான் மெட்டு.

தேரிலேறிவருகிறான் தீரவீரதேவனே
சீருலாங்கேரளன் தேயநாடிநாடியே (தேரி)

வஞ்ச நெஞ்ச மில்லனே மன்னரார்க்கு நல்லனே
வரதனே சரதனே வாகிரண்டுங் கல்லனே (தேரி)

தனுசிலங்கு கையனே சாமிநீறு மெய்யனே
தண்டமே யண்டமே சைவமாறச் செய்வனே (தேரி)

மண்ணிற்றுகளெழும்பவே வாரிக்கொதித்துத் ததும்பவே
மாங்கனித் தாங்குநீ வளங்குமென்று விளம்பவே (தேரி)

பொதுவிருத்தம்.

தளமெலாமணியிறேங்கித் தனக்கெதிரேகவீர
ரிளவலான்கருதூர்நீங்கி யேதிலர்நடுங்கநல்ல
வளமுலாங்குடகநாட்டில் வந்துவெருசெயபடமாராம்
பளபளவெனவதிர்த்தான் கேட்டனன்பனந்தாரண்ணல்.

வசனம்.

வீரதீரதேவனானவன் தன்னுடைய சதுரங்க சேனைகளும் அணியணியாக முன்னே நடக்க சோழதேசத்தை விட்டு நல்ல வளம்பொருந்திய குடகநாட்டில் வந்து பகைவர்கள் அஞ்சும்படியான ஜெயபேரிகையை பள பள வென்று மோசையெழ அரைவித்தான் அந்த வோசை கேராஜன் செவியிற் கேட்டது (இப்பால்) நடக்கிற விதங்காண்க.

சேரராஜன் வருகிற விருத்தம்.

நம்முசுகுந்தவேந்த னன்பனே வந்தானென்னக்
கொம்மெனவெழுந்தான்றன்னைக் கொலுமுகமிருந்தோர்சூழ
விம்மிதங்கொண்டான்குந்த வேற்படைவிறலோயிங்கு
வம்மெனவெதிர்கொண்டாட மலையமான்வருகின்றானே.

தரு-இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

திராதிதீரனை வீரனைக்காணவே
சேரலமகிபதிவந்தானே

அநுபல்லவி.

வாராதிருப்பரமன் மைந்தனெளியேனுள்ள
மண்ணைமிதிக்கவென்ன புண்ணியஞ்செய்தேனென்று (திரா)

சரணங்கள்.

ஆரகேயூரங்க ளணியலவெனவெண்ணி
ஆன்றிருநீற்றினை யங்கமெங்குமணிந்து
தாரகமாகிய ஷண்முகனடியிணை
சந்ததமும்மனதில் சிந்தனையோடுரிந்து (திரா)

சிந்தாகுலமகல சிவனடியார்களைச்
சேவித்தவர்அருளால் செந்திக்கொடுக்கவந்த
சந்தானமாந்தருவை தனையனுக்காகவே
தன்னிடத்தில்படைத்த மன்னனிவனென்னவே (திரா)

ஆத்திமலரணியு மரசனமைச்சர்சொன்ன
அரசிறைகுறைவின்றி யனுப்பியிருக்கப்பின்னை
பூர்த்தியாயில்லையென்றோ பிறவொருகருமமோ
புனிதன்கருத்தறிந்து பணிதனலமென்னவே (திரா)

சேரராஜன்சொல்விருத்தம்.

நாவலந்தீவிற்சோழ நரபதிதனக்கிரங்கி
சேவலங்கொடியோன்றந்த தெய்வமேயுலகமெல்லாங்
காவல்கொண்டெம்மையாளுங் கர்த்தனேநீங்களிந்த
பூவலஞ்செயுங்கால்சேவை தந்தவெம்புனிதபோற்றி.

வசனம்.

உலகத்திற்சிறந்த நாவற்றீவில் மேன்மைதங்கிய சோழநாட்டிலுள்ள முசுகுந்தமஹாராஜன் செய்த தவத்திற்கிரங்கி சேவற்கொடியுடைய ஸ்ரீகந்தநாதன் கொடுத்த தெய்வமே இந்த பூமியைக்காத்து அதிலுள்ளவெளியேனையும் இரக்ஷிக்கும் கர்த்தனே முந்நாள் நீங்கள் திக்குவிஜயம்செய்தபோது திருச்சேவை கொடுத்த புனிதனே போற்றிபோற்றி.

பொது வசனம்.

சேரராஜன் இவ்விதமாகவணங்கி சில பொன் பல முதலியவும் எதிர்கொண்டுவந்து தனது சமஸ்தானத்திற்கு அழைத்துக்

கொண்டுபோய் ஆசனங்கொடுத்து அதிலிருக்கச்செய்து சொல்லுகிற விதங்காண்க.

சேரராஜன்சொல்விருத்தம்.

ஆரமஞ்சரிபாலுள்ள வமைச்சரிலொருவனான
வீரனாமநமதுநாட்டில் விஜயமேசெய்தாரென்னத்
திரமுடிழந்தேன்பின்னுந் தேரினனிங்குவந்தக்
காரணமறியேனுள்ள கருத்தெனக்கருளுமையா.

வசனம்.

ஆத்திமாலையையுடைய முசுகுந்தமஹாராஜனது மந்திரிகளில் இளையவீரன் நமதுதேசம் வந்தாரென்று கேள்வியுற்று அவரிடத்தில் என்னகுற்றஞ் செய்தனமோ வென்கிறதாக நையமிழந்தேன் மீட்டும் அப்படி யொன்றுமில்லை என்கிறதாக மனந்தேறினேன் (ஆகையால்) தாங்கள் இவ்விடம் வந்தகாரணமறியேனாகியவெனக்கு இன்னதென்று சொல்லவேண்டுமையா வீரனே.

வீரதீரதேவர்சொல்விருத்தம்.

கேரளத்தரசேயொன்று கேளுனதரசிலிந்தப்
பாரளந்தவனுங்காணாப் பரசிவனன்பிலோங்கி
சீருளவனவோசொலலுஞ் செய்யசந்தான்மாவி
லோர்கனிவங்கனியையென்னிக யுதவிதென்வரவாமையா.

வசனம்.

குடகநாட்டுக்கதிபதியேகேள் இந்த அரசாங்கத்தில் நாங்கள் கட்டளையிட்டபடி சைவசமயம் நன்றாக விளங்குகின்றனவோ சொல்லும். இப்போது நான் வந்தகாரியம் நமது ராஜனுக்கு உம்மிடத்திருக்கும் சந்தானமாங்கனி யொன்று வேண்டும் அதை சீக்கிரமாகக்கொடுத்தனுப்பும் சேரராஜனே.

பொதுவிருத்தம்.

மாங்கனிவீரதீர மன்னவன்கேட்கவங்க
மோங்கியவுயிரையென்கை யுதவென்னும்படியுலோபங்
தாங்கியகுணத்தாற் சேரன்தளர்ந்தொருதிடத்தனாகி
யாங்கதுகொடுக்கேனென்ன வறைதனன்குரைத்துமாதோ.

வசனம்.

ஒரு சந்தான மாங்கனிக் கொடுமென்று வீரதீரதேவன் கேட்டபோதே சேரராஜன் உடலோடுகூடிய உயிரை யொருவன் கொடுமென்று கேட்டாலெப்படியோ அப்படியாக உலோபகுணத்தால் மயங்கி அக்கினி கொடுக்கிறதில்லை என்கிற திடங்கொண்டு சொல்லுகிறவிதங்காண்க.

சேரராஜன் சொல் விருத்தம்.

மனிதரிலார்தானிந்த மாந்தருவன்டைந்தார்முந்நாண்
முனிவரரருளால்யாக முளரியின்முளைத்தவெந்தன்

கனிபொருளெவர்க்குமின்னந் தந்திலேனுமக்குமந்தக்
கனிதரவிசையேன்சொல்லுங் கதையிங்கேகேட வாதையா.

வசனம்.

மனிதர்களில் யாவர் இந்த சந்தானமாந்தருவை யடைந்திருக்கின்றார்கள் பாருங்கள் யான் நெடுங்காலம் புத்திரனில்லாமலிருந்து புத்திரகாமேஷ்டியாகஞ்செய்து அந்தயாகாக்கினியில் உண்டாகப்பெற்ற என்பொருளை இதுகாறும் ஒருவருக்குங்கொடுத்ததேயில்லை ஆகையால் உமக்கு அந்தக்கனியில் ஒன்றேனும் கொடுக்க விசையேன் போய்வாரும் வீரதீர தேவனே.

வீரதீரதேவன் சொல்

தரு-இராகம்-மோகனம்-அடத்தாளசாப்பு.

பல்லவி.

கொடுக்கச்சற்றிசையேனென்றாய் ஒருமாங்கனி
கொடுக்கசற்றிசையேனென்றாய்

அநுபல்லவி.

எடுக்கும்வெம்புலிக்கொடிக் கிசைந்துடன்படிக்கைச்செய்
திருக்கப்பின் பெனக்குச்சொற் கடுக்கக்கேரளமன்னா (கொ)

சரணங்கள்.

அறிவென்ன புறம்போனதா - இந்தத்தருவைப்
பிறிகின்றகால மானதா
குறுமன்னனென்னவெண்ணிக் கொளுநெஞ்சந்திடுக்கிடக் [ம்.
குனிக்கக்கண் டுதைத்துக்கைப் பிணித்துக்கொண் டிழுத்தாலு

உயிரொரு கனியாகுமா - ஒன்றையொருவர்க்
குதவநெஞ்சக நோகுமா
செயிறிவனகந்தன்னிற் செறுக்கிப்பண்டிருக்குதித்
தினத்திற்கொக் குவிற்கொடிப் பனைசுக்கைப் பறித்தந்தும் ()

அடிமை யெங்களுக்கல்லவா - நீயெனதென்ப
தாம்பிரந் தனைசொல்லவா
மடமைக்குட்டருக்குக்கன் மலைக்குணங்கெடக்குத்தி
வீசித்தந்த மரத்தைக்கண் டெடுக்குங்கைச் சமர்த்தைப்பார் ()

வீரதீரதேவர்சொல் விருத்தம்.

சேரலப்பதரோயிந்தத் தேங்கனித்தருவைப்பற்றி
வேரலைத்தெடுப்பேன்ச [illegible] மீறிலுன் றனைப்பிணித்தென்
தேரிலைக்காலிற்கடி சேயமுரசறைந்துமெலாம்
ஆரலங்கலினுன்வாழு மவைவிடம்போவேனின்றே.

வசனம்.

வாராய் சேரவீரசனுகிய பதரே நீயே எங்களாதிக்யமாயிருக்க உன்பொருளு மெங்களுடைமையல்லவா ஆகையால் இந்

சந்தானமாங்கருவை வேருடன் களைந்தெடுத்து உன்னையும் என் தேர்க்காலில் கட்டி ஜெயமுரசறைந்து முசுகுந்தமஹாராஜன் சபையில் கொண்டுபோய்விடுகிறேன் பாருமரசனே.

பொதுவிருத்தம்.

கொங்கனைப்பிடித்துத்தேரிற் சுருக்கிவெங்கோபாவேசம்
பொங்கசந்தானமாவைப் பூமியோடெடுத்துவெற்றிச்
சங்கமுமுழக்கியன்னோன் தனுக்கொடிமுதற்றசாங்கம்
அங்கையிற்பறித்துசோழ னவைமுனமவந்தான்வீரன்.

வசனம்.

வீரதீரதேவன் கொடிய வீராவேசங்கொண்டு சேரராஜனைப் பிடித்துத்தன் தேரில் கட்டி சந்தானமாந்தருவை பூமியோடு பேர்த்தெடுத்து விற்கொடி முதலிய அவனது தசாங்கங்களையும் பறித்து கையிலேந்திக்கொண்டு வெற்றிசங்கந்தொனித்து நொடிப்போதிலே முசுகுந்தமஹாராஜன் சபையில் வந்து சேர்ந்தான் (இப்பால் நடக்கிற விதங்காண்க.)

வீரதீரதேவர் சொல் விருத்தம்.

தனக்கொருபொருளுண்டாயின் சரவணபவனால்வந்த
தெனக்கருத்தில்லாசசேர விறைவனையிந்தமாவை
தனுக்கொடிமுதற்றசாங்கந் தன்னையென்கரத்தாற்பற்றி
யுனக்கெனகொண்டுவந்தே னுளத்துயரகலுமன்றே.

வசனம்.

தனக்கு ஒருபொருள் கிடைத்தால் அந்தப்பொருள் ஸ்ரீகந்தநாதன் கிருபா நோக்கத்தால் வந்ததென்கிற எண்ணமில்லாதவனாகிய இந்த சேரராஜனையும் சந்தான மாந்தருவையும் அவனது விற்கொடி முதலிய தசாங்கங்களையும் கொண்டுவந்திருக்கிறேன் இனி புத்திரசோபம் நீங்கி சந்தோஷமாயிரும் மஹாராஜனே.

முசுகுந்தமஹாராஜன் சொல் விருத்தம்.

என்னரும்பொருளோநீ செய்யிணையிலாவுதவிக்கென்றும்
மின்னலங்காணென்மாருப் பெருமையுமடைந்தேன்சேர
மன்னனைப்பிடித்து வந்தமாட்சியுமுவந்தேனிப்போ
தன்னவற்கறிவுணர்த்தியவன் புரத்தனுப்புமையா.

வசனம்.

என்னருமையாகிய பொருளே சந்தானமாங்கனியொன்று கொண்டுவரும்படியாக வனுப்பினால் அந்த விருக்ஷத்தையே வேரோடுகளைந்து கொண்டுவந்து நீ எனக்கு செய்த உபகாரத்திற்கு பிரதியுபகாரம் அறிகிலேன் இதினால் கொடாத கீர்த்தியுமடைந்தேன் அத்தருவைக் கொடேனென்று சொன்ன சேரராஜனைப் பிடித்து வந்ததனால் மிகவும் சந்தோஷமானேன்

இப்போது அவனது குற்றங்களை க்ஷமித்து நல்ல குணமுண்டாகும்படி போதித்து குடக நாட்டரசிருக்கைக் கொடுத்து அனுப்புமையா மந்திரி. (வீரதீரதேவன்) வாராய்சேரனே எங்களரசன் ஆஞ்ஞையின்படி இனிமேலும் நற்குண நற்செய்கை யுடையவனாகவிருந்து உமது நாட்டிற்குப்போய் சுகமாகவிரும். (சேரன்) தங்கள் கட்டளைப்பிரகாரம் நடக்கிறேனையா வீரதீரதேவனே. (பொது) இப்படியாக சேரனைவிட்டவுடன் தன் தேசம்போய் சேர்ந்திருந்தான். (இப்பால் நடக்கிறவிதங் காண்க.)

பொது-எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சந்தான மாந்தருவை யடைந்து வேந்தன்
தனையனுக்கென் றதிலொருமாங் கனிக்கை யேந்தி
கந்தாவென் றனந்தமுறைத் துதித்து போற்றிக்
காதலிபாற் றரவவளு முண்டு கெர்ப்ப
சந்தாம லுண்டாகிப் பலங்காய் வேண்ட
நவவீராலதுவு முண்டுத் திங்கள்
ஐந்தாரே ழெட்டொன்ப தாகிப் பத்தா
யருமையுட னொருமகனைப் பெற்றா ளன்றே.

வசனம்.

இப்படியாக அரசன் சந்தான மாமரத்தை வீரதீரதேவனாற் கொடுக்கப்பெற்று அதில் ஒரு மாங்கனியைப் பறித்துக் கையிலெடுத்து ஸ்ரீகந்தநாதனது திருநாமங்களை பலமுறையுச்சரித்து நமஸ்கரித்துத் தன் பத்தினிக்கையில் கொடுக்க அவள் அக்கனியையுண்டு கெர்ப்பமுண்டாகி பலங்காயிலிச்சை யுடையவளாயிருக்கக்கண்ட வீரர்கள் அதுவுங்கொண்டுவந்து கொடுக்க உண்டு அவ்விச்சை நீங்கி பத்து மதியுமுற்றி ஓருமையாகிய ஆண்பிள்ளையைப் பெற்றாள்.

விருத்தம்.

செங்கதிர்குலத்துதித்த செல்வனுங்கதிரொப்பாகத்
துங்கமாயிருக்சக்கண்டு தனைமுசுகுந்தவேந்தன்
அங்கிவன்மன்னென்னும மளித்துபல்லறங்கள்செய்து
செங்குந்தவீரரோடுஞ் சிந்தைசந்தோஷமானான்.

வசனம்.

சூரியகுலத்தில் பிறந்த குழந்தையானது சூரியனுதித்து வந்ததுபோல சாமுத்திரிகாவிலக்கண நன் கமைந்திருக்கக்கண்டு முசுகுந்தமஹாராஜன் அந்தப் பிள்ளைக்கு (அங்கிவன்மன்) என்கிற நாமகரணமிட்டு அந்தணர் முதலியவர்களுக்கும் அனந்தவித தானங்கொடுத்து வீரமந்திரிகளோடும் சதா சந்தோஷமுடையவனாக விருந்தான்.

விருத்தம்.

இப்படியிருக்கும்போது விந்திரநகரந்தன்னின்
மைப்படிவடிவதான வலாசூரன்கொடுமைக்கஞ்சி

எப்படியென்னசெய்வோ மெனமெலிந்தமரொல்லாஞ்
செப்பருந்துயரந்தன்னை தேவயிந்திரன்கண்டானே.

வசனம்.

இவ்விதமாக விருக்கும்போது தேவலோகத்தில் கருத்த வடிவுடைய வலாசூரன் செய்யும் கொடுமைக்கு பயந்து இனி யெப்படி யின்ன செய்யப்போகிறோம் என்று தேவர்களெல்லா மனமெலிந்து புலம்புகின்ற துயரத்தை தேவேந்திரமஹா ராஜன் கண்டு கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

தேவேந்திர மஹாராஜன் வருகிறவிருத்தம்.

பஞ்சவந்தருவுங்காம தேனிருநிதியும்பார்த்து
நெஞ்சகங்குளிர்ந்தென்னாளு நிலைபெறமுருகநாதன்
செஞ்சரணசரணமென்றுத் தேவயிந்திரனேர்வெள்ளைக்
குஞ்சரந்தன்னிலேறிக் கொலுவினில்வருகின்றானே.

தரு-இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

ராஜனிதோவந்தானே தேவேந்த்ரமஹா
ராஜனிதோவந்தானே

அனுபல்லவி.

மாசிலாநவமணி மகுடம்பளப ளென்ன
வச்சிராயுதவொளி வலதுகரத்தில் மின்ன
வரதசீலகுண சாதமாமுனிவர்
கரதலாமலக சுருதியோர்திவர (ராஜ)

சரணங்கள்.

மேனகைகீதம்பாட அரம்பையர்வி
னோதநடன மாட
மானைமருட்டும்விழி மாதர்கள் கூடவே
மருவும்வெண்சாமரை யிருபுரம் போடவே
மங்களஞ்சில நங்கைமார்புகல
சங்கமெங்கினுமு ளங்கவிங்கித (ராஜ)

ஆரணந்தனைப்படித்தே காமிய
யாகமாயிர முடித்தே
சீரணவும்பொன்னகர் தேவபதத்தில் வந்து
திருவுமிருந்தபஞ்சத் தருவுந்து விருந்து
சீலமானவடி வேலனேயசா
காலனேயடிய னேலமானுமென (ராஜ)

தேவர்கள்புடைசூழ வாடாமலர்
சிவந்தமாலிகைதாழ

பாவனமாந்தெய்வ பதமெனவே துதித்து
பதினெண் கணங்களுக்கும் பதியெனவே புதித்து

பஞ்சதாருநிழ லுஞ்சுகங்கனக
விஞ்சிவானுல காஞ்சலீரெனவே (ராஜ)

தேவேந்திரன் உபாசனை தேவதாஸ்தோத்திர விருத்தம்.

அஃது விடங்கவிமானம்.

பத்தியாய்ப்பத்திசெய்யப் படுவனையெவர்க்குஞ்சர்வ
சித்தியாய்ச்சகளமாகித் தெளிந்தநிட்களமதாகி
சத்தியாய்ச்சிவமாய்ச்சத்தி சிவத்திடைத்தாமாய்நின்ற
முத்தனெங்குழந்தைவேலன் முளரிபூங்கழல்கள்போற்றி.

விருத்தம்.

முப்பதின்மூன்றுகோடி தேவரேசுவர்க்கமுற்றி
தப்பிதஞ்செயும்வலானைச் சகமுசுகுந்தனென்று
மெய்ப்பொருளடைந்தாலின்றே வென்றனையென்னவாசான்
செப்பினனதனாலெங்கந் திருவரையழைப்பீரின்றே.

வசனம்.

முப்பத்துமூன்றுகோடி தேவர்களே கேளுங்கள் நம்முடைய தேவலோகத்தை வளைத்து வருந்தும்படியான தப்பிதஞ் செய்கின்ற வலாசுரனை பூலோகத்தில் முசுகுந்த சக்ரேசனென்கின்ற அன்பனிருக்கின்றான் அவனை யடைந்தால் வெல்வாயென்ன (நமது குருவாகிய பிரகஸ்பதிபகவான் சொன்னார்) அதன் பொருட்டு கந்திருவர்களை யழையுங்கள் தேவர்களே.

பொது விருத்தம்.

மகவதியிந்தவண்ணம் வான்வர்க்குரைக்குமுன்னந்
சிகரமாமகுடமின்ன சித்திரக்கலைகள்துன்ன
முகவொளிபளபளென்ன முருகனைமனதிலுன்னி
ககனமீதெழுந்துதேவ கந்தர்வர்வருகின்றாரே.

கந்திருவர்வருகிற-ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

தேவகந்திருவர்கள் வந்தார் - இந்த
ஜெகதலம்பாதம்படாமற்பறந்தார் (தேவ)

சரணங்கள்.

வானத்திலே வழி யுண்டு - அந்த
மார்க்கமதான வழிதனைக் கண்டு
ஞானத்திலே முருகன் தொண்டு - அவர்
கிருபையிலேநல்ல கீர்த்திமைக் கொண்டு (தேவ)

மின்னாய் யாரையும் பிடித்தவரா
இந்திரசாங் குடித்து

பொன்னகர் காண | நடித்து - என்றும்
புகைநிறமான துகிலே | யுடுத்து (தேவ)
பாடிய கீதங்கள் | தானே - நல்ல
பாலுஞ்சருக்கரை கலந்தசெந் | தேனே
ஆடு மயிலது | தானே - நம்
மறுமுகநாம மறைந்திட | லானே (தேவ)
பக்ஷிகள் போலிவர் | கூட்டம் - சதா
பகலிரவிலுமிமை யாவிழி | நாட்டம்
சொச்சம தாமிவர் | பாட்டம் - கண்டு
சொல்லவென்றுமில்லை தேகத்தில்வாட்டம் (தேவ)

கந்திருவர்சொல்-வஞ்சிவிருத்தம்.

ஏவலாரு மெங்களை கூவலென் னருட்செயாய்
தேவலோக நாதனே-சேவையுன்பொற் பாதமே.

வசனம்.

சரணஞ் சரணமையா தெய்வநாட்டரசனே தங்களிடத்தில் ஏவற்பணி பூண்டிருக்கிற அடியேன்களை அழைத்த காரியம் இன்ன தென்று கிருபைபாலிக்கவேண்டு மெங்களரசனே.

தேவேந்திரன்சொல்-விருத்தம்.

நாககந்திருவர்கேளீர் நமைவலான்வருத்துகின்ற
னுகையாலகிலமேகி யண்டர்கோனழைத்தானென்ன
ஏகசக்ரேசனை வெழின்முசுகுந்தன்றன்பால்
வேகமாய்வணங்கியிந்த விண்ணப்பஞ்செய்வீரின்றே.

வசனம்.

கேளுங்கள் தெய்வ கந்திருவர்களே நம்மை வலாசூரன் வருத்தஞ் செய்கின்றான் அவ்வருத்த நீங்கும்பொருட்டு நீங்கள் பூலோகத்தில்போய் ஏகசக்ரேசனுகவிருக்கின்ற முசுகுந்த மஹாராஜனைக்கண்டு வணங்கி எங்க ளரசன் தங்களைக் காணும்படி யழைத்துவரச்சொன்னாரென்று அதிசீக்கிரமாயிந்த விண்ணப்பஞ்செய்து வரக்கடவீர் கந்திருவர்களே. (கந்திருவர்) அப்படியே மஹாபக்கியமையா வரசனே.

பொதுவிருத்தம்.

விண்ணவர்கோமான்சொன்னவிதந்தலைக்கணியாக்கொண்டு
மண்ணவர்புகழுஞ்சோழ மண்டலந்தனிலிறங்கி
ஷண்முகன்வரப்ரசாதத் தராபதிகொலுமுகத்தின்
கண்ணில்வந்தவனைவாழ்த்தி கந்திருவரிதுசொல்வாரே.

வசனம்.

இந்தவிதமாக கந்திருவர்கள் தேவராஜன்சொன்ன உத்திரவைத்தங்கள் தலைக்கு அணிபோல வேற்றுக்கொண்டு பூலோகத்திலுள்ளவர்களெல்லாம் புகழும்படியான சோழமண்டல

த்திலிரங்கி ஸ்ரீகந்தநாதன் வரப்ரசாதம் பெற்ற ஸ்ரீசூரந்தமஹாராஜன் நவவீர மந்திரிகளோடும் வீற்றிருக்கும் கொலுமண்டபத்தில் வந்து அவ்வரசனுக்கு (அக்ஷதைத்தந்து ஏ அரசனே நீ) வாழ்க வாழ்கவென ஆசிகூறி வீணைகளை யெடுத்து மீட்டி இராகங்கூட்டி சொல்லுகிற விதங்காண்க.

தரு-இராகம்-சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

நீவரவேணும் - பொன்னுலகம்
நீவரவேணும்

அனுபல்லவி.

தேவலோக வரச னேவத்
தேடிவந்தோ மெங்களைக் காவ (நீவர)

சரணங்கள்.

விண்ணவர் குடி யேற்ற - வடி
வேலனருளைக் காத்த
மண்ணி லெவரும் போற்ற
மாசனமெனுங் கீர்த்தி வாய்த்த (நீவர)

கடவுளாம் பர சிவமே - இடக்
கௌரிசிலம்பின் பவமே
முடிவிளங்கிய வீரர்க ணவமே
முற்றுந்துணையாப் பெறற தவமே (நீவர)

தருமநிலையை நாட்டி - அந்த
சண்டன்கருவ மோட்டி
பெருமைமுருகன் பேருந் தீட்டி
பிரபுவாகிய யாவர்க்கு மேட்டி (நீவர)

பொதுவிருத்தம்.

சிரவணந்தனிலென்னுளுஞ் சிறந்தவிச்சபையீர்கேளீர்
சரவணபவன்கடாக்ஷந் தாங்கினோர்க்கரிதொன்றுண்டோ
சுரர்பதிவிடுத்ததூதர் சொல்லியப்பொழுதோர்வீரன்
நரபதிதன்னைநோக்கி நகைத்திதுசொல்லுவானே.

வசனம்.

சிவபுராணங்களை சிரவணஞ்செய்வதில் சிறப்புடைய சபையோர்களே கேளுங்கள் ஸ்ரீகந்தநாதன் கடைக்கணோக்க மடைந்தவர்களுக்கு அரியதென்பது இவ்வுலகத்தில் உண்டா? இல்லை. தேவதூதராகிய கந்திருவர்கள் இந்த வசனம் சொன்னவுடன் வல்லபத்தில் தனக்குவேறொருவரும் ஒப்பில்லாத வீரவாகுதேவர் சொல்லுகிற விதங்காண்க.

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

தொண்டர்தம்பெருமையெம்மாற் சொல்லவும்படுமோவென்னு
பண்டுனரத்தவரேவிந்தப் பாரெலாமுமதுகீர்த்தி [ம்

யெண்டிசைப்படர்ந்துமேலு மெழுந்தண்டகோளமுட்டக்
கண்டனமெங்கண்மன்னு கீர்த்தியைக்கனாக்கோன வைசெல்வோமே.

வசனம்.

சிவனடியார்கள் பெருமையை யெங்களால் சொல்லக்கூடுமோ வென்று முன்னோர்கள் சொன்ன வசனம் தவறுகுமா உம்முடைய கீர்த்தியானது இந்த பூலோகமுழுதும் சென்று அட்டதிசைகளிலும் பரவி அங்கிருந்து அண்டகோள மட்டாக வியாபித்திருக்கிறதென்பதை இங்கே எதிரில் நிற்கும் கந்திருவரால் உண்மையாகக்கண்டோம் இது போதாமல் இன்னமென்ன புகழ்ச்சியை ஸ்ரீகந்தநாதன் கொடுக்கவிருக்கின்றானோ அறிகிலோம் ஆகையால் தேவராஜன் சபைக்குப்போய் வருவோம் வாருமஹாராஜனே. (போது) (முசுகுந்தமஹாராஜன்) தேவராஜன் இட்ட கட்டளையின்படியே யான் வருகிறேனென்று சொன்னதாக உங்களரசனுக்குப்போய்ச்சொல்லுங்கள் கந்திருவர்களே. (கந்திருவர்) நல்லது போய்வருகிறோம் மஹாராஜனே.

இராஜன்சொல் விருத்தம்.

புகழ்ச்சியுங்குகனேயிந்த பூதலத்தடைந்தபேற்றின்
மகிழ்ச்சியுங்குகனேநம்மால் வருவதொன்றிலைப்பன்னூலும்
இகத்தரும்புனிதஞ்செய்த னன்றெனுமதனுனூறு
மகத்திறையுலகங்காண வழியெனக்குரையுமையா.

வசனம்.

கீர்த்தியும் இந்த உலகத்தில் யான் அடைந்த சர்வபேற்றின் போகமகிழ்ச்சியும் ஸ்ரீகந்தநாதனே தருவன் நம்மால் வருகின்றவை யொன்றுமில்லை யென்றாலும் சகல சாஸ்திரங்களும் பூமியிலுள்ள ஜீவர்கள் அரியதாயவினைசெய்தல் நல்லதென்று சொல்லுகின்றன ஆதலால் தனக்குண்டாகிய மனவருத்தம் தீர்த்துக்கொள்ள நம்மை யழைத்த சதக்கிருதுவின் பொன்னுலகம்போவதற்கு மார்க்கமெதுவோ சொல்லவேண்டுமையா வீரவாகுதேவனே. (வீரவாகுதேவன்) சொல்கிறேன் போய்வருவோம் வாருமஹாராஜனே. (போது) நவவீர மந்திரிகளோடும் முசுகுந்தமஹாராஜன் தெய்வலோகம்போகிற விதங்காண்க.

வீரவாகுதேவன்சொல் வழிநடை.

தரு-இராகம்-தன்னியாசி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்திரனுலகம்போய் வரலாமுசு
குந்தமகிபதி வாராய்

அனுபல்லவி.

சொந்தமெனுஞ்சோழ நகரம்விட்டு
சுந்தரப்பாண்டிய நாடிது மட்டு

மங்கமிருஞ்சேர நாடிது தொட்டு
மாதொண்டைமண்டல மப்புறங் கிட்டு

அருதுங்க பத்ரநதி
இதுபுங்க சித்ரநதி (இந்திர)

சரணங்கள்.

நாடினர்பாவ மறுக்குஞ்சரஸ்வதி
நதிவரும்வேகத்தைப்பாராய் - இந்த
கருமந்தபோர மிருக்கின்றசோலையில்
நடனக்கலாபத்தை போராய் - வெகு
வேடிக்கைபாக யமுனையில்மீனை
விழுங்கிறதேபெருங் காரா - மிக
விச்சித்ரமாகக் கோதாவேரிநீரில்
விளையாடுதேசிறு நாரா - இங்குக்

காடுமலிந்திருக் கின்றதெலா மலை
கங்கையருகில் வருகிறதே யலை
மூடர்கள்செய்திடும் பாவமெனுங் சொலை
மூழ்கினபேர்தமக் கெப்போதுமே யிலை

முத்திதருங் காசிநதி
நத்தினவர்க் கேசுகதி (இந்திர)

புங்கவராம்விஸ்வ நாதனையுமன்ன
பூரணிபாதமுங் கண்டு - சிவ
போதமிகுநைமி சாரண்யவந்தணர்
பொன்னடியால்விடைக் கொண்டு - பிறைத்
திங்களணிசிவ லிங்கமுகூர்த்தமே
ஸ்ரீசைலந்தனிலே யுண்டு - அங்கே
தேசமிலாவெறுங் காட்டிலிமாசலம்
தெரியுதுபாரிது பண்டு - முன்

எங்களையீன்றிடி ரத்னாச்சி லம்பு
இசைந்தஉமைப்பிறந் திட்டனள் முன்பு
பொங்கும்பலமலை கண்டுதி ரும்பு
பொன்மயமாமஹா மேருவ ரம்பு

புகழிந்த்ர திசை வந்து
ககனங்க ணசை தந்து (இந்திர)

கந்தவேள்மந்திரம் சிந்தனைசெய்திந்த
ககனவழிவந்தோ மோட்டம் - அதோ
கனகநகரில் தெரியுதேபஞ்ச
கற்பகத்தாருவின் தோட்டம்
அந்தரத்தில்தேசஸ் ஸாகவிளங்கிய
அமராபதியொரு நீட்டம் - கடல்

அமுதுண்ணுந்தேவிக் கவர்சதிமாதர்க்
கழகினிலேயொரு வாட்டம்
இந்திரபீடமிருக்குது காணும்
ஏதோவதிசயமாகவே தோணும்
வந்துகண்காண வோராயிரம் வேணும்
மாதரைக்கண்டு மடமயில் நாணும்
மண்ணாளுங் கோமானே
தென்சோழ சீமானே (இந்திர)

பொது-விருத்தம்.

சிவமணியணிந்தவீர தேவர்களொடுபூபாலன்
நவமணிபழிக்குந்தேவ நாட்டகம்வந்தகாலைத்
தவமினிமுடிந்ததென்னச் சசிபதியெதிர்கொண்டாடி
யவனனிவாழ்த்திதந்த வாசனத்திருந்தமன்னன்.

வசனம்.

உருத்திராக்கமணிகளையே பூஷணமாக சிவாகமவிதிப்படி தரித்திருக்கும் நவவீரமந்திரிகளுடன் முசுகுந்தமஹாராஜன் நவரத்தினங்களின் காந்தியு மழுங்கும் பிரகாசமுள்ள தெய்வலோகத்தில் வந்தபோது யானிதுகாறுஞ் செய்த தவம் முடிந்ததென்ன தேவேந்திரன் எதிர்கொண்டு வந்து அழைத்துப் பேர் ஆசிகூறி கொடுத்த ஆசனத்தில் இருந்தான். (அப்படியிருந்தவன் தேவேந்திரனைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க.)

முசுகுந்தமஹாராஜன் சொல் விருத்தம்.

வானவர்க்கரசேசிந்தா மணிப்பெருநிதியேபஞ்சத்
தேனவிழ்த்தருவிநிழற் செல்வமேவணங்குகின்றேன்
மானவர்க்கிறையாமென்னை மதித்திவண்வருகவென்று
யானெதுசெய்தல்வேண்டு மையநீயருட்செய்வாயே.

வசனம்.

தேவர்களுக்கரசனே சிந்தாமணி யென்கின்ற பெரிய நிதியே தேன்துளிக்கும் பஞ்சதருவினது நிழலிலிருக்கும் செல்வமே வணங்குகிறேன் மானிடவரசனாகிய வென்னை ஒருபொருளாக மதித்து பொன்னுலகம் வரவேண்டுமென்று கட்டளையிட்டாய் அடியேன் எந்தகாரியஞ் செய்யவேண்டுமோ அதையருளிச்செய்யுமையா தேவராஜனே.

தேவேந்திரன் சொல்

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசியவிருத்தம் இராகம்-முகாரி.

பல்லா யிரங்கோடி விரதபல னைதுவெனப்
பார்த்தருஞ் சட்டி நோற்றுப்
பாலெலா மொருகுடைக் கீழாளு முசுகுந்த
பார்த்திப வெனது முறைகேள்

எல்லாரு மாறுமுக் னடியரோ யப்பரம
னென்செய்வ னெனது சருக்
மேவலா சூரனு யமராட வென்வலி
யிழந்தக மெலிந்து முன்ன
நில்லாம லோடினே னப்பாவி பொன்னுலக
நிர்த்தூளி படல மாக்கி
நெறியுடைய பெண்சிறை பிடித்தமர ருயிருண்டு
நிற்கின்ற கொடிய வினைதான்
பொல்லா தெனக்கபய மபயமென வண்டினேன்
புனிதவெனை காக்க வென்றால்
புங்கநவ வீராது செங்குந்த வேலுதவி
புரியவுனை வேண்டி னேனே.

முசுகுந்தமஹாராஜன் சொல் விருத்தம்.

பொன்னிலத்திறைகேளுயேன் பொறிமயிலிறையாற்பெற்ற
மன்னவர்குணத்தின்மேலோர் மனக்குறிப்பறிந்துசெய்யு
நன்னலமறிந்தவான்றோர் நற் * குலமுடையாரெல்லா
மின்னெதிருளாரிந்நாடு நிலைத்தனவஞ்சவேண்டாம்.

வசனம்.

கேளுந் தேவநாட்டரசனே அடியேன் புள்ளிமயிலேறும் ஸ்ரீகந்தநாதனால் அடைந்த இந்தவீரர்கள் மேலாகிய குணமும் நல்ல குலமுமுடையார் அன்றியும் நேசித்தவர்களது மனக்குறிப்பறிந்து கைம்மாறு கருதாது உதவி செய்யும் பெரியோர்கள் இவர்களெல்லாம் நீ எதிரில் கண்டபோதே இந்த நாடு நிலைத்துவிட்டது இனிபயங்கொள்ள வேண்டாம் தேவராஜனே (இப்பால) வீரவாகுதேவர் இந்திரனைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

கந்தனை நினைப்போரெல்லாங் கந்தனேயடியார்தம்மை
நிந்தனைசெய்வோரெல்லா நிருதரேவலிவலானு
னெந்தனையவனாரெங்கே நுவனெடிப்பொழுதிறந்தான்
சிந்தனைச்செய்யவேண்டாம் தெளிந்தெழுந்தேவமன்னு.

வசனம்.

கேளுந்தேவராஜனே நமக்கு ஸ்ரீகந்தநாதனை நினைப்பவர்களெல்லாம் ஸ்ரீ கந்தநாதனே யாவர் அவனடியார்களை நிந்திப்பவர்களெல்லாம் அரக்கரே யாவர் ஆதலால் வல்லபமுடைய

---

* மதுரைபுராணம்-தலவிசேடம்-உரு-வது-கவி.
உலத்தினிற்புட்பராக மொளியினிற்கதிராமைந்து
புலத்தினிற்சுருங்கண்வாவிப் பூவினிற்கமலஞ்சொல்லுங்
குலத்தினில்வீரகுந்தம் குன்றினின்மேருக்குன்றந்
தலத்தினின்மதுரைமேலாந் தரமெனுந்தகைமைத்தம்மா.

வலாசுரனால் நொந்திருக்கின்றாய் அவன் ஊர் எங்கிருக்கிறது சொல்லும் இனி ஒருநொடிப்போதில் அவனிறந்துவிடப்போகிறான் மனங்கெலிந்து சண்டைக்கு எழுந்திரும் கவலைவேண்டாம் தேவராஜனே. (இப்பால்) தேவராஜன்சொல்லுகிறவிதங்காண்க.

தரு-கண்ணிகள்-இராகம்-காம்போதி-அடத்தாளம்.

சொல்லுவேன்கேளந்தத் துட்டன்கதையைச் செங்குந்தரே-வ
  லாசுரன்றவஞ்செய்து சாமியருளால் செங்குந்தரே
வெல்லரியனைத்தெமை மேலைக்கடலில் செங்குந்தரே - வெகு
  விச்சித்ரமாகவிளங்கியதீவில் செங்குந்தரே

கூறப்படாதண்ட கோளமட்டாகச் செங்குந்தரே - ஒரு
  கோட்டையதுகட்டி கொற்றவனாகிச் செங்குந்தரே
போருக்கிடமிலாமல் பொன்னகர்வந்து செங்குந்தரே - பஞ்ச
  பூந்தருவையழித்துப் போனானொருநாள் செங்குந்தரே

தேவர்களையடித்துத்தெய்வப்பெண்களைச்செங்குந்தரே-கொடு
  சிறையெடுத்துத்தனது தேசமேகினன் செங்குந்தரே
காவலரையும்ரம்பாக் கன்னியர்களையுஞ் செங்குந்தரே - மிகக்
  களைத்துவிடவடிக்கக் கண்டன்னியானுஞ் செங்குந்தரே

வெள்ளையானையேறிவிட்டேன்சரங்கள் செங்குந்தரே - அதை
  வென்றுவெனையெதிர்த்து வியர்த்திடவடித்து செங்குந்தரே
கொள்ளையாகவிந்தக் குவலயமுழுதுஞ்செங்குந்தரே - மாட
  கூடமுமேடையுங் கோபுரமிடித்து செங்குந்தரே

போனவன்மறுதினம் புரப்பட்டுவந்து செங்குந்தரே - செய்த
  போரில்யான்பட்டது போதுமேபோதுஞ் செங்குந்தரே
ஆனமட்டும்பார்த் தியானுமலுத்தேன் செங்குந்தரே - இப்போ
  தாதரிக்காவிடி லாரிடம்போவேன் செங்குந்தரே

கொடுமைசெய்யும்பானு கோபனைவென்ற செங்குந்தரே-வானங்
  குடியேறவைத்ததைக் குவலயமறியுஞ் செங்குந்தரே
அடிமையாச்சுதேகம் மாறுமுகற்குச் செங்குந்தரே - அந்தோ
  அந்தோவெனநாங்க ளவதிப்படவோ செங்குந்தரே.

பொதுவிருத்தம்.

மனதுநொந்துரைத்ததேவ மன்னனையானையேற்றிச்
சினவலானுள்ளதேசஞ் சென்றவன்கோட்டைசுற்றி
முனையுளவீரவெல்லா முத்திகைபோட்டுபேரி
கணகணவெனவேசங்கங் கரம்பிடித்தூதினரே.

வசனம்.

இந்தவிதமாக மனம் வருந்திந் தம்மிடத்தில் முறையிட்ட ஜெயம்பொருந்திய நவவீரர்கள் இரதாரூடராய் சர்வாயுதபாணிகளாயெழுந்து அந்தேவராஜனைவெள்ளையானைமேல் ஆரோகணிக்கச்செய்து கோபமுடைய வலாசுரனது நாட்டிற்போய்

அவனது கோட்டையைச் சுற்றி முற்றுகைப்போட்டு கணை கணை வென்று மோசைபெற இராணபேரிகை யடித்து வெற்றிசங்கந் தொனித்தார்கள் (இப்பால்) நடக்கிறவிதுங்காண்க.

பொதுவிருத்தம்.

கோட்டையின்காவலாளர் கொலுமுகமடைந்துவாரோர்க்
கூட்டமாய்வளைத்தாரென்னக் கூறிடச்சங்கவோசை
கேட்டனன்முடித்துவிழ்ந்து கிளம்பினன்றும்பைமாலை
சூட்டினனெழுந்துவலா சூரனும்வருகின்றானே.

வலாசூரன்வருகிற

தரு-இராகம்-மோகனம்-அடத்தாளசாப்பு.

பல்லவி.

சூரன்வந்தான் – வலாவென்னும்
சூரன்வந்தான்

அனுபல்லவி.

பாராவெதிராராவது நேராவரில் போராமென (சூரன்)

சரணங்கள்.

தேவர்களென்றால் தினுங்கரும்பு – அவர்
சேனைகளென்றா லொருதுரும்பு

சிறைதள்ளும்கோவி – மதக்குட
துறையள்ளும்பாவி – கற்பாகிய

சிலமாதரை யலமோதிட பலமாகவே கொலைசெய்திடுஞ்(சூர)

இந்தவுலகுள்ளப்பாவமொன்றாய் – வடி
வெடுத்துவந்ததென நின்றான்

இருளென்ற மேனி – கொடுமைகள்
பொருளென்ற க்யானி – அஞ்சாமலே

இங்கேவொரு சங்கூதிய பங்காளிக ளங்காரென (சூரன்)

அசுரர்கட்கெல்லா மதிகாரி – யங்க
மாயிரம்யோசனைச் சிங்காரி

அஞ்சாரசண்டாளன் – மலையென
மிஞ்சிய தோளன் – தேவாதிகள்

அமராபதி தமதாமென சமராடிடு மெமனுமெனுஞ் (சூரன்)

நாகர்கருமிசைத் துடிப்புவனும் – நூறு
ரத்தக்குடங்கள் குடிப்பவனும்

நவமணி சிங்கா – சனத்திலிந்
தவரிகள் பங்கா – வனுதின

நல்லாரிட சல்லாபவெல் லாப்பல்லாவென வல்லாசமாய் (சூரன்)

ஷ்பாதவிருத்தம்.

வந்தவனிடியினார்த்து மதிற்கடந்திருகண்சேப்பக்
குந்தங்கைக்கண்டிவ்வீரர் குமரவேடுணைவரொன்றே
சிந்தனைசெய்துதேறித் தேவர்க்குத்துணையதாக
வெந்தனைவெல்லவந்தா ரென்றெணியிதுசொல்வானே.

வசனம்.

இப்படியாக தன்னுடைய மதிலைக்கடந்து வந்து சூரன் கோடையிடிபோல ஆரவாரித்து செங்குந்தவேற் படைகளை இரண்டு கண்களும் அக்கினிப்போலச் சிவக்கக்கண்டு இந்த வீரர்கள் ஸ்ரீ கந்தநாதன் றுணைவரென்றே மனங்கலங்கி மீட்டுந் தெளிந்து தேவர்களுக்கு சகாயமாக என்னை வெல்லும் பொருட்டு வந்தார்களென்று நினைத்து சொல்லுகிறவிதங்காண்க.

வலாசூரன்சொல் விருத்தம்.

ஆறுமாமுகவர்தன்பா லறமறந்தெதுநான்செய்தேன்
தேயிலன்குந்தமேந்திச் சினப்புலிக்கொடிக்கைதாங்கிச்
சீறிவந்தெனதுநாட்டிற் செயமுரசறைந்ததென்னக்
கூறிடவேண்டுஞ்சேவற் கொடியுளோன்றுணைவீரின்றே.

வசனம்.

சேவற்கொடியுடைய ஸ்ரீ கந்தநாதன் றுணைவரே கேளுங்கள் உங்களண்ணனிடத்தில் தருமநீதி தவறி என்னசெய்தேன் (ஒன்றுஞ்செய்யவில்லையே) இப்படியிருக்க நீங்கள் என்மேல் கோவித்து குந்தாயுதபாணிகளாய்ப் புலிக்கொடியெடுத்து இந்த நகரத்தில் வந்து இரணபேரிகையடித்ததென்ன சொல்லுங்கள் வீரர்களே (இப்பால் நடக்கிற விதங்காண்க.)

நவவீரர்களுக்கும் வலாசூரனுக்கும் தருக்கம்.

தரு-இராகம்-யமுனாகலியாணி-அடத்தாளசாப்பு.

வீரர்-வல்லவனாகிலுன்மட்டிருக்காமலேமீறி - தெய்வ
மாநகரையழிக்கவரலாகுமோவலாசூரனே

வலா-நல்லதுநாங்களுந்தேவர்களுமண்ணன்றம்பி - என்னும்
ஞாயத்தினல்வந்தேனண்டஞ்செங்குந்தவீரரே

வீரர்-ஞாயமென்றுநீங்கள்ராக்ஷத வம்சர்களாச்சே - யுங்கள்
நாட்டிலிராமலேமேட்டியென்னேவலாசூரனே

வலா-தூயவனாகியசூரபதுமனைவதைத்தீர் - வந்த
சுகமெனவோதுங்கள்குகனுக்குச்செங்குந்தவீரரே

வீரர்-வந்ததுபுண்ணியம்பாவியைக்கொன்றதனாலே - அந்த
வழிதெரியாமலேமொழிவதென்னேவலாசூரனே

வலா-இந்திரனண்டாலென்ன நாங்களாண்டாலென்னபூமி-எங்
ளிருவர்க்குமொருவாகவிருக்காமல்செங்குந்தவீரரே [க

வீரர்-பொதுவாகவிருப்பது கொடுங்கோலேநீக்ருவீரானுல்-இப்
புங்கவருலகிலேலன்பங்கஞ்செய்தாய்வலாசூரனே [யோ

வலா-அதுவன்றிபின்னமுமயாரைக்கொல்லுவன்யானோ-நீங்க
ளவர்கள்பகஞ்சேர்வதனியாயஞ்செங்குந்தவீரரே

வீரர்-அனியாயஞ்சொல்பங்களறியாமல்தேவரைநீயே - கொண்ட
வருஞ்சிறைவிடும்விட்டேல்பொருஞ்சமரேவலாசூரனே

வலா-இனியிந்தவசனங்களென்னுடன்பேசுவீரானுல் - சர்வ
பீசனுகிலுங்கொல்வேன்பேசிடுஞ்செங்குந்தவீரரே

வீரர்-பேச்சுவதுமுழுதும்பிசகியவார்த்தைகள்தானே-உன்னைப்
பூசலதுகண்டுபோகவந்தோம்வலாசூரனே

வலா-தாக்ஷண்யமேதினிச்ரமாரிப்பொழிகிறேன்கண்டா-பிது
தப்பாதுங்களையெல்லாஞ்சாடுமேசெங்குந்தவீரரே

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

பாவியேநீதான்விட்ட பாணங்களெல்லாநட்டுஞ்
சாவியாமெனவிழுந்தத் தாமறிந்திலேயோவுந்த
னுவியையிழக்குங்கால மாசுதோபடைகளெல்லா
மேவினையவரையிந்நா ளெமபுரமனுப்புவோமே.

வசனம்.

பாவியாகிய வலாசூரனே நீவிட்ட பாணங்களெல்லாம் நட்டுஞ் சாவியாச்சுதென்கிற பழமொழிப்படியே என்பாணத்தால் அறுபட்டு விழுந்ததை அறிந்திலேயோ உன்னுயிரை யிழக்குங் காலம்வந்திருக்கின்றதோ எங்கள் மேல் சேனைகளை யேவியிருக் கின்றாய் இதோபாரும் அவர்களை இயமனூருக் கனுப்பிவைக்கி றோம் வலாசூரனே.

தரு-இராகம்-மோகனம்-அடதாளசாப்பு.

பல்லவி.

வீரர்க்கைவேலெடுத் தடித்தார் - வலா
சூரன்சேனைகள்துள்ளித் துடித்தார்

அனுபல்லவி.

சேரவந்தவரைக் கிட்டியே - மிக
சேவகமாய்த்தொடை தட்டியே - எங்கும்

திரளானராக்கதர் சேனைகளிற்புகுந்துத்
தேடித் தேடித் தேடிப்பிடித்திழுத்து (வீரர்)

சரணங்கள்.

ஓடினோர்க்கொன்பதா மட்டமே - நின்றோர்க்
குபிரெமனிடம்போகும் திட்டமே - குந்தங்
கோடிபேர்க்கோரடி படுமே - பிலிட்டுக்
குருதிமண்ணடையிலெழும் பிடுமே - யானைக்

கும்பலிலேபெருஞ் சிங்கம்புகுந்ததுபோல்
கொல்லு கொல்லு கொல்லுவெனவெதிர்த்து (வீரர்)

நலவீரர்யாவரு மெழுந்தார் - கரும்பென்
நசுக்கிச்சாறுகளைப் பிழிந்தார் - பிணங்கட்
குவையலாகவரக்க ரொழிந்தார் - மலையில்
கோடைப்பிடியானது விழுந்தாற் - போலும்

குலையிலுங்காலிலுந் தலையிலுந்தோளிலுங்
குத்திக் குத்தி குத்திக் குடல்சரிய (வீரர்)

கோட்டையைத்தூளாக விடித்தார் - வலான்
குதிரைரதத்தைக்கையா லொடித்தார் - நல்ல
வேட்டைக்கிடைத்ததெனத்துடித்தார் - அனந்த
வெள்ளவரக்கருயிர் மடித்தார் - ஆறுக

மேற்கிருந்துகிழக்கு வேலைவரைக்கும்ரத்த
வெள்ளம் வெள்ளம் வெள்ளம்புரண்டோட (வீரர்)

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

போரிடுங்களங்களெல்லாம் பொய்க்களமானதுந்தன்
கோரதந்தமுமொடித்தோம் கோட்டையுமிடித்துவிட்டோம்
தேரையுமுறித்தெறிந்தோம் ஜெயமுனக்கிலலைதேவர்
ஆரையும்விடுதிநீதி யலதமர்பொருவலாசுனே.

வசனம்.

போர்க்களமெல்லாம் அரக்கருயிரிழந்த பொய்க்களமான து உன்னைக்கோரப்பல்லுதிரவடித்து கோட்டையையிடித்து நீ ஏறிவந்த தேரையும் சக்கைச்சக்கையாக பேர்த்தெறிந்தோம் ஆகையால் ஜெயமென்பது உனக்கு உண்டாகிறதில்லை இனியா கிலும்தேவர்கள் சிறையை விட்டுவிடு. விடுகிறதில்லை யென்றால் சண்டைசெய் வலாசுரனே.

வலாசுரன் சொல் விருத்தம்.

சங்கரிசிலம்புதித்துத் தானவர்குலமறுத்த
சிங்கமென்றறிவேனிங்கள் ஜெகதலமனிதரானச்
சங்கதியறிந்தேதெய்வத் தலமதையழித்தேனிந்தப்
புங்கவாசிறைநான்விட்டால் புருடனென்றறைவாரோ

வசனம்.

உமாதேவியார் பாதச்சிலம்பிற்பிறந்து அசுரர்குலம் வே ரறுத்த ஆண்சிங்கமென்று அறிவேன் நீங்கள்யாவரும் மனித ராய் விட்டீரெனத் தைரியங்கொண்டு தேவலோகத்தில் புகு ந்து கொள்ளைகொண்டேன். நான் சிறையாக்கிய தேவர்களை விட்டுவிட்டால் என்னைப் புருடனென்று யாவர் மதிப்பார்கள் வீரனே.

பொது விருத்தம்.

தானவனிதனைச்சொல்ல சண்டையிலிருந்தவீர
ரானவர்முதலோருக்கு மண்ணுறும்வீரவாகு
வினனைக்கொல்லதற்கிவ் விந்திரனேபோதுமென்று
வானவர்கோனைநோக்கி மகிழ்ந்திதுசொல்லுவானே.

வசனம்.

இவ்விதமாக வலாசூரன் சொல்லக்கேட்டு சண்டை செய்துகொண்டிருந்த வீரர் யாவருக்கும் தலைமையாகிய வீரவாகு தேவர் சொல்லுகிறார் ஆதரவின்றி நிராயுதனாக நிற்கின்ற இவ்வந்தனைக்கொல்ல இனி தேவேந்திரனே போதுமென்று நினைத்து சொல்லுகிற விதங்காண்க.

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

மகபதிகேளாயிந்த வலனெளியவனாய்நின்றுங்
ககனமைவிடவுமாட்டாக் கண்டகனோடுபோர்செய்யேம்
வகையுடனவனையுந்தன் வச்சிராயுதத்தான்முன்னாட்
பகையெலாந்திரவிந்தப் படுகளங்கொல்வாய்நீயே.

வசனம்.

கேளுந் தேவேந்திர மஹாராஜனே இந்த வலாசூரன் தன்வலியும் படைவலியும் அரண்வலியும் இழந்து எளியனாகி நிற்கின்றான் இப்படியிருந்தும் தேவர்களைச்சிறைவிட மனமில்லாப்பாவி இவனோடு நாங்கள் சண்டை செய்வது நீதியல்ல முன்னாள் உனக்கும் அவனுக்கும் உள்ள பகை தீர போர்களம் போய் சண்டை செய்து வச்சிராயுதத்தால் கொல்லக்கடவாயிந்திரனே.

பொது வஞ்சித்துறை.

குந்தர்களேவிட – விந்திரனானவன்
வந்திடவேவலன் – முந்திவையோதுமே.

வசனம்.

இந்தவிதமாக நவவீரமந்திரிகளால் ஏவிய இந்திரன் யுத்தசன்னத்தனாக போர்க்களத்தில் வரக்கண்ட வலாசூரன் சொல்லுகிற விதங்காண்க.

வலாசூரன் சொல் விருத்தம்.

இந்திரத்துரும்பேநீதா னென்னடாமுருகநாதன்
மந்திரஞ்சிந்தைநீங்கா மகிமையுள்வீரரின்னோ
தந்திரமாகவந்தாய்ச் சரியிதாம்பிள்ளைவீரம்
உந்தனையெனதுகையா லாதுவேனுமிமையைப்போலே.

வசனம்.

ஒரு துரும்புக்குச்சமன்தயாகிய இந்திரனே என்னடா – நீ ஸ்ரீ கந்தநாதன் சடாக்ஷர பீஜத்தை சதாகாலமும் மனதில் பிரி

யாமல் சிந்திக்கு மகிமையுள்ள வீரர்கள் பின்னே வரத்தந்திரங் கற்றுக்கொண்டு வந்தாய் சரிசரி இதுதான் ஆண்பிள்ளைக்குத் தக்கவீரம் இதோபார் உன்னை என்கையில் உமியைப்போல வூதிவிடுகிறேன் இந்திரனே.

இந்திரனுக்கும் வலாசூரனுக்கும் தர்க்கம்.

௬௫-இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

(வலாசூரன்) தேவயிந்திரனே பாரடாவெந்தன்
சேவகத்திரனே

அநுபல்லவி.

காவலாகவீர தேவர்களையழைத்து
பாவையர்ப்போல்வந்தீ தீவரமறிகிறேன் (தேவ)

பல்லவி.

(இந்திரன்) வாவலா சூரா இப்போதெந்தன்
வல்லபம்பாரா

அநுபல்லவி.

நீவனமழித்ததும் தேவரையடித்ததும்
பாவமென்றுநினையாக் கோவமுமறிகிறேன் (வாவலா)

சரணங்கள்.

(வலாசூரன்) தந்த்ரமாய் வந்தாய் சண்டைகள்செய்ய
சமையம்பார்த்திருந்தாய்

இந்தக்கணத்தி லுதிரந்தலைவழிந்திட
பந்தெனவேயெடுத் தறைந்துவிடுகிறேன்பார் (தேவ)

(இந்திரன்) என்னடா வீரம் உந்தனைக்கொல்ல
இன்னமென்னேரம்

முன்னவவீரர்களால் சின்னப்பட்டிருந்தநீ
யின்னமும்பேசினுல் கன்னத்திலறைகுவேன் (வாவலா)

(வலாசூரன்) புலிபசிக் கொண்டால் எங்காவது
புல்லுண்ணக்கண்டாய்

எலிவந்துப்பூனையைக் கொலைசெய்யநினைத்தாப்போல்
கலகஞ்செய்கிருயெந்தன் பலந்தன்னையறியாமல் (தேவ)

(இந்திரன்) சேரவந் தடித்தாய் வாயைத்திறந்தென்
செங்கையைக்கடித்தாய்

வீரர்கைவேலிலுன் கோரப்பல்லுதிர்த்தாப்போல்
ஓரடிபாலுனது மாரைப்பிளக்கிறேன் (வாவலா)

(வலாசூரன்) இத்தனை நாளா தெரியாதொளித்
திருந்தனைவாளா

சுத்தவீரமில்லாநீ சித்தங்கிடமறக்க
வெற்றிக்கொள்ளஎண்ணிந்து சத்துருவாகவந்தாய் (தேவ)

இந்திரன். நல்லதிப்போது - சத்தியமெல்லாம்
ராக்கதர்க்கேது
வல்லவன்றலைத்தன்னை ஒல்லெனவிழுந்திட
வெல்லுவேன்குலிசத்தால் கொல்லுவேன்கொல்லுவேன்

பொதுவிருத்தம்.

சத்தியவீரரெல்லாந் தானவனைமைநாகங்
கைத்தலம்பிடித்துவந்து கற்பகத்தரசின்வஜ்ர
வத்திரங்கொண்டுபிஞ்ச மறுத்திடென்றதுபோல்வல்லான்
மத்தகந்துணித்துவெற்றி வால்வளைமுழக்கினரே.

வசனம்.

சத்தியந்தவறாத நவவீரர்கள் வலாசூரனாகிய மைநாகபரு வதத்தை தமது கையிற்பிடித்துவந்து இந்திரனது வச்சிராயுதத்தால் சிறகையறுத்திடென்றதுபோல வலாசூரனது சிரசைத் துணித்து வெற்றிச்சங்கந்தொனித்தார்கள்.

இதுவுமது.

சங்கவாத்தியமுழக்கிச் சசிபதிதன்னைக்கூட்டி
மங்களமுரசமார்ப்ப வந்தனர்வீரதேவர்
அங்கதையறிந்தமேலோ ரகமெலாம்புளகமாகிப்
பங்கயன்முதலானோரும் பன்மலர்பொழிந்தார்மாதோ.

வசனம்.

நவவீரமந்திரிகள் தேவேந்திரனை யழைத்துக்கொண்டு யுத்தகளத்தினின்று நீங்கி வெற்றிசங்கந்தொனித்து தெய்வலோகத்தில் வரக்கண்ட தேவபதத்திற்கு மேற்பதத்திலிருக்கும் பிரமன், விண்டு, முதலிய தெவர்கள் அத்தியந்த சந்தோஷமுடையவர்களாய்ப்பூமாரி பொழிந்தார்கள்.

பொதுவிருத்தம்.

அந்தரத்தேவநாட்டி னழகலங்காரமாக்கி
யிந்திரன்றன்னையோர்பத் தெண்கணத்தவர்கள்வீர
குந்தமெம்முகமுகேசக் குழுவொடுமீகுடஞ்சூட்டிச்
சுந்தரச்சிங்கந்தாங்குந் தொல்லணையிருத்தினரே.

வசனம்.

அழகிற் சிறந்த தேவலோகத்தை பசும்பந்தர் தோரணமுதலியவுநாட்டி, சாமரை, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைகயல், முதலிய அட்டமங்கலங்களாங்காங்கமைத்து அலங்காரஞ்செய்து முசுகுந்த மஹாராஜன் நவவீரமந்திரிகள் அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், கிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர்,

விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாய வாசிகள், போகபூமியர் முதலானவர்களெல்லாம் தங்கள் தங்கள் ஒழுக்கின்படி ஏககாலத்தில் கூடியிருந்து தேவேந்திர மஹாராஜனைப்பழமையாகிய சிங்காதனத்தில் வீற்றிருக்கச்செய்து மகுடஞ்சூட்டினார்கள். (பொது) இவ்விதமாக சிங்காதனத்திலிருந்த தேவேந்திரன் முசுகுந்த மஹாராஜனைப்பார்த்துச் சொல்கிற விதங்காண்க.

தேவேந்திரன்சொல்-விருத்தம்.

நிசிசரன்றன்னைவெல்ல நெறியுளவீரரீந்த
முசுமுகவரசேயான்முன் மூதவத்தெந்தநாளும்
விசிதமாய்ப்பூசைசெய்யும் விடங்கனைக்கண்டுபோற்றக்
குசலமாயெதிரினிற்குங் கோவிலுட்போவோம்வாராய்

வசனம்.

வலாசுரனை வெல்லும்பொருட்டு நன்னெறியுடைய நவ வீரமந்திரிகளை சகாயமாகக்கொடுத்த முசுகுந்தமஹாராஜனே கேள் நான் பழமையாகிய தபோபலத்தினால் பூசிக்கும் வீதி விடங்கப் பெருமானைக் கண்டு வணங்க இதோ எதிரிலிருக்கும் கோவிலுக்குப் போய்வருவோம் வாருமையா அரசனே. (முசுகுந்தமஹாராஜன்) நல்லது வருகிறேன் தேவராஜனே.

தேவேந்திரன்-சொல்.

தரு-இராகம்-பியாகடை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வீதிவிடங்க ரிவர் தானே
விரும்பிபூசை செய்வன்யானே

அனுபல்லவி.

சோதிமிகும் ப்ரகாசயோக
சொர்னத்யாக ரென்னும்விவேக (வீதி)

சரணங்கள்.

பார்வதியிடப்பாகங் கண்டுபணிந்துகொண்டேரா
பாலசுப்ர மணியனையுங் கண்டேரா
சீருடனுந்தன் சிந்தையில் தோரா
தீரா வீரா ஜெய கெம் பீரா (வீதி)

செங்கழுநீர்மாலையணிந்த சிவபெரு மாளா
சிலம்பணிந்திடுந் திருவடிதனைக் காளா
சங்கராவரந்தா வென்று கேளா
தாழா தாளா புண்ணிய வாளா (வீதி)

காளகண்டமுஞ்சூலமுங் கண்டகாக்ஷிபோதாதா
கருமமானது நம்முடனின்னம் வாதா
நானும்ஷண்முக மந்திர வேதா
நாதா தாதா எங்கும்ப்ரக் யாதா (வீதி)

பொதுவிருத்தம்.

விண்டுபோற்பூசைசெய்யும் விண்ணவனுத்மலாபங்
கண்டனன்மெழுகதாகி கைலைமாமலையுனீயே
கொண்டவிப்பூரமரூப கோலமோவென்னவிழ்ந்து
முண்டகமலரையேத்தி முசுமுகன்றுதிக்கின்றனே.

வசனம்.

திருமாலைப்போல அருமையாகிய பூசைசெய்கின்ற தேவேந்திரனது ஆத்மலாபமாகிய விடங்க விமானத்தைகண்டு அனலைக்கண்ட மெழுகைப்போல மனமுருகி சொல்லுவான், கைலாயமலையில் நீகொண்டிருக்கு மேலாகியகோலம் இதுதானோவென்ன அட்டாங்க நமஸ்காரமாக விழுந்து தாமரைமலர்போன்ற திருவடியை வணங்கி முசுகுந்தமஹாராஜன் துதிக்கிற விதங்காண்க.

தரு-கண்ணிகள்-இராகம்-சாவேரி-ஆதிதாளம்.

ஓமரஹரசிவ சாம்பவமூர்த்தியே
யுன்றிருவடிகண்டேன் உன்றிருவடிகண்டேன் - த்யாகேசா

பாம்பணியுங்கோலத்தை நான்பரவித்துதித்து
பரமானந்தங்கொண்டேன் - பரமானந்தங்கொண் - த்யாகேசா

பார்வதியாளிடமா யோர்புரத்திலிருக்கும்
பாக்கியமென்னசொல்வேன் பாக்கியமென்னசொ-த்யாகேசா

மார்புரளுஞ்செங்கழு நீர்மாலையையணிந்த
மகிமையென்னசொல்வேன் மகிமையென்னசொ - த்யாகேசா

ஆறுமுகன்குழந்தை யாகநடுவிருப்ப
தற்புதகாக்ஷியே அற்புதகாக்ஷியே - த்யாகேசா

நீறணியும்புனித நீலவிடகண்டனே
நின்மலனேசிவனே நின்மலனேசிவனே - த்யாகேசா

சொர்னவிமானத்தி லன்னையாங்கமலாக்ஷி
சுந்தரங்கண்டுகொண்டேன் சுந்தரங்கண்டுகொண் - த்யாகேசா

மூன்றுளிலேகைலை சன்னிதானங்கண்ட
மூர்த்திநீயல்லவோ மூர்த்திநீயல்லவோ - த்யாகேசா

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்
தேவாரப்பண்.

ஒப்புயர்வொன்றுந்தோர வோங்கொளிப்பிழம்பேபோற்றி
கப்பறவிளங்குஞ்ஞான கனிதருங்காவேபோற்றி
வெப்புறுபிறவிவேலை வீழ்ந்துழல்வெழிகொள்சிவர்க்
கெய்ப்பறவிமையாவின்ப மீந்தருளெந்தாய்போற்றி.

எந்தையேபோற்றியீச வீசவோம்போற்றியார்க்குந்
தந்தையேபோற்றியொப்பி ருயுமாந்தயாள்போற்றி

முந்தையேயெவற்றினுக்கு முந்தையாமுதோய்போற்றி
சந்தையோர்மறைசூழ்பாதத் தாமரைசரணம்போற்றி.

சரணெனவாலிற்கஞ்சிச் சார்ந்தவர்க்கமிர்தநல்கி
யரணெனவளித்தகைம்மா றற்றபோருளேபோற்றி
காரணவாதனையைக்காணார் காயமாம்பொதுவிலாடுஞ்
சரணவாரிசத்தேநல்கும் தற்பராசம்போபோற்றி.

சம்புவேசிவமேபோற்றி தனியிருட்கிடந்தவேழை
வெம்பலையொழிப்பான்ஞான விளக்கருள்விமலாபோற்றி
சம்பலைகண்ணீர்காணுக் கருத்தறிந்தறியார்போலும்
உம்பருக்கரியகாக்ஷி யுணர்த்தியிங்குணர்ந்தோய்போற்றி.

உணர்ந்திடென்றுணைத்தியார்க்கு முட்புரத்துலவாதென்றும்
புணர்ந்திடும்புணர்வேபோற்றி பூரணப்பொலிவேபோற்றி
தணந்தெனைத்த்ரியாய்போற்றி தாரகத்தலமேபோற்றி
திணந்தகழாரூர்சொன்ன த்யாகனேபோற்றிபோற்றி.

பொதுவிருத்தம்.

அன்பினால்முசுமுகேந்த்ர னுடினன்பாடினன்மெய்
யென்பெலாமுருகிநிற்க விந்திரனறியாவண்ணம்
மன்பரன்றியாகமேற்றே யெனைத்திருவாரூர்தன்னி
லன்பனேபூசிப்பாயென் றறைந்திடமகிழ்ந்தான்மன்னன்.

வசனம்.

இவ்விதமாக முசுகுந்தமஹாராஜன் இயற்கை யன்பினால் பேராநந்தக்கூத்தாடி சிவநாமங்களை யெடுத்துப்பாடி தேகம் வியர்க்க எலும்புகள் நெக்குருக ஆனந்த அருவி இரண்டுகண்களிலும் சிந்தும்படி நிற்க, சிவபெருமான் கண்டு மகிழ்ந்து தேவேந்திரனறியாதபடி சொல்லுகிறார். ஏ! அன்பனே கேள் தேவேந்திரனிடத்தில் என்னைத் தியாகமாகக்கேள் கொடுப்பன் திருவாரூரில் கொண்டுபோய் பூசிக்கக்கடவை யென்றார். அது கேட்டு அரசன் சந்தோஷமானான். (இப்பால் நடக்கிற விதங் காண்க.)

தேவேந்திரன்-சொல் விருத்தம்.

விடங்கனைக்கண்டுபோற்றி வேந்தனேபுனிதமானே
மடங்கலேறனையவீர வாகுவேமுதலாம்வீர
ரடங்கலும்வாரீரன்பா லானந்தங்கொள்வதாக
திடங்கொளும்விருந்துகாம தேனுவாலளிப்பேனின்றே.

வசனம்.

கேளாய் முசுகுந்த மஹாராஜனே வீதிவிடங்கப்பெருமானைத்தரிசித்து பரிசுத்தமானேனும் இனிதாங்களும் ஆண்சிங்கம் போன்ற நவவீரமந்திரிகளும் எழுந்தருளிச் செய்யுங்கள் சந்தோஷமுண்டாகும்படி என் அன்பினால் காமதேனுவைக்கொண்டு விருந்து செய்விக்கிறேன் வாராய் மஹாராஜனே.

௮

தரு-இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

விருந்தமுதுண்ணவாரீர் – சமர்
வென்றுகளுவிளைப்பாரீர்.

அநுபல்லவி.

வருந்தவந்த வாலாஹுயிர்வாங்கிய
வாகரே போகரே யோகரே த்யாகரே (விருந்)

சரணங்கள்.

குந்தமுஞ் சிவப்பேற – வலாக்
கொடியவன்குடி மாற – எங்கள்
அந்தரத்தவர் மீற – அம
ராடியென்மனந் தேற

ஆபத்பாந்தவ ராகியெழுந்தருள்
அய்யரே துய்யரே மெய்யரே செய்யரே (விருந்)

வசனம்.

கையிற்பிடித்த குந்தமானது உதிரம்ளைந்து சிவப்பேறவும் வாலாசூரன் வமச மாறிப்போகவும் இந்த தேவர்கள் மீறியிருக்கவும் சண்டை செய்து என் மனமானது தேறவும் ஆபத்சகாயராய் எழுந்தருளி வந்த ஐயமாரே, பரிசுத்தவான்களே அமுதுண்ணவாருங்கள்.

சரணங்கள்.

நீங்களாண்பெருஞ் சிங்கம் - இது
நிஜநிஜமனந் தங்கம – சதா
வோங்குங்கீர்த்திகளெங்கும் – இந்த
உலகிலுங்கட்சற் சங்கம்

உதவிக்குதவி செய்யவறிகிலேன்
உண்மையே அண்மையே திண்மையே தண்மையே (விரு)

வசனம்.

நீங்கள் ஆண்சிங்கமே உண்மையாக உங்கள் மனதும் தங்கமே பூலோகத்திலும் தேவலோகத்திலு மிருக்கிற பெரியோர்கள் தேவேந்திரனுக்கு செங்குந்த வீரர்கள் வலாசூரனைக் கொன்று துன்பநீக்கி நிலைபெறச் செய்தார்களென்கிற சற்சங்கமானது இந்த உலகமுள்ளவரைக்கு மிருக்கும்படியாகிய உதவிக்கு பிறிதி உதவிசெய்ய என்னிடத்தில் உண்மையாகவில்லை அமுதுண்ண வாருங்கள்.

சரணங்கள்.

முப்பழங்களுஞ் ருசியே - இந்த
புதியதேன்வெகுருசியே – உண்டு
இப்பொழுதுங்கள்பசியே - தணிந்
திந்தலோகத்தில் வசியே

ஏகநாளுமிருந்திடவேண்டுமென்
ஈசரே நேசரே போஜரே ராஜரே (விருந்)

வசனம்.

வாழை, மா, பலா வென்று சொல்லும் முக்கனிகளும் சுசிகரமாக விருக்கின்றது இந்த தெளிந்த செந்தேன் வெகு ருசியாகவு மிருக்கிறது இதை யுண்டு உங்கள் பசிதணிந்து இந்த தேவலோகத்தில் எப்போதும் வாசமாக விருக்கவேண்டுமென் நேசராகிய க்ஷத்ரியவீரர்களே.

சரணங்கள்.

முசுகுந்தராஜகபதியே - வேல்
முருகமாதபோ நிதியே - தெய்வ
பசுவினால்தருந் ததியே - மதுப்
பாலினோடமு துதியே

பண்டுநாங்கள் கடைந்தமுதொப்பிது
பத்தனே சுத்தனே சித்தனே கத்தனே. (விரு)

வசனம்.

முசுகுந்த சக்கிரவர்த்தியாகிய மஹாராஜனே வேலேந்திய ஸ்ரீகந்தநாதனால் நவவீரனைத் தபோபலமாகப்பெற்ற செல்வமே காமதேனுவால் தரப்பெற்ற பால், தயிர், நெய் முதலியதும் உண்ணும் இது முன்னாள் நாங்கள் திருப்பாற்கடலைக் கடந்த அமுதத்திற்கு சமமாகவிருக்கும் பரிசுத்தவானே.

பொதுவிருத்தம்.

மண்டமர்கடந்தவீர மன்னருமரசன்றானு
முண்டபின்தேவராஜன் உயரணைதனிலிருத்தித்
தண்டிருவாடாமாலை தரித்துபறபடைகளீந்து
மண்டலத்தரசைநோக்கி வானவனிதுசொல்வானே.

வசனம்.

இந்தவிதமாக வீரதேவர்களும் முசகுந்தராஜனும் அமுதுண்டபின் தேவேந்திரமாகாராஜன் ஆசனத்தி லிருக்ககசெய்து அழகிய வாடாமாலை தரித்து பலவித அஸ்திரங்களுங் கொடுத்து சந்தோஷமாக பூலோகத்தரசனைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

தேவேந்திரன்-சொல் விருத்தம்.

மாமுசுகுந்தனென்று மகிபனேசொல்லக்கேளாய்
பூமியில்வலனைவென்று பொன்னகரெனக்குத்தந்து
நீமனங்கொண்டெந்த னேரிலேசொல்வாயானால்
தாமதமில்லையிந்தத் தக்கணந்தருவேன்மன்னா.

வசனம்.

கேளும் முசுகுந்த மஹாராஜனே பூலோகத்திலிருக்கும் வலாசுரனை ஜெயித்து தேவலோகத்தின் அரசிருக்கை எனக்

குக்கொடுத்த நீ மனதில் எதை நினைந்திருக்கின்றனையோ அதைக்கேட்டால் தாமிதமில்லாமல்கொடுப்பேன் மஹாராஜனே.

முசுகுந்தன்-சொல் கொச்சகம்.

ஐயாமகபதியே யடியவனுககேதுகுறை
மெய்யாகவேவிளங்கும் வேலவனாருளிருக்க
செய்யாத்திருமேனித் தியாகர்தனைத்தியாக முந்தன்
கையாற்கொடுத்தானார் கதையுரைக்கவேண்டுவனே.

வசனம்.

கேளுமையா தேவேந்திர மஹாராஜனே உண்மைப் பொருளாகிய ஸ்ரீகந்தநாதன் திருவருளிருக்க அடியேனுக் கென்ன குறையிருக்கின்றது சிற்சொரூபனாகிய த்யாகராஜப்பெருமானை யெனக்குத்யாகமாக உமது கையினாற்கொடுத்து அப்பரமன் உம்மிடத்தில் வந்த வரலாற்றையுஞ்சொல்ல வேண்டுமையா மஹாராஜனே.

தேவேந்திரன் சொல்.

தரு-கண்ணிகள்-இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

சொர்னவிமானத்தை யானடைந்தகதையை
சொல்லுவேன்கேளையா முசுகுந்தனே
முன்னரிநாரணன் பாலகன்வேண்டியே
முக்கண்ணனைக்கருதி முசுகுந்தனே
மாதவஞ்செய்திட சிவனுமையாளொடு
மழவிடைமேல்வந்து முசுகுந்தனே
மாதவனெனும்படி மாதவஞ்செய்தனை
வரமெதுகேளென்ன முசுகுந்தனே
கண்ணனும்பரமனை போற்றியொருகுழந்தை
கலிதவிர்த்தாளென்ன முசுகுந்தனே
அண்ணலாகியசிவ னவ்வரமளித்திட
அரனைப்பணிந்தானரி முசுகுந்தனே
தனக்கிளையவளென்றே தன்னைப்போலரனுக்கு
சத்தியிவளுமென்றே முசுகுந்தனே
நினைக்கமறந்தனனே பனையைப்பணியாநெறி
நிலைப்புருங்கிக்கேதகு முசுகுந்தனே
கண்டுமைகோபித்து மாலேநீபெரும்பிள்ளை
கர்த்தாழிக்கவென்று முசுகுந்தனே
அண்டர்நாயகனோடு மம்மைமறைந்திடவே
அச்சுதனாறிந்து முசுகுந்தனே
மாலெனல்பொருந்தவே மயங்கித்தவமிழந்து
மறுதவஞ்செய்யலுற்றான் முசுகுந்தனே

2

பாலசுப்ரமணியனைப் பார்ப்பதியைச்சிவனை
பசும்பொன்விமானத்தில் முசுகுந்தனே
ஆகமப்படிசிவபூசை செய்தேநெடுநாள்
அருந்தவம்புரிந்திட முசுகுந்தனே
ஏகாம்பரத்துரையும் எம்பெருமானுமையும்
எழுந்தனர்குகனென்று முசுகுந்தனே
காக்ஷித்தரவறிந்த கார்வண்ணன்மூவரிடக்
கமலவடிபணிந்து முசுகுந்தனே
தாக்ஷியதுவில்லாமல் தனயன்வரமெனக்குத்
தருகவென்றிரந்திட முசுகுந்தனே
செய்யுந்தவமகிழ்ந்து தேவியும்வாய்மலர்ந்து
சேயன்றுருபமென்றே முசுகுந்தனே
ஐயனுடன்கைலை சென்றனள்மாயனெஞ்சி
னரவிந்தவழியாக முசுகுந்தனே
காதலன்றனைப்பெற்று கமலையினால்வளர்த்து
காமனெனும்பேரிட்டு முசுகுந்தனே
பூதலந்தன்னைவெல்ல பஞ்சமலர்கொடுத்து
புரவலனாக்கினன் முசுகுந்தனே
அந்தமதன்சிவனு ரனல்விழியாலெறிந்து
அருவமாகிப்பிழைத்தான் முசுகுந்தனே
இந்தவிமானத்தை நாரணனன்றுமுதல்
எடுத்துமார்மீதில்வைத்து முசுகுந்தனே
ஆலிலைமேற்கடலில் அறிதுயிலமர்ந்திட
அவர்பெருமூச்சசைவால் முசுகுந்தனே
பாலம்பாத்தசைவால் பாம்பினுயிர்ப்பசைவால்
பரமனடித்திருக்க முசுகுந்தனே
வாற்கலியால்மெலிந்து மாகருடனென்சென்று
மாயனடிபணிந்தேன் முசுகுந்தனே
பாற்கடலிற்றுயிலும் பரந்தாமனிங்குவந்து
பாதகன்றனைக்கொன்று முசுகுந்தனே
பார்ப்பதிகுமரவேள் பரமனும்வீற்றிருக்கும்
பசும்பொன்விமானத்தை முசுகுந்தனே
ஏர்ப்பவென்கரந்தன்னில் தியாகமாகக்கொடுத்து
ஏகினன்றுபிற்கொள்ள முசுகுந்தனே
விடங்கவிமானத்தை யன்றிருந்தின்றுமுதல்
வேதவிதிப்படியே முசுகுந்தனே
திடங்கொண்டுபூசனைநான் செய்கின்றபரமனை
தேவியைக்குமரனை முசுகுந்தனே

பத்துநூற்றுத்தலையாம் பாம்பணைமேற்றுயிலும்
பண்ணவனருளென்று முசுகுந்தனே
உத்திரவேகிடைத்தா லென்சுரத்திருப்பதை
உனக்குத்தருவேன்கண்டாய் முசுகுந்தனே.

பொதுவிருத்தம்.

ஆயிரங்கண்ணனிவ்வா றறைந்திட முசுமுகேந்த்ரன்
ஆயிரந்தலையுண்ணாகத் தயிதுயிலமர்ந்தோனென்றான்
தாயகமாகியிந்தச் சகமெலாங்காக்கும்வள்ளல்
ஆயமாற்கருடனேறி யமரர்முன்வருகின்றானே.

வசனம்.

இவ்விதமாக தேவேந்திரன் சொல்லக்கேட்டு முசுகுந்த மஹாராஜன் ஆயிரஞ்சிரங்களையுடைய சேஷசயனத்தில் சர்வமும் அறிந்துறங்கும் திருமாலே என்று நினைத்தான். இந்த உலகமெல்லாம் தாயைப்போலவயிற்றில் வைத்துக்காக்கும்படியான நாராயணமூர்த்தி இதையறிந்து கெருடன்மேல் ஆரோகணித்து தேவசபைக்கு வருகிறவிதங்காண்க.

தரு-இராகம்-தன்னியாசி-அடதாளசாப்பு.

பல்லவி.

பரமபதஸ்ரீமன் னாராயணன்தெய்வ
பதவியில்வந்தானே

அனுபல்லவி.

திரமுடனேகெருட வாகனமேறியே
ஜெம்தக ஜெம்தக ஜெம்தக ஜெம்மென (பரம)

சரணங்கள்.

சங்கமோர்கரம் பம்பம்-பம்பம்-பம்பம்மென
சக்ரமோர்கரம் கிரீல்-கிரீல்-கிரீலென
துங்கவாளொலி தணல்-தணல்-தணலென
சுப்ரதண்டம்வில் பளீல்-பளீல்-பளீலென
சோதியானபொற் பீதாம்பரமசைந்திட
தோம்தன-தோம்தன-தோம்தன்-தோமென (பரம)

சோதிமாமறை ஹரீ-ஹரீ-ஹரீயென
துவாரபாலகர் சபாஸ்-சபாஸ்-சபாசென
நாததுந்துமி திமீ-திமீ-திமீயென
நாகராஸ்மலர் குபீல்-குபீல்-குபீலென
நம்பியெனைநினைந்த முசுகுந்தராஜனே
நான்வந்தேன்-நான்வந்தேன்-நான்வந்தேன் எனவோடும் (பரம)

உவணசிறகொலி படீல்-படீல்-படீலென
உரகமூச்சது புரூ-புரூ-புரூவென
சவரிசாமரை சரேல்-சரேல்-சரேலென
சகலவாத்தியம் கணல்-கணல்-கணலென

ROJA MUTHIAH

தந்திக்காகவந்த தன்மையைப்போலவே
தனதந்தோம்-தனதந்தோம்-தனதந்தோம் தன்வென (பரம)

நாராயணமூர்த்தி சொல் விருத்தம்.

ஐந்தொழிற்கதிபனான அறுமுகப்பெருமான்றன்னைச்
சொந்தமாயடைந்தவெங்கள் துரைமுசுகுந்தமன்னா
உந்தியுற்றுயில்வதல்லால் ஒருதொழிலுடையோனான
எந்தனைசிந்தைசெய்த தின்னதென்றியம்புவாயே.

வசனம்.

சிருஷ்டி-திதி-சம்மாரம்-திரோபவம் - அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியமும் சன்னிதான விசேஷத்தால் நடிப்பிக்கவல்ல சுத்த பிரம்மமென்று அர்த்தந் தராநின்ற சுப்பிரமணியஸ்வாமியை தபோபலத்தாலடைந்திருக்கும் முசுகுந்தமஹாராஜனே கேள், பாற்கடலில் நித்திரைசெய்வதுந்தவிர காக்கும்படியாகிய ஒரு தொழிலையுடையவனாகிய என்னை நினைத்தகாரியம் இன்னதென்று சொல்லும் மஹாராஜனே.

முசுகுந்தமஹாராஜன் சொல் விருத்தம்.

பூப்படர்ந்தாரூர்தன்னில் பூசனைச்செய்வதற்கு
மாப்பசும்பொன்விமான மகபதிதன்னைக்கேட்டேன்
தூப்பசுந்துளபமாயோன் சொன்னபோதளிப்பேனென்றான்
காப்பதேகருமங்கொண்ட கண்ணனேபோற்றிபோற்றி.

வசனம்.

பூலோகத்தில் சென்று திருவாரூரில்வைத்து பூசிப்பதற்கு மேன்மை பொருந்திய சொர்ன விமானத்தை தேவேந்திரனைக் கேட்டேன் அவர் பரிசுத்தமாகிய பசிய துளபமாலையணிந்த திருமால் உத்திரவு கொடுத்தால் கொடுப்பேனென்றார் ஆகையால் தாங்கள் உத்திரவு செய்யவேண்டும், காக்கும்படியான தொழிலை கைக்கொண்ட நாராயணமூர்த்தியே சரணம் சரணம். (இப்பால் நாராயணமூர்த்தியானவர் தேவேந்திரனைப்பார்த்துச் சொல்லுகிற விதங்காண்க.

நாராயணமூர்த்தி சொல் விருத்தம்.

கார்ப்பதிசொல்லக்கேளாய் கடன்மிசை[illegible]தென்
மார்ப்பதிந்தாடல்செய்யும் வள்ளலுங்குமரவேளும்
பார்ப்பதியுடனமர்ந்த பசும்பொன்விமானந்தன்னைச்
சூர்ப்பதியழித்தவேலோன் றொண்டனுக்களிப்பாயின்றே.

வசனம்.

மேகவாகனனாகிய [illegible] தேவேந்திரனே யான் பாற்கடலில் நித்திரை செய்யும்போது என் மார்மீதில் சாய்ந்து நடனஞ்செய்யும் சிவபெருமானும், சுப்பிரமணியரும் உமாதேவியும் வீற்றிருக்கின்ற சொர்ன்ன விமானத்தை சூரனுடைய மகேந்திரபுரியை அதம் செய்த வேலாயுதக்கடவுளுக்கு அன்

பணிய முசுகுந்தமஹாராஜனுக்கு இப்பொழுதே கொடுக்கக்
கடவாய் தேவேந்திரனே.

பொது-விருத்தம்.

கேசவனிந்தவண்ணங்கிளத்தினன்சென்றான்கேட்ட
வாசவன்வஞ்சமாக மயன்றனால்விதித்தநேர்ந்த
வீசனெம்மனுவிராஜ வேந்தெதிர்வினவப்போந்
தேசுறுவிடங்கரேற்று செற்றிருவாரூரொன்றான்.

வசனம்.

இந்தவிதமாக நாராயண மூர்த்தியானவர் சொல்லிவிட்டு
தம்மிருப்பிடஞ்சென்றார். அதுகேட்ட தேவேந்திரன் இனி
யென்ன செய்வேன் எப்படி கொடுப்பேன் என்று கபடமாகக்
கருதி ஒருயோசனைச்செய்து விசுவகன்மனால் அதுபோன்ற வி
மானஞ் செய்வித்தான். அதுகண்ட விடங்கப்பெருமான் எ
முசுகுந்தனேகேள் இந்திரன் விமானங்கொடுப்பன் அதை இரு
கையினாலும் சிவப்பிரசாத மெனவாங்கிக் கொண்டு விடங்க
ப்பெருமான் நீதானோ வென்ன வொரு மொழிக்கேள் நான்றா
னெனப் பிரதியுத்தரங் கொடுத்தால் இந்திரனுத்மலாபமென
நிச்சயித்துக் கொண்டுபோய் திருவாரூரில் வன்மீக நாதரது
சன்னிதானத்தில் எழுந்தருளச்செய்யென்றார். (இப்பால் சத்த
விடங்க விமானத்தை-தேவேந்திரன் முசுகுந்தனுக்குக் கொடு
க்கிறவிதங்காண்க.)

பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இந்திரன். மாசினவமணியனைய பொன்னொளிவிமானமிது
வாங்குகரமுசுகுந்தனே

முசுகுந்த. மாதவப்பிரசாதமீயொன்றுமுரையாம
ஹேசரிவரலவிந்த்ரனே

இந்திரன். மங்களசுரவிகோடி தங்கவொளிகாந்தரனை
வலமேந்துமுசுகுந்தனே

முசுகுந்த. மண்டலத்தில்லாத சுந்தரமிருந்தாலு
மௌனரிவரலவிந்த்ரனே

இந்திரன். நீசினகரங்கண்ட திருவுருவிதேந்துகிக
நேசமிகுமுசுகுந்தனே

முசுகுந்த. நிலவினொளிகாட்டிடியனை யெற்றுகின்றனையிந்த
நினைவினவரலவிந்த்ரனே

இந்திரன். நித்தநின்மலவீச னிறைதருவிமானமிது
நிலையுடையமுசுகுந்தனே

முசுகுந்த. நெஞ்சொன்றுவாக்கொன்று புகல்கின்றதாலிந்த
நெறியினிவரலவிந்த்ரனே

இந்திரன். பேரிகலாகவமாக தந்தெதென்றெண்ணாது
பெற்றுக்கொளுமுசுகுந்தனே

முசுகுந்த. பேருமில்லையென்கின்ற நாதவடிவாலென்னது.
பிரியரிவாலவிந்த்ரனே

இந்திரன். பிங்கலவிடங்கமிகு சங்கரவிமானமிது
பெருமையுளமுசுகுந்தனே

முசுகுந்த. பித்தனென்றிடையூச லாட்டினாலுந்தந்த
பெரியரிவாலவிந்த்ரனே

இந்திரன். தேசனகரிவரென்ன நீபறிதலெதுகண்டு
செல்வமிகுமுசுகுந்தனே

முசுகுந்த. த்யாகநீயாவேன்று வினவவெதிராமெனில்
தேற்றமடைவேனிந்த்ரனே

இந்திரன். திருமாலெனக்கீய்ந்த த்யாகரிரிவரேந்து
திண்ணமாய்முசுகுந்தனே

முசுகுந்த. சிவசிவாசொன்னகுறிப்பிலொருகுறையில்லை
செங்கரங்கொடுவிந்த்ரனே.

பொது-விருத்தம்.

சதக்கிருதிந்தவண்ணந் தந்திடும்விடங்காறு
முதற்கனவீரனை மொய்ம்பனுதியரங்கேந்தக்
கதப்புலிக்கொடியோன்றந்தக் காசொளிவிடங்கமொன்றி
னிதக்குறிக்கண்டான்கொண்டா னிந்திரனிதுசொல்வானே.

வசனம்.

தேவேந்திரன் இவ்விதமாக மயனால் சிருட்டித்துக்கொடுக்கப்பெற்ற ஆறுவிடங்க விமானத்தையும் முசுகுந்த மாஹாராஜன் வீரமென்பதில் முதன்மைப்பெற்ற வீரவாகுதேவர் முதலிய வீரர்களிடத்தில் ஒவ்வொன்றாகக்கொடுத்து ஏழாந்தரமுண்மையாகக் கொடுத்த சொர்ன விமானத்திலுள்ள மெய்க்குறிகளைக்கண்டு தனது கையிலேந்திக்கொண்டான் (இப்பால்) தேவேந்திரன் சொல்லுகிற விதங்காண்க.

தேவேந்திரன் சொல் விருத்தம்.

சத்தியந்திருமால்முன்னஞ் சந்ததியடையநோற்ற
முத்திருவுருவிமான முசுமுகாவிதுமற்றுமொன்
சித்தமிக்கிருந்தவீசன் செய்துளித்தனனிவ்வேழும்
பத்தியாற்பூசையாற்றிப் பாரகம்வாழ்கநீயே.

வசனம்.

கேளாய் முசுகுந்த மஹாராஜனே திருமால் முற்காலத்தில் பிள்ளைப்பேற்றை விரும்பி பூசித்த இச் சோமாஸ்கந்தமாகிய சொர்ன விமானமானது இப்போது உண்மையாக ஏழாந்தரங் கொடுத்தது தான் முன்கொடுத்த ஆறுவிமானமும் என் மனதி

லிருந்த சிவபெருமான் செய்துக்கொடுத்தான் ஆதலால் இந்த சத்த விடங்கரையும் கொண்டுபோய் பூமியில்வைத்து பூஜித்து வாழக்கடவாய் போய்வாருமஹாராஜனே. (முசுகுந்தன்)மஹா பாக்கியமையா இந்திரனே. (பொது) முசுகுந்தமஹாராஜன் நவ வீரமந்திரிகளோடும் தேவலோகத்தினின்று புரப்பட்டு தனக்குக்கிடைத்த பெரும்பேற்றினால் அத்தியந்த புளகமாகி பூலோகத்தில் வந்தான் இப்பால் நடக்கிற விதங்காண்க.

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

தினகரன்குலமாந்தாதா செல்வனேத்யாகமேற்ற
வனகனைநமதுவீர ரனைவருஞ்சூழ்வதாகக்
கனகநாடகன்றுபூமிக் கண்டனமிப்போதெந்தச்
சினகரங்கண்டுபோற்றி தெரிசினஞ்செய்வோமையா.

வசனம்.

கேளும் சூரியகுலத்தில் வந்த மாந்தாதாவின்து புத்திரனே நாம் த்யாகமாக வேற்றுவந்த சத்தவிடங்க விமானங்களையும் நமது வீரரெல்லாம் புடைசூழந்துவர தேவலோகம்விட்டு பூலோகத்தில் வந்துவிட்டோம் இப்பொழுது எந்தஆலயத்தில் எழுந்தருளியிருக்கச்செய்து கண்குளிரககண்டு வணங்குவோ மஹாராஜனே.

முசுகுந்தமஹாராஜன் சொல்
தரு-இராகம்-காம்போதி-அடதாளம்.

பல்லவி.

சத்தவிடங்கரையுஞ் சத்ததலங்களிலும்
தாபிக்கவிதுதகியே

அனுபல்லவி.

வெற்றிவேலவன்றரும்வீரமந்த்ரிமார்களே
இத்தினமேநலமாயிருக்கின்றதாகையாலே (சத்த)

சரணங்கள்.

கண்ணன்பூசைசெய்த காபாலியையாரூரின்
கமலாசனத்தில்வைப் போமே - நாகைக்
காரோணந்தன்னிலோர் கனகவிமானத்தைக்
கண்டுவைத்திடு வோமே
பண்ணவர்வணங்கிடுந் திருமறைக்காட்டிலோர்
பசும்பொன்விமானம்வைப்போம் பதுமபீடத்தினுமே (சத்த)

செயவீரவாகுநின் சௌந்தரமிருப்பதை
திருநள்ளாற்றில் பதியே - மிகத்
திரவீரகேசரித் தேவன்கரத்யாகரைத்
திருக்கோளரியூர் மதியே
அயிலைச்செங்கரங்கொண்ட வாறுமுகப்பெருமா
னருளிற்குறுகலியே யறுதினமுங்குதியே (சத்த)

மற்றொருவிடங்களை வைத்துப்பணிவோர்திரு
வாய்மியூரான் தலமே - இந்த
மாநிலம்ஜெயங்கொண்ட செங்குந்தருலத்தொடும்.
வாழுமென்பகற் குலமே
உற்றவிக்காறுய லொருவிடங்களைவைத்தால்
ஓமநமசிவ நாமம்பிரபலமே (சத்த)

முசுகுந்தமஹாராஜன் சொல் விருத்தம்.

புற்றிடங்கொண்டாருள்ளப் புனிதவாரூர்மற்றுரு
மற்றிடத்தமலன்றன்னை வைத்தருச்சித்தோநாலிற்
சொற்றிடங்கொடுவிழாவைச் சோர்வறநடத்தவேண்டி
கற்றடந்தோளீர்செய்யுங் கருத்தறிந்ததுசெய்வீரே.

வசனம்.

சிவபெருமான் புற்றிடங்கொண்டு எழுந்தருளி யிருக்கும் புனிதமாகிய திருவாரூர், திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருக்கோளரியூர், திருவாய்மியூர், திருக்காறாயல், திருமறைக்காடு முதலிய சத்ததலங்களிலும் சத்த விடங்க விமானத்தையும் பதுமபீடங்களில் எழுந்தருளியிருக்கச்செய்து ஆங்காங்கு செய்யவேண்டிய பூசைமுதலிய சிறப்புகளெல்லாஞ்செய்தோம் இனி சிவாகம ஒழுங்கின்படி திருவாரூரில் திருவிழா நடத்த வேண்டியிருப்பதால் அதற்கு வேண்டிய உபகரணங்கள் சேகரித்து செய்வகை யறிந்து செய்யுங்கள் நவவீர மந்திரிகளே. (போது) அரசனாணையின்படி திருவாரூரில் துஜாரோஹணமுதலிய சகலக்கிரியைகளும் செய்து சொல்லுகிற விதங்காண்க.

வீரவாகுதேவர் சொல் கொச்சகம்.

திருவிழவிங்காற்றுதலில் தேவர்களாசிரியமெனும்
அருமையுள்ளமண்டபத்தில் அமலரெழுந்தருளினராம்
பரிசனங்களுடனேகிப் பாசவினைநாசமுற
கருவைநகர்க்கோமானே கண்குளிரக்காண்போமே.

வசனம்.

இப்போது நடக்கின்ற திருவிழாவில் நமது த்யாகர்ாஜப் பெருமான் தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளி யிருக்கின்றார் அவரது சாய்ந்த நடனத்தை சிவநேசர்களுடன் போய் கண்குளிரப்பார்த்து தரிசிப்போம் வாரு மஹாராஜனே (போது) அரசனும் நவவீரர்களும் சுத்த ஆசார ஒழுங்கினின்று சிவசின்னங்களைத்தாங்கி சிவநேசருடன்போய் தியாகராஜப் பெருமானது சாய்ந்த நடனங்கண்டு தோத்திரஞ்செய்கிற விதங்காண்க.

தரு-இராகம்-பூபாளம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அரஹர ஹாஹர ஹாஹர சிவனே
அரஹர ஹாஹர ஹாஹர சிவனே

அனுபல்லவி.

திரிபுர தகனசுந் தரநகைப் புனிதா
திரிபொரு ளுணர்ந்தவர்க் கருளுஞ்செங் கனிதா (அர)

சரணங்கள்.

காமனையெரித்திடு மக்கினிக் கண்ணா
கலைமுதல்வேதங்க ளோதும்விர்ப் பண்ணா
பூமியில்தென்றிரு வாரூரென் னண்ணா
புற்றிடங்கொண்டருள் செங்கனல் வண்ணா (அர)

அழகியசெங்கழு நீர்மலர்த் தோளா
அன்பிலனேனையுன் றிருவடிக் காளா
மழவருமாமுக முடையசெவ் வேளான்
மாதவம்பலித்துன்னை வணங்கினன் கேளா (அர)

நாரணனிந்திரன் றனக்கருள் த்யாகா
நாயினுக்குங்கிடைத் தாய்சிவ யோகா
ஆரணவிற்றி யாசர்வ லோகா
அயனரிகாண்பரி தாகிய யேகா (அர)

சாய்ந்திடுந்திருநட னம்பயில்வி டங்கா
ஷண்முகனையருகில் வைத்தசு லிங்கா
வாய்ந்திடுமெனக்குமுன் முசுமுகவி லங்கா
மறுத்தர்சளித்தனை யிப்பொழுதி ரங்கா (அர)

பொதுவிருத்தம்.

இங்கிவரமலன்பூசை யியற்றிடவரனைநீத்தப்
புங்கவனானையேறும் புலையனாயாரூரெய்தி
யங்கிருந்தளப்பில்கால மமரரோடரனையேற்றித்
துங்கமாய்ப்புலைமைநீங்கி சுவர்க்கமுற்றிருந்தான்மாதோ.

வசனம்.

இவ்விதமாக முசுகுந்தமகாராஜனும் நவவீரமந்திரிகளும் திருவாரூரில் தியாகராஜப்பெருமானை திரிகாலமும் வணங்கி சந்தோடமாயிருக்க இந்திரனது ஆத்மார்த்தமாயிருந்த வீதிவிடங்கப்பெருமானை யிழந்த தேவலோகமெல்லாம் புலைத்தன்மை யடைந்தது, அதனால் மனமிளைத்து இந்திரன் ஆனையேறும்புலையனாகி தேவகூட்டத்துடன் திருவாரூரையடைந்து அனேககாலம் தவஞ்செய்ய அத்தவப்பேற்றால் தியாகராஜப்பெருமானைத்தெரிசித்து புலைத்தன்மைநீங்கி பூர்வத்தன்மை யடைந்து அப்பரமனருளால் தேவலோகமடைந்து சுகித்திருந்தான்.

பொதுவிருத்தம்.

கருமலங்கழியநோற்ற காவலன்கருவூரெய்தி
யொருமலமில்லாவீர ரொன்பதினமைச்சர்சூழ
திருமலனன்பினோங்கி நீணிலத்தரசரேத்தக்
குருமணியணையிற்பன்னாட் கொலுமகிழ்ந்திருக்கவீரன்.

வசனம்.

பிறவியென்னு மாயாமலங்கழியத் தவஞ்செய்த முசுகுந்தமகாராஜன் கருவூரையடைந்து மும்மலரஹிதராகிய நவவீர மந்திரிகள் தன்னை சூழ்ந்திருக்க சிவபெருமானிடத்திலுள்ள அன்பானது அபிவிர்த்தியாகி வளர பூமியிலுள்ள அரசர்களெல்லாம்வந்து திறைகொடுத்து தங்கள்தங்கள் மகுடம் பொருந்த திருவடி வணங்கி நிற்க செங்கோல் முறை வழுவாமல் நன்னிறமுள்ள இரத்தினங்களிழைத்த சிங்காசனத்திலிருந்து அரசு செய்து அனேககாலமிருந்தான் அப்படியிருக்க வீரவாகுதேவர்சொல்லுகிறவிதங்காண்க.

வீரவாகுதேவர் சொல் விருத்தம்.

மாயிருஞாலச்சக்ர வர்த்தியேகேளாயிந்த
ஞாயிறுகுலத்தில்வந்து நாள்பலவரசுசெய்தோம்
ஆயிரவருடகால மானதாலனற்கணுதி
சேயறுமுகன்பொற்பாதஞ் சேர்ந்திடல்வேண்டுமின்றே.

வசனம்.

பெரியபூமிக்கு சக்ரேசனாகிய அரசனேகேளும் சூரியகுலத்தில் வந்து பலநாளாக இராச்சிய பரிபாலனஞ் செய்துவந்தோம் இப்போது நமக்கு விதித்த ஆயிரவருடகாலமுடிந்துவிட்டதுஆகையால் அக்கினிக்கண்ணனாகிய சிவபெருமான் திருக்குமாரனாகிய ஸ்ரீகந்தநாதன்திருவடியையடையவேண்டுமஹாராஜ[னே.

முசுகுந்தமஹாராஜன் சொல்-கொச்சகம்.

நஞ்சுமிழ்க்கைவேற்கொண்ட நவமுதன்மந்திரிகேளிவ்
அஞ்சகமூழிகாலமண்ணலாயிருந்தாலென்னும்
துஞ்சுவதல்லாற்புவிற சுகமுடனிருந்தாரில்லை
தஞ்சமென்றடைவன்யானும் சரவணபவனையின்றே.

வசனம்.

விடங்கக்குங் குந்தமேந்திய நவவீரர்களில் முதல் மந்திரியாகிய வீரவாகுதேவனேகேள் இந்த கருவூரில் நீடூழிகாலம் அரசனாகவிருந்து உலகமெல்லாம் ஏகசக்கிராதிபத்தியங்கொண்டாலும் சிவபெருமானது பஞ்சகிருத்தியந்தவறுமா? பூததேகிகளாகிய யாவருக்கும் இறத்தலென்னும் சங்காரகிருத்தியம் இலயமாக்குமேயல்லாமல் அது தப்பிப்பிழைத்தவர்கள் ஒருவருமில்லை ஆகையால் நானும் இப்பொழுதே ஸ்ரீகந்தநாதன் திருவடியை யடையும்வகை செய்வேனையாமந்திரி.

பொதுவிருத்தம்.

இதுவரசுரைப்பக்கேட்ட வெம்முதல்வீரனுங்கேக்
கதுமெனவெழுந்தான்றங்கட *கணத்தொராயிரத்தினொன்பான்

---

* இரட்டையர்களருளிச்செய்த கச்சி ஏகாம்பரநாதர் உலாப் பிரபந்தத்தில் சிவகணங்களோடுங்கூட்டி சிறப்பித்தோதிய "ஓராயிரத்தறுத்தொளாயிரவரூழிமுதற், பேராநிரைந்த பெருமையரும்" என்னும் தெய்வீக வாக்காற்காண்க.

சதமகார்த்தனையுமெந்த றனையனும்வருகவென்றான்
அதுதெரிந்தவர்கள்வந்தார் அவையலங்கரித்ததென்றே.

வசனம்.

இவ்விதமாக அரசன் சொல்லக்கேட்ட எமது வீரவாகு தேவன் அப்பொழுதே அதிசீக்கிரமாக வெழுந்து அந்தத்தினம் வரைக்கும் தமது குலபுண்ணியப்பேற்று லுற்பவித்து ஆயிரத்துத் தொளாயிரவராகியிருந்த அனகனாகிய புத்திரர்களையும் இராஜபுத்திரனாகிய அங்கிவன்மனையும் சபையில்வரும்படி உத்திரவுசெய்தான். அதுகேட்ட வீரபுத்திரரும் அரசபுத்திரனும் இராஜ சமஸ்தானத்திற்கு என்றுமில்லாத அலங்காரம் இந்நாள் செய்ததுபோல் வந்திருந்தார்கள். (இப்பால் நடக்கிறவிதங்காண்க.)

முசுகுந்தமஹாராஜன்-சொல் விருத்தம்.

பச்சைவாய்நெய்த்தோற்குந்தப் படையுளீரவருமேத்துங்
கச்சியேமுதலாயுள்ளக் கனநகரனகனாதி
துச்சமின்மக்கட்கீய்ந்து சுடர்மணிமகுடஞ்சூட்டி
வச்சுபின்வருவோமிந்த வளநகர்தன்னினாமே.

வசனம்.

பசிய உதிரமளைந்த செங்குந்தப் படையுடைய வீரர்களே கேளுங்கள் காஞ்சீபுரமுதலாகிய சிறந்த நகரங்களில் அனகன் முதலாகிய தங்கள் புத்திரர்களுக்கு அரசுரிமைக்கொடுத்து கிரணங்களைக்காந்தும் இரத்தினங்களிழைத்த மகுடஞ்சூட்டி ஆங்காங்கிருக்கச்செய்து அதன்பின் இந்த நகரத்திற்கு வருவோம் வாரும் வீரர்களே.

பொதுவிருத்தம்.

கோவிதவுரைத்தெழுந்தான் குந்தருமெழுந்தார்கச்சி
மாவடிவந்தார்சேட்ட மகன்றனையரசனாக்கி
ஒவியஞ்சிறந்தகோயி லுயரணையிருத்தியாரு
மேவினரவையிற்காந்தும் வியன்முடிதரிப்பமாதோ.

தரு-இராகம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

சூடினாரே-மகுடம்-சூடினாரே.

அநுபல்லவி.

சூடினானகன்புகழ் தேடினரெங்குப்ராக்யாத
நாடினாரதாதியரும் பாடிவேதகீத மோத (சூடி)

சரணங்கள்.

நம்பனருளாலெழுந்த கம்பாநதி தீர்த்தமும்
ஞாலமெல்லாம்புகழும் நருமதையின் தீர்த்தமும்
அம்பரத்தேநீடுநின்ற வாற்றிலுள்ள தீர்த்தமும்
அருமையுள்ளகாவேரி அமுதமென்னுந்தீர்த்தமும

கும்ப நிரம்ப கொணர்ந்தபி டேக முடித்து - சுவர்ன்னமிகு
மம்பர மாகி யுமித்தர நீறு பொடித்து - மான்மதமுங்க
தம்ப மிழைத்த வியங்கிய தென்ன பிடித்து - சிவாகமத்தில்
எம்பர னோதிய மந்திர நீதி படித்து - செய்யுஞ்சபையில்

இம்ருபருள்ளவர்க் கதிக்க - வம்பர்கட்கேலே மிதிக்க
அம்பலத்துள்ளோர் மதிக்க - உம்பரெவருந் துதிக்க (சூ)

கந்தவேளைபகத்தி னுடுவானொரு வீரன்
கடம்பமாலைக்கழுத்தில் போடுவானொரு வீரன்
குந்தவேற்கொடுத்துமறை பாடுவானொரு வீரன்
குசமுதலுபகரணந் தேடுவானொரு வீரன்

வந்து வசிட்ட முனிக்குரு வால்விதி செய்ய - புண்ணியமுசு
முந்தனு முந்திய வீரனு மட்சதை பெய்ய - இவ்வுலகததில்
பந்த மிருந்து வருந்திய சீவர்க ளுய்ய - சைவநென்னெறி
சிந்தை பெருந்து நடந்திடு மேதகு துய்ய - கனகமணி

விந்தைவிந்தையாய்ப்புனைந்து - புந்தியன்பினுற் கனிந்து
வந்தவருளா னைந்து - அந்திவண்ணனை நினைந்து (சூ)

கொங்கணங்கேரளங்குரு கோசலத்துள்ள மன்னரும்
குந்தளமகதமச்சங் கூர்ச்சரத்துள்ள மன்னரும்
தெங்கணம்வங்கம்வங்காளஞ் சீனத்துள்ள மன்னரும்
சிந்திலாடங்காசமங்கஞ் சிங்களத்துள்ள மன்னரும்

தங்க ளினங்க ளொடுந்தன முந்தெதிர் வோரும் - மகுடாபிஷேக
மெங்கென வந்தண ரங்க ணெழுந்தருள் வோரும் - காஞ்சிநகரம்
தங்க பிருந்தது வின்றள வென்றெனு வோரும் - மங்களஞ்சொல்லி
சங்க முளங்கின வம்மென வந்திடு வோரும் - வீரரில்முன்னேன்

சிங்கவாசனத்தின் மேலே - தங்கமகனைக்கண்ணுலே
புங்கமாய்க்கண்டாசை யாலே - செங்கமலக்கையினுலே (சூ)

பொது விருத்தம்.

துணிபொருளுணர்ந்தோர்வாழ்த்த சுரர்மலர்மாரிதூற்றப்
பணிமுடியவராய்வந்த பார்த்திபர்திறைகொண்டோடி
யணியனகேசவெங்க ளாண்டவவென்னவேத்த
மணிமுடியணிந்துவீர மகன்கொலுவிருந்தான்மன்னே.

வசனம்.

சதாகாலமும் சிவதத்துவ சிரவணத்தாற்றுணிந்து வந்து வின்னதெனவறிந்த மஹான்கள் வாழ்த்தவும், தேவர்கள் பூமாரிபெய்யவும், அம்மகுடாபிடேக மண்டபத்தில் வந்திருந்த அரசர்கள் வணங்கிய முடியையுடையவர்களாய் திறை கொண்டுவந்து வைத்து அழகிய அனகராஜனே எங்க ளாண்டவனே என்று துதிக்கவும், இரத்தினங்கள் விளங்கும் மகுடஞ்சூடி வீரவாகுதேவர் புத்திரனுகிய அனகராஜன் கொலுவிலிருந்தான். (ஆண்டவனென்கை காஞ்சிபுரத்தரசிருக்கையில் மகுடம் சூடிவந்த செங்குந்தத்தலைவர்களது மகுடப்பெயரென்க.)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சச்சியெனுமாநாட்டி லனகனெனுமாசிருக்கக் கண்டவீரன்
நச்சியநாற்றிசைமுகத்துஞ்சிவபுரமுந்தொந்திபுரநறுவிரிஞ்சை
யுச்சிதசோளிங்கபுரநாடொன்றுக்கொருபன்னேழுள்ளநாட்டி
னிச்சயமாய்ச்சனகன்முதற்செங்குந்தமன்னவனைநேமித்தானே

வசனம்.

இந்தவிதமாக வீரவாகுதேவரும் முசுகுந்த மகாராஜனும் அனகராஜனை காஞ்சிபுர மென்னு மகாநாட்டில் சிங்காசனத்தி லெழுந்தருளச்செய்து முன்னொருகாலம் அப்பதியில் உமாதேவியார் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்ய வந்தபோது அதற்கு நான்கெல்லை வகுத்து கீழ்புரத்தெல்லையாகிய சிவபுரத்தில் நந்திகேஸ்பரரையும், தென்புரத்தெல்லையாகிய தொந்திபுரத்தில் கணபதியையும், மேற்புரத்தெல்லையாகிய விரிஞ்சிபுரத்தில் ஸ்ரீகந்தநாதனையும், வடபுரத்தெல்லையாகிய சோளிங்கபுரத்தில் வயிரவரையும் காவலாகவைத்திருந்த காரணங்கருதி நமது மாதாவிதித்த வண்ணமே அரசாங்கம் விதிக்கத்தக்கதென்றுநினைத்து அவளது காமபீடமே பதுமாசனத்தின்பொருட்டென்றும், சிவபுரநாடும், தொந்திபுரநாடும், விருஞ்சிபுரநாடும், சோளிங்கபுரநாடும் ஆகிய நான்கும்(அதனது) கேசரங்களென்றும்

௧-வது, சிவபுரநாட்டிற்கு கிளைநாடுகள்.

௧. மேல்படப்பை, கீழ்ப்படப்பை, ஆத்தஞ்சேரி.
௨. மாணம்பதி, செம்பாக்கம், மூணத்தொன்று, அகரம்.
௩. முன்னூர், பரமேசுரமங்கலம், மதுராந்தகம்.
௪. திண்டிவனம். ௫. வக்கணைப்பத்து.
௬. திருவக்கரை, புதுச்சேரி, ஒழுகரை.
௭. திரிபுவனம், நல்லாத்தூர். ௮. திருப்பாலூர்.
௯. மிடையாத்தூர், திருவெண்ணைநல்லூர்.
௰. பனமூலை, அனந்தபுரம். ௧௧. வழுதிலைப்பட்டு.
௧௨. மாப்பரை, வரமாசூர். ௧௩. பட்டணம், கருங்குழி.
௧௪. மன்னூர்கோவில். ௧௫. பாளையம்.
௧௬. குப்பாக்கம். ௧௭. சம்பை, திருவரங்கம்.

௨-வது, தோந்திபுரநாட்டிற்கு கிளைநாடுகள்.

௧. முருகமங்கலம். ௨. திருவாமாத்தூர்.
௩. திருவண்ணாமலை. ௪. செங்குறிஞ்சி.
௫. கச்சித்திறல். ௬. சேலம்.
௭. திட்டகுடி. ௮. திருமலைப்பாடி.
௯. திருக்கோவல். ௰. திருநாகேச்சுரம்.
௧௧. திருச்செம்பள்ளி. ௧௨. சீர்காழி.
௧௩. மாப்பிள்ளைக்குப்பம். ௧௪. தேலூரு.
௧௫. காட்டூர். ௧௬. போலகம்.
௧௭. நல்லாசசேரி.

௩-வது, விருஞ்சிபுரநாட்டிற்கு கிளைநாடுகள்.

௧. ஆமூர்
௨. வாணியம்பாடி
௩. கொறட்டை.
௪. தருமபுரி.
௫. பவானி
௬. தாரமங்கலம்.
௭. ஏழூர்நாடு.
௮. புகழூரை.
௯. பூரதிரை.
௧௦. திருச்செங்கோடு.
௧௧. வையபுரி.
௧௨. அவிநாசி.
௧௩. கஞ்சுண்டகுடி
௧௪. வகவங்கபாளயம்.
௧௫. கருவூர்.
௧௬. நாமக்கல்.
௧௭. காங்கேயம்.

௪-வது, சோளிங்கபுரநாட்டிற்கு கிளைநாடுகள்.

௧. திருத்தணிகை.
௨. தெளிநாடு.
௩. நெறிநாடு.
௪. திருவடிநாடு.
௫. திருமழிசை.
௬. கொந்தம்பாக்கம்.
௭. திருக்காளத்தி.
௮. தொண்டமாநாடு.
௯. வளைநாடு.
௧௦. வெங்கட்டகிரி.
௧௧. திருப்பதி.
௧௨. ஜெகந்நாதம்.
௧௩. சிட்டம்பள்ளி.
௧௪. செம்புரம்.
௧௫. வரதபுரி.
௧௬. சந்திரகிரி.
௧௭. காசி. என்பவைகளை,

இதழ்களாக வகுத்து இவ்வெழுபத்திரண்டு நாட்டிலும் வீரமக்களாகிய சனகன் முதலாகிய எழுபத்திரண்டு செங்குந் தத்தலைவர்களை அரசர்களாக நியமித்தார்கள். இப்பால் தமது மக்களை நோக்கி வீரவாகுதேவர் சொல்லுகிற விதங்காண்க.

வீரவாகுதேவர் சொல்

இரட்டைபன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இக்காஞ்சிமாநகரி லாயிரத்துத்தொளா
யிரவீரகுந்தமன்ன
ரென்கின்றகணிதமொடு வருபுத்ரமணிகளே
எனதுமொழிகேளுங்களிங்
கேகசக்ரேசமுசு குந்தபுருடோத்தம
னிழைத்ததவமகிமையன்றோ
யிறையவனிடத்தெமை யடைந்துங்களைத்தந்த
திப்பெருஞ்செயலையெண்ணி
தக்கானருங்குலத் துணைவராய்வாழுங்கள்
சமயகுருவேண்டுமதுதான்
தங்கதாபுத்தமபக்ஷ மாகுருடியக்ஷமது
தற்குலத்தபிடேகராம்
சத்குருவினடிமலரை யேத்துங்களதமமே
தகாதுபிறசாதியாறேல்

காரணியில்பொருளிட்ட வெண்ணுவிரேல்சர்வ
தனுவினுயர்வான்புனித
மக்களாந்தனுவெடுத் தவனியிசைவரலரிது
வந்தறநெறிக்கணிற்க
மாமலரெடுத்துத் தொடுத்தலும்தைத்தலும்
வளமடலெடுத்தெழுதலும்
வண்கலைகணைப்தலும் கலையோதுவித்தலு
மனக்கினியதூயவினையில்
மறமொன்றுமில்லையிதி னுயர்வென்பகாருக
மதித்தகமறிந்திருங்கள்
திக்காருமரசரந் தணர்தேவர்புகழ்ந்த
செங்குந்தமுங்களத்தம்
செங்கோலெனக்கொண்டு நீடூழியெம்பேரற்
சிறப்பெய்திவாழ்ந்திருங்கள்
செய்யமானவதன்மை நீங்கிசுகவாழ்வரு
டிருக்கைலையாங்களடைவோம்
சேவலங்கொடியுடைய கந்தவெற்பாறுமுகன்
செந்தாமறைச்சரணமே.

அனகராஜன்-சொல்-கொச்சகம்.

பாலர்களையரசிருக்க பார்த்திகத்தின்மகிழாமல்
வேலனருட்சுகவாழ்வின் விழைந்தேகவெண்ணுமுங்க
ளேலமறையடிகாண்ப தெக்காலங்குடைநீழற்
போலிருந்தெங்களைக்காக்கும் புனிதமிகுந்தந்தையரே.

வசனம்.

இதுவரைக்குங் குடைபோலிருந்து அந்நிழலில் வைத்து காத்துவந்த எங்கள் தந்தையர்களே கேளுங்கள் புத்திரராகிய நாங்கள் அரசுசெய்திருக்கப்பார்த்து இவ்வுலகத்திலிருந்து சந்தோஷமடையாமல் ஸ்ரீ கந்தநாதன் அருட்பிரசாதத்தை விரும்பி கைலாயம்போக நினைக்கின்றீர்களே இனி எக்காலமுங்களது மணமுடைய செந்தாமரை மலர்போன்ற திருவடி தெரிசினங் காணப்போகிறோம் தந்தையரே.

வீரவாகுதேவர் சொல்

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சூரனது சங்காரந் தன்னை யீசன்
றாயதலத் தெல்லரிங் குகனு யொன்பான்
வீரர்களா யிருந்தவரை யாங்க ளென்ன
விழவாற்றிப் போற்றுங்கள் விருடந்தோரும்
கோரவஜ்ர வாகெலும்பைச் சூரனூரின்
கோபுரத்தி னுட்டிவிளை யாடினேனக்
காரணத்தா லவ்வெண்ண மாற்றிப்போற்றிக்
கண்மணிகாள் கண்டிருக்கக் கடவர்தாமே.

வசனம்.

என் கண்மணிபோன்ற மக்களே கேளுங்கள் சூரசங்கார மென்னு மொரு மஹோற்சவத்தை சிவாலயங்களில் ஸ்ரீ கந்த நாதனுகவும், ஒன்பது வீரராகவும்நமதுகுலப்பிள்ளைகளில் நிய மித்து சிவாகமங்களில் விதித்த வண்ணம் அவ்வைதீகக்கிரியை களை நடத்தி அக்காலத்தி லவர்களை யாங்களாக பாவித்து வரு டந்தோறும் வணங்குங்கள். சூரபதுமனிடத்தில் யான் தூது சென்றபோது அவன் குமாரனுகிய வச்சிரவாகுவைக்கொன்று அவன் முதுகெலும்பை மஹேந்திரபுரியின் கோபுரத்தில் நாட்டி விளையாடினேன் அவ்வண்ண நீங்கள் மஹாஸ்தலங்களி லுள்ள கோபுரத்தின்மேல் ஒருதம்பம் வேணுவினுற் கொண்டு நாட்டி நமது குலப்பிள்ளை யொருவனைக்கொண்டுவந்து யானுக பாவித்து சோடசோபசாரத்துடன் பூசித்து அத்தம்பத்திலேற் றி விளையாடச்கண்டு வணங்கி வாழக்கடவீர் புத்திரமணிகளே.

முசுகுந்தமஹாராஜன்-சொல்-விருத்தம்.

திருவளர்காமபீடஞ் சிறந்தருஞ்செங்கோலோச்சு
மருவளர்குந்தவீர மக்களேயுங்களைய
ரொருநவரொன்னநீங்க ளொருநவர்சோழநாட்டில்
வருவதுவேண்டுமங்கி வன்மனுக்குதவவின்றே.

வசனம்.

அழகிய காமபீடமாகிய காஞ்சீபுரத்தில் சிறப்பாக செங் கோல் செய்யும் கீர்த்தியுடைய வீரபுத்திரராகிய செங்குந்தத் தலைவர்களே கேளுங்கள் உங்கள் தந்தையர்கள் ஒன்பது மந்தி ரிகளாக என்னிடத்திலிருந்ததுபோல உங்களில் ஒன்பது மந்தி ரிகள் என்குமாரனுகிய அங்கிவன்மனிடத்திலிருக்க வாருங்கள் வீரபுத்திரர்களே. (செங்குந்தத்தலைவர்கள்) அப்படியே நல்ல தையா மஹாராஜனே.

பொது-விருத்தம்.

காஞ்சிமாநாட்டிலிந்த கனமுடித்தவையினேடும்
வாஞ்சயந்தவமிக்கேறி வந்தனர்கருவூராரும்
பூஞ்சவையலங்கரித்துப் புரவலன்றரிக்கலுற்றான்
தீஞ்சிறுகுதலைமைந்தன் றிருமுடிமகுடந்தானே.

தரு-இராகம்-சௌராட்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

மணிமாமகுடங்கொண்டானே - சிவாங்கிவன்மன்
மணிமாமகுடங்கொண்டானே.

அநுபல்லவி.

மணிமகுடந்தரிக்க மாகதரொச்சரிக்க
வானவராகாயம்வந்து மலர்மாரிப்பெய்யவுவந்து
பணிவதாகவர சணிகளோடிவர
வணிடமாரமுர கணகணென்றதிர (மணிமா)

மனதில் ப — இகத்தாளை ஙெங்கள்.

பட்டிரு சக்ரஅபபடி யிருந்வந்த தரணியாள்முசுகுந்த
சபை பொதுணந்த தபசியர்களு முந்த
திக்கரசர்வந்து கூட - சுந்தரமுள்ள
துக்கணிகைமாத ராட - வெண்சாமரை
மைக்கணுடையார்கள்போட - அந்தணரெல்லாம்
ஒக்கநாலுமறை பாட - தமிழ்விளங்கும்

தெக்கணத்திலொருமிக்கவேயரச கூட்டம்-மெள்ளிடமில்நெ
ருக்கிறல்மகுடமகுடமோடுறைத லாட்டம்-கொள்ளவேசிந்தும்
செக்கர்மாமணிகள்குப்பையாகிவெகுதோட்டம்-இதைக்கண்டேவ
டக்கிலேகைலைசிவவிவாகமது நாட்டம்-காணுமல்வந்த

அக்குடத் தவனுமின்று - அவ்வடக்குபருமென்று
அரசனுரிடத்தில்சென்று - அறிவிக்கவேணுமென்று

மிக்கவாழியென தக்கவீரரின
மொக்கவேபருகி ருக்க நீதகன (மணிமா)

கங்கா நதிதீர்த்தமுங் காவேரியின் றீர்த்தமும்
ககனதெய்வதீர்த்தமுங் கடலிலுள்ளதீர்த்தமும்

செங்குந்தர்கொண்டுவரவே - முசுகுந்தமன்னன்
பங்கயக்கரந் தரவே - அவ்வரசனும்
அங்கிவன்மனை விரைவே - அருகழைத்து
துங்கவபிடேகம் பரிவே - செய்தேவிளங்கும்

சிங்கமாமெனவிருக்கவேறுபல சிங்கம் - சுமந்திருக்கும்
புங்கமானகனதவிசிலேறவர சங்கம் - கொடுத்துவீரர்
தங்கள்புத்ரமணிதன்னினேகநவ சங்கம் - அமைத்துஜெய
மங்களாதியொலியோடுபேரிமுரசெங்கும் - விளங்கவிண்டு

அங்கிஷ மிருக்கக்கண்டு - ஆரணவிதியைக்கொண்டு
அப்பனைப்போலவேபண்டு - ஆறுமுகவற்குத்தொண்டு

இங்கிதமாய களங்கமதா சிவ
செங்கதிர்குலமும் விளங்கிடவே நவ (மணிமா)

அந்தமிகு சாலிகையும் ஆத்திமலர் மாலிகையும்
அமுதமுளைப்பாலிகையும் ஆஞ்சமித்துமூலிகையும்

விந்தையுடனங்கங் கமைந்து - மாவிலைகும்பம்
அந்தணரமைக்கச் சுமந்து - ஓமகுண்டத்தில்
சிந்தவேநெய்பொறி விழுந்து - மந்திரந்தன்னில்
செந்தழலெழுநாக்கொழுந்து - விட்டெரிந்திட

கந்தவேளெனவசிட்டர்மௌலிமுடிவைக்க - வெற்றியின்மிக்க
குந்தமேந்திஜெயவீரபுத்ரர்க ளிருக்க - கொந்தளங்குரு
சிந்துதேசமோடனந்தமன்னர்க டுதிக்க - அக்ஷதைதன்னை
சுந்தரவேலுமயில்தீர்[illegible]வெனப்பலரிறைக்க - வீரருமுசு

கந்தனும் வாழிசொல்ல - ... கதல்
குமாரன்முடிமுடிசெல்ல - ...
இந்தமாநிலமும் வந்துமே...
நிந்துசிரடி ... வந்துசந்தபடியா... (மண்டபா...)

பொது-விருத்தம்.

துன்னவைவாழ்த்தெடுப்பச் சுரர்மலர்மாரிபோர்ப்ப
வின்னுதிக்கைவேற்கொண்ட வீரபுத்திரர்கள்சூழ
மின்னுபொன்மணிக்கணங்கள் விளங்கரியணையின்மீதின்
மன்னனுமிருந்தானங்கி வன்மசக்ரேசனன்றே.

முசுகுந்தமஹாராஜன் சொல்
தரு-இராகம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

புத்திரசிகாமணியே - என்சொற்படிசெய்
புவியிலரச வணியே.

அநுபல்லவி.

வெற்றிவேன்முருகன்பாதம் வேண்டுநிதமெல்லாமுண்டாம்
இத்தனைநாளைப்போலாக விளமையைப்பாராட்டி யிருந்திடவேண்டாம்()

சரணங்கள்.

சிற்றரசனானவென்னை க்ஷணத்திலேகசக்ரனாக்கி
உற்றபகையாளிகளின் உயிரையொருநொடியிற்போக்கி
நற்றுணையாய்வந்ததெல்லா னம்மைகனமாகத்தூக்கி
சுற்றமானவச்செங்குந்தர் சுபுத்ராதிகளைதுணையெனநோக்கி (பு)

மனுதன்மநீதிதன்னில் வழுவாமல்செய்யரசு
தினகரன்குலத்துக்கொரு தீங்குவருநாள்சிரசு
அனகனேமுதற்செங்குந்த ரளிப்பர்ஜெயமுரசு [ரசு.
கனத்தபகைவரென்னுங் காட்டையதஞ்செய்யிவரீட்டியேய

சத்தவீதிவிடங்கத் தியாகரைப்பணிந்திடு
உத்தமனென்றுலகோ ருரைமலரணிந்திடு
சத்துருவானோர்வந்தால் சண்டையில்துணிந்திடு [திடு ()
சுத்தமெய்யடியார்க்கு சொன்மலரொடுபசும் பொன்மலரணிந்

பொதுவிருத்தம்.

தந்தையிதுரைப்பக்கேட்டத் தனயனுமகிழ்ந்துவீழ்ந்து
வந்தனைப்புரியமன்னன் வாழ்த்தினன்தன்பினெங்கட்
கந்தனையாதியந்தங் கடந்தசெஞ்சோதியீன்ற
மைந்தனைப்புந்திமாறு வசந்தனையிருந்தனன்றே.

வசனம்.

பிதாவானவர் இந்த நீதிகளைச் சொல்லக்கேட்ட அங்கிவ
ன்மன் அவரது திருவடியில் விழுந்து வணங்க அதுகண்ட அர
சன் வாழ்த்தினன் இப்பால் எமது முதலீறுமில்லாத சோதிப்
பிளம்பாகிய சிவபெருமான் திருக்குமாரனாகிய ஸ்ரீகந்தநாதனை

மனதில் மறப்   இகத்தாசை வெறுத்து திருவருளில் வசப்பட்டிருந்தான் அப்படி யிருந்தபோது;

பொது-விருத்தம்.

தன்மபார்ப்பிலிவிதூம சாபநீத்தரசனுகி
தன்மகன்பூமிபாரந் தாங்கவைத்தவனிநீத்து
ஷண்முகன்விரதப்பேற்றுல் தவமுசுகுந்தவேந்தன்
கன்மமிற்கணத்தினென்றி கைலைபுக்கிருந்தான்மன்னே.

வசனம்.

இந்த முசுகுந்தன் பூர்வஜன்மத்தில் விதூம னென்னும் கந்தருவன் இவன் சிவபத்தியுள்ள சுகுமாரியென்னும் பிராமணப்பெண்ணை மோகித்து அவள் சாபத்தால் குரங்காயித் திரிந்தான் ஒருசிவராத்திரியில் வில்வமரத்திலேறிக் கிளையை யசைத்து அதிலிருந்த சருகிலை முதலியவற்றை யுதிர்க்க அவைகள் கிழிருந்த புராதன சிவலிங்கத்தின்முடியில் விழுந்த புண்ணியத்தால் சூரியகுலத்தரசனுகிய மாந்தாதாவின் புத்திரனுகப் பிறந்து ஸ்ரீகந்தநாதனை நோக்கிச்செய்த சஷட்டி விரத பலத்தினுல் தன்னை யாவரும் வணங்க ஏகசக்கரவர்த்தியாக பூமியை யாண்டு தன்புத்திரனுகிய அங்கிவன்மனை பூமிபாரந்தாங்க வைத்து உலகத்தாசை வெறுத்து இருவினை யொப்புடைய சிவகணங்கள் வந்து திவ்விய தேகங்கொடுத்து இருளை நீக்குகின்ற ஒளியையுடைய விமானத்திலேற்றி வித்தியாதரர்கள் பண்ணுடன் கூடிய இசைகளைப்பாடிவரவும், அரம்பையர்கள் நடனஞ்செய்யவும், இருடியாகள் இவரது நற்குணங்களைப் புகழ்ந்து வாழ்த்தவும் ஆகாயமார்க்கமாய்க் கொண்டு செல்ல கைலாயமாகிய சிவலோகத்தில் சேர்ந்திருந்தான்.

பொது-விருத்தம்.

வெள்ளிவேதண்டங்கந்த விரதவேந்தடையவீர
ரொள்ளியநெறியின்மாந்த ருருவகன்றறுமுகேச
வள்ளலையடைந்துமுன்போன் மலரடிதுதித்துப்பே
தெள்ளுசீர்கந்தவெற்பின் றிருப்பதமிருந்தார்மா ர.

வசனம்.

முசுகுந்த மஹாராஜன் கைலாயப்பதவியடைந்தபின் நவவீரர்கள் மேலாகிய தவஞ்செய்து மானிடதன்மையை நீக்கி முன்னுள்ள திவ்வியதேகமடைந்து அருள் வள்ளலாகிய ஆறுமுகப்பெருமான் திருவடியடைந்து முன்போல அவரது பத்தி செய்து துதித்து வணங்கி சிறப்பு பொருந்திய கந்தகிரி யென்னும் பதவியி லிருந்தார் ர.

ஸ்ரீ கந்தவிரத விலாசம்.

நூற்பயன்.

விருத்தம்.

பந்தவிரதப்பேயென்னப் பாரினைசீத்தவனருளால்
வந்தவிரதவானந்த மடுக்கும்ருளுங்கொடுக்குமலா
லெந்தவிரதந்தருபயனு மிகத்திற்பெறும்பேறத்தனையும்
கந்தவிரதமெவரேனுங்கருதிச்செய்பினுடனாமே.

வாழி.

கார்வாழி கார்முகந்த கடலேழும்வாழி
கலைவாழி கலையுணர்ந்த வந்தணர்கள்வாழி
பார்வாழி பாரிலுள்ள பசுவேள்விவாழி
பசுங்கலப மயிலயிலும் வாழிகுகன்வாழி
ஆர்வாழி யாரணிந்த மன்னரெலாம்வாழி
அன்பரெலாம் வாழியவ ரருட்டிக்குஞ்சைவச
சீர்வாழி சிரகலாச் செங்குந்தர்வாழி
செவ்விதி னிக்கதையுணருந் தெளிஞர்கள்வாழியவே.

வேலுமயிலுந்துணை.

ஸ்ரீ கந்தவிரதவிலாசம்

முற்றிற்று.



செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901
https://senguntharmudaliarhistory.blogspot.com